# மேனிலை முதலாம் ஆண்டு

# சிறப்புத் தமிழ்

XI

**Higher Secondary Course**
**Tamil**
**Optional**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2026

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிச மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

### சிறப்புத் தமிழ்

# XI

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Designed by : SCERT
First Edition : 2026
Printed at : Centre for Advanced Printing and Training (C-apt), Thiruvananthapuram-695013
© Department of General Education, Government of Kerala.
ISBN 978-93-47213-47-2

## முகவுரை

உலகம் அறிவியல் வளர்ச்சியின் உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் காலமிது. 'செயற்கை நுண்ணறிவு' என்பதே எங்கும் பேசு பொருளாக உள்ளது. 'ஏ.ஐ.' என ஆங்கிலத்தில் சுருக்கமாக அறியப்படும் இந்த 'உருவாக்கப்பட்ட புத்தி' அனைத்துத் துறைகளுக்கும் ஒரு சவாலாகிவிடுமோ என்ற அச்சமும் இல்லாமலில்லை. இத்தகைய ஒரு சூழ்நிலையில் மொழிக்கல்வியின் தேவையும் கேள்விக்குறியாகி உள்ளது. தேவைக்குத் தக்கவாறு படிக்கவும் பேசவும் எழுதவும் தெரிந்துகொண்டால் போதாதா என்ற மனநிலை பலருக்கும் உள்ளது. மனிதகுல வரலாற்றில் அறிவியல் சார்ந்ததும் அல்லாததுமான அவனது கண்டுபிடிப்புகள் எண்ணிலடங்கா. அவை யாவற்றுள்ளும் மொழியின் உருவாக்கமே தலை சிறந்தது. காரணம், கண்டுபிடிப்புகளுக்கு அடித்தளமாக அமைவது சிந்தனை. அந்தச் சிந்தனை நிகழ்வுக்கு மொழி என்னும் கருவி தேவை.

மனித வாழ்க்கை நாளுக்குநாள் மாறிக்கொண்டும் வளர்ந்துகொண்டும் இருக்கிறது. ஒருவித இயந்திரத்தனமான வாழ்க்கையை நோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்; சமூக உணர்விலிருந்து தனிமனித உணர்வுக்கு மாறிக்கொண்டிருக்கிறோம். இத்தகையதொரு போக்கு நல்லதல்ல. மனிதன் மனிதனாக மனிதாபிமானத்துடன் வாழவேண்டும். அவ்வாறு வாழ வேண்டுமெனில் மொழியறிவும் அந்த மொழியில் தோன்றிய இலக்கியங்களின் வாசிப்பும் மிகவும் தேவை.

தமிழ் மொழியின் இனிமை, பழமை, அமைப்பு, இலக்கண – இலக்கிய வளமை இவை குறித்த அடிப்படை அறிவு மாணவர்களுக்குக் கிடைத்தாக வேண்டும். மேலும் சமூக நிலை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வாழும் உலகின் இன்றைய போக்கு இவற்றை அறிந்து, இயன்றளவு அவற்றில் ஈடுபடுவதற்கான மனநிலையும் ஆர்வமும் மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பாடப்பகுதிகளும் செயல்பாடுகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பாடங்களைப் படித்தும் செயல்பாடுகளைச் செய்தும் மொழியாற்றலை அடைக! சமூக உணர்வைப் பெறுக!

வாழ்த்துகள்

**முனைவர் ஜெயப்பிரகாஷ் ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil Optional - XI

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Santhi, P.**
Professor, Dept. of Tamil, University College, Thiruvananthapuram.

### Experts

**Dr. Devadas, D.**
Associate Professor of Tamil (Rtd.), Scott Christian College, (Autonomous), Nagercoil.

**Dr. Hepsy Rose Mary, A.**
Associate Prof. Dept. of Tamil, University of Kerala, Kariavattom.

**Dr. G. Santhoshkumar.**
Curriculum Committee Member, SCERT.

**Dr. Shini, S.**
Professor, Dept. of Tamil, University College, Thiruvananthapuram.

### Members

**Smt. Alli Pathumma, K.,** HSST (Tamil), Rtd., GHSS, Kumly, Idukki.
**Dr. Jancy Rani, R.,** Asst. Prof. (Tamil), All Saints College of Education, Kaliyakkavilai.
**Smt. Jasmine, J.,** HSST (Tamil), Rtd. Govt. Tamil HSS, Chalai, Thiruvananthapuram.
**Dr. Jeevalatha, S.,** HSST (Tamil), BGHSS, Vannamadai, Palakkad.
**Dr. Jeyasankar, J.,** Assistant Professor in Tamil, Govt. College, Munnar.
**Dr. Karunanidhi, M.,** HSST (Tamil), Govt. Tamil HSS, Chalai, Thiruvananthapuram.
**Sri. Manikantan, T.,** HSST (Tamil), Rtd., CPM Govt. HSS, Peermad, Idukki.
**Dr. Marikkannan, A.,** HSST (Tamil), GHSS, Chenduvarai, Idukki.
**Smt. Nisha, J. V.,** Asst. Prof.(Tamil), Grace College of Education, Padanthalumoodu.
**Smt. Rafiya, A.,** HSST (Tamil), GVGHSS, Chittur, Palakkad.
**Smt. Santhi S.,** HSST (Tamil), CPM Govt. HSS, Peermade, Idukki.
**Sri. Sanny, I.,** HSST (Tamil), GMBHSS, Thycaud, Thiruvananthapuram.
**Dr. Selva kumar, R.,** Assistant Professor in Tamil, Govt. College, Munnar.

### Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
**Assistant Professor (Tamil), SCERT.**

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


1. பருவங்கள் ........ 7 - 31
   - தாகம் ........ 8 - 17
   - சீற்றம் ........ 18 - 25
   - தாண்டவம் ........ 26 - 31
2. மனிதம் ........ 32 - 60
   - நல்லொழுக்கம் ........ 33 - 40
   - நல்லிணக்கம் ........ 41 - 52
   - நியாயம் ........ 53 - 60
3. மாற்றங்கள் ........ 61 - 90
   - வீரர்கள் ........ 62 - 71
   - படைகள் ........ 72 - 81
   - சேவைகள் ........ 82 - 90
4. தடங்கள் ........ 91 - 116
   - சிந்தனையாளர்கள் ........ 92 - 99
   - எழுத்தோவியங்கள் ........ 100 - 107
   - சாதனைகள் ........ 108 - 116
5. நற்பண்புகள் ........ 117 - 141
   - பாதைகள் ........ 118 - 125
   - சவால்கள் ........ 126 - 133
   - உணர்வுகள் ........ 134 - 141

அகராதி ........ 142 - 144

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

# அலகு 1

# பருவங்கள்



மக்களின் வாழ்வாதாரத்தில் பருவ காலங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இப்பருவ காலங்களில் ஏற்படும் மாற்றங்கள் இயற்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. நிலத்தடி நீர் பற்றாக்குறைக்கும் உணவு உற்பத்தி குறைவதற்கும் கொடிய பஞ்சங்களுக்கும் இவை காரணமாகின்றன.

## தாகம்



### வறட்சி

நடந்தேன் நிலத்தில்
நெருப்பில் நடப்பதைவிட
கொடுமையாக!

நீண்ட
தென்னை,
பாக்கு மரங்கள்
தன்னுடைய தலையை
யாருக்கோ
அடகு வைத்தாற்போல்
மொட்டையாக!

தவளைச் சத்தம் என்றும்
ஓயாத நிலையில்
இருந்த
அந்தக் கிணறு
கல்லும் காகிதமுமாக!

பூக்களைச்
சிரிப்பாய்ச்
சிரிக்க வைக்கின்ற
அந்தச் செடிகள்
இன்று வாடிப் போக!
பூவையர் கூந்தலில்
காகிதப் பூக்கள்!

பறவைகள் பசுமையைத் தேடி....
சிறகுகள் படபடத்தன!

எருதுகள்
கலப்பையை
மறந்து விட்டன!
சூரியன்
இந்தப் பூமியைக்
குத்தகைக்கு
எடுத்தாற் போன்று
வெப்பத்தை
அதிகமாகக் கொட்ட

விவசாயிகளின்
அறுவடை நிலத்தில்
காய்ந்த புல்லும்
வெடிப்புள்ள மண்ணும்
மட்டுமே!

மக்கள், மாக்கள்
வறட்சி என்னும் சுமையைத்
தலையில் மட்டுமல்லாமல்
வயிற்றிலும் சேர்த்துத்
தாங்கிக் கொண்டு !

– கவிஞர் முனைவர் க. லெனின்

கவிஞர் க. லெனின், கவிதை மற்றும் சிறுகதை எழுத்தாளர். மயில் ஓவியம், ஒலியும் ஒளியும் போன்றன இவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை. இவர் 'இனியவை கற்றல்' என்ற மின்னிதழின் முதன்மை ஆசிரியராக உள்ளார்.

### செயல்பாடுகள்

- வறட்சியின் தாக்கம் மக்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பதைத் தாகம் என்ற கவிதையின் அடிப்படையில் விளக்கி குறிப்பு எழுதுங்கள்.

## மழைக்கஞ்சி

இன்று ஆயுத பூசை. அவரவர் வீட்டில் அவரவர்கள் ஆயுத பூசை கொண்டாடுவார்கள். ஆனால் வெங்கடராமு மட்டும் ஊரில் உள்ள அனைவரையும் கூப்பிட்டு ஆயுத பூசை செய்து பொரியும் தேங்காயுமாக அனுப்புவார். அதற்குத் தேவையான சோளப் பொரியை வீட்டிலேயே தயாரித்து விடுவார்கள். அன்றுதான் நான் ஊருக்குச் சென்றிருந்தேன். சிறு வயதிலிருந்தே பள்ளி விடுமுறை நாட்களில் மட்டும்தான் நான் சொந்த ஊரில் தங்கியிருக்கிறேன். ஆறு வயதில் என் பாட்டியின் ஊருக்குக் கிளம்பியவன்; அடுத்து பள்ளி விடுதிகளில் தங்கியே படித்து, இப்பொழுது கல்லூரியில் படிக்கிறேன். என்னை, வெங்கடராமு மிக அன்புடன் அழைத்ததால் நானும் சென்றேன். அங்குச் சிலர் அமர்ந்திருந்தனர்.

"வள....வளா" கந்தசாமியும் இருந்தார். கட்டைப் பிரமச்சாரி.

உட்காருங்க....உட்காருங்க.... இந்தத் திண்ணையில் உட்காருங்க... பையன் ஒவ்வொரு வீட்லயும் சொல்லப் போயி வரட்டும்" – என்று சொல்லிக்கொண்டே மேற்குப் பக்கம் வருகிறானா? வரல்லையா? என்று எட்டிப்பார்த்தார் வெங்கடராமு.

"புரட்டாசி முடியப் போவுது .. மழையில்ல .... மண்ணுமில்ல ... எப்படித்தான் காலம் தள்ளப் போறோமோ?" கந்தசாமி அங்கலாய்த்தார்.

அங்கயும் அப்படித்தான்... எங்க காலேஜ் பக்கத்துல எல்லாம் புழுதியில விதைச்சுருக்காங்க ......

"சாத்தாருக்கு மழை பெய்யாட்டாத்தான் கவலை இல்ல..... தீப்பெட்டி ஆபிசு, நிப்புக் கம்பெனி இருக்கு. அவனவன் வாரச் சம்பளம் வாங்குறான்..... இங்கதானே......."

"இங்க என்ன ரொம்ப கஷ்டமா?"

"பின்னே..... இங்கே எல்லாம் முத்துக்குளிக்கிறானாக்கும்? படிக்கிற பையன், உனக்கெங்கே தெரியப் போவுது. கரிசக் காட்டுல எவன் நிம்மதியா

## கலிங்கத்துப்பரணி – காடுபாடியது

பொரிந்த காரை கரிந்த சூரை
புகைந்த வீரை யெரிந்த வேய்
உரிந்த பாரை எறிந்த பாலை
உலர்ந்த வோமை கலந்தவே.

உதிர்ந்த வெள்ளில் உணங்கு நெல்லி
ஒடுங்கு துள்ளி உலர்ந்த வேல்
பிதிர்ந்த முள்ளி சிதைந்த வள்ளி
பிளந்த கள்ளி பரந்தவே

வற்றல் வாகை வறந்த கூகை
மடிந்த தேறு பொடிந்த வேல்
முற்றல் ஈகை முளிந்த விண்டு
முரிந்த புன்கு நிரைந்தவே.

தீய அக்கொடிய கானகத்தரை
திறந்த வாய்தொறு நுழைந்து தன்
சாயை புக்கவழி யாதெனப் பரிதி
தன்கரங்கொடு திளைக்குமே.

ஆடுகின்ற சிறை வெம்பருந்தினிழல்
அஞ்சி யக்கடுவனத்தை விட்டு
ஓடுகின்ற நிழலொக்கும் நிற்கும்நிழல்
ஒரிடத்து உள வல்லவே.

காரை சூரை வீரை முதலிய மரங்கள் பொரிந்தும் கரிந்தும் புகைந்தும் எரிந்தும் போயின என்றால் அப்பாலையின் வெம்மையைக் கேட்கவும் வேண்டுமா?

இலை உதிர்ந்த விளாமரங்களும் காய்ந்த நெல்லி மரங்களும் ஒடுங்கிப் போன நுள்ளி மரங்களும் பட்டுப்போன வேல மரங்களும் உயிரை இழந்த முள்ளிச் செடிகளும் சிதைந்துபோன வள்ளிச் செடிகளும் பிளந்துபோன கள்ளிச் செடிகளும் நிறைந்து காணப்பட்டன.

நீர் வற்றிய ஒரு வகை கிழங்குக்கொடி அழிந்து தேற்றாமரம் முதிர்ந்து இண்டங் கொடி உலர்ந்தும் மூங்கில் ஆனது ஒடிந்தும் காணப்பட்டதுடன் புங்கமரம் வரிசையாக நின்றன.

ஞாயிறு தன் மனைவி சாயை புகுந்த இடத்தைத் தேடிச் சென்றதால் தரையில் வெடிப்புகளை உண்டாக்கி உள்ளே நுழைந்தது. அதனால் தரையானது வெப்பத்தால் திளைக்கும் வண்ணம் காணப்பட்டது.

பாலை நிலத்தில் பறக்கும் பருந்தின் நிழல் அங்கேயே இருந்தால் அந்த நிலத்தின் வெப்பம் நம்மை அழித்துவிடும் என்று நினைத்து அஞ்சி ஓடிவிட்டது.

பொழைக்கிறான்.... அதும் இப்ப நாகரிகம் முத்திப் போச்சு.... மாதச் சம்பளம் வாங்குறவன் குடும்பம் நடத்துற மாதிரி, இவனும் ஆடம்பரம் பண்றான்.... கட்டுப்படியாகுமா?.... இப்ப... நம்ம ஊர்க்கு இங்கிலீஸ் காய்கறி எல்லாம் அத்துப்படி...

"பிறகு என்ன.... இவங்களும் மனுஷங்கதானே... சாப்பிட்டு நல்லா இருக்கவேண்டியதுதானே."

"இருந்தாத்தானேப்பா... சாப்புட.... இங்கதான் இல்லையே. இந்தக் காலத்து எளவட்டங்கள்ளாம் இப்படித்தான் பேசுறாங்க."

"கந்தசாமி உனக்குப் பேச ஆள் கிடைச்சிருச்சுல்ல, இன்னம் நீ சும்மா இருப்பியா..." வெங்கிடராமு தன் பங்கைக் காட்டப் பேசினார்.

"தாங்கள் உத்தரவிட்டால் நிறுத்திக்கொள்ளத் தயார்" என்று வாயைப் பொத்தினார் கந்தசாமி.

"நீ கேலி பேசிட்டே இரு........ உனக்கென்ன பிள்ளையா பொண்டாட்டியா.. ஒண்டிக் கட்டை. எங்கள சொல்லு. இந்த மழை செய்ற அநியாயம் ரொம்ப... இதுல காட்ல உள்ள மஞ்சனத்தியெல்லாம் வெட்டிட்டுப் போறான்" வெங்கிடராமு மிகக் கவலைப்பட்டார்.

ஆதவம் பருகுமென்று நின்றநிழல்
அங்கு நின்று குடிபோனது அப்
பாதவம் புனல் பெறாது உணங்குவன
பருகும் நம்மையென வெருவியே.

செந்நெருப்பினைத் தகடு செய்துபார்
செய்த ஒக்கும் அச்செந்தரைப் பரப்பு
அந்நெருப்பினிற் புகை திரண்ட ஒப்பு
அல்லது ஒப்புறா அதனிடைப்புறா.

தீயின் வாயினீர் பெறினும் உண்பதோர்
சிந்தைகூர வாய்வெந்து வந்து செந்
நாயின் வாயினீர் தன்னை நீரெனா
நவ்வி நாவினால் நக்கி விக்குமே.

இந்நிலத்துளோர் ஏகலாவதற்கு
எளிய தானமோ அரிய வானுளோர்
அந்நிலத்தின் மேல் வெம்மையைக் குறித்து
அல்லவோ நிலத்தடி யிடாததே.

இருபொழுதும் இரவி பசும் புரவிவிசும்பு
இயங்காதது இயம்பக் கேண்மின்!
ஒருபொழுதும் தரித்தன்றி யூடு
போகரிது அணங்கின் காடென் றன்றோ.

சூரியனின் வெப்பம் தாங்காமல் தங்குவதற்கு நிழல் தேடிப்போன இடத்தில் நீர் கிடைக்காமல் வாடிப்போன மரங்களை எண்ணி நிழலும் பயந்து அங்கிருந்து குடிபெயர்ந்து விட்டது.

தரைப்பரப்பு நெருப்பினைப் போலவும் அந்நிலத்தில் பறக்கும் புறாக்கள் புகைத் திரட்சியைப் போலவும் விளங்கின.

செந்நாயின் வாயிலிருந்து சொட்டுகின்ற நீரைத் தண்ணீரெனக் கருதி மான் நக்கத் தொடங்கியது. ஆனால் அதனை நக்கிய மானுக்கு விக்கல் உண்டாயிற்று.

வானத்தில் உள்ள தேவர்கள், பூமியின் வெப்பம் காரணமாகத் தங்கள் கால்களை நிலத்தில் வைக்காமல் இருக்கிறார்கள்.

ஞாயிறு வானம் வழியாக இயங்காததற்குக் காரணம் காடுகளைக் கடந்து செல்வது அரிது என்னும் காரணத்தினால் ஆகும்.

"அவங்களுக்கும்தானே மழை இல்லை. அவங்களுக்கும் பொழைப்பு நடக்கவேண்டாமா?.... அதான் வெட்டிட்டுப் போறான் விடுங்க" – கந்தசாமி சொன்னார்.

"விட்டுட்டுத்தானே இருக்கோம், இப்ப என்ன செஞ்சுட்டோம். ஆடுக ரெண்டு மஞ்சனத்தியாச்சும் கடிச்சுட்டுத் திரிஞ்சுச்சு..... இப்ப அதுக்கே வழியில்ல... ஆடுக மேய்ஞ்சிட்டு 'கொடேர்' னுவர்றதைப் பார்த்தா வயிறு எரியுது."

"என்ன செய்ய... மழைதான் இப்படி வாட்டுதே... மழைக்கஞ்சி எடுத்தாங்கல்ல? இன்னிக்குத்தானே கடைசி நா!" – கந்தசாமி.

"ஆமாம்..... இன்னிக்குத்தான் மூணாவது நா... சாமி கும்பிட்டுட்டுப் போய் அந்த சாஸ்திரத்தை முடிச்சுட்டு வந்துடனும்" வேலம்மா, வெங்கடராமுவின் மனைவி சொன்னாள்.

"ஆமா.... ஆமா.... அதையாச்சும் பண்ணுங்க...அப்பயாச்சும் மழை வருதான்னு பார்ப்போம்.

"மழைக்கஞ்சி எப்படிங்க எடுப்பாங்க" நான் கேட்டேன்.

"உனக்குத் தெரியாதாப்பா..... ஆமா... ஆமா... நீ எங்கே இந்த ஊர்ல இருந்தே... எப்பயாச்சும் வர்றே போறே... எல்லாம் வந்துட்டாக..... போலிருக்கு!"

**குறுந்தொகை**

எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல் அன்ன பாறை ஏறிக்
கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்
கவலைத் தென்பவர் தேர் சென்ற ஆறே
அது மற்றவலங் கொள்ளாது
நொது மற் கழறுமிவ் வழுங்கலூரே.

– ஓதலாந்தையார்

எறும்புகள் வாழும் சிறு வளைகளைப் போன்ற சிறிய நீரூற்றுகளை உடையதும், கொல்லனின் உலைக்கல் போன்ற சூடான பாறைகளைக் கொண்டதும், வேடர்கள் தங்கள் அம்புகளைத் தீட்டும் கவர்த்த வழிகளைக் கொண்டதுமான பாலை நிலத்தில் தலைவன் சென்றான். அந்தக் கடிய வழியை நினைத்துத் தலைவி வருந்துகிறாள். ஆனால் இந்த ஊரோ தலைவன் பிரிந்து சென்றதற்காக அவளை இழிவாகப் பேசுகிறார்கள்.

வேலம்மா அடுப்பறையில் தீப்பெட்டி தேடிக்கொண்டிருந்தாள்–கிடைக்கவில்லை.

"பிறகு பார்ப்பம்.... அதையேன் தேடிட்டு இருக்கே.... கந்தசாமி அந்தத் தீப்பெட்டியெக் குடு" – எனக் கந்தசாமியிடம் தீப்பெட்டி கேட்டார்.

கந்தசாமி புறப்படும்போது, "வேலம்மா நீ பொம்பளைங்கள கூப்புட்டுப்போய் அந்த சாஸ்திரம் பண்ணிட்டு வந்துடுங்க.... ஏய்... நீ வாயா.... நாம பேசிட்டே போவோம்" – என்றார்.

"ஆமா மழைக்கஞ்சி எப்படி எடுப்பாங்கன்னு கேட்டியில்ல... இந்தச் சமயம் நல்ல விதைப்பு சமயம் பாரு.... இப்பப் பார்த்து மழை வராட்டா கஷ்டந்தானே... அதான் மழையை வரவைக்க மழைக்கஞ்சி எடுப்பாங்க... அது ஒரு நம்பிக்கைதான். பழங்காலத்திலிருந்து இது நடந்துட்டு இருக்கு. ரெண்டு சட்டி பானைகளை ஏற்பாடு செஞ்சி ஊரில் உள்ள பொம்பளைங்க, எளவட்டங்க, சின்னப்பையன்க எல்லாமே கலந்துக்குவாங்க..... மூணு பேர் பாத்திரங்களை ஏந்திட்டு வருவாங்க; சின்னப்பசங்க எல்லாம் களிமண்ணாலயும் கரியாலயும் உடம்பை வேஷம் போட்டுட்டு, வேப்பமாலையைக் கையில் வைச்சுக்குட்டு, குதிச்சு பாட்டுப்பாடிட்டே வருவாங்க... அந்தக் காலத்துல இருந்து நம்மூர்ல தெலுங்குப் பாட்டுத்தான் பாடுவாங்க..."

"வான ரேது வரிசை ரேது வான கெஞ்சி பொய்யண்ட புல்ல ரேது புணுகு ரேது புல்ல கெஞ்சி பொய்யண்ட."

அப்படீன்னுச் சத்தம் போட்டுப் பாடுவாங்க எளவட்டப் பையன்க. பொம்பளைங்கல்லாம் அவங்களை ஒழுங்காகக் கூட்டிட்டுப் போய் ஒவ்வொரு வீடா பிச்சை எடுக்கறமாதிரி கஞ்சி வாங்குவாங்க.... தொட்டுக்குறதுக்கு வத்த, ஈராங்காயும் கேட்பாங்க... கஞ்சி வாங்குறதுலேயும் ஒரு இது இருக்கு.... முதல்ல அம்பலம் வீட்லதான் வாங்குவாங்க. அதான் உங்க வீட்டுப் பக்கத்துல திருப்பதி இல்ல... அவர்தான் அம்பலம்... பிறகுதான் கூட்டமே... ஒண்ணுபோல... உப்போடைக்குப் போவாங்க. வீடு வீடா எடுப்பாங்க... எல்லா வீட்லயும் எடுத்து முடிச்சப்புறம் அந்தக் கூட்டமோ... ஒண்ணுபோல உப்போடைக்குப் போவாங்க.

எல்லோரும் உப்போடைக்குப் போவாங்களா...அங்க போய் ஒரு பெரிய வாளியில மொத்தமாகக் கஞ்சியெல்லாம் கரைச்சு எல்லாரும் குடிப்பாங்க...யாரும் லோட்டா, இல்லன்னா... சிரட்டையிலே குடிக்கக்கூடாது. கையில வாங்கித்தான் குடிக்கணும். அந்த உப்புக் கோரைல உட்கார்ந்து சாப்டறது ரொம்ப நல்லா

இருக்கும்.... கஞ்சியைச் சாப்பிட்டுட்டு பொம்பளைங்க பாத்திரங்களை எடுத்துட்டு ஊருக்கு வந்துடுவாங்க... இந்தச் சின்னப் பையன்களும் எளவட்டங்களும் ஊர் எல்லைக்குப் போவாங்க.... கஞ்சிக் கையைக் கழுவ மாட்டாங்க.... ஊர் எல்லைக்குப் போய் அங்க இருந்து புரண்டுட்டே வருவாங்க...

"ஊருவரைக்குமா... ?"

'ஊரு வரைக்கும் எவன் வருவான்... முந்திக் காலத்துல வந்துருக்காங்களாம்... இப்பக் கொஞ்ச நேரம் புரண்டுட்டு எந்திரிச்சு வந்துடுவாங்க. ஊருக்கு வந்த பொம்பளைங்க எல்லாம் ஒரு வெளியில கூடி மூணு பொம்பளைப் பிள்ளைங்கள, ஒரு ஆளாகாத, ஆளாகுற பருவத்துப் பொண்ணுங்களைக் கூப்பிட்டு அவங்களைக் குளிப்பாட்டி அந்த வெளியில உட்கார வைச்சுடுவாங்க முன்னால சாணியால பிள்ளையார் செஞ்சி வைச்சு, வெத்தலை, பாக்கு, ஊதுபத்தி வைச்சி சாமி கும்பிடுவாங்க – அந்தப் பொண்ணுங்கமேல சாமி அருள் வந்து இந்தக் கிழமையில மழைபெய்யும்னு சொல்லுவாங்க.'

"அந்தக் கிழமையில கரெக்டா மழை பெய்யுமா?"

"இப்ப எங்க சொல்றபடிக் கேட்குது... ஒவ்வொரு சமயம் பேய்ஞ்சிடும்... முந்தாநாத்து ஒரு பொண்ணு இன்னிக்குப் பெய்யும்னு சொன்னா, இனிமே பெய்யுமோ என்னமோ... முந்திக் காலத்துல தப்பாம மழை பேஞ்சிடுமாம்.... நான் சொன்னமாதிரியே மூணுநா மழைக்கஞ்சி எடுத்துக் குடுப்பாங்க... கடைசி மூணுநா ராத்திரிக்கு இந்த உப்போடைக்கு வந்து இன்னிக்குச் செய்யப் போறாங்கலை... அது மாதிரி சாஸ்திரம் பண்ணுவாங்க... ஆமா.. இப்ப நீ என்ன படிக்கிறே.."

"பி.எஸ்சி. படிக்கிறேன்."

"அது படிச்சா என்ன வேலைப்பா கிடைக்கும்?"

"எல்லா வேலைக்கும் போகலாம். இப்ப எங்க படிப்புக்கு மதிப்பு தர்றான்?... எல்லாம் துட்டுதான்...."

"கலி முத்திப் போச்சு. அந்தப் பொம்பளைங்க இந்தா போறாங்க பாரு... நல்ல இருட்டுண்ணு சொல்லி விளக்கு கொண்டுட்டுப் போறாங்க. பழைய சொளகு (முறம்), பெட்டி, ஒடைஞ்ச பானையெல்லாம் கைல வச்சிருக்காங்க பாரு... பின்னால ஒரு பையன் வருவான் செம்புல தண்ணி கொண்டுட்டு. இந்தப் பொண்ணுங்க போய் ஒப்பாரி வைச்சு அழுவாங்க... ஊர் அம்பலம் போய் அவங்க மேல தண்ணி தெளிச்சு 'எந்திரிங்க..... மழைவரப் போகுது'ன்னு சொல்லி கூட்டிட்டு வருவாரு. அவரு இப்ப ரொம்ப முடியாம இருக்காரு. அதான் மகனை அனுப்பியிருக்காரு. இவனை அந்தப்

### குடியானவர்கள்

பாழாகப் போச்சு மானம்
கடவுளுக்குக் கண்ணைக் காணோம்
வைத்த பயிர் வாழவில்லை.
நட்டவிதை முட்டவில்லை.
மந்தாரம் மூடவில்லை,
மல்லிகைப்பூ மலரவில்லை.
கிணற்றிலே சரளைக்கல்லு,
குளத்திலே மண்ணுத்திட்டு.
கொடும்பாவி கட்டிப் பார்த்தும்,
முச்சந்தி மூலைகளில்
கிழங்கள் ஒப்பாரி வைத்தும்,
ஐந்நூறு விதங்கள் பார்த்தும்
பாழாகப் போச்சு மானம்.

ந. பிச்சமூர்த்தி

பொம்பளைங்க பார்க்கக்கூடாது... பார்க்காமத்தான் போகனும். வா... சீக்கிரம் நட. பொம்பளைங்க ஓடைக்குப் போய்ட்டாங்கல்ல.... ஆ.... அந்தாப் பாரு.... தெரியுது இல்ல..... பழைய சொளகு, பானையெல்லாம் வீசறாங்க... இப்ப எல்லோரும் மேகத்தைப் பார்த்துச் சாமி கும்புடுறாங்க... கொஞ்சம் இரு.... நீ பார்த்துட்டே இரு. சாமி கும்பிட்டு முடிச்சுட்டாங்களா.... எங்கே... ஆ... அதபாரு எல்லாரும் சுத்தி கையை ஒருத்தி தோள்ல ஒருத்தி போட்டுட்டு உட்கார்ந்து அழுக ஆரம்பிச்சுட்டாங்க.... பொம்பளைங்களுக்கு அழுக சொல்லியா தரணும்.... இப்பப் பாரு இந்த அம்பலக்காரன் போயி தண்ணியை அவங்கமேல தெளிச்சு, "எந்திரிங்க அழுவாதிங்க மழை வந்திடும்"–னு சொன்னவுடன் அவங்க எந்திரிச்சுக்குவாங்க....."

"சரி... இப்படி செஞ்சா மழை வருமா?"

"அந்தக் காலத்துல பேஞ்சிருக்கு.............. அந்த நம்பிக்கைதான் இன்னும் போயிட்டு இருக்கு".

– கி. ராஜநாராயணன்

கி. ராஜநாராயணன் கரிசல் இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர். இவர் 1922 இல் தூத்துக்குடியில் பிறந்தார். இலக்கிய உலகில் கதை சொல்லி என்றும் கி.ரா என்றும் அழைக்கப்படுகிறார். சிறுகதை, நாவல், குறுநாவல், கிராமியக் கதை, கடிதம் எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களில் எழுதியுள்ளார். 'கோபல்லபுரத்து' மக்கள் என்னும் படைப்பிற்குச் சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுள்ளார். இங்குத் தரப்பட்டுள்ள மழைக்கஞ்சி என்ற சிறுகதை கரிசல் கதைகள் என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

### செயல்பாடுகள்

- 'மழைக்கஞ்சி' கதையை விமர்சனம் செய்யுங்கள்.
- இச்சிறுகதையில் வரும் வட்டார வழக்குச் சொற்களைத் தொகுத்து அகரவரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.

### வறட்சி என்றால் என்ன?

வறட்சியை நீக்க மழைப்பொழிவு ஒன்றே தீர்வு என்றாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் வறட்சியை வெல்லலாம். வறட்சியின் காரணமாக நாட்டின் வேளாண்மை, பொருளாதாரம், மக்களின் வாழ்க்கை முறை, சுற்றுப்புறச் சூழ்நிலை ஆகியவை பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

சிலி நாட்டில் உள்ள அடகாமா பாலைவனத்தில் 400 வருடங்கள் நீடித்த வறட்சி ஏற்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

வறட்சியை அதன் பாதிப்பு மற்றும் கால அளவினைப் பொறுத்து நான்காகப் பிரிக்கலாம். அவை

- வானிலைசார் வறட்சி
- விவசாய வறட்சி
- நீரியல்சார் வறட்சி
- சமூகப் பொருளாதார வறட்சி

வழக்கமான மழைக்காலத்தில் பெய்யும் மழை அளவானது சராசரி மழை அளவைவிடக் குறையும்போது வானிலைசார் வறட்சி ஏற்படுகிறது. இதுவே மற்ற வறட்சிகளுக்கும் முக்கிய காரணியாகும். விவசாய வறட்சியில் பயிர் வளர்ச்சி குறைந்துவிடும். அதாவது மண்ணிலுள்ள நீரின் அளவு குறைந்து பயிர் பாதிப்படைந்து விவசாய உற்பத்தி குறைந்துவிடும். மழையின் அளவானது குறைந்துவிடுவதால் வறட்சியான காலநிலை ஏற்படுவதைத் தொடர்ந்து ஆறுகள், குளங்கள், ஓடைகள், ஏரிகள் முதலிய நீர்நிலைகள் வற்றிப் போவது நீரியல்சார் வறட்சி ஆகும். தொடர்ந்த வறட்சியால் உற்பத்தி பாதிக்கப்பட்டுப் பொருளாதாரப் பின்னடைவு ஏற்படுதலே சமூகப் பொருளாதார வறட்சி ஆகும். வறட்சியின் விளைவால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. விவசாயம் குறைவதால் பஞ்சம் ஏற்படும். இதனால் மக்கள் கூட்டம் கூட்டமாக ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடம் பெயர்வது ஏற்படும்.

வறட்சியின் காரணமாக வெப்பநிலை அதிகரித்து உயிரினங்களுக்கு வெப்ப நோய்கள் உண்டாகும். நீர் மற்றும் நிலவாழ் விலங்குகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உயிர்ச் சூழ்நிலையில் மாற்றங்கள் உருவாகும். குறைந்த மழைப்பொழிவினால் நீர்மின் உற்பத்தி பாதிக்கப்படும். வறட்சியினால் தொழில் உற்பத்தி பாதிக்கப்பட்டு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும். உணவு மற்றும் தண்ணீருக்குச் சண்டையிடும் சூழ்நிலை உருவாகும். மழை குறைவதால் மண்வளம் குறையும். இந்தியாவைப் பொறுத்தவரை மானாவாரி விவசாயமும் பாசன விவசாயமும் மழையை நம்பியே உள்ளன. எனவே மழைப்பொழிவானது ஒரு பருவத்தில் குறையும்போது இந்தியா வறட்சியின் பிடியில் சிக்கிக் கொள்கிறது. 2050 ஆம் ஆண்டினை நெருங்கும் போது வறட்சியின் பாதிப்பால் மட்டுமே தெற்காசிய நாடுகளின் விளைச்சல் 30% வரை பாதிக்கப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

### இந்தியாவில் வறட்சி

இந்தியாவில் 2002 ஆம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியின் காரணமாக உணவுத் தானிய உற்பத்தி பாதிக்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டு 212 மில்லியன் டன்னாக இருந்த உணவு உற்பத்தி 2002 இல் 163 மில்லியன் டன்னாகக் குறைந்தது; 29 மில்லியன் டன் உணவு உற்பத்தி

**பழமொழி நானூறு**

மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு – நீருலையுள்
பொன்திறந்து கொண்டு புகாவாக நல்கினாள்
ஒன்று உறா முன்றிலோ இல்.

– முன்றுறை அரையனார்

மழை பெய்யாமல் நிலம் வறண்டுபோயிருந்த காலத்திலும் பாரி வள்ளலின் மகள் தம் இல்லத்தைத் தேடிவந்த பாணனுக்குத் தான் சமைத்து வைத்திருந்த உணவைக் கொடுத்து உதவினாள். ஆதலால், சென்று கேட்டால் ஒன்றும் கிடைக்காத வீடு என்பது உலகில் இல்லை.

இழப்பு ஏற்பட்டது. ராஜஸ்தான், கர்நாடகா, ஆந்திரா, தமிழ்நாடு, குஜராத் போன்ற மாநிலங்களில் லட்சக்கணக்கான குறுசிறு விவசாயிகள், விவசாய வேலையாட்கள் தங்கள் சொந்த ஊரைவிட்டு வேலை தேடி வெளியிடங்களுக்கு இடம் பெயர வேண்டிய சூழ்நிலை உருவானது. குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது.

இப்படியாக வறட்சி விவசாயத்தைப் பாதித்து அதன் தொடர் விளைவாக ஒரு நாட்டின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார நிலைத்தன்மை சீர்குலைந்து விடுகிறது. பருவநிலை பாதிப்பால் 2 முதல் 20 கோடி சிறுகுறு விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலியாட்கள் கிராமங்களை விட்டு நிரந்தரமாக நகரப் பகுதிகளுக்குக் குடிபெயர்வார்கள் என்றும் இதில் பெரும்பான்மையான குடிப்பெயர்வு இந்தியாவில்தான் நடக்கும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது. இதனால் நகரங்களில் குடிசைப் பகுதிகள் பெருகி பொதுச் சுகாதாரக்குறைபாடு ஏற்படுவதுடன் சத்துணவுப் பற்றாக்குறையால் இம்மக்கள் பாதிப்படைவார்கள் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

### வறட்சிக்கான காரணங்கள்

மழை பொய்த்துப் போவது, நிலத்தடி நீரை அளவுக்கு அதிகமாக உறிஞ்சிக் காலியாக்குவது, நீர்த்தேக்கங்களில் நீரின்மை, தண்ணீர் அதிகம் தேவைப்படும் பயிர்களைச் சாகுபடி செய்வது போன்றவையே வறட்சி ஏற்படுவதற்கு முக்கிய காரணங்களாகும். இவை மட்டுமின்றி, நீர்ப்பிடிப்புத் தன்மை குறைந்த மண் வகைகளும் வறட்சியை அதிகரிக்கின்றன. செம்மண், கரிசல் மற்றும் வண்டல் மண் வகைகளே இங்கு அதிகம். மாநிலத்தின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள மணல்சாரி மண்வகை நிலங்கள் தொடர் வறட்சிக்கு இலக்காகின்றன. பல மாவட்டங்களில் பரவலாகக் காணப்படும் செம்மண் நிலங்களின் நீர்ப்பிடிப்புத் திறன் குறைவும் இப்படியான வறட்சிக்கு முக்கிய காரணமாகும்.

### வறட்சியின் விளைவுகள்

1980 இல் வடகிழக்குப் பருவ மழை பொய்த்துவிட்டதால் ஏற்பட்ட கடுமையான வறட்சியால் சுமார் 2.50 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் சேதமடைந்தன. குடிதண்ணீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டதுடன் விவசாயமும், நெசவுத் தொழிலும் பாதிப்படைந்தன. 1982 இல் ஏற்பட்ட கடும்

வறட்சியால் நெல் மற்றும் நிலக்கடலை விளைச்சல் பாதிக்கப்பட்டது. மழை வளம் மிகுந்த நீலகிரிப் பகுதியில் 15000 ஏக்கர் தேயிலைத் தோட்டங்கள் காய்ந்து போயின. 1983 இல் ஏற்பட்ட வறட்சியால் நெல், பயறுவகை மற்றும் சிறுதானியப் பயிர் விளைச்சல் பாதிப்படைந்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்ததால், மின் உற்பத்தியும் பாதிப்படைந்தது.

### வறட்சியை வெல்வது எப்படி?

வறட்சியால் அடிக்கடி விவசாயம் பாதிக்கப்படுவதால் அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து கொள்வது அவசியமாகிறது. வறட்சியானது ஓர் இயற்கை இன்னல் என்பதால் அதனைத் தடுக்க முடியாது. ஆனால் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் பாதிப்பிலிருந்து தப்பலாம். வறட்சியானது விவசாயிகளைத்தான் அதிகம் பாதிக்கும். எனவே வறட்சிப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்வதற்குச் சரியான வழி வறட்சியைத் தாங்கும் பயிர்களைச் சாகுபடி செய்வதுதான். வறட்சியைத் தாங்கும் நெல் ரகங்களைத் தேர்வு செய்து பயிர் செய்வதுடன் கம்பு, துவரை, ஆமணக்கு, கொத்தவரை, மாதுளை, சீத்தா, வில்வம், பனை, கறிவேப்பிலை போன்ற வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய பயிர்களையும் வளர்க்கலாம். எனவே வறட்சியான பகுதிகளுக்கு ஏற்றவாறு பயிர் செய்து லாபம் ஈட்டலாம். நீர்நிலைகளைச் சீர்செய்து மழைநீரைத் தேக்குதல், நிலத்தடி நீரைச் செறிவூட்டுதல், பயிர் சுழற்சி முறையில் விவசாயம் செய்தல், பயன்படுத்திய நீரினை மறுசுழற்சி செய்து பயன்படுத்துதல், உள்நாட்டில் உள்ள அதிக நீர்வளமுள்ள நதியினை நீர்வளம் குறைவாக உள்ள நதியுடன் இணைத்தல், வறட்சியைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வறட்சியை வெல்லலாம்.

இனிது என்ற மின்னிதழிலிருந்து எடுக்கப்பட்ட தலையங்கமாகும்

## செயல்பாடுகள்

- வறட்சியின் பாதிப்புகள் குறித்து மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் கட்டுரை எழுதுங்கள்.
- 'வெயிலின் கொடுமை' கலிங்கத்துப்பரணியில் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது? விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.
- வறட்சியை எவ்வாறு வெல்லலாம்? என்பது குறித்த கருத்துகளைப் பாடப்பகுதியில் இருந்து வரிசைப்படுத்தி எழுதுங்கள்.

# சீற்றம்



## திருக்குறள் – வான் சிறப்பு

வானின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

– திருவள்ளுவர்

மழையை நம்பி உலகம் வாழ்ந்து வருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத்தக்கதாகும்.

உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவோர்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.

மழை பெய்யாமல் பொய்படுமானால், கடல் சூழ்ந்த அகன்ற உலகமாக இருந்தும் பசி உள்ளே நிலைத்து நின்று உயிர்களை வருத்தும்.

மழை என்னும் வருவாய் வளம் குன்றி விட்டால், (உணவுப் பொருள்களை உண்டாக்கும்) உழவரும் ஏர் கொண்டு உழமாட்டார்.

பெய்யாமல் வாழ்வைக் கெடுக்க வல்லதும் மழை; பெய்து வளம் பெருக்கி, நொந்தவர்க்குத் துணையாய் காக்க வல்லதும் மழையாகும்.

வானத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அல்லாமல், உலகத்தில் ஓரறிவுயிராகிய பசும்புல் கூடத் தலைகாட்டாது.

மேகம் கடலிலிருந்து நீரைக் கொண்டு அதனிடத்திலே பெய்யாமல் விடுமானால், பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும்.

மழை பெய்யாமல் போகுமானால் இவ்வுலகத்தில் வானோர்க்காக நடைபெறும் திருவிழாவும் நாள் வழிபாடும் நடைபெறாது.

மழை பெய்யவில்லையானால், இந்தப் பெரிய உலகத்தில் பிறர் பொருட்டுச் செய்யும் தானமும், தம் பொருட்டுச் செய்யும் தவமும் இல்லையாகும்.

எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது. மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

திருவள்ளுவர் இயற்றிய நூல் திருக்குறள். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று பால்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருக்குறளில் 133 அதிகாரங்களும் அதிகாரத்திற்கு 10 பாடல்கள் வீதம் மொத்தம் 1330 பாடல்களும் இடம்பெற்றுள்ளன. இங்கு 'வான்சிறப்பு' என்னும் அதிகாரம் பாடமாக உள்ளது.

## செயல்பாடுகள்

- 'வான்சிறப்பு' என்னும் அதிகாரம் வழியாகத் திருவள்ளுவர் மழையின் சிறப்பினை எவ்வாறு எடுத்துரைத்துள்ளார்? விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.
- மழைக்காலங்களில் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்புகளை ஈடு செய்து அவர்கள் வாழ்வை மேம்படுத்தும் வகையில் பத்திரிகைத் தலையங்கம் தயாரியுங்கள்.

### சொல்

ஓர் எழுத்து தனித்தோ, ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துகள் சேர்ந்தோ வந்து, ஒரு பொருளைத் தருமானால் அது 'சொல்' எனப்படும். கிளவி, பதம், மொழி என்ற வேறு பெயர்களிலும் சொல்லைக் குறிப்பிடுவர்.

ஓர் எழுத்துத் தனியாக வந்து ஒரு பொருளைத் தருமானால் அதனை ஓரெழுத்து ஒருமொழி என்பர்.

எ.டு.: ஆ (பசு), ஈ (கொடு), கோ (அரசன்), தீ (நெருப்பு), மா (பெரிய)

ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துகள் இடம்பெறும் சொற்களைத் தொடரெழுத்து ஒருமொழி என்று சொல்லலாம்.

எ.டு: கண் – இரண்டு எழுத்துகள்
மலர் – மூன்று எழுத்துகள்
மனிதன் – நான்கு எழுத்துகள்
திருமகள் – ஐந்து எழுத்துகள்

### சொல்வகை

சொற்களைப் பொருள் அடிப்படையில் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்காக வகைப்படுத்துவர்.

### பெயர்ச்சொல்

பெயரைக் குறிக்கும் சொற்கள் பெயர்ச் சொற்கள் ஆகும். இது, பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என ஆறு வகைப்படும்.

மலை, மனிதன் – பொருட்பெயர்
இடுக்கி, பாலக்காடு – இடப்பெயர்
இளவேனில், கோடை – காலப்பெயர்
கால், துதிக்கை, வேர் – சினைப்பெயர்
வெள்ளை, மென்மை – குணப் பெயர் (பண்பு)
எடுத்தல், படித்தல் – தொழிற்பெயர்

## முதல் பொழிவு

நான் ஹொன்னாவரில் இருந்தபோது அருண்மொழி காபிக் கோப்பையுடன் மழைபெய்யும் படத்தைப்போட்டு இங்கே கோடைமழை தொடங்கிவிட்டது என்று சொல்லிக் கடுப்பேற்றியிருந்தாள். அங்கே மொட்டைவெயில் மண்டையைப் பிளந்துகொண்டிருந்தது. கடலோரக் கேரளத்திலும் கர்நாடகத்திலும் அரபிக்கடலின் வெப்பம் எப்படி இருக்குமென அனுபவித்தவர்களுக்குத் தெரியும்.

திரும்பி வந்தால் கடும் வெப்பம். வெப்பமும் ஓர் அழகுதான். அதற்கான கொண்டாட்டங்கள் உண்டு, குறிப்பாக மாலைவேளைகள் மிக இனிமையானவையாக ஆகிவிட்டிருக்கும். அதிலும் இப்போது சன்னல்களுக்குக் கொசுவலை அடித்திருப்பதனால் மொத்த கதவையும் திறந்துவைத்து வீட்டுக்குள் ஒரு வெட்டவெளியை உருவாக்கியிருக்கிறேன். மாலையின் செம்மை உக்கிரமாக இருக்கிறது.

திடீரென்று இன்று மீண்டும் கோடைமழை, இது மார்ச் 11 தான். ஏப்ரலில் இன்னொரு நல்ல கோடைமழை இங்கே வாடிக்கை. இந்த மார்ச் மாத மழை மாம்பூக்களை உதிரச்செய்வதற்கானது என்பார்கள். காலையில் காற்று அசைவில்லாமல் இருந்தது. எழுந்து பார்த்தபோது வெளியுலகம் ஓர் ஓவியமெனத் தோன்றியது. கீழே காபி சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது குளிரத் தொடங்கியது. காற்று வீச ஆரம்பித்து வலுப்பெற்றது.

நான் அருண்மொழிக்கு டீ போட பால் வாங்கச் சென்றபோது சாலையில் காற்று சுழன்றடித்துக் கொண்டிருந்தது. மாம்பூவின் வாசனையும் புழுதிமணமும் கொண்ட காற்று. வானம் முகில்நிறைந்து சிலேட் பரப்புபோலிருந்தது. திரும்ப வந்தபோது காற்றுடன் நீர்த்துளிகள் வந்து அறைந்தன. மழை தொடங்கிவிட்டது.

### வினைச்சொல்

ஒரு வினையை அல்லது செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் (Verb) எனப்படும்.

எ.டு.: எழு, ஆடினாள், படித்தல்

வினைச்சொற்கள் ஏவல் வினை, வியங்கோள் வினைமுற்று, வினைமுற்று, எச்சவினை, வினைத்தொகை, தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் எனப் பல வடிவங்களில் அமையும். வினைச் சொல்லுடன் இணைந்துவரும் விகுதிகளின் அடிப்படையில் இவ்வடிவ மாற்றமும் பொருள் மாற்றமும் ஏற்படுகின்றன.

**ஏவல் வினை**

முன்னால் இருக்கும் ஒருவரை நோக்கி, அதைச் செய், இதைச் செய் என ஏவல் (ஆணை) செய்வது ஏவல் வினை ஆகும். இந்த ஏவல் வினைகளே ஒரு வினைச் சொல்லின் அடி அல்லது வேர்ச்சொல் எனலாம்.

நீ – படி, எழுது, ஆடு, உண், தூங்கு, என்பன ஏவல் வினைகள்.

**வியங்கோள் வினைமுற்று**

ஒரு வினைச்சொல் வாழ்த்துதலாகவோ, வைதலாகவோ (திட்டுதல்) வேண்டுதலாகவோ, விதித்தலாகவோ வந்தால் அது வியங்கோள் வினைமுற்று எனப்படும்.

எ.டு.: மகளே நீ வாழ்க! (வாழ்த்தல்)
தீயோர் ஒழிக! (வைதல்)
ஐயா அருள் புரிக! (வேண்டுதல்)
அனைவரும் வருக! (விதித்தல்)

இங்கு வாழ்க, ஒழிக, அருள்புரிக, வருக என வரும் வினைச்சொற்கள் வியங்கோள் வினைமுற்றுகளாகும்.

வெளியே சென்று அமர்ந்துகொண்டு மழையில் நனைந்தேன், மழையில் ஒரு காணொளி பதிவுசெய்தாலென்ன என்று தோன்றியது. மொட்டைமாடிக்குச் சென்று வேளிமலைகள் கருமுகில் மூடி குளிர்ந்து அமைந்திருப்பதைக் கண்டேன். மழையைக் கொண்டாடிக் கொண்டிருந்தன தென்னைகள். மழைக்கும் தென்னைக்கும் நடுவே ஓர் ஆழ்ந்த உறவு இருப்பதுபோலத் தோன்றியது. அவை ஓலைகளை விரித்துச் சுழற்றி மழையில் திளைத்தன.

மழையாடும் தென்னையைப் பார்த்துக்கொண்டிருப்பது ஒரு தியானம். தாவரங்களுக்கு அகம் உண்டு என்பது நம் கற்பனையா? அல்லது அகம் இல்லை என்பது நம் கற்பனையா? வெயிலில் அவை இலைதாழ்த்திச் சோர்ந்து நின்றிருப்பதைக் கண்டிருக்கிறேன். மழை வருவதற்கு முன்னரே அவை எப்படிப் பொலிவு கொள்கின்றன?

ஒவ்வொரு ஆண்டும் கோடைமழை சார்ந்து எதையாவது எழுதியிருக்கிறேன் என்பதைப் பழைய பதிவுகளை நோக்கி அறிந்தேன். முதல்மழை எனக்கு ஓர் இனிய நிகழ்வாகவே இளமைக்காலம் முதல் இருந்து வந்திருக்கிறது. மழைகண்டு கதவை மூடாதவனாகவே இந்த அறுபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளைச் செலவிட்டிருக்கிறேன்.

2017 மார்ச் மாதம் 17 ஆம் தேதி 'வரம்பெற்றாள்' என்னும் கட்டுரையை எழுதியிருக்கிறேன். அதில் ஒரு வரி. 'இந்த மண்ணில் இந்த மழையில் நூறுவருடம் நலமாக வாழ்வதைவிடப் பெரிய வரம் ஏது?' அதைத்தான் இப்போதும் சொல்லிக்கொள்கிறேன்.

– ஜெயமோகன்

ஜெயமோகன் 22 ஏப்ரல் 1962 இல் நாகர்கோவிலில் பிறந்தவர். புதினம், சிறுகதை, விமர்சனம், கட்டுரை, வரலாறு எனப் பல தளங்களில் எழுதி வருகிறார். விஷ்ணுபுரம், ரப்பர், கொற்றவை, காடு, ஏழாம் உலகம், வெள்ளையானை போன்ற நாவல்களையும் படையல், முதுநாவல், இரு கலைஞர்கள், ஊமைச் செந்நாய், ஆயிரங்கால் மண்டபம் போன்ற சிறுகதைத் தொகுப்புகளையும் எழுதியுள்ளார். பாவலர் விருது, இயல் விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து, உங்கள் மழை அனுபவத்தைக் கூறுங்கள்.

## வெள்ளம்

கிராமத்தின் அந்த மேட்டுப்பகுதி கோயிலால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் கோயில் தெய்வம்கூட இப்போது கழுத்தளவு வரையான தண்ணீரில் நின்று கொண்டிருந்தது. தண்ணீர் எங்கும் தண்ணீர்! அந்தக் கிராமத்தின் மக்களனைவரும் வறண்ட பகுதிகளைத் தேடிப் போய்விட்டனர். ஒரு வீட்டிற்கு ஒரு படகு சொந்தமாக இருந்தால், அந்த வீட்டின் உடைமைகளைப் பாதுகாக்க யாராவது ஒருவர் அங்கேயே தங்கியிருக்க வேண்டும்.

மூன்று அறைகளைக் கொண்ட அந்தக் கோயிலின் மாடிப் பகுதியில் அறுபத்தியேழு குழந்தைகள், முந்நூற்றி ஐம்பத்தியாறு முதியவர்கள், நாய்கள், பூனைகள், ஆடுகள், காட்டுக்கோழிகள் என்று எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து அங்கிருந்தனர்.

சென்னன் அந்தத் தண்ணீரில் ஒருநாள் முழுவதும் இரவு, பகலாக நின்றிருந்தான். அவனுக்கென்று படகு இல்லை. அவனுடைய முதலாளி மூன்று நாட்களுக்கு முன்பே தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அங்கிருந்து ஓடிவிட்டார். அவனுடைய வீட்டிற்குள் தண்ணீர் புகுவதற்கு முன்பேயே அவன் குச்சிகளையும் தென்னை ஓலைகளையும் சேர்த்து வைத்து ஒரு பரணைக் கட்டிவிட்டான். வெள்ளம் வேகமாக வடிந்துவிடும் என்ற நம்பிக்கையில் அதைக் கட்ட இரண்டு நாட்கள் எடுத்துக்கொண்டான். அவன் தன் வீட்டை விட்டுப் போய்விட்டால் நான்கைந்து வாழை மரங்கள், ஒரு வைக்கோற்போர் ஆகியவற்றை யாராவது கை தேர்ந்த சாமர்த்தியசாலி கவர்ந்து கொண்டு போய் விடுவான் என்பதாலும் அவன் அங்கேயே தங்கி விட்டான். முழங்கால் மூழ்கும் அளவிற்குத் தரையில் தண்ணீர் நிரம்பியிருந்தது. ஏற்கெனவே கூரை மேலிருந்த இரண்டு வரிசை தென்னையோலைகள் தண்ணீரில் மூழ்கியிருந்தன. உள்ளேயிருந்து சென்னன் கூப்பிட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அவன் குரலைக் கேட்பதற்கு யார் இருக்கிறார்கள்? கர்ப்பிணியான ஒரு பெண், நான்கு சிறு குழந்தைகள், ஒரு நாய், ஒரு பூனை இவர்களனைவரும் அவனை நம்பியிருப்பவர்கள். அடுத்த பன்னிரண்டு மணி நேரத்திற்குள் தண்ணீர் கூரையின் மேல் பாய்ந்துவிடும் என்பதும் அதுதான் அவர்கள் எல்லோருக்கும் முடிவு என்பதும் அவனுக்கு உறுதியாகத் தெரியும். இந்த மூன்று நாட்களில் மழை சிறிதுகூடக் குறையவில்லை. வேயப்பட்டிருந்த கூரையின் ஒரு வரிசையைப் பிரித்து எல்லாத் திசைகளிலும் பார்த்தான். வடக்கிலிருந்து ஒரு பெரிய படகு மிதந்து

### இடைச்சொல்

பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடையில் நின்று பொருளை விளக்கும் சொல் இடைச்சொல் ஆகும். இவை நுணுக்கமான பொருள் வேறுபாடுகளை உணர்த்தும். உணர்ச்சிகளையும் கருத்துகளையும் மிகத் தெளிவாக, சுருக்கமான முறையில் வெளிப்படுத்தும். இடைச்சொற்கள் தனித்து நின்று பொருள் தராது.

பின்வருவன இடைச்சொற்களாக வரும்.

1. வேற்றுமை உருபுகள் (ஐ. ஆல், கு, இன், அது, கண்).
   எ.டு.: கவிதாவைப் பார்த்தேன் – ஐ
2. காலங்காட்டும் இடைநிலைகள் (த், ட், ற், இன், கிறு, கின்று. ஆ நின்று, ப் , வ்)
   எ.டு. : அவன் வருகின்றான் – கின்று
3. விகுதிகள் (அன் , ஆன், அள் , ஆள், அர், ஆர், து, ன). எ.டு. : தம்பி வந்தான் – ஆன்
4. உவம உருபுகள் (போல , போன்ற, அன்ன, மான , ஒப்ப, கடுப்ப ..).
   எ.டு.: தாமரை போன்ற கைகள் – போன்ற
5. சாரியைகள் (அத்து, , இத்து, அக்கு , அன், இன்).
   எ.டு.: ஆலங்காடு (ஆல் + அம் + காடு) – அம்
6. தத்தம் பொருளை உணர்த்தி வருபவை (ஆ , ஏ, ஓ, உம்).
   எ.டு.: அவனா செய்தான் – ஆ (வினாப்பொருள்)
7. இசைநிறை (ஏ, ஒடு).
   எ.டு.: இவளொடு – ஒடு
8. அசைநிலை (மன், மற்று , கொல்)
   எ.டு.: ஒப்பர்மன் – மன்

### உரிச்சொல்

பெயர் அல்லது வினையின் பண்பை விளக்கிச் சொல்வது உரிச்சொல்.

எ.டு.: நனி நவின்றான் (நன்றாகக் கூறினான்)
மாநகரம், குறுநடை

இங்கு நனி, மா, குறு என்பன உரிச்சொற்கள்.

வந்துகொண்டிருந்தது. படகோட்டிக்குக் கேட்க வேண்டும் என்ற வேகத்தில் மிகப் பெரிதாகக் கத்தினான். அதிர்ஷ்டவசமாக நிலைமையைப் புரிந்துகொண்டு அவர்கள் குடிசையை நோக்கிப் படகைத் திருப்பினர். ஒரு சிறிய திறப்பு வழியாகத் தன் மனைவி, குழந்தைகள், பூனை, நாய் அனைத்தையும் ஒவ்வொருவராக வெளியே இழுத்துக் கொண்டு வந்தான். அதற்குள் படகு அருகில் வந்து விட்டது. குழந்தைகள் அதற்குள் ஏறியபோது "ஹே சென்னச்சா.." என்று மேற்கிலிருந்து யாரோ கூப்பிட, சென்னன் குரல் வந்த பக்கம் திரும்பினான்.

தன் வீட்டின் உச்சியில் நின்று கொண்டு கூப்பாடு போட்ட மடையத்தரா குஞ்சப்பன். சென்னன் தன் மனைவியைப் படகினுள்ளே தள்ளினான். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பூனை புகுந்து கொண்டது. நாயின் நினைவு யாருக்குமேயில்லை. அந்தக் கணத்தில் நாய் வீட்டின் மேற்குப் பகுதிக்குப் போய் அங்குள்ள பொருட்களைத் தானாகவே மோப்பம் பிடித்துக் கொண்டிருந்தது. படகு முன்னே நகர்ந்துபோக குடிசையின் தொலைவு விரிந்தது.

குடும்பத்தினர் எப்போதும் சாதாரணமாக எங்கிருப்பார்களோ அந்த இடத்திற்கு வந்த நாய் ஏற்கெனவே போய்விட்ட படகைப் பார்த்தது. அது பறந்து போய்விட்டது போலிருந்தது. எச்சரிக்கை உணர்வில் ஊளையிட்டது. வெறுப்பிலிருக்கிற கையாலாகாத மனிதர் போல அது பலவிதமான ஒலிகளை எழுப்பியது. ஆனால் அதைக் கேட்க யாரிருக்கிறார்கள். கூரையின் நான்கு பகுதிகளிலும் ஓடி மோப்பம் பிடித்து ஊளையிட்டது. குடிசையில் ஒண்டியிருந்த ஒரு தவளை பயந்து தண்ணீரில் குதித்தது. தவளையின் குதியலால் தண்ணீர் கொப்பளிக்க, நாய் பயந்துபோய் அந்த இடத்தையே பார்த்தது.

இதற்கிடையே அதன் முதலாளி பத்திரமாக அம்பலப்புழா போய்விட்டார். அது இரவு நேரம். மெதுவாக மிதந்து வந்த ஒரு பெரிய முதலை குடிசையை உரசிக் கொண்டு நகர்ந்தது. நாய் பயத்தில் ஊளையிட்டது. ஆனால் முதலையோ அதைப் பார்க்காமலேயே அந்த இடத்தைக் கடந்துவிட்டது.

ஒலியின் கடவுளான வாயு தன் கருணையால் அந்த அழுகையை எங்கும் எதிரொலிக்கச் செய்தார். சிலர் அதைக் கேட்டு "ஐயோ, ஒரு நாயை யாரோ வீட்டில் பரிதவிக்க விட்டுவிட்டுப் போய் விட்டார்கள்–வெட்கக் கேடு" என்று தமக்குள் முனகிக் கொண்டனர். இதுவரை பெரிதாக, நீண்டதாக இருந்த நாயின் ஊளை பலவீனமாகத் தொடங்கியது.

மதிய நேரத்தில் இரண்டு மனிதர்கள் சிறிய படகில் அந்த இடத்தைக் கடந்தனர். நம்பிக்கையோடு அந்த நாய் வாலை ஆட்டி அவர்களைப் பார்த்துக் குரைத்தது. ஒரு மனிதன் தன் உணர்வைச் சொல்லமுயல்வது போலத் தன் நிலையை உணர வைக்க முயற்சி செய்தது. தண்ணீருக்குள் நின்றுகொண்டு படகிற்குள் குதித்து விடுவது போல போஸ் குடுத்து நின்றது. "ஏய் ஒரு நாய் அங்கே நிற்கிறது". ஒருவன் கத்தினான். அந்தக் குரலில் இருந்த பரிவை உணர்ந்து கொண்டது போல நன்றியுணர்வில் நாய் தன் வாலை ஆட்டியது. 'இருக்கட்டும் விடு' என்றான் மற்றொருவன். இரண்டு முறை படகிற்குள் குதிக்க முயன்றது. ஆனால் படகு போய்விட்டது.

கண் பார்வையிலிருந்து படகு மறையும் வரை நாய் படகையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றது. உலகத்தையே வெறுத்து விடை பெறுவதுபோலக் குடிசையின் முகட்டில் அது ஏறியிருந்தது. மனிதன் மேல் இனி ஒரு காலத்திலும் அன்பு காட்டப் போவதில்லை எனத் தனக்குள்ளேயே அது சொல்லிக் கொண்டிருக்கக் கூடும். அது குளிர்ந்த தண்ணீரை அளைந்தது, தண்ணீரில் வளைந்து குதியாட்டம் போட்டுப் போய்க் கொண்டிருந்த ஒரு தண்ணீர்ப்பாம்பைக் குறி வைத்தபடி தலைக்குமேல் பறவைகள் பறந்து கொண்டிருந்ததைப் பார்த்தது. தன் குடும்பத்தினரை வெளியேற்றுவதற்காகச் சென்னன் ஏற்படுத்தியிருந்த ஓட்டை வழியாகத்தான் தண்ணீர்ப்பாம்பு உள்ளே வந்திருந்தது. நாய் அதையே கண்காணித்துக் கொண்டிருந்தது. பசியிலும், சாவு பயத்திலும் இருந்த நாய் பலமாகக் குரைத்தது. நாய் எழுப்பிய அந்த மொழி உலகளாவியது என்பது இப்போது எல்லோருக்கும் புரிந்திருக்கும்.

நாய்க்கு மீண்டும் மனிதக் குரல்கள் கேட்டது. வாழை மரத்தின் அருகில் ஒரு படகில் வாழைப் பழத்தார்களும் வைக்கோற்போரும் தேங்காய்களும் நிரம்பிக் கிடப்பதை நாய் பார்த்தது. தண்ணீரின் விளிம்பருகே சென்று படகிலிருந்தவர்களைப் பார்த்து கோபமாகக் குரைத்தது.

படகிலிருந்தவர்களில் ஒருவன் வாழை மரத்தின் அருகே சென்றான். "ஜாக்கிரதை; நாய் தாவிக் குதித்து வந்துவிடும் போலிருக்கிறது". நாய் குதித்தது, அந்த மனிதன் தன் பிடியைத் தளர்த்தி விட்டுத் தண்ணீரில் விழுந்து விடட்டும் என்ற விதத்தில் மற்றொருவன் அவன் படகுக்குள் ஏற உதவி செய்தான். இதற்குள், நாய் தண்ணீரிலிருந்து நீந்தி வெளியே வந்து மீண்டும் குடிசையின் உச்சிக்கு வந்துவிட்டது.

திருடர்கள் வாழையின் ஒவ்வொரு கொத்தையும் வெட்டினார்கள். கோபமாகக் குரைத்துக் கொண்டிருந்த நாயைப் பார்த்து "பொறு உன்னைக் கவனித்துக்

கொள்கிறோம் என்றனர்". வைக்கோலைப் படகிற்குள் குவித்தனர். கடைசியில் ஒருவன் குடிசையின் உச்சியில் ஏறினான். நாய் அவன் காலில் பாய்ந்து கால் சதை தன் வாயில் வரும்படி கடித்தது. வேதனை பொறுக்க முடியாமல் அலறி, அவன் படகிற்குள் குதித்தான். இதற்குள் மற்றொருவன் தன் கையிலிருந்த துடுப்பால், நாயின் தலையில் தாக்கினான். பலவீனமான குரலில் நாய் 'மொவ், மொவ்' என்றழுதது. சிறிது நேரத்தில் அந்தச் சத்தமும் நின்றுவிடலாம். நாய் கடித்த வேதனை பொறுக்கமாட்டாமல் படகிலிருந்தவன் பெரிதாகக் கத்தினான். அருகிலிருந்தவன் அவனைச் சமாதானப்படுத்தினான். மற்றவர்கள் காதில் விழுந்து யாரும் அங்கு வந்துவிடக்கூடாது என்று அழுகைச் சத்தத்தைக் குறைக்க வைத்து, படகைச் செலுத்தினான். தொலைவில் படகு போன திசையைப் பார்த்து நாய் குரைத்துக் கொண்டிருந்தது. இரவாகிவிட்டது. மிதந்து வந்த ஒரு பசுவின் சடலம் குடிசையருகே சிக்கிக் கொண்டது. நாய் அருகே வந்து அதைப் பார்த்தது. ஆனால் அதன் மேலேற தைரியமில்லை. மெதுவாக அந்தச் சடலம் சிக்கலிலிருந்து விடுபட்டு நீரோட்ட திசையில் நகர்ந்தது. நாய் நூல் பின்னலாக அதற்குள் சிக்கியது. வால் ஆடிக்கொண்டிருக்க சடலத்திற்குள் தன் பற்களைப் புதைத்துக் கொண்டது. அந்த மிகுதியான சதைக்குள் தன்னை இடுக்கிக் கொண்டது. சிறிதுநேரம் சடலம் அடியில் போக, நாய் சில கணம் மறைந்து போனது. அதற்குப் பிறகு புயலின் பெரும் ஊளைச் சத்தம், தவளைகளின் கரகரப்பொலி குரல், ஆற்றின் அலை சத்தம் ஆகியவற்றை மட்டுமே கேட்க முடிந்தது நாய் அமைதியாகிவிட்டது; அதனுடைய பரிதாப அழுகையும், முனகல்களும் கேட்கவேயில்லை. அழுகிப் போன சடலங்கள் ஆற்றில் மிதந்தன. காக்கைகள் தொந்தரவின்றி அவற்றைக் கொத்திக் கொண்டிருந்தன. எங்கும் எல்லாமும் பாழாகிக் கிடக்க திருடர்கள் மனம் போனபடி தங்கள் வேலையில் ஈடுபட்டனர்.

சிறிது நேரத்தில் குடிசை சிதைந்தது. முடிவற்ற அந்த நீர் பெரும்பரப்பில் எதையுமே பார்க்க முடியவில்லை. தான் இறக்கும்வரை தன் எஜமானனின் உடைமைகளை நாய் பாதுகாத்தது. இப்போது முதலைகள் அதைச் சாப்பிட்டு விட்டன. குடிசையும் அழிந்து போனது.

தண்ணீர் குறையத் தொடங்கியது. தன் நாய்க்கு என்ன நேர்ந்தது என்று அறிய சென்னன் தன் குடிசையை நோக்கி நீந்தி வந்தான். ஒரு தென்னையின் கீற்றடியில் ஒரு நாயின் உடல் சாய்ந்து கிடப்பதைப் பார்த்தான். தன் விரல்களால் சடலத்தின் உடலைப் புரட்டிப் போட்டுப் பார்த்தான். தன் நாயோ என்று அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. ஒரு காது கடிக்கப்பட்டு தோல் அரித்துப் போய் அழுகியிருந்ததால் அதன் நிறத்தை அறிவதுகூடக் கடினமாக இருந்தது.

– தகழி சிவசங்கரன் பிள்ளை

மலையாள இலக்கியப் படைப்பாளரான தகழி சிவசங்கரன் பிள்ளை 1912 ஏப்ரல் 17 ஆம் நாள் ஆலப்புழையில் தகழி என்னும் இடத்தில் பிறந்தார். இவர் அறுநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் முப்பதுக்கும் மேற்பட்ட நாவல்களையும் எழுதியுள்ளார். சாகித்திய அகாதெமி விருது பெற்ற அவருடைய செம்மீன் என்ற நாவல் பல இந்திய மொழிகளிலும் அயலக மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவரது வெள்ளம் என்னும் சிறுகதை இங்குப் பாடப்பகுதியாக அமைந்துள்ளது. இதனைத் தமிழில் இரா. மீனா மொழிபெயர்த்துள்ளார்.

## செயல்பாடுகள்

- 'வெள்ளம்' என்ற கதை கூறும் கருத்தினை விளக்கிக் குறிப்பு எழுதுங்கள்.
- 'வெள்ளம்' என்ற கதையை விமர்சனம் செய்யுங்கள்.

# தாண்டவம்



## புயல் சின்னத்தின் வெற்றி!

பருவமழைக் காலத்தில் உருவாகும் புயல் சின்னத்திற்குப் புதுப்புதுப் பெயர்கள் வைக்கப்படுகின்றன. அந்த வகையில், அண்மையில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் புயலாக உருமாறும் என்ற எதிர்பார்ப்புடன் 'ஃபென்கல்' என்று பெயரும் சூட்டப்பட்டது. தானே, கஜா, வர்தா உள்ளிட்ட புயல் சின்னங்கள் தமிழ்நாட்டில் கரை கடந்து தாக்கத்தை ஏற்படுத்திய நிலையில் ஃபென்கல் என்ன செய்யப்போகிறது என்ற கவலையும் பதற்றமும் நிலவியது.

நாகைக்கும் சென்னைக்கும் இடையிலான பகுதியை நோக்கி காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நெருங்கி வந்ததால், அது புயலாக வலுப்பெறும்போது என்னென்ன பாதிப்புகள் ஏற்படுமோ என்ற அச்சமும் நிலவியது. 2015 இல் சென்னையை மிகக் கடுமையாகப் பாதித்த வெள்ளம், கடந்த 2023 இல் சென்னை, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களில் கன மழையால் ஏற்பட்ட வெள்ளம் இவை மக்களின் அச்சத்திற்குக் காரணமாக அமைந்தன. பொதுவாக, அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவ மழையினால் தமிழ்நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கனமழை பெய்வது இயல்பு என்றாலும், அது இயல்பு வாழ்க்கையைப் பாதிப்பதுடன் வாழ்விடங்களையும் பாதிக்கிறது என்பதே மக்களின் அச்சத்திற்குக் காரணமாக அமைகிறது.

ஃபென்கல் புயல் சின்னம் கடலில் நீடித்ததால் அதன் வலு குறைந்துவிட்டது. பெரும்பாலான மழை இலங்கையில் நிலப்பரப்பில் பொழிந்ததால் அங்கே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. காற்றின் அடுக்குகளில் ஏற்பட்ட இயற்கையான மாற்றங்களின் காரணமாகத் தமிழ்நாட்டிற்குப் புயலால் பெரிய ஆபத்து ஏதுமில்லை

என்று வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்திருப்பது பொதுமக்களுக்கு நிம்மதியைத் தந்துள்ளது. தமிழ்நாட்டை நோக்கி நகர்ந்து வரும் புயல் சின்னங்கள் வலுவிழப்பதும் அண்டை மாநிலங்களின் கடற்கரையில் வீசுவதும் புதிதல்ல எனினும், புயல் சின்னத்தால் தமிழ்நாடு பெறுகின்ற மழை அளவு என்பது கவனத்திற்குரியது.

கடந்த 2023 டிசம்பரில் புயல் வீசாவிட்டாலும், மேகத்திரள் நிலைத்து நின்று சென்னையையும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளிலும் பெய்த பெருமழையின் காரணமாகத்தான் குடியிருப்புப் பகுதிகள் நீரால் சூழப்பட்டு, கார் உள்ளிட்ட வாகனங்கள் தண்ணீரில் மிதந்தன. தற்போது ஃபென்கல் புயல் சின்னத்தால் அந்த அளவு கனமழை இல்லாவிட்டாலும் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலும் பரவலான மழை பெய்துள்ளது. திருச்சி போன்ற உள் மாவட்டங்களிலும் தொடர்ச்சியான மழை பெய்துள்ளது.

டெல்டா மாவட்டங்களில் நெற்பயிர்கள் சில இடங்களில் மூழ்கக்கூடிய அளவிற்கு மழை பெய்திருந்தாலும், விவசாயிகள் பலருக்கும் இந்தப் பருவமழை தேவைப்படுவதாகவே அமைந்துள்ளது. வடகிழக்குப் பருவமழை உரிய அளவில் பெய்யாவிட்டால் அடுத்த பருவம் வரை வறட்சியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை விவசாயிகள் அறிவார்கள். ஒட்டுமொத்த தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வடகிழக்குப் பருவமழை இந்த ஆண்டு கூடுதலாகவே பொழிந்துள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனினும், சென்னைக்குக் குடிநீர் வசதிகளை வழங்கக்கூடிய நீர்த்தேக்கங்கள், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தக்கூடிய ஏரிகள், குளங்கள் ஆகியவற்றில் போதுமான அளவில் நீர் இல்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

ஐப்பசி அடைமழை, கார்த்திகை கனமழை என்பதையும் தாண்டி டிசம்பர் – மார்கழி மாதங்களிலும் மழைக்காலம் தொடரக்கூடிய அளவுக்குச் சூழலியல் மாறியிருப்பதால், அடுத்தடுத்த புயல் சின்னங்களையும் எதிர்பார்க்கலாம். ஃபென்கல் போல அந்தப் புயல் சின்னங்களும் பேராபத்தை உண்டாக்காமல் பெருமழையைத் தந்தால் நீர்நிலைகள் நிறையும். விவசாயிகள், பொதுமக்களின் மனது குளிரும்.

நின்று நிதானித்து மழை பெய்யட்டும் என்கிற மக்களின் எதிர்பார்ப்பை இயற்கைதான் நிறைவேற்ற வேண்டும். புயல் சின்னங்களின் வெற்றி என்பது கரையைக் கடப்பதில் அல்ல. கரை மீறாத அளவுக்குத் தண்ணீர் மட்டத்தை உயரச் செய்வதுதான். வடகிழக்குப் பருவமழைக்காலம் நிறைவு பெறுவதற்குள் நீர் நிலைகள் நிறையட்டும்.

– ஸ்பார்க் மீடியா

## போ புயலே

போ புயலே போய்விடு
பச்சைமரம் பெயர்த்துப்பல் துலக்காமல்
வேய்ந்தவை பிரித்து விசிறிக் கொள்ளாமல்
குழந்தையர் கவர்ந்து கோலியாடாமல்
பாமர உடல்களைப் பட்டம் விடாமல்
சுகமாய்க் கடந்துவிடு சுவாசமாகி விடு
ஏழையரின் பெருமூச்சை விடவா
நீ பெருவீச்சு வீசுவாய்

– வைரமுத்து

ஸ்பார்க் மீடியா என்னும் மின்னிதழில் வெளியான தலையங்கம் நமது பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## செயல்பாடுகள்

- புயல் காலத்தில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்பு தயார்செய்யுங்கள்.

## ஒக்கி தாமதத்தின் பேரிடர்

"நாங்க நவம்பர் 16 ஆம் தேதியே தேங்காப்பட்டணம் ஆர்பர்ல இருந்து மீன் புடிச்ச கடலுள்ள போயாச்சி. கடலுன்னா, தாவுகடல். கொறைஞ்சது 200 நாட்டிக்கல் வெலங்க, பெரிய கப்பல் போற எடம். நாங்க வழிவலத் தொழிலுக்காக்கும் போனோம். சரியான பாடு இல்ல. இனும் டீசலும் கொறைஞ்சி போச்சி. சரி கரவுடுவோமின்னு திரும்பி வந்தோம். வார வழியில, திருழாத் தேரமாச்சேன்னு 29 ஆம் தேதி பொழுது விடிய திரும்பவும் வல எளக்குதோம். எங்க கூட்டுப் படகுவளும் இது போலதாம் வல உடுதாவ. 30 ஆம் தேதி விடிய காத்து மாறிச்சி, பேக்காத்தா வந்து வுழுது. கடலும் துள்ளாட்டம் போடுது. சேலு சரியில்லியன்னு சொல்லிக் கூட்டுப் படகுவள விளிச்சி, வலயள ஏத்தச் சொல்லிட்டோம். ஒருத்தர் மாறி ஒருத்தர்னு 7 மணியிலிருந்து 11 மணிக்குள்ள அத்தன போட்டுலயும் வல ஏத்தி முடிச்சாச்சி. எல்லாரும் கர நோக்கி ஓடுதோம். காத்து பொசலெடுத்து நிக்கிது. இருளங் கெட்டிகிட்டு கண் போச்சலும் மங்கிப் போச்சி, கூட்டுப் படகுவ வருதா, வருல்லியா ஒண்ணுந் தெரியில. எங்க போட்டுல கூலிங் தண்ணி போகாததுனால எஞ்சின் சூடாயி நின்னு போச்சி. பயத்துல கோஸ்ட் கார்ட கூப்புடுதோம், தேவியக் கூப்புடுதோம், கூப்பாடு போடுதோம் ஒருத்தனும் லைனுல வரல. எங்க போத்திமார் காலத்துலயும் இப்புடி ஒரு பொசல ஒருத்தரும் பாத்ததில்ல. பேயாச் சுத்துன காத்துல, போட்டு ஒசர போறதும் அப்புடியே பொத்துன்னு கீழ சாடுறதுமா இருக்கி. கை பதறி கால் பதறி நிக்கிதோம். திடீர்னு அணியம் தூக்குதன்னு பொறம் பாத்தா, பொறம் பூரா தண்ணிக்கிள போவுது. கையில கெடைச்ச தண்ணி பாட்டயள புடிச்சிகிட்டு, பத்து பேரும் அணியத்துல ஏறி இருந்தோம். டமார்னு ஒரு சத்தம். போட்டு நடுவுல அப்புடியே நீட்டுவாக்குல ரண்டாப் பொழந்தி, தண்ணிக்கிள போக ஆரம்பிச்சிற்று. இருட்டுல கெடச்ச பிளாஸ்டிக் பாட்டவள புடிச்சிகிட்டு தண்ணிக்கிள எல்லாரும் சாடியாச்சி. ஆனா எங்கோட்டு நீய, வெரளம் போன போக்குல நீய ஆரம்பிச்சோம். ஒருத்தனுக்க மூஞ்ச ஒருத்தம் பாக்க முடியில. மூச்சி வுட வாயத் தொறந்தா கடத் தண்ணி வாய்க்குள போவுது. இருந்தாலும் உயிரப் புடுச்சிண்டு நீயுதோம். பொண்டாட்டி

புள்ளய மொகத்தப் பாத்தாவது எங்க உயிரக் காப்பாத்துன்னு நாங்க வேண்டாத தெய்வமில்ல. மாதாவ நெனச்சிண்டே நீஞ்சோம். விடிஞ்சி பாத்தா, பத்துல நாலுபேரக் காணல்ல.

வயிறு பவுச்சிது, தண்ணித் தாகமும் எடுக்குது, கைகால்லாம் தளந்து போவு. ஆறுபேரும் சேந்து நீயிதோம்… அய்யோ இந்தப் பாத வழியே வார கப்பல்வ எங்களப் பாத்துறாதான்னு எழும்பி, எழும்பிச் சாடுதோம். கூட வந்த நாலுபேரும் பொறம வாராங்களான்னு பெலம் புடிச்சி திரும்பிப் பாத்தா, ஒரு சின்னப் பையம் கடத் தண்ணிய குடிச்சி எங் கண்ணு முன்னாலே தாந்து போறாம். எட்டிப் புடிச்ச முடியல. கடைசியா ரண்டு பேர் நீயிதோம். ராப்பூரா நீயிதோம். பொழுதுவிடிய, பக்கத்துல பளிச் பளிச்சின்னு வெட்டுதேன்னு பாத்தா, ஏதோ ஒரு போட்டுலருந்து ஒடைஞ்ச பலவத் துண்டு. ரண்டுயரும் அதுல ஏறிப் படுத்தோம், அய்யோ இந்தப் பலவ பத்து பேர தாங்குமேன்னு மனசு பாடாப் படுத்திச்சி. 2 ஆம் தேதி காலையில் ஒரு பதினோறு மணி இருக்கும், வானத்துல ஒரு ஹெலிகாப்டர் தெரியிது. ஆனா எங்க ஒடம்புல ஒணர் இல்ல. மேலருந்து கயிறு போட்டு இறங்குனவங்க எங்க ரண்டியரையும் தூக்குனாங்க. அப்ப நாங்க எங்ககூட இன்னும் நாலுபேரு உண்டுன்னு சொல்லதோம். அதுக்கு அவங்க நாங்க தேடுறோம். நீங்க மொதல்ல ஆஸ்பத்திரிக்கி போங்கயின்னு சொன்னாங்க" சொல்லி முடித்ததும் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தார். நான் தூத்தூர் சின்னத்துறையில் கடந்த 11 ஆம் தேதி இரவில் சந்தித்த அந்தோனிதாஸ்.

– ஜோ. டி. குரூஸ்

ஜோ.டி. குரூஸ் 1967 ஆம் ஆண்டு திருநெல்வேலியிலுள்ள உவரி என்ற ஊரில் பிறந்தவர். கொற்கை, ஆழி சூழ் உலகு, அஸ்தினாபுரம், வேர்பிடித்த விளை நிலங்கள் போன்ற நாவல்களை எழுதியுள்ளார். இவரின் கொற்கை என்ற புதினத்திற்கு 2013 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது கிடைத்துள்ளது. பாடப்பகுதியிலுள்ள பகுதி 'கவனம் தேடும் கடலோரம்' என்ற கட்டுரையில் இடம்பெற்றது.

## செயல்பாடுகள்

- 'ஒக்கி தாமதத்தின் பேரிடர்' என்ற அனுபவக்குறிப்பிலிருந்து நீங்கள் அறிந்துகொண்ட கருத்துகளை எழுதுங்கள்.
- இந்தப் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள வட்டார வழக்குச் சொற்களை வரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.

## நொண்டிச் சிந்து

தன்னத் தனதனனா தனதன
தனதன தனதன தனதன்னனா

பரிதாபி என்றுமேவந்த – வருஷத்தில்
பங்குனி மாதம்தேதி பதினாறினில்
உருமங்கட் டியமுகிலால் – கோணக்காத்து
உளன்று உளன்றுமெத்த அடித்ததினால்
பெரிதான வீடுகளெல்லாம் – கோப்புடனே
பிரிந்துங் கூரைத்தட்டுச் சரிந்ததங்கே
வரியான வரிநாளிலே – காய்த்தபலன்
வாச்சுதடி என்றிருந்தேன் ஏச்சுதடியோ

சிங்காரமாய் வாங்கல் நகரில் வைத்திருந்த
தென்னம்பிள்ளை அத்தனையும் வின்னமாச்சுதே
மங்காத காங்கயநாட்டில் – மேட்டுக்காட்டில்
மாளாத பருத்திஎல்லாம் கோலாகப்போச்சு
கொங்குதேச மேலைச்சீமையில் கள்ளிக்கோட்டைக்
கோயம்புத்தூர்ப் பட்டணத்தில் ரொம்பமழையாம்
வங்கணமா நீலகிரியில் – சிறுமுகை
மணல்காட்டு நெல்கள்எல்லாம் தனலாச்சுதே

அந்தியூர் பவானிப்போக்கிலே – சாலைமரம்
அடியோடே விழுந்ததங்கே கெடிகலங்கி
சிந்தனை வராமலிருந்த – ஈரோட்டில்
செந்நெல்களும் வாழைப்பலன் சேதம்ரொம்பவாம்
பந்திபந்தி யாயிருந்த – கூரைவீடெல்லாம்
பறக்குது காத்திலே இருக்காமல்
வந்தபலன் வீணாகப்போச்சு – இளம்பயிர்
மணலோடு தரையாய்த் தரையாச்சுதே

கன்னிவாடி விருப்பாச்சி பழனிச்சீமை
கண்ணாடிப்புத் தூருமட்டும் காத்துகளில்லை
உன்னிதமாய்த் திண்டுக்கல்லோடே தெற்குநோக்கி
ஓடவில்லை யாங்காற்றுச் சாடைதான்சற்றே
நன்னயஞ்சேர் கருவூரில் பசுபதி
நாதரிட ஆலயத்தில் சேதம்ரொம்பவாம்
இந்நிலஞ்சேர் சீலாப்புத்தூரு – கூத்தளையில்
இருந்த மரங்களெல்லாம் முறிந்ததங்கே

முத்தரசன் பேட்டைகடந்து – கூடமரெட்டி
மூடுபாலம் வந்துகாத்துச் சாடிநின்றதே
பொத்தல்வழி தெரியாமல் அப்பாவையன்
போருவந்து மூடிப்பாலம் கீழ்விழுந்ததாம்
செத்திறந்த ஆடுமாடுகள் – ஆத்திலே
சேனையுண்டு போனதுதான் பாலம்வழியாய்
பத்தர்கள் மிகுந்துவாழும் திருச்சிராப்
பள்ளியிலே வெள்ளமது ஆறுபோலோடி

பட்டணத்தார் வீடுகளெல்லாம் – மேடுபள்ளம்
பாங்குடனே தான்பெருகி ஓடிநின்றதாம்
கோட்டையிலே தாய்மானசுவாமி – புரந்தகன்
கோபுரத்தின் மேற்கலசம் தான் அசைந்ததே
கேட்டசன மேபுலம்பினார் – இதுவென்ன
கெட்டகாத்து வந்ததென்று கேகேயென்றார்

சீரங்கத்தில் அரங்கேசர் இன்னாள்மட்டும்
சிந்தனை வராமல்காத்துப் பந்தனம்செய்தார்
ஆரங்கள் வைத்த சுவரெல்லாம் மெத்தை வீடு
அடியோடே விழுந்ததங்கே கெடிகலங்கித்
தாரங்களும் பிள்ளைகளுடன் – கூட்டிக்கொண்டு
தான் நடந்து வேகமுடன் கூகூவென்றார்
ஊரெங்கும் அடித்தகாத்துக்குப் பகவானை
உள்ளமதி லேநினைத்து வள்ளலே என்றார்.

– வெங்கம்பூர் சுவாமிநாதன்

வெங்கம்பூர் சுவாமிநாதன் என்பவர் இலக்கிய விமர்சகர் மற்றும் நாட்டுப்புற ஆய்வாளர் ஆவார். இவர் இலக்கியம், இசை, ஓவியம், நாடகம், நாட்டார்கலை, திரைப்படம் எனப் பல துறைகளில் அறிவும் விமர்சனத் திறனும் கொண்டவர். பஞ்ச கும்மிகள், கோணக்காத்துப் பாட்டு என்ற காத்து நொண்டிச் சிந்து போன்ற நாட்டுப்புறப் பாடல்களை இயற்றியுள்ளார். இங்குத் தரப்பட்டுள்ள பாடல் புலவர். செ. இராசு அவர்கள் தொகுத்த 'பஞ்ச கும்மிகள்' என்னும் நூலில் இருந்து எடுக்கப் பட்டதாகும்.

## செயல்பாடுகள்

- சிந்துப் பாடல்களைத் திரட்டி வகுப்பறையில் பாடிக் காட்டுங்கள்.
- காத்து நொண்டிச் சிந்துப் பாடல்கள் கூறும் புயல் பற்றிய கருத்துகளைக் கவிஞர் வைரமுத்துவின் 'போ புயலே' என்னும் கவிதையுடன் ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.
- 'இயற்கையும் பேரிடர்களும்' என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடத்துங்கள்.

# அலகு 2

# மனிதம்



'எல்லோரும் ஒரு குலம் எல்லோரும் ஓரினம்' என்ற பாரதியின் கவிதை அடிகளுக்கு இணங்க நாட்டின் மக்கள் அனைவரும் சாதி, மத, இன பேதமின்றி இணைந்து வாழ வேண்டும். ஒற்றுமையும் ஒருமைப்பாடும் கொண்ட ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க வழிவகுப்போம்.

# நல்லொழுக்கம்



## வேற்றுமையில் ஒற்றுமை

ஊருக்கு நீ உழைத்தால்
உன்னருகே அவன் இருப்பான்
உண்மையிலும் அன்பினிலும்
ஒன்றாய்க் கலந்திருப்பான்
பசித்தவர்க்குச் சோறிடுவோர்
பக்கத்தில் அவன் இருப்பான்
கருணையுள்ள நெஞ்சினிலே
தினமும் குடியிருப்பான்!
ஆதிகடவுள் ஒன்றேதான்
அதைக் காண முடியாது
ஆண் பெண் சாதி இரண்டுதான்
இதில் பேதம் கிடையாது!
உயர்வு தாழ்வு என்பதெல்லாம்
உள்ளத்தால் வரும் மாற்றம்தான்!

உள்ளத்தில் உள்ளவனை
ஒளிவிளக்காய் நிற்பவனை
பாரெங்கும் தேடினாலும்
ஒருநாளும் கண்டதில்லை
கண்டவரும் சொன்னதில்லை
சொன்னவரும் கண்டதில்லை
காற்றைப்போல பூமியிலே

கலந்திருப்பான் ஆண்டவனே!
மதம் என்னும் சொல்லுக்கு
வெறியென்றோர் பொருளுண்டு
மனிதராய்ப் பிறந்தவர்கள்
மதத்தால் பிரிந்து விட்டார்

மதத்தால் பிரிந்தவர்கள்
அன்பினால் ஒன்று பட்டு
ஒன்றே குலமாகி
ஒற்றுமையாய் வாழ்ந்திருப்போம்!

– கவிஞர் கண்ணதாசன்

கவிஞர் கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா என்பதாகும். இவர் சிவகங்கை மாவட்டம் சிறுகூடல்பட்டியில் பிறந்தார். இவரது சிறப்புப் பெயர் கவியரசு. திரைப்படப் பாடலாசிரியரான இவர் சேரமான் காதலி (சாகித்திய அகாதெமி விருது பெற்றது), ஆட்டனத்தி ஆதிமந்தி, தைப்பாவை, மாங்கனி (குறுங்காவியங்கள்), அர்த்தமுள்ள இந்து மதம் (10 தொகுதிகள்), இயேசுகாவியம், சிவகங்கைச் சீமை, பாரிமலைக்கொடி, மலைவாசம், அனார்கலி போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- பிறப்பால் ஏற்றத்தாழ்வு இல்லை; எல்லோரும் சரிசமம் எனக் கவிஞர் கண்ணதாசன் கூறும் திறத்தைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- 'ஊருக்கு நீ உழைத்தால்' என்ற பாடலின் கருத்தைத் தற்கால வாழ்வியலுடன் ஒப்பிட்டு ஓர் ஒப்பீட்டுக் குறிப்பு தயார்செய்து வகுப்பில் வெளியிடுங்கள்.

## நல்லவருக்குதவியது கல்மேல் எழுத்து!

இன்று எப்படியாவது மாரியப்பனைச் சந்தித்துவிட வேண்டுமென்று, அமுதன் மிக வேகமாக ஓடிக் கொண்டிருந்தான். நெடிய பயணங்களுக்கு முடிவில் ஒருவழியாக மாரியப்பன் வீட்டை அடைந்தான். அமுதனுக்கு ஒரே ஆச்சரியம்! மாரியப்பன் பெரிய ஆளாக வளர்ந்துவிட்டான் என்று மற்றவர்கள் கூறக் கேட்டதுண்டு. ஆனால் இன்றுதான் அமுதன் அதை நேரில் பார்த்தான்.

நுழைவாயிலில் கதவைத் திறந்துவிடும் காவலாளி முதற்கொண்டு, எத்தனை பணியாளர்கள் அவன் வீட்டில் பணியாற்றுகிறார்கள். தோட்டக்காரன், சமையல்காரன், கார் ஓட்டுநர் என்று அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போனது.

மறுபுறம் பல வண்ணங்களில் கார்கள், இரண்டு சக்கர வாகனமென்று அந்த வரிசையும் நீண்டது. இதையெல்லாம் பார்த்து அமுதனுக்கு ஒரே ஆச்சரியம் கலந்த வியப்பு.

'இது எப்படி மாரியப்பனுக்கு மட்டும் சாத்தியமாயிற்று. அவன் மட்டும் எப்படி மிக விரைவில் பணக்காரனானான்?' என்று தன் மனதில் எண்ணிக் கொண்டிருந்தான்.

'வெகுநேரமாக இங்குக் காத்துக்கொண்டிருக்கிறோம். இன்னும் மாரியப்பனைக் காணவில்லையே?', 'ஒருவேளை அவன் நாம் வருவதற்கு முன்பே வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டானா? இல்லையா?' என்ற தன் வினாவிற்கு விடைகாண, அங்கிருந்த காவலாளிகளிடம் விவரம் கேட்டான்.

அவர்கள் மாரியப்பன் வீட்டில்தான் இருக்கிறார் என்று உறுதிப்படுத்தினார்கள்.

'இன்னும் சற்று நேரத்தில் நாம் எண்ணி வந்த செயல் முடியப் போகிறது'. 'கடவுள் புண்ணியத்துல அது மட்டும் நடந்துட்டா நம்ம வாழ்க்கை நல்லாயிருக்குமென்று' வீட்டு வாசலைப் பார்த்தபடி எண்ணிக் கொண்டிருந்தான் அமுதன்.

சற்றுநேரத்திற்குள் அந்த வீட்டின் கதவு திறந்தது. அது அமுதனுக்குக் கோயில் கதவு திறப்பதுபோல் இருந்தது. உள்ளிருந்து மாரியப்பன் யாரிடமோ பேசிக்கொண்டே வெளியே வந்தான். அமுதனின் முகத்தில் மகிழ்ச்சி, 'தாயைக் கண்ட கன்றுபோல்' அவன் முன் நின்றான். மாரியப்பனிடம் பேசலாமென்று எத்தனித்த வேளையில் அமுதனைக் கடந்து சென்றுவிட்டான் மாரியப்பன்.

மாரியப்பன் பின்னாலேயே வந்த ஒரு பணியாளர் பணிவாக, அமுதன் என்ற நபர் தங்களுக்காக வெகு நேரமாகக் காத்திருப்பதாகச் சொன்னான். சட்டென்று திரும்பிய மாரியப்பனை, வணங்கினான் அமுதன்.

"யார் நீ? உனக்கென்ன வேண்டும்" என்றான் மாரியப்பன்.

கீழே விழுந்த கண்ணாடியாக நொறுங்கிப் போனான் அமுதன்.

"என்னை அடையாளம் தெரியவில்லையா? நான்தான் அமுதன் உன்னுடைய பழைய முதலாளி" என்றான்.

"முதலாளியா?" "நான் யாருக்கும் தொழிலாளியாக இருந்ததில்லை" என்று கூறி, தன் காவலாளிகளை அழைத்து இவனை வெளியே தள்ளுங்கள் என்றான் மாரியப்பன்.

தன்னை நெருங்கியவர்களை முறைத்தபடியே அந்த இடத்தை விட்டு அகன்றான் அமுதன்.

முன்னொரு காலத்தில் தொழில் பழகத் தன்னிடம் வந்து கெஞ்சிய மாரியப்பனுக்கு, தன் மகனைப் போலப் பாவித்து அனைத்துத் தொழிலையும் கற்றுத் தந்தோம். மேலும் அவன் புதியதாகத் தொழில் தொடங்கவும் பல உதவிகளைச் செய்தோம். ஆனால், அதையெல்லாம் இன்று மறந்துவிட்டு என்னையே 'யாரென்று கேட்டுவிட்டானே அந்தப் படுபாவி' என்று 'வெயிலில் பாறையின் மீது விழுந்த புழுவாகத்' துடித்தபடி நடந்து சென்றான் அமுதன்.

வெகுதூரம் வெயிலில் நடந்தவனுக்குக் களைப்பாக இருந்தது. அருகிலிருந்த கொன்றை மரத்தடியில் சற்று இளைப்பாறலாமென்று, அந்த மரத்தடியிலிருந்த ஒரு கல்லின் மீது அமர்ந்து கொண்டான்.

பக்கத்துக் கல்லில் இன்னொரு நபர் அமர்ந்து கொண்டிருந்தார். சற்று நேரத்திற்குப் பிறகு அமுதனின் பக்கத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது. யாரென்று திரும்பிப் பார்த்தான். பக்கத்தில் ஓர் உருவம். வந்த களைப்பில் அப்பொழுதுதான் அமுதனின் கண்களுக்கு அந்த உருவம் தென்பட்டது.

"யாரையா நீங்கள்? ஏன் பலத்த சோகத்துடன் காணப்படுகிறீர்கள்" என்றார் அந்த நபர்.

அணையை உடைத்துகொண்டு காட்டாற்று வெள்ளம் வெளியேறுவது போல் தனக்கு நேர்ந்த அவலத்தை அந்த நபரிடம் சொன்னான் அமுதன்.

பல ஆண்டுகளுக்கு முன் தன் பெயரில் பல தொழிற்சாலைகளை நடத்தி வந்ததாகவும் தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தால் இன்று அனைத்துச் செல்வங்களையும் இழந்து கஷ்டப்படுவதாகவும் மேலும் மாரியப்பன் என்ற ஒருவனுக்குத் தான் தொழிலைக் கற்றுக் கொடுத்ததாகவும் இன்று அவன் பெரிய பணக்காரனாக இருக்கிறான் என்றும் அமுதன் கூறினான்.

மேலும் தன் மகன் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருப்பதாகவும் அவனுக்குச் சிகிச்சை மேற்கொள்ள தன்னிடம் போதிய பணமில்லாததால் மாரியப்பனிடம் உதவி கேட்கச் சென்றதாகவும் அவனோ, தன்னை மூஞ்சியில் அடித்தவாறு "யாரென்று தெரியாது" என்று கூறி, தன்னை வெளியே அனுப்பிவிட்டான் என்றும் விழிகளில் கண்ணீர் வழிய நடந்தவற்றைக் கூறினான் அமுதன்.

அதுவரை அமைதியாக அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த அந்த நபர், சட்டென்று அமுதனின் முன் எழுந்து நின்றான்.

"ஐயா! என்னைத் தெரியவில்லையா? நான் தான் குமரன். தங்களின் தொழிற்சாலையில் காவலாளியாகப் பணியாற்றியவன்." "ஒருநாள், ஒருவேளை உணவிற்குக்கூட வழியில்லை என்று கூறி, தங்களிடம் ஒரு வேலை கேட்டு வந்தேன். சற்றும் சிந்திக்காமல் எனக்கொரு வேலை கொடுத்து, எனது குடும்பத்தின் பசியைப் போக்கினீர்களே" என்று மனமுருகக் கூறினான்.

"குமரனா நீ! என்னை மன்னித்துவிடப்பா. என்னால் உன்னைச் சட்டென்று அடையாளம் காண முடியவில்லை. எப்படி இருக்கிறாய், நலம் தானே" என்று கேட்டான் அமுதன்.

"தங்களுடைய ஆசீர்வாதத்தாலும் உதவியாலும் நானும் எனது குடும்பமும் இன்று நன்றாக இருக்கிறோம். தங்கள் மகனின் உடல்நிலை இப்பொழுது எப்படி இருக்கிறது?" என்று கேட்டான் குமரன்.

"ஒன்றும் சொல்வதற்கில்லை; மேல் சிகிச்சையளிக்க உடனடியாகப் பணம் கட்ட வேண்டும்; அதற்காகத்தான் இப்படி அலைந்து கொண்டிருக்கிறேன்" என்றான் அமுதன்.

"நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். உங்களுக்குத் தேவையான பணத்தை நான் தருகிறேன்" என்று கூறி வலுக்கட்டாயமாகத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான் குமரன்.

தனது மகனின் திருமணத்திற்காக வைத்திருந்த பணத்தை எடுத்து அமுதனிடம் கொடுத்தான் குமரன். முதலில் அதை வாங்க மறுத்த அமுதன், குமரனின் வலுக்கட்டாயத்தால் அதைப் பெற்றுக்கொண்டான். "தாங்கள் எனக்குப் பல உதவிகளைச் செய்திருக்கிறீர்கள். அதற்கு ஒரு சிறு கைமாறாக இதை வைத்துக் கொள்ளுங்கள்" என்றான். ஆனந்தக் கண்ணீர் மல்க குமரனுக்கு நன்றி கூறிவிட்டு வேகமாக மருத்துவமனை நோக்கி நடந்தான் அமுதன்.

போகிற வழியில் ஓர் அரசுப் பள்ளியின் மதில்களில் எழுதியிருந்த வரிகள், நல்லவர்கள் யார்? கெட்டவர்கள் யார்? என்பதை அவனுக்கு உணர்த்தியது.

மேல் சிகிச்சைக்குப் பிறகு அமுதனும், அவன் மகனும் மன மகிழ்ச்சியோடு வீடு திரும்பினார்கள்.

நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே – அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

நல்லவர்களுக்கு நாம் செய்த உதவியை, அவர்கள் கல்மேல் எழுதிய எழுத்தைப்போல் தம் உயிர் உள்ள அளவும் எண்ணியிருப்பார்கள். மாறாகத் தீயவருக்கு நாம் செய்த உதவியை அவர்கள் நீரின் மீது எழுதிய எழுத்தைப்போல, அதை உடனே மறந்து விடுவார்கள்.

–கவிஞர் உமையவன்

கவிஞர் உமையவன் ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம் என்னும் ஊரில் பழனிச்சாமி – சரஸ்வதி தம்பதியருக்கு மகனாக 1990 ஆம் ஆண்டு மார்ச் 15 ஆம் தேதி பிறந்தார். கவிஞர் உமையவனின் இயற்பெயர் ப. இராமசாமி. இவர் சிறுவர் இலக்கியம், புதுக்கவிதை, ஹைக்கூ, ஆன்மீகம் போன்ற பல்வேறு துறைகளில் பங்களித்துள்ளார். இவர் உழவுக்கவிஞர், தமிழ் இலக்கிய மாமணி உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார். 'சிறுவர் நீதிக் கதைகள்' என்னும் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதே இச்சிறுகதை.

## செயல்பாடுகள்

- கதைக்கருத்தை விளக்கி எழுதுங்கள்.
- 'நல்லவருக்குதவியது கல்மேல் எழுத்து' என்ற கதையை நாடக வடிவில் மாற்றி எழுதுங்கள்.

## அயோத்திதாசப் பண்டிதர்

தந்தை பெரியார், அம்பேத்கர் போன்ற சமுதாயச் சீர்திருத்தவாதிகளுக்கு முன்பாகவே தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் குரல்கொடுத்த அறிஞர் ஒருவர் தமிழ்நாட்டில் வாழ்ந்தார். தனி ஒருவராக நின்று பகுத்தறிவுப் பிரச்சாரம் மேற்கொண்டு எல்லாச் சமூக சீர்திருத்தவாதிகளுக்கும் முன்னோடியாக இருந்த அவர் பெயர் அயோத்திதாசப் பண்டிதர்.

இவர் கந்தசாமி என்பவரின் மகனாக 1845 இல் சென்னை தேனாம்பேட்டையில் பிறந்தவர். வி. அயோத்திதாசர் என்ற ஆசிரியரிடம் கல்வி பயின்று அவர் பெயரையே தனது பெயராக்கிக் கொண்டமையால் இயற்பெயரை அறிய முடியவில்லை.

தமிழ்த்தென்றல் திரு.வி.க.வுக்கு முடக்குவாதம் ஏற்பட்டிருந்தது. அதைப் போக்குவதற்குத் தகுந்த வைத்தியர்கள் இல்லாத காலத்தில் அதை நீக்கிய வைத்தியர் அயோத்திதாசர், திரு.வி.க.வின் குடும்ப வைத்தியராகவே விளங்கினார்.

தமிழ் மருத்துவத் துறையில் மட்டுமன்றிக் கல்வி அறிவிலும் சிறந்தவர். வெறுப்படைவதைக் காட்டிலும் விவேகமாகச் சிந்திப்பது பலன் தரும் என்னும் கொள்கையுடைய இவர் "பிரபந்தங்களையும் திருமுறைகளையும் விவிலியப் பேருரைகளையும் நபியின் வழி முறைகளையும் சமண, பௌத்த நூல்களையும் தமிழ் இலக்கியங்களையும் படித்துள்ளேன், வாருங்கள் வாதிடுவோம்" என்று கல்வி தங்களுக்கே உரிய சொத்து என இறுமாந்தவர்களிடம் அறைகூவல் விடுத்தார். இதிலிருந்தே அவரது கல்விப் புலமையும் வாதிடும் திறமையும் விளங்கும்.

உரிமையை அடைய வேண்டுமானால் ஒற்றுமை வேண்டும். ஒற்றுமையோடு முன்னேற்றங் கருதி வாழ்ந்தால் உலகச் சீர்திருத்தக்காரர்களில் நாம் ஒருவராக ஆக முடியும் என அறிவுறுத்திய அயோத்திதாசப் பண்டிதர் 1870 இல் அத்வைதானந்த சபையை நிறுவி, பழங்குடி மக்களை ஒன்றுதிரட்ட முயன்றார்.

பௌத்த மதத்தைத் தழுவியவர்கள் பல கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்ட மக்களாக ஒதுக்கி வைக்கப்பட்டார்கள் என்று பல ஆதாரங்களுடன் எடுத்துக் கூறியதோடு, அம்மக்களே பூர்வக்குடிகள் என்றும் அவர்களைப் பூர்வத் தமிழர்கள் என்றே அழைக்க வேண்டும் என்றும், 1881 ஆம் ஆண்டு ஆங்கில அரசு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தியபோது கோரிக்கையை முன் வைத்தார்.

1875 ஆம் ஆண்டு முதல் பகுத்தறிவுப் பிரச்சாரத்தைத் தனி மனிதராகச் செய்து வந்த அயோத்திதாசர் 1885 ஆம் ஆண்டு 'திராவிடப் பாண்டியன்' என்னும் இதழை ஜான்ரத்தினம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு

நடத்தினார். தனது கொள்கைகளை எடுத்துச் சொல்ல இந்த இதழையும், 'ஒரு பைசா தமிழன்', 'தமிழன்' ஆகிய பத்திரிகைகளையும் நடத்தினார். ஒரு பைசா தமிழனின் விலை காலணா.

எல்லாச் சமயக் கோட்பாடுகளையும் ஒன்றிணைத்து 'பிரம்மஞான சபை' என்ற நிறுவனம் பிளாவிட்ஸ்கி, கர்னல் ஆல்காட் என்ற ஆங்கிலேயர்களால் இங்கிலாந்தில் நிறுவப்பட்டு, சென்னைக்கு மாற்றப்பட்டது. பிளாவிட்ஸ்கியும், ஆல்காட்டும் சென்னையில் நிரந்தரமாகத் தங்கினர். இவர்களது கோட்பாடுகள் ஏழை பாமர மக்களைச் சென்றடையவில்லை. ஆனால் இவர்களைப் பயன்படுத்திக்கொண்டார் அயோத்திதாசர். கர்னல் ஆல்காட் பௌத்த மதத்தில் பற்றுக் கொண்டவர். அவரைக் கொண்டே தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பல கல்வி நிலையங்களைத் தொடங்கி வைத்தார். 1886 இல் ஆல்காட் உதவியுடன் தர்க்க இயலைத் தென்னிந்தியா முழுவதும் பரப்பிய அயோத்திதாசர் சைவம், வைணவம், அத்வைதம் முதலிய சமயக் கோட்பாடுகளை நன்கு அறிந்தவர்.

1900 ஆம் ஆண்டில் பௌத்த மதத்தில் சேர்ந்து இலங்கைக்குச் சென்று வந்தார். அங்கிருந்து ஒரு பௌத்தத் துறவியையும் சென்னைக்கு அழைத்து வந்து 1902 இல் 'தென்னிந்திய பௌத்த சாக்கிய சங்கம்' என்கிற அமைப்பைச் சென்னை ராயப்பேட்டையில் தோற்றுவித்து அதன் செயலாளராகப் பணியாற்றினார். பௌத்த மதக் கோட்பாடுகளே உண்மை என்று கூறிய இவரை இந்திய பௌத்த மதத்தின் முதல் மறுமலர்ச்சியாளர் என்று பாராட்டுகிறார்கள். இவர் புத்தரைப் பற்றி எழுதிய 'பூர்வத் தமிழொளி' 1912 இல் புத்தரது ஆதிவேதம் என்னும் நூலாக வெளிவந்தது. புத்தர் பேசிய பாலி மொழியில் மிகச்சிறந்த புலமைமிக்கவரான அயோத்திதாசர், பல நூல்களை எழுதியுள்ளார்.

'விபூதி ஆராய்ச்சி', 'கபாலீசுவரர் சரித்திர ஆராய்ச்சி', 'அரிச்சந்திரன் பொய்கள்', 'திருவள்ளுவர் வரலாறு', 'புத்த மார்க்க வினா–விடை', 'இந்திரா தேச சரித்திரம்' (இந்திய தேச சரித்திரம்) 'விசேஷ சங்கைத் தெளிவு', 'விவேக விளக்கம்', தென்னிந்திரர் தேச புத்தகம், சாட்சியக்காரர்களில் ஒருவராகிய ஸ்ரீஅம்பிகை, அம்மன் அருளிய திருவாசகம், ஆத்திச்சூடி மறுவாசிப்பு, கொன்றை வேந்தன், வெற்றி ஞானம் (உரைகளுடன்) போன்ற நூல்களைப் பகுத்தறிவுக் கண்ணோட்டத்துடன் எழுதியுள்ளார்.

திராவிட மக்களை ஒன்று சேர்ப்பதற்காகவும் இம்மக்களது குறைகளையும் கோரிக்கைகளையும் கூறுவதற்காகவும் 1890 இல் திராவிட மகாஜனசபையைத் தோற்றுவித்தார். அதன் முதல் மாநாடு 1–12–1891 இல் நீலகிரியில் நடந்தது. அதில் பத்து முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றி இந்திய தேசிய காங்கிரசுக்கு அனுப்பி வைத்தார். தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்கான ஆதரவைப் படித்த சாதி இந்துக்களிலிருந்துதான் பெற வாய்ப்புண்டு. அவர்கள்தான் பேதமற்ற நீதியையும், சாதிச்

சிறப்பைக் கருதாத தன்மையையும் சமய, நிற வேற்றுமைகளை அகற்றியும் ஆங்கிலேயர்களிடமிருந்து சலுகைகளைப் பெற்றுத்தர வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் மக்கள் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டன. இந்திய தேசிய காங்கிரசுக்கு அனுப்பப்பட்ட அக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்பது கூடத் தெரியாமல் 17 ஆண்டுகளாகியும் பதில் வரவில்லை.

அவரது கோரிக்கைகளுக்கு அப்போது எதிர்பார்த்த பலன் இல்லாததற்குக் காரணம் அவர் மட்டுமே தனியாகக் களத்தில் நின்று போராடியதுதான். இரட்டை மலை சீனிவாசன் என்ற தலைவரும் அயோத்திதாசரும் தனித்தனியாகச் செயல்பட்டனர். அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படவில்லை. இறுதியில் இரட்டைமலை சீனிவாசன் 1890 இல் தென்னாப்பிரிக்கா சென்றுவிட்டார். 1914–இல் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிய அயோத்திதாசரும் காலமானார்.

டி. தருமராஜ்

டி. தருமராஜ் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராவார். நான் பூர்வ பௌத்தன், தமிழ் நாட்டுப்புறவியல், நான் ஏன் தலித்தும் அல்ல? போன்ற நூல்களை எழுதியுள்ளார். இக்கட்டுரை 'அயோத்திதாசர்' என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டதாகும்.

## செயல்பாடுகள்

- அயோத்திதாசப் பண்டிதரின் புதுமைச் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- அயோத்திதாசப் பண்டிதரின் மனிதநேயப் பண்புகள் பற்றி ஒரு குறிப்பு தயாரியுங்கள்.

# நல்லிணக்கம்



## குழி பறிக்குது வேரிலே!

ஒற்றுமையில் ஓங்கிநின்ற சக்தியாலே– மக்கள்
உள்ளமெல்லாம் பொங்குதடா வெள்ளம்போலே
வெற்றியெனும் மேடையிலே அன்புக்காளை....
வீரநடை போடுதடா இந்தவேளை....
அன்பிருக்குது அறிவிருக்குது
பண்பிருக்குது பாரிலே... அதை
அழிக்க எண்ணித் திருட்டு நரிகள்
குழிபறிக்குது வேரிலே...

ஒருவர் : மாமறவர் வழியில் பிறந்து சிறந்து மகாவீரன் என விளங்குவேன்

மற்றவர் : வாளும் திடமுடைய தோளும் துணையிருக்க யார்க்கும் உலகில் அஞ்சிடேன்

இருவர் : எண் திசைகளும் கண்டு நடுங்க வென்று வாகை சூடுவோம். அறிவிலே கலைஞராய் திறனிலே தீரராய் நாடும் ஏடும் எமைப்பாட தொல்லுலகம் உள்ளவரை வளர்புகழ் அடைவோம்

கூட்டம் : இது வீரர் பிறந்த மண்ணு – இதில் நாமெல்லாம் ஒண்ணு

அட ஆத்தே நீங்க பெரும் வீரர்கள்தான்–உங்களைப் பார்த்தே எதிரி ஓடிப்போயிடுவான்.

| | | |
|---|---|---|
| கூட்டம் | : | அன்பிருக்குது அறிவிருக்குது பண்பிருக்குது பாரிலே–அதை அழிக்க எண்ணித் திருட்டு நரிகள் குழிபறிக்குது வேரிலே... |
| ஒருவர் | : | வெட்டும்கூர் வாளினைக் காட்டிடுவேன் – நாட்டில் வேதனை செய்வோரை வாட்டிடுவேன் |
| மற்றவர் | : | எந்தநாடும் இதற்கீடில்லை என்றே–என் சொந்த நாட்டைச் சொர்க்க மாக்கிடுவேன் |
| இருவர் | : | கற்றவர் நெஞ்சக் கருத்தினிலே ஒன்றி ஒற்றுமை கொண்டுல காண்டிடுவோம் வெட்டும் கூர்வாளினைக் காட்டிடுவோம் – நாட்டில் வேதனை செய்வோரை வாட்டிடுவோம் |

– பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை என்னும் ஊரில் அருணாச்சலம் – விசாலாட்சி தம்பதியருக்கு மகனாக 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் தேதி பிறந்தார். நாட்டுப்பற்று மற்றும் சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட பாடல்கள் பலவற்றை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- 'குழிபறிக்குது வேரிலே' என்ற பாடல் மூலம் அறியலாகும் செய்திகளை மதிப்பிட்டு எழுதுங்கள்.
- 'இது வீரர் பிறந்த மண்ணு – இதில் நாமெல்லாம் ஒண்ணு' என்னும் கருத்தில் கலந்துரையாடிக் கட்டுரை எழுதுங்கள்.

## நிலம் பூத்து மலர்ந்த நாள்

அந்தப் பெரிய வீட்டின் முன்னால் அசைவற்று நிற்க மட்டுமே எங்களால் முடிந்தது. நீரிலிட்டுக் கொதிக்க வைத்த பனையோலைகள் முற்றத்து இளவெயிலில் காய வைப்பதற்காக அடுக்கப்பட்டிருந்தன. ஆனால் அவை காற்றடித்துப் பெரும்பாலும் சிதறிப் போயிருக்கின்றன. அவை பெரும்புலவரின் மொழி விளையாட்டுகளுக்காகப் பயன்படுவதாக இருக்கலாம். சிறிதுநேரம் பார்த்து நிற்கவே, அவை எங்களைக் கேலி செய்வதாகத் தோன்றியது.

மாலை சூழ்கிறது. இரவு தங்க வேறொரு இடமில்லை. மாலை விளக்கேற்ற கபிலர் வெளியே வந்தபோதும் நாங்கள் அப்படியே நின்றிருந்தோம்.

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? பாணரும் கூத்தருமென்று தெரிகிறது. வேள்பாரியைப் பார்த்தால் உங்களுக்கு வேண்டியதைத் தருவார். நான் சற்று அவசரமாகச் செல்கிறேன்."

குரலின் கனமறிந்தபோது பதில் சொல்ல முடியாமல் நாங்கள் குறுகி நின்றோம்.

"நீங்கள் சொன்னதில் தவறில்லை. நாங்கள் பாணரும் கூத்தரும்தான். ஆனால் இரவலராக வரவில்லை. உங்களின் நண்பர் பரணர் சொல்லித்தான் நாங்கள் இங்கே வந்தோம். உங்களைப் பார்க்கச் சொன்னதும் அந்தப் பெரும்புலவரே.

"இரவலரோடும் கனிவுள்ளவன்தான் நான். இந்நாள்வரை பாரியிடமிருந்து அறிந்து கொண்டதும் அதைத்தான்; பாட்டிலும் கூத்திலும் திறமையுடையவர்களிடம் பழகுவதில் தவறு நேர்ந்துவிடக்கூடாது."

மன்னிப்புக் கேட்பது போன்ற வார்த்தைகளைப் பேசாதீர்களென மறுத்துப் பெரும்பாணன் கைகூப்பினார். கபிலர் தொடர்ந்தார்.

"பரணர் அனுப்பி வந்தவர்கள் அல்லவா நீங்கள்? பார்த்து நெடுநாட்கள் ஆகியிருந்தாலும் ஒரே வயிற்றில் பிறந்தவர்களைவிட அவரிடம் நான் மிக நெருக்கமானவன்; என்னை வழி நடத்தியவருள் மூத்தவர்; அவர் இரக்கமுள்ளவரும் நீதிமானுமாகிய பெரும்புலவர்."

"அதை நாங்களும் மிக நன்றாகவே உணர்ந்து கொண்டோம் புலவரே" என்றேன் நான்.

"அவரோடு நெருங்குபவர்கள் அனைவரும் அதை உணர்ந்து கொள்வர். வையாவிக் கோப்பெரும் பேகனின் அரண்மனையில் பரணரை நான் கடைசியாக நேரில் பார்த்தது இன்றும் என் நினைவில் நன்றாக இருக்கிறது. வள்ளல்களின் பின் புலவர்கள் செல்வது வழக்கம்தானே?"

நான் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். இரவலர்க்குக் கொடுத்துப் புகழ்பெற்ற வள்ளல்களைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டுமல்லவா?

"வறுமையில் உழன்ற பரணருக்கு அரும்பொருட்கள் கொடுத்தவன் பேகன், மயில் குளிரால் நடுங்குவதாக எண்ணி, தன் போர்வையை அதற்குப் போர்த்திவிட்டவன் என்பதுதான் பேகனின் பெருமை.

ஆனாலும் தன் மனைவி கண்ணகியைக் கைவிட்டு அம்மன்னன் வேறொருத்தியின் பின்னால் சென்றான். மற்றெல்லாவரிலும் இரக்கம் கொண்ட பேகன், தன் மனைவி கண்ணகிக்கு இக்கொடுமை செய்தது பரணரை உலுக்கியது. பேகன் செய்தது அநீதி என்று சொல்லத் துணிந்தார் பரணர். நானும் அதை வழி மொழிந்தேன். அரசன் செய்ததெனினும் அநீதி என்று அறிந்தால் அதை எதிர்ப்பார் பரணர்."

பரணரைப் பற்றிச் சொன்னால் தீராது என்று தோன்றியதால் கபிலர் சற்று நிறுத்தினார்.

"அதிருக்கட்டும். என்னால் ஆனமட்டும் நான் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறேன். வழிப்பயணத்தில் சோர்ந்து போயிருக்கிறீர்கள்

அல்லவா? சற்று இளைப்பாறுங்கள். அல்லலற்று இங்கே இருக்கலாம். பாரியின் நாட்டில் பாணரும் கூத்தரும் பட்டினியால் வாடத் தேவையில்லை. இன்று தவிர்க்க முடியாத ஒரு வேலையில் நான் அகப்பட்டுக் கொண்டேன். நாளை பார்க்கலாம்"

விளக்கின் திரி எரிந்து கருகுவதைத் தன் கைகளால் தட்டுவதற்கிடையில் கபிலர் தன் அணுக்கச் சேவகர்களில் ஒருவனை அழைத்து, "பேகா, இவர்கள் இங்கே தங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடு. ஒரு குறையும் இருக்கக்கூடாது" என்று வணங்கிவிட்டு உள்ளே சென்றுவிட்டார்.

"விருந்தினர் தங்குவதற்காக மன்னரால் கட்டப்பட்ட பெரிய விருந்தகம் உண்டு. இன்று நீங்கள் அங்கே தங்கிக் கொள்ளலாம்."

பேகனோடு போகத் தயாரானோம். சற்றுநேரம் கீழே இறக்கி வைத்திருந்த மூட்டைகளைத் தலையிலேற்றி வெளியே வந்தோம். மிக வேகமாக வீட்டின் படிகளிறங்கி ஒருவன் வெளியே போவதைக் கண்டு நான் சில நொடிகள் அதிர்ந்து நின்று விட்டேன். தெருவின் மங்கலான வெளிச்சத்துக்குள் அவன் மறைந்தான். என்னால் அசைய முடியவில்லை."என்னாச்சு?"சட்டென நெல்லக்கிளி அருகே வந்தாள்.

"ஒன்றுமில்லை. இப்போது வெளியேறியது யார்? மயிலன்தானே? நம்முடைய மயிலன்தானே அது?"

நெல்லக்கிளியும் நடுங்கிவிட்டாள்.

"மயிலனா? இருட்டாக இருப்பதால் நான் அவனைப் பார்க்கவில்லை. அவனை இங்கே எப்படிப் பார்க்க முடியும்? வருடங்களுக்கு முன் சிறு வயதில் பார்த்த அவனை இன்று ஒரே பார்வையில் அடையாளம் காணமுடியுமா? அவனையே நினைத்துக் கொண்டிருப்பதால் தோன்றியதாக இருக்கலாம்."

நெல்லக்கிளி அப்படிச் சொன்னாலும், அவளுடைய கண்களிலும் காலங்கள் பின்னிட்ட ஓர் ஒளிர்வு வந்து போவதைக் கண்டேன்.

"அது அவனாக இருக்குமோ?"

"ஆண்டவரே, அது அவனாகவே இருக்க வேண்டும்."

எங்களின் உள்ளங்கள் ஒன்றாகவே துடித்தன. மூட்டைகளைச் சுமந்து முன்னால் நடக்கும்போதும் உள்ளம் கலங்கித் துடித்துக் கொண்டிருந்தது. பின்னிட்ட வழியோ நேரமோ நானறியவில்லை. "விருந்தகத்தை அடைந்து மூட்டைகளைக் கீழிறக்கினோம்.

"நண்பா, நாம் புறப்பட்டபோது பெரும்புலவரின் வீட்டிலிருந்து வெளியேறிய ஆளை உங்களுக்குத் தெரியுமா?" பேகனிடம் நான் விசாரித்தேன்.

"பெரும்புலவரைப் பார்க்கப் பலரும் வருவார்கள். பெரும்பான்மை யாருடைய ஊரையும் பேரையும் நாங்கள் தெரிந்து கொள்வதில்லை. இன்றும் நிறையபேர் வந்திருக்கின்றனர்.

நினைவுபடுத்திக் கொண்டவனைப் போல அவன் தொடர்ந்தான்.

"நாம் புறப்படும்போது படிகள் கடந்து சென்றது சாமிதானே? ஆமாம், சாமிதான். பலமுறை அங்கே வந்திருக்கிறார்; புலவருக்கு மிகவும் நெருக்கமானவர்."

அதன்பின் அவனைப்பற்றி விசாரிக்கவில்லை. விருந்தகத்தில் எங்களைப் போல எல்லா நாடுகளிலிருந்தும் கூத்தரும் பாணரும் வந்திருந்தனர். அனைவருக்கும் தேவையான கள்ளும் ஆட்டிறைச்சியும் ஊன்சோறும் உணவறையில் தயாராயிருந்தன. கையிலிருந்த பெரும்பயிறுக் கட்டுகளை நாங்கள் அங்கே கொடுத்தோம். எல்லோரும் உணவுண்டுத் திரும்பி வந்ததும் குழந்தைகள் அயர்ந்து உறங்கத் தொடங்கினர். மீண்டுமொரு புகலிடம் கிடைத்ததெனினும் என்னால் உறங்க முடியவில்லை. இங்கே பார்த்தது மயிலனைத்தானா? சந்தன் போன காரியம் என்னவானதோ தெரியவில்லையே? இந்தப் புதிய நாட்டில் இரவில் யார்யாரோ எதற்காகவோ பதுங்குகிறார்கள் என்று எனக்குத் தோன்றியது. திறந்த கண்களுக்குள் ஊர்ந்து ஏறும் செல்களை, நான் பாதி உறக்கத்திலும் துர்க்கனவாகக் கண்டேன்.

மறுநாள் மிகவும் தாமதித்தே நாங்கள் விழித்தோம். இரவு உறக்கமற்ற முந்தைய நாளையப் பயணம் எல்லோரையும் தளர்வுறச் செய்திருந்தது. அரசரின் இரக்கத்தைத் தேடி இனி எங்கும் போக வேண்டியதில்லை என்ற எண்ணமும் கூடி வந்தது. அருவியில் போய்க் குளித்து வந்தவுடன் சோர்வு முழுவதும் நீங்கியது. வேக வைத்த தினையும், மோர் கலந்துத் தயாரித்த செம்புற்றியல் குழம்பும் உண்டுவிட்டு நாங்கள் வெளியில் வந்தோம்.

இந்த நீண்ட ஓய்விற்குப் பிறகு, இப்போது கபிலரின் வீட்டிற்குச் செல்லலாமா என்று முடிவு செய்ய இயலவில்லை. யாரும் எங்களைத் தேடி வரவுமில்லை. கபிலர் வேலைப் பளுவோடிருப்பார். வேலை முடிந்து பார்க்கலாமென்று இருப்பார். அதனால் அங்கே செல்ல வேண்டாமென்று முடிவு செய்து, சுற்றியுள்ள இடங்களில் அலைந்து திரிந்து மீண்டும் விருந்தகத்திற்கே திரும்பி வந்தோம். வெளியே நடந்துகொண்டிருந்த போதெல்லாம் என் கண்கள் ஒருவனையே தேடிக் கொண்டிருந்தன. ஆனால் அவனை அதற்குப்பின் பார்க்கவே முடியவில்லை. சாமியை ஒரு பார்வை பார்ப்பதற்காவது கபிலரின் வீட்டிற்கு மீண்டுமொரு முறை போக வேண்டுமென்று தோன்றியது. பெரும்பாவலர் எப்படி நடந்துகொள்வார் என்ற அங்கலாய்ப்பு உண்டானதால் அது தேவையில்லையென முடிவு செய்தோம். விருந்தகத்தில் தங்குவதும் அடுத்துள்ள இடங்களில் சுற்றுவதுமாக நாங்கள் காலம் கடத்தினோம்.

இரண்டு நாட்கள் கடந்தன. தங்குவதற்கான இடம் கிடைத்தாலும் இனியுள்ள நாட்கள் எப்படியிருக்குமெனத் தீர்மானிக்க முடியாததால் சற்றுத் தடுமாறினோம். ஒன்றும் செய்யாமல் சோர்ந்திருந்த ஒருநாளில், திடீரென

பேகன் அங்கே வந்து சேர்ந்தான். பெரும்புலவரை ஒருமுறை சென்று பார்க்கச் சொன்னான்.

எங்கள் உள்ளம் பூரித்தது. எல்லோரும் தயாராகி பேகனோடு புறப்பட்டோம். கபிலர் வீட்டின் திண்ணையிலேயே அமர்ந்திருந்தார். எங்களைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"வாருங்கள், வாருங்கள். இரண்டு நாட்கள் சரியான வேலை இருந்தது. ஒருமுறை பார்க்கவும் நேரம் கிடைக்கவில்லை. உணவும் உறக்கமும் நன்றாக இருந்ததா?"

சாமி அங்கிருக்கிறாரா என்றுதான் அப்போதும் என் கண்கள் தேடின. பதிலுக்குக் காத்திராமல் கபிலரே தொடர்ந்தார்.

"நாளை நீங்கள் வேள்பாரியைச் சந்திக்கலாம். அரண்மனைப் பணியாளர்களிடம் நான் சொல்லி வைத்திருக்கிறேன். வேளைப் புகழ்வதான பாடல்கள் உருவாக்கப்பட வேண்டும். அவற்றைப் பாடியே ஆடவும் வேண்டும்."

பெரும்பாணன் எதையோ சொல்ல வாயெடுத்தார். உடனே வேண்டாமென்று அமைதியாகி விட்டார். "வேள்பாரியைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது புலவரே. அதையும் நீங்களே சொல்லித் தருவீர்கள் என்று பரணர் சொல்லியிருக்கிறார்."

அதைக் கேட்ட கபிலர் வெடிச்சிரிப்பு சிரித்தார்.

"யாரை எப்படிப் புகழ்வதாயினும் வறுமை களையப்பட வேண்டும். அப்படித்தானே? உண்மைதான். பாடல்கள் மூலம் உயிரை நிலைநிறுத்த முயல்பவருக்கு இது ஒரு தொழில். எதைச் செய்து அதைத் தக்க வைக்கலாம் என்றுதான் முயல வேண்டும்."

சற்று நிறுத்தி மீண்டும் தொடர்ந்தார் புலவர்.

"பாரி வீரமுள்ளவன். மூவேந்தரும் பாரியென்ற பேரைக் கேட்டாலே நடுநடுங்கும் காலமொன்றிருந்தது. அவனிடம் வேற்படையும் யானைப் படையுமுண்டு, போர்க்களத்தில் நேருக்குநேர் நின்று சமர் செய்யும் திறனுமுண்டு. முன்னர் முன்னூறு ஊர்கள் இருந்தன. அவனை வந்து கண்டு சென்ற பாணருக்கும் இரவலர்க்கும் அவற்றை வழங்கிவிட்டான். இப்போது எஞ்சியிருப்பது இதோ இந்த மலையும் இதன் மீதுள்ள இந்நகரமும்தான். எவரேனும் யாசித்தால் அதையும் இரக்கத்தோடு கொடுத்துவிடுவான் பாரி. நாட்டு நிலைமையை நீங்கள் பார்த்திருப்பீர்கள் அல்லவா? பாடலெழுத இவை போதுமே."

இதையெல்லாம் சொன்னபோது கபிலரின் குரலில் ஏற்பட்ட தடுமாற்றத்தை நான் புரிந்துகொண்டேன்.

"பாரியின் வீரமேதான் வீரமின்மையும்; அர்ச்சனை செய்வது எருக்கம்பூவோ, கூவளத்தின் இலையோ எதுவாக இருப்பினும் கடவுள் அருள்புரிவார்.

சூடக்கூடிய மலரென்றோ சூடாத மலரென்றோ இறைவன் பிரித்தறிய மாட்டார். இந்த வேளும் அப்படிப்பட்டவரே"

"பாரி பாரி என்று பல ஏத்தி ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர், பாரி ஒருவனும் அல்லன் மாரியும் உண்டீண்டு உலகுபுரப் பதுவே"தானியற்றிய ஒரு பாடலை நாங்கள் கேட்கும்படியாக மெதுவாகப் பாடினார். நாங்கள் புறப்படத் தயாரானபோது புலவர் வேறொரு செய்தியையும் சொன்னார்.

"நாளை பேகனை அங்கே அனுப்புகிறேன். அவனுடன் சென்று வேளைக் கண்டு வருக, சற்றுப் பொறுங்கள்"

உள்ளே சென்று வந்த கபிலர் ஓர் ஓலைச்சுவடிக் கட்டினை எங்களிடம் நேராக நீட்டினார். பெரும்பாணன் என்னைப் பார்க்க, நான் அதைக் கைநீட்டி வாங்கி என்னிடமிருந்த ஒரு மூட்டைக்குள் வைத்துக்கொண்டேன்.

விருந்தகத்திற்கு வரும்போதும் நான் கபிலரின் ஒவ்வொரு வார்த்தையையும் நினைவில் கொண்டுவந்து சிந்தித்தேன். அதில் ஒவ்வொன்றிலுமிருந்த முடிச்சுகள் என்னைக் குழப்பத்திலாழ்த்தின. நடக்கும்போதே சில வரிகளைப் பாடிப் பார்த்தேன். உள்ளத்தின் கலக்கம், பண்ணிலும் வரிகளிலும் படர்வதை அறிந்த நான் பாட்டை நிறுத்திவிட்டு மற்றவர்களோடு இணைந்து நடந்தேன்.

விருந்தகம் சென்ற பிறகும் உள்ளத்தில் தெளிவு ஏற்படவில்லை. பெரும்பாணனும் சில பாடல்களைப் பாடிப் பார்க்கிறார். ஆயாசமெதுவும் அவரிடமில்லை. மன ஒருமையோடுள்ள அவருடைய அந்த நிலை என்றும் என்னை ஆச்சரியப்படுத்தி இருக்கிறது. கையிலிருக்கும் மூட்டையை அவிழ்த்து ஓலைச் சுவடியைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினேன். கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு அது. மரங்களும் பறவைகளும் பூக்களும் நிறைந்த பறம்பு மலையையும் அங்கு வாழும் மக்கள் வாழ்வையும் நம் கண்முன் காண முடிந்தது. சில வரிகளைக் கடந்தவுடன் நிறைய பூக்களின் பெயர்கள் மாலையாகக் கோர்க்கப்பட்டிருந்தன. நான் சீரையை அழைத்து வாசித்துக் காண்பித்தேன். காந்தள், ஆம்பல், அனிச்சம், குவளை, குறிஞ்சி, வெட்சி, கள்ளி, கூவிளம், வாகை, குடசம், எருவை, செருவிளம், கருவிளம், பயினி என்றிப்படி 99 வகையான மலர்களை அவள் எண்ணிச் சொன்னாள். ஓர் இளவேனில் காலமே அவள் உள்ளத்தில் விரிவதைக் கண்டேன். அதற்குள் என் உள்ளத்திலும் ஒரு தெளிவு ஏற்பட்டிருந்தது.

இரவில் உறங்கச் செல்வதற்குள் நானும் சில பாடல்களை உருவாக்கியிருந்தேன். விடியலிலேயே எழுந்து விட்டிருந்தேன். பெரும்பாணனும் சித்திரையும் முன்னிரவிலேயே சில பாடல்களைப் பாடிப் பழகியிருந்தனர். மற்றவர்களும் பயிற்சி எடுத்துக் கொண்டனர். கூத்தரும் ஆட்டத்திற்கான மெய்ப்பாடுகளையும் அடவுகளையும் பலமுறை ஆடி, பயிற்சி மேற்கொண்டனர். பேகன் வரும்போதும் நாங்கள் பாடல்களைத் தவறின்றி நினைவுறுத்தலில் ஈடுபட்டிருந்தோம். நாட்டு மக்களின் முன் அன்றி ஓர்

அரசனின் முன்னால் இன்றுவரை நாங்கள் ஆடிப் பாடியதில்லை. தவறு ஏற்பட்டால் எல்லாம் பாழாகிவிடுமென்ற ஒரு பரிதவிப்பு.

நாங்கள் பாரியின் அரண்மனையை அடைந்தோம். பேகன் முன்னால் சென்றான். கல்லில் உருவான தூண்கள் பலவிதமான உருவங்களால் வடிவமைக்கப்பட்ட மேற்கூரை, விரிந்து பரந்த மைதானம் போன்ற அரசவை. அங்கே நீல விதானத்தின் கீழே அரசு கட்டிலில் வானோரின் வடிவில் அமர்ந்திருப்பவர் வேள்பாரி தானென்று யாரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நாங்கள் அனைவரும் குனிந்து வணங்கியபோது வேள் கையுயர்த்தி எழுந்து கொண்டார்.

"கபிலர் சொல்லி வந்தவர்கள்தானே? திறமையுடையவர்கள் என்றறிய வேறென்ன வேண்டும்?"

அதைக் கேட்டவுடன் எங்களின் இதயத்துடிப்பு அதிகரித்தது.

"அருகதையற்றதைச் சொல்வதெனில் எங்களை மன்னித்துவிடுங்கள். ஆன்றோர்களின் முன்னால் ஆடிப்பாடிப் பழக்கமில்லை. பெரும்புலவரான கபிலரின் கருணையினால் தங்களின் முன் வந்து நிற்கிறோம். தவறுகள் கண்டால் மன்னிக்க வேண்டும்'

புன்னகைத்த பாரி தொடங்குங்கள் என்பதாகக் கையுயர்த்தினார்.

பறைகளையும் யாழ்களையும் எடுத்து வரிசையாக நின்றோம். அங்கே நான் கபிலரையோ சாமியையோ பார்க்கவில்லை. பெரும்பாணனிடம் மல்லிகையை எடுத்துக் கொடுத்து, நானும் பாடுவதற்குத் தயாரானேன். அனைவரும் சேர்ந்து ஒரொட்டு வாரம், ஈரொட்டு வாரம் என்ற கடவுள் வாழ்த்துகளோடு தொடங்கினோம். பிறகு பெரும்பாணனும், நானும், சித்திரையுமாக வேளை வாழ்த்தி ஒரு பாட்டையும் பாடினோம். '

"தன்னுள் பிறக்கும் நீரூற்றுக் கன்றி மண்ணில் பிறந்த போராளிகளி லெவரும் துளியும் தொடமுடியா நாட்டை வில்லின் நுனியால் அடக்குகிறான் பாரி"

பாடி முடித்த பின்னும் மன்னனின் நேராகப் பார்க்கும் தைரியம் வரவில்லை. எனினும் அகக் கூத்திற்குத் தயாரானோம். எல்லரியும் ஆகுளியும் தட்டையும் குழலும் ஒவ்வொன்றாக வரிசைகட்டி நின்றன. கூத்தர்கள் கொச்சகக் கூத்தும் பின்னர் மெய்க்கூத்தும் ஆடினர்.முறை தவறாமல் எல்லாம் மிகச் சரியாக வருகிறதென்று எனக்குத் தோன்றியது. சரியான கணக்கில் அகக்கூத்து முடிந்தபோது புறக்கூத்தின் சில அடவுகளை ஆடச் சொன்னார் அரசர். இருவகைக் கூத்தின் எண்ணிக்கைகளும் வடிவங்களும் தமக்குள் கலந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கூத்தர்கள் மெதுவாகப் பேசிக் கொண்டனர். விறலிகள் சேர்ந்து குரவைக் கூத்தாடினர்.

அடுத்ததாக வரிக்கூத்து தொடங்கியவுடன் எங்களின் சுதி கூடியது. இயக்கம் முறுகி ஆடலும் பாடலும் உச்சத்தைத் தொட்டபோது பார்வையாளர்களும்

எங்களோடு இணைந்தனர். எங்களைத் தவிர மற்றவர்கள் சேர்ந்தால் ஒத்திசைவு போய்விடும் என்ற பயமும் வந்தது. ஆனாலும் மறுத்துச் சொல்லவோ நிறுத்தவோ நாங்கள் துணியவில்லை. ஆட்டமும் மேளத்தின் முறுக்கும் எல்லை கடந்த நிலையில் இது என்ன வெறியாட்டமா என்று தோன்ற ஆரம்பித்தது. நான் பெரும்பாணனைப் பார்த்தேன். கூத்தை நிறுத்திவிடுவோமென்று நாங்கள் கண்களால் முடிவு செய்தோம். இறைவனையும் அரசனையும் வாழ்த்தி, கூத்தை நிறுத்தியபோது வேள்பாரி புன்னகைத்தபடியே எழுந்து நின்றார்.

"என் கண்களும் உள்ளமும் குளிர்ந்திருக்கின்றன. கூத்தை நிறுத்தும்போதும் பார்த்துத் தீரவில்லையென்ற எண்ணம் தோன்ற வேண்டும். ஆடல் பாடலின் அகம் புறம் அறிந்தவர்கள் நீங்கள். நான் உங்களுக்கு எதைத் தந்தால் நீங்கள் மகிழ்வீர்கள்? என்ன வேண்டுமென்று தயங்காமல் கேளுங்கள்."

பெரும்பாணன் தாழ்ந்து வணங்கி குரல் செருமி நிற்கவே,

"எங்களுக்கு இந்த நாடு வேண்டும்" என்றொரு குரல் கேட்டது.

யார் அது? பெரும்பாணனும் நானும் விக்கித்து நின்றோம். சூழ்ந்திருந்தவர்கள் அனைவரும் நடுங்கி நின்றனர். ஆட்டத்திற்கிடையில் எங்களோடு இணைந்துகொண்ட யாரோ ஒருவரின் குரல் அது. வேள்பாரி அதிர்ந்து நின்றார். நாங்கள் தடுப்பதற்கு முன்னரே எங்களுடன் நின்றிருந்தவர்களுள் சிலர் முன்னேறிச் சென்றனர்.

"எங்களுக்கு உங்களின் இந்த நாட்டை வழங்கக் கனிவு காட்டுங்கள்."

பாதுகாவலர்களும் படைவீரர்களும் அவர்களைச் சுற்றி வளைத்தனர். பாரி காவலர்களை விலக்கினான்.

"என்னுடையது எதையும் மற்றவர்களுக்குக் கொடுக்கத் தயங்காதவன் நான். எனினும் இது ஒரு சதிச்செயல், நீங்கள் யார்? உண்மையைச் சொல்லுங்கள்"

பாரியைப் போலவே நாங்களும் சதிக்கப் பட்டோமென்பதைப் புரிந்துகொண்டோம். எனினும் எதையும் பேசும் நிலையில் நாங்கள் இல்லை.

"யார் எவரென்று பார்க்காமல் பெரும்பொருள் அருள்பவர் அல்லவா நீங்கள்? பின் எதற்காக அதைத் தெரிந்துகொள்ள வேண்டும்?"

அவர்களுள் ஒருவன் ஓரடி முன்னேறினான்.

"ஆடுநர்க்கும் பாடுநர்க்கும், உண்ணவும் உடுக்கவுமில்லாத இரவலர்க்கும் எதையும் நான் கொடுப்பேன். ஆனாலும் சதிச்செயலை நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன்."

பாரியின் கனிவான கண்கள் இப்போது கனன்று கொண்டிருந்தன.

"இந்த நாட்டை நாங்கள் கைப்பற்றுகிறோம். படைவீரர்கள் அரண்மனையைச் சுற்றி வளைத்துவிட்டனர். உயிர் வேண்டுமென்றால் கீழடங்குக"

இடைவாளை உருவி வேள்பாரி முன்னே பாய்ந்தார். ஆனால் ஓர் எட்டு வைப்பதற்குள் நல்லவனான அந்த வேள் வெட்டப்பட்டு நிலத்தில் சாய்ந்தார். அவருடன் நின்றிருந்த படைவீரர்களாலேயே அவர் வெட்டப்பட்டார் என்பதைத் தெரிந்துகொண்டோம். கூக்குரல்களும் அரவங்களுமெழுந்தன. உடனிருப்பவர்கள் யாரென்றோ அல்லாதவர்கள் யாரென்றோ தெரிந்துகொள்ள முடியவில்லை. எங்களுடைய ஆட்களை அழைத்துக் கொண்டு நான் வெளியே ஓடினேன். பெண்கள் உரக்க ஒலமிட்டபடியே கூடவே ஓடிவந்தனர். யாரெல்லாமோ எங்களைத் தடுத்தனர். சிலர் எங்களை விடுவிக்கப் பார்த்தார்கள். ஓடி வெளியேறும்போது உடல் முழுவதும் குருதியில் குளித்திருப்பதை நான் உணர்ந்தேன். நடக்க முடியாமல் நான் மயங்கிச் சரிந்தேன். யார்யாரோ என் உடலைக் கடந்து சென்றனர். அவர்களுள் ஒருவன் என்னைத் திரும்பிப் பார்த்தான். சாமியல்லவா அது? இல்லை, மயிலன், காலங்கள் பின்னிட்டாலும் என் மகனை என்னால் அடையாளம் காண முடியும்.

எங்கள் ஆட்கள் என்னைச் சுற்றி நிற்கின்றனர். நெல்லக்கிளியும் சித்திரையும் சீரையும் கதறியழுதவாறே என்னருகில் இருக்கின்றனர். நான் கைச்சுட்டிய போதும் மீண்டும் எங்கள் பார்வை எட்டுவதற்குள் அவன் கூட்டத்துக்குள் ஓடி மறைந்துவிட்டான்.

"நெல்லக்கிளி நம்முடைய மயிலன்"

கண்களில் ஒரு வெள்ளைப் படலம் மூடிக் கொண்டது. சுற்றி நிறையும் கூக்குரல்கள் தவிர வேறொன்றும் என் நினைவிலில்லை.

– மனோஜ் குரூர்

மனோஜ் குரூர் 1971 இல் கோட்டயத்தில் பிறந்தார். இவர் கவிஞர் மற்றும் நாவலாசிரியர் என்ற சிறப்புக்கு உரியவர். இவர் எழுதிய நிலம் பூத்து மலர்ந்த நாள் என்னும் நாவலிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி இது. இதைத் தமிழில் மொழிபெயர்த்தவர் கெ.வி. ஜெயஸ்ரீ ஆவார்.

## செயல்பாடுகள்

- நாவல் பகுதிக்கு விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்.

### உடம்படுமெய்

புணர்ச்சியில் உயிரெழுத்தை இறுதியாகக் கொண்ட ஒரு சொல், உயிரெழுத்தை முதன்மையாகக் கொண்ட இன்னொரு சொல்லுடன் இணையும்போது, அவற்றின் இடையே 'ய்' அல்லது 'வ்' என்னும் மெய்யெழுத்து மிகுந்து வரும். எடுத்துக்காட்டாக 'மணி' என்ற சொல்லுடன் 'அழகு' என்ற இன்னொரு சொல் சேரும்போது (மணி + அழகு) 'மணியழகு' என்று வரும். 'மணி' என்ற முதல் சொல்லை நிலைமொழி என்றும் 'அழகு' என்ற இரண்டாவது சொல்லை வருமொழி என்றும் கூறுவர். 'மணி' என்ற சொல்லில் நான்கு எழுத்துக்கள் (ம் + ஆ; ண் + இ) உள்ளன. அதாவது இரண்டு மெய்யெழுத்துகள்; இரண்டு உயிரெழுத்துகள். 'மணி' என்ற சொல்லின் இறுதி எழுத்து 'இ' ஆகும். இன்னொரு சொல் அழகு ஆகும். இச்சொல்லின் முதல் எழுத்து 'அ' ஆகும். இறுதி எழுத்தான 'இ'யும் முதல் எழுத்தான 'அ'வும் சேர்ந்தபோது இடையே 'ய்' மிகுந்தது. மணி + ய் + அழகு என்று ஆனது. இவை சேரும்போது மணியழகு என்று வரும். இவ்வாறு வருவதை உடம்படுமெய் என்பர்.

முதல் சொல்லின் (நிலைமொழி) இறுதியில் இ. ஈ. ஐ ஆகிய உயிரெழுத்துகளில் ஏதேனும் ஒன்று வந்து இரண்டாவது சொல்லின் (வருமொழி) முதலில் ஏதேனும் உயிரெழுத்து வந்தால் இடையே 'ய்' என்னும் மெய் உடம்படுமெய்யாக வரும்.

மணி + அழகு = மணியழகு (இ)
தீ + இல்லை = தீயில்லை (ஈ)
மலை + ஏறு = மலையேறு (ஐ)

நிலைமொழி இறுதியில் அ. ஆ. உ. ஊ. எ. ஒ. ஓ, ஔ என்னும் எட்டு உயிரெழுத்துகளில் ஏதேனும் ஒன்று வந்து, வருமொழி முதலில் ஏதேனும் ஓர் உயிரெழுத்து வந்தால் 'வ்' என்னும் மெய் உடம்படுமெய்யாக வரும்.

எ.டு. : பலா + இலை = பலாவிலை (ஆ)
அது + அல்ல = அதுவல்ல (உ)
பூ + அழகு = பூவழகு (ஊ)
கோ + இல் = கோவில் (ஓ)

நிலைமொழி இறுதியில் 'ஏ' எனும் உயிர் வந்தால் ய், வ் ஆகிய மெய்யெழுத்துகளில் எதுவேண்டுமானாலும் உடம்படுமெய்யாக வரலாம்.

அவனே + அழகன் = அவனேயழகன்
தே + ஆரம் = தேவாரம்

## சமத்துவம் வளர்ப்போம்

ஏழை யில்லை அடிமை யில்லை
எங்கும் சமத்துவமே
வாழை யடிவா ழையென நின்றால்
வாழ்க்கை அமைதியுறும்
தாழை வேரும் தாங்கிப் பிடிக்கும்
தன்னம் பிக்கை யோங்கும்
ஊழை யொதுக்கி உழைத்து நின்றால்
உயரம் வரவேற்கும்!

பொருளால் அருளால் புரியும் செயலால்
பூமி சிரிக்கிறது
மருளால் மனத்தால் மனித குணத்தால்
மேகம் பொழிகிறது
இருளும் பகலும் எங்கும் சமமாய்
இருகை கோர்க்கிறது
கருப்பும் வெளுப்பும் வண்ணக் குழம்பில்
காட்சி யாகிறது!

இருகண் பார்வை இரண்டா யில்லை
இயற்கை சொல்கிறது

இருகை சேர்ந்தால் ஒலிகள் தோன்ற
இமயம் வெல்கிறது
சிறகை இணையாய் விரிக்கும் போதே
பறவை பறக்கிறது
கரைகள் ஒழுங்காய் அமையும் போதே
கங்கை தவழ்கிறது!
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
குடும்பம் சொல்கிறது
சூடும் பண்பால் சூரியன் போல
சமத்துவம் வளர்கிறது
ஓடும் காற்றும் ஒழுகும் வானும்
ஒன்றாய் அருள்கிறது
மேடு பள்ளம் சமமாய் மாறும்
சமத்துவம் வளர்த்திடுவோம்!

சமமா யிருந்தால் சிரமம் இல்லை
சான்று சொல்கிறது
சமத்துவ மதற்குச் சரித்திரமாக
சமூகம் வெல்கிறது
குமரி இமயம் கைகள் கோர்த்தால்
கோபுரம் உயர்கிறது
சமயச் சாதிச் சண்டை ஓய்ந்து
சாதனை படைக்கிறது!

சமத்துவ மின்றேல் சரிவுகள் தோன்றும்
சரித்திரம் சொல்கிறது
அமர்க்களப் பட்டே அழிந்த இனங்கள்
ஆயிரம் ஆயிரமாம்
சமத்துவ மொன்றே சாதனை படைக்கும்
சந்ததிக் குரைத்திடுவோம்
சமத்துவ உணர்வை வளர்த்து நின்றே
சரித்திரம் படைத்திடுவோம்!

கடலும் வானும் கைகள் சேர்த்தால்
ககனம் செழிக்கிறது
கடக்க நினைத்தால் காட்சி மாறி
கவலை வளர்க்கிறது

– குமரிச்செழியன்

குமரிச் செழியன் என்பவர் குமரி மாவட்டத்தில் செம்பன்கரை என்ற சிற்றூரில் திருமதி மா. செல்லம்மாள், திரு. இல. முத்தையா இவர்களின் மகனாக 20.03.1951 இல் பிறந்தார். இவர் கவிதை, உரைநடை, கட்டுரை, என நாற்பத்தி ஒன்பது நூல்களை எழுதியுள்ளார். இவரது திருக்குறள் ஒரு அறிவியல் களஞ்சியம் என்ற நூல் சிறப்பு வாய்ந்த நூலாகப் போற்றப்படுகிறது.

## செயல்பாடுகள்

- சமத்துவப் பண்பு நம்மிடையே இல்லையென்றால் சரிவுகளே வந்துவிடும் என்று கவிஞர் கூறும் கருத்தினைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- "பொருளால் அருளால் புரியும் செயலால் பூமி சிரிக்கிறது.
  மருளால் மனத்தால் மனித குணத்தால் மேகம் பொழிகிறது" – நயம் பாராட்டி எழுதுங்கள்.

# நியாயம்



## வெனிசு நகர வணிகன்

இத்தாலி தேசத்துள்ள வெனிசு நகரில் 'அந்தோணியோ' என்ற சிறந்த வணிகன் ஒருவன் வாழ்ந்தான். கருணை உள்ளம் படைத்த அவ்வணிகன், தான் ஈட்டிய பெருஞ்செல்வத்தைத் தானதருமம் செய்வதில் செலவிட்டான். உதவி நாடி வருபவர்களுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்து வந்தான். அந்தோணியோவின் நற்குணங்களைக் கண்ட அந்நகர மக்கள், அவனிடம் பெருமதிப்பு வைத்திருந்தனர்.

அதே நகரத்தில் 'ஷைலாக்கு' என்ற பெயருடைய செல்வந்தன் ஒருவனும் வாழ்ந்து வந்தான். கன்னெஞ்சன்; இரக்கம் என்பது எள்ளளவும் இல்லாதவன். அதிக வட்டி வாங்கி ஏழைகளைக் கொடுமைப்படுத்தினான். அவனது இரக்கமற்ற கொடிய குணத்தை 'அந்தோணியோ' எள்ளி நகையாடினான். அதனால் ஷைலாக்கு ஆத்திரமடைந்தான். தன்னைப் பழித்துரைத்த அந்தோணியோவின் மீது பழி வாங்கும் தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்தோணியோவுக்கு மிக நெருங்கிய நண்பன் ஒருவனிருந்தான். அவன் பெயர் 'பசானியோ'. அவன் செல்வக் குடும்பத்தில் பிறந்த போதிலும் ஆடம்பர வாழ்க்கையிலும் கேளிக்கைகளிலும் தன் பணத்தைச் செலவிட்டமையால் விரைவில் ஏழையானான். அவன், 'போர்சியா' என்ற செல்வச் சீமாட்டியைத் திருமணஞ்செய்ய விரும்பினான். அவளும் அவனையே விரும்பினாள். திருமணஞ்செய்வதற்குப் பெருமளவு பணம் 'பசானியோ' வுக்குத் தேவைப்பட்டது. ஆகவே, அவன் தன் ஆருயிர் நண்பனான 'அந்தோணியோ' விடம் சென்று தன்நிலைமையை விளக்கினான். போர்சியாவைத் திருமணஞ்செய்ய விரைவிலேயே பணங்கொடுத்து உதவ வேண்டினான்.

அந்தோணியோவிடம் அப்போது பணம் இல்லாதிருந்தது. பிறரிடம் கடன் வாங்கியாவது 'பசானியோ' வுக்குக் கொடுத்து உதவ விரும்பினான். நண்பர்கள்

இருவரும் 'ஷைலாக்கிடம்' சென்றனர். தன்னுதவியை நாடி 'அந்தோணியோ' வருவதைக் கண்ட 'ஷைலாக்கு' உள்ளூர மகிழ்ச்சியடைந்தான். 'அந்தோணியோ' கேட்ட பணத்தைக் கொடுப்பதற்கு இணங்கிய 'ஷைலாக்கு' ஒரு கடும் நிபந்தனையை விதித்தான். குறிப்பிட்ட கால அளவுக்குள் 'அந்தோணியோ' பணத்தை வட்டியுடன் சேர்த்துத் திருப்பித் தராவிட்டால் அவனுடைய இதயத்தினருகிலிருந்து ஒரு 'பவுண்டு' தசையைத் தான் எடுத்துக் கொள்வதாகக் கூறினான். நண்பனுக்குத் தவறாது உதவிசெய்ய விரும்பிய அந்தோணியோ குறித்த காலத்தில் வேறிடத்திலிருந்து தனக்குப் பணம் கிடைக்குமென நம்பியதால், அந்நிபந்தனையை ஏற்று ஷைலாக்கு கொடுத்த பணத்தைப் பெற்றுக்கொண்டான்.

தன்னுடைய நல்வாழ்விற்காகவும் மகிழ்ச்சிக்காகவும் தன் நண்பன் எதையும் செய்ய சித்தமாக இருப்பதை நினைத்து நினைத்து நெஞ்சம் மகிழ்ந்தான் 'பசானியோ'. அந்தோணியோவின் நற்குணங்களைப் பற்றி போர்சியாவிடம் கூறினான். அவற்றைக்கேட்டு அவளும் மனம் மகிழ்ந்தாள்.

இதற்கிடையில், 'ஷைலாக்கு' குறித்திருந்த காலம் நெருங்கிவிட்டது. 'அந்தோணியோ' எதிர்பார்த்திருந்த இடத்திலிருந்து பணம் வந்து சேரவில்லை. அவனுடைய வியாபாரக் கப்பல்கள் கடலில் மூழ்கி விட்டன! என்ற செய்தியும் வந்தது. ஆகவே, பணத்தைத் திரும்பக் கொடுக்க இயலாமல் அவன் திகைத்தான். 'அந்தோணியோ' வின் மீது பழிவாங்க நினைத்த ஷைலாக்கு அவன் மீது வழக்குத் தொடர்ந்தான்.

'அந்தோணியோ' தன் நிலைமையை விளக்கிப் பசானியோவுக்குக் கடிதமெழுதினான். நண்பனுடைய அவலநிலையை அறிந்து வருந்திய 'பசானியோ' காலமறிந்து அவன் செய்த உதவியைப்பற்றி 'போர்சியா' விடம் கூறினான். நண்பனைக் காப்பாற்றுவது தன் கடமை என்றும் கூறினான். தங்கள் திருமணம் முடிந்தால்தான் செல்வம் முழுவதையும் 'பசானியோ' விருப்பப்படிப் பயன்படுத்தலாம் எனக்கூறினாள் போர்சியா.

இருவருக்கும் மிகச்சிறப்பான முறையில் திருமணம் நடைபெற்றது. போர்சியா தன்னிடமுள்ள பணத்தைத் தன் கணவனிடம் கொடுத்து அந்தோணியோவைக் காப்பாற்றும்படிச் சொன்னாள்.

பசானியோ பணத்துடன் விரைந்து சென்றான். அந்தோணியோ கொடுக்க வேண்டிய பணத்தைவிட அதிகமான பணத்தை ஷைலாக்கிடம் கொடுப்பதற்கு இசைந்தான். ஆனால் ஷைலாக்கு பணத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்தான். குறித்தகாலம் கடந்துவிட்டது. உறுதிப்பத்திரத்தில் குறிப்பிட்டபடி எனக்கு ஒரு பவுண்டு தசையே வேண்டும்! – என்று சொன்னான் ஷைலாக்கு.

ஷைலாக்குக்கும் அந்தோணியோவுக்கும் ஏற்பட்ட வழக்கை விசாரிப்பதற்கு வெனிசு நீதிபதி ஒரு நாளைக் குறிப்பிட்டார். பசானியோ நண்பனைக் காப்பாற்ற முடியவில்லையே என்று நினைத்து மனங்குன்றினான். ஆனால் ஷைலாக்கோ தன் பகைவனைப் பழிவாங்கும் எண்ணத்தில் இறுமாந்திருந்தான்.

நீதிபதி விசாரணைக்குக் குறிப்பிட்ட நாள் வந்தது. நகர மக்கள் தன் அன்புக்குரிய அந்தோணியோவுக்கு என்ன நேருமோ என அஞ்சினர். அந்தோணியோவுக்கு வேண்டி வாதாட பல்தசா என்ற புதிய வழக்கறிஞர் வந்திருந்தார்.

நீதிமன்றம் கூடியது. அந்தோணியோவின் உடம்பிலிருந்து ஒரு பவுண்டு தசையை வெட்டியெடுப்பதற்கு ஷைலாக்குக்கு உரிமையுண்டு என்பதைப் பல்தசா ஒப்புக்கொண்டார். ஆயினும், வாங்கிய கடனை வட்டியுடன் திருப்பித்தர இசைவதால் சற்று இரக்கம் காட்டுமாறு மன்றாடினார். ஆனால், ஷைலாக்கு அதற்கு இணங்கவில்லை, பல்தசாவின் உருக்கமான வேண்டுகோள் 'செவிடன் காதில் ஊதிய சங்கு' போலாயிற்று.

ஆகவே பல்தசா ஷைலாக்கிடம், அந்தோணியோ உனக்குக் கொடுத்த உறுதிப்பத்திரத்தின்படியே இனி எல்லாம் நடைபெற வேண்டும் என்றார். அதைக்கேட்ட ஷைலாக்கு மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தான். அந்தோணியோவின், இருதயத்திலிருந்து ஒரு பவுண்டு தசையை வெட்டி எடுத்துக்கொள் என்றார் பல்தசா. வெற்றிப் புன்னகையுடனும் இறுமாப்புடனும் ஷைலாக்கு தன் வாளை அந்தோணியோவின் இருதயத்தை வெட்ட ஓங்கியபோது, ஷைலாக்கு, நீ வெட்டியெடுக்கும் தசை ஒரு பவுண்டு நிறைவுள்ளதாகவே இருத்தல் வேண்டும் என்பதை மறந்து விடாதே. அது சற்றுக் கூடுதலாகவோ குறைவாகவோ இருத்தலாகாது. வெட்டும்போது ஒரு துளி இரத்தமேனும் சிந்தலாகாது. ஏதாவது தவறு நிகழ்ந்தால் உன் சொத்து முழுவதும் அரசாங்கத்தைச் சேரும். உனக்கும் மரண தண்டனை கிடைக்கும் என்று எச்சரித்தார் பல்தசா.

அதைக்கேட்ட ஷைலாக்கு அஞ்சி நடுங்கினான். தான் விதித்த நிபந்தனையே தனக்கு எதிராக மாறிவிட்டதை நினைத்து வருந்தினான். தசையை வெட்டியெடுக்கும்போது இரத்தம் சிந்தாமலிருக்குமா? ஆகவே, தசை தனக்குத் தேவையில்லை என்றும், பணத்தைக் கொடுத்தாற் போதுமென்றும் சொன்னான். ஆனால் அதற்குப் பல்தசா இணங்கவில்லை.

இறுதியில், வெளிப்படையாக ஷைலாக்கு எல்லாரிடமும் மன்னிப்புக் கேட்டான். தான் இனிமேல் இரக்கமுடையவனாய் வாழ்வதாக உறுதியளித்தான். நீதிபதி அவனை மன்னித்து விடுதலை செய்தார்.

வழக்கறிஞர் பல்தசாவின் வாதத்திறமையை அனைவரும் பாராட்டினர். ஆணுடையில் வழக்கறிஞராக வந்து, தன் நண்பன் அந்தோணியோவைக் காப்பாற்றியது தன் மனைவி போர்சியாவே என்பதை அறிந்த பசானியோ அளவிலா ஆனந்தமடைந்தான்.

– கே.ஜே. இராஜசேகரன்

'ஷேக்ஸ்பியர் கதைகள்' என்னும் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது. இதனைத் தொகுத்தவர் கே.ஜே. இராஜசேகரன் ஆவார். இவர் பத்திரிகையாளர், எழுத்தாளர் மற்றும் உளவியலாளராகப் பணியாற்றுபவர்.

## செயல்பாடுகள்

- 'வெனிஸ் நகர வணிகன்' என்ற கதையைச் சுருக்கி ஒரு பக்க அளவில் எழுதுங்கள்.
- பல்தசாவின் வாதத்திறமையை விளக்குங்கள்.

## நன்னெறி

என்றும் முகமன் இயம்பாதவர் கண்ணும்
சென்று பொருள் கொடுப்பர் தீது அற்றோர் – துன்று சுவை
பூவின் பொலி குழலாய்! பூங்கை புகழவோ
நாவிற்கு உதவும் நயந்து

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல் இனிது ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிது என்க – ஈசற்கு
நல்லோன் எரிசிலையோ நன்னுதாய் ஒண்கரும்பு
வில்லோன் மலரோ விருப்பு

பிறர்க்கு உதவி செய்யார் பெரும் செல்வம் வேறு
பிறர்க்கு உதவியாக்குபவர் பேறாம் – பிறர்க்கு உதவி
செய்யாக் கருங்கடல் நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு

நீக்கம் அறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர் பெருமை நொய்தாகும் – பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம்

– சிவப்பிரகாச சுவாமிகள்

அழகான கைகள் நாவுக்கு ருசியான உணவைத் தருவது புகழ் பெறவா? (இல்லை. இயற்கையாய் நடக்கிறது). அதுபோல மாசற்ற மனத்தினரான பெரியோர், தம்மை உபசரிக்காதவர்களிடத்திலும் தாமே வலியச் சென்று பொருள் கொடுத்து உதவி புரிவர்.

தூய உள்ளத்தினர் கூறும் கடுஞ்சொற்கள் நன்மையே தரும், கபடமானவர் கூறும் இனிய சொற்கள் துன்பம் விளைவிக்கும். இறைவன் மீது பக்தியால் கல்லை எறிந்த சாக்கிய நாயனாருக்கு அருள் புரிந்தார்; மலர்க்கணை எய்திய மன்மதனை எரித்தார்.

கடல் நீரை மேகம் கொண்டு சென்று மழையாகப் பொழிவது போல, பிறருக்கு உதவாதவர்களுடைய பெருஞ்செல்வத்தை, யார் எடுத்து அனுபவிக்கிறாரோ அவர் தம்முடையதாகவே பாவிப்பார்.

நெல்லில் உமி சிறிது நீங்கி, மறுபடி இணைந்தாலும் முளைக்கும் வலிமையை இழந்துவிடும். நெருங்கிய நண்பர்கள் இருவர் வேற்றுமையால் பிரிந்து, மீண்டும் கூடிய போதிலும் அந்த நட்பு முன்போல் அவ்வளவு நெருக்கமாக இருக்காது.

நன்னெறியின் ஆசிரியர் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். வாழ்க்கைக்குத் தேவையான அறங்களையும் வழிமுறைகளையும் கூறும் 40 பாடல்களைக் கொண்டது நன்னெறி.

## நல்வழி

இடும்பைக்கு இடும்பை இயல்புஉடம்பு இதுஅன்றே
இடும்பொய்யை மெய்என்று இராதே – இடும்கடுக
உண்டாயின் உண்டாகும் ஊழில் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு.

செய்தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்? – வையத்து
அறும்பாவம் என்னஅறிந்து அன்றுஇடார்க்கு இன்று
வெறும்பானை பொங்குமோ மேல்!

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் என வேண்டார் – மற்றோர்
இரணங் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம்.

ஆற்றுப் பெருக்கால் அடிசுடும்அந் நாளுமவ்வா
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் – ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து.

– ஔவையார்

நிலையற்ற இவ்வுடலை நிலையானது என்று எண்ணிக் கொண்டிருக்காமல், விரைவாகத் தர்மம் செய்வீர்களாக, பந்தபாசங்களை நீக்கியவர்களைப் போற்றுபவர், முத்தி அடைவர்.

முற்பிறவியில் செய்த தீவினையால் துன்புறும்போது தெய்வத்தை நொந்து கொண்டால் செல்வம் யாவும் சேர்ந்து விடுமா? வாழ்ந்த காலத்தில் பாவத்தை நீக்கி, வழங்காதவர்களுக்கு இப்பொழுது வெற்றுப்பானை பொங்கிவிடுமா?

பெற்றோர், கூடப்பிறந்தவர், ஊர்க்காரர், உறவினர், பிரியமானவர் என்ற எண்ணம் சிறிதும் இல்லாத உலோபிகள், தங்களைத் துன்புறுத்தியவர்களுக்கே கொடுப்பார்கள்; மற்றபடி அவர்கள் காலில் வீழ்ந்து பணிந்தாலும் கொடுக்கமாட்டார்கள்.

கால் சுடும் அளவிற்கு நீர் வற்றி வெறும் மணலாகப் போனாலும் அதனைத் தோண்டுவோருக்கு ஊற்று நீர் கொடுத்து இந்த உலகிற்கு உதவும் நதியைப் போல நல்லமனம் படைத்தோர் நல்லனவற்றைச் செய்வதுடன் தங்களுக்கு இல்லை என்றாலும் அடுத்தவர் கேட்கும்போது தங்களிடம் உள்ள பொருளையும் கொடுத்து உதவுவார்கள்.

நல்வழியின் ஆசிரியர் ஔவையார். இந்நூல் மக்கள் வாழ்வில் பின்பற்ற வேண்டிய நல்வழிகளை எடுத்துரைக்கிறது.

### செயல்பாடுகள்

- பிறருக்கு உதவி செய்யாதவன் செல்வமும், பிறருக்கு உதவி செய்பவன் செல்வமும் எதைப் போன்றது எனக் கவிஞர் விளக்குகிறார்?
- "விண்டாரைக் கொண்டாடும் வீடு" – விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.

### பகுபதமும் பகாப்பதமும்

சொற்களைப் 'பதங்கள்' என்றும் கூறுவர். இப்பதங்கள் பகுப்பின் அடிப்படையில் பகுபதங்கள், பகாப்பதங்கள் என இரு வகைப்படும். ஒரு பதத்தை அல்லது சொல்லை ஒன்றுக்கு மேற்பட்ட கூறுகளாகப் பகுக்க முடியுமானால் அப்பதங்கள் பகுபதங்கள் எனப்படும்; பகுக்க முடியாத பதங்கள் பகாப்பதங்கள் எனப்படும்.

**பகாப்பதம்**

பூ, ஆண், பழம், குதிரை, இரு, எடு முதலான பதங்களை மேலும் பொருள் தரும்படியாகப் பகுக்க இயலாது. எனவே இவை பகாப்பதங்கள்.

**பகுபதம்**

பகுபதங்களை இரண்டு முதல் ஆறுவரையிலான கூறுகளாகப் பகுக்கலாம். இவற்றைப் பகுபத உறுப்புகள் என்பர். பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறும் பகுபத உறுப்புகளாம். ஒரு பகுபதத்தின் முதலில் வருவது பகுதி; இறுதியில் வருவது விகுதி. பகுதிக்கும் விகுதிக்கும் இடையே இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் இவை இடம்பெறும்.

எ.டு. : நடந்தனன்
நட+ த் (ந்) + த் + அன் + அன்
நட– பகுதி
த் – சந்தி
'த்' (ந்) ஆனது – விகாரம்
த் – இடைநிலை
அன் – சாரியை
அன்– விகுதி

எ.டு.: படித்தனன் = படி + த் + த் + அன் + அன்

| | | |
|---|---|---|
| படி | – | பகுதி |
| த் | – | சந்தி |
| த் | – | இடைநிலை |
| அன் | – | சாரியை |
| அன் | – | விகுதி |

சாரியை, சந்தி, விகாரம் இவையில்லாமலும் பகுபதங்கள் வரலாம். எடுத்துக்காட்டாக,

பாடுவாள் = பாடு + வ் + ஆள்

| | | |
|---|---|---|
| பாடு | – | பகுதி |
| வ் | – | இடைநிலை |
| ஆள் | – | விகுதி |

இச்சொல்லில் சாரியையும் சந்தியும் விகாரமும் இடம்பெறவில்லை.

## பொற்கைப் பாண்டியன்

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலம். அன்றைய முப்பெரும் நாடுகளில் பாண்டியநாட்டில் செங்கோலாட்சி நடத்திவருகிறான் பாண்டியமன்னன் ஒருவன். குடிமையுணர்வு கொண்டு கோலோச்சிய பெருமைக்குரியவன் அவன். அக்காலத்தில் நாடாளும் மன்னர்கள் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, இரவு வேளைகளில் மாறுவேடம் பூண்டு நாட்டைக் கண்காணித்துவரும் வழக்கம் இருந்தது. இதனால் இருட்டின் மறைவில் நடக்கும் திருட்டுகள் முதலான தீய செயல்கள் தவிர்க்கப்பட்டன. மேலும் அரசனைப் பற்றியும் அரசாட்சியைப் பற்றியும் பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறியவும் இத்தகைய மாறுவேட நகர்வலத்தை மேற்கொண்டனர்.

வழக்கம்போல் ஓர் இரவுநேரம் பாண்டியமன்னன் மாறுவேடத்தில் நகரைச் சுற்றி வந்துகொண்டிருந்தான். வரும் வழியில் வரிசையாகச் சில வீடுகள். ஒரு வீட்டிற்குள் இருவர் உரையாடிக்கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. அது ஒரு வேதியரின் வீடு. மன்னன் தம் செவிகளைக் கூர்மையாக்கிக்கொண்டு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று உற்றுக்கேட்டான்.

அன்பிற்குரியவளே! இல்வாழ்க்கை இனிது நடக்கவேண்டுமாயின் பொருள் வேண்டும். "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பதை நீயும் கேட்டிருப்பாயே! எனவே நாளை அதிகாலையில் வேற்றூர்களுக்குப் பொருள்தேடச் செல்லலாம் என்று நினைக்கிறேன். திரும்பி வருவதற்குச் சில நாட்கள் ஆகலாம்" என்றார் அந்த வேதியர்.

அதைக் கேட்ட அவனது மனைவி, "ஐயன்மீர்! தாங்கள் பொருள் தேடித் திரும்பி வரும்வரையிலும் நான் தனிமையில் பாதுகாப்பாக எப்படி இங்கே இருப்பேன்? எனக்குப் பயமாக இருக்கிறது" என்றாள்.

உடனே சிரித்துக்கொண்டே, "அன்பானவளே! இப்போது நம் நாட்டை ஆளும் பாண்டிய மன்னன் இருக்கும்வரை எவரும் எதற்கும் பயப்படவேண்டிய தேவையில்லை. சேயினைத் தாயானவள் காப்பதற்கும் மேலாக அவன் தன் நாட்டு மக்களைப் பாதுகாத்துக்கொள்வான் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் உண்டு. ஆதலால் நீ சற்றும் அஞ்சவேண்டியதில்லை, கவலையை விடு" என்றார் வேதியர்.

இப்படிச் சொல்லக் கேட்டதும், மாறுவேடத்தில் மறைந்துநின்ற மன்னன் பெருமகிழ்ச்சிகொண்டான். தம் மீது மக்கள் கொண்டிருக்கும் நன்னம்பிக்கையை எண்ணிப் பெருமிதம் கொண்டான். அவன் உடல் சிலிர்த்தது. அவனது குடிமையுணர்வு மேலும் அதிகரித்தது. மன்னன் அரண்மனைக்குத் திரும்பினான். அடுத்தநாள் வேதியரும் பொருள் தேடப் புறப்பட்டார்.

அதன் பிறகு ஒவ்வொரு நாளும் இரவுநேரம் ஆனதும் மன்னன் மாறுவேடத்தில் வேதியரின் வீட்டுப் பக்கமாக வந்து காவல்புரியவும் கண்காணிக்கவும் செய்தான். இது பல நாட்கள் தொடர்ந்தது. வேதியரின் நம்பிக்கை பொய்த்துவிடக் கூடாதல்லவா! ஒருநாள் இரவு அவ்வாறு வந்தபோது வேதியரின் வீட்டில் ஓர் ஆண் குரல் கேட்டது. வேதியர் வீட்டில் இல்லாததை அறிந்து திருட்டுத்தனமாக யாரோ வந்திருக்கலாம் என்று எண்ணிய மன்னன் வீட்டின் வாசல் கதவைத் தட்டினான். அப்போது 'யார் கதவைத் தட்டுவது' என்று உள்ளே இருந்து ஒரு குரல் கேட்டது. அது வேதியரின் குரல். வேதியர் திரும்பிவந்த விசயம் மன்னன் அறியாததால், உள்ளே இருப்பது வேறு யாரோ என்று நினைத்து மன்னன் கதவைத் தட்டிவிட்டான். ஒரு கணம் என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை. 'தாம் வெளியூர் சென்று திரும்பிவந்ததை அறியாமல் திருட்டுத்தனமாக

### புறநானூறு

"நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிரன்றே:
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
அதனால் யான் உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே,"

(மோசிகீரனார்)

நெல்லும் நீரும் மக்களுக்கு வாழ்வளித்தாலும், அவை உண்மையான உயிர் அல்ல; மன்னனின் செங்கோலும், அவன் செய்யும் அறப்பணியுமே உலகிற்கு உண்மையான உயிர் என்பதாகும்.

யாரோ வந்திருக்கவேண்டும்' என்று வேதியர் கருதிவிடுவாரோ என்று எண்ணி, பக்கத்திலுள்ள எல்லோர் வீட்டுக் கதவுகளையும் தட்டிவிட்டு இருளில் ஓடி மறைந்தான் மன்னன்.

கதவு தட்டும் சத்தம் கேட்டு எல்லோரும் வீட்டிற்கு வெளியே வந்தனர். இந்த நாட்டில் இதுவரை இப்படி நடந்ததில்லையே என ஆச்சரியமும் அச்சமும் அடைந்தனர். நடந்ததை மன்னரிடம் அறிவிக்க முடிவுசெய்தனர். அடுத்தநாள் அவர்கள் மன்னனின் அனுமதிபெற்று அரசவையை அடைந்தனர். ஊர் மக்கள் ஒன்றாக வந்திருப்பதன் நோக்கம் என்ன என்று மன்னன் கேட்டதும், வந்தவர்களில் ஒரு முதியவர் மன்னனை நோக்கி, "நாங்கள் இறைவனுக்கும் மேலாகக் கருதும் எங்கள் மன்னவரே! நேற்று இரவு யாரோ ஒரு கள்வன் எங்கள் வீட்டுக் கதவுகளைத் தட்டிவிட்டுச் சென்றான். நாங்கள் வெளியே வந்ததும் ஓடி மறைந்துவிட்டான். எங்கள் பாதுகாப்பில் இப்போது எங்களுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது" என்று பணிவுடன் கூறினார்.

எதுவும் அறியாதவன்போல் இருந்த மன்னன் எவ்வித உணர்ச்சியையும் முகத்தில் காட்டாமல், "அப்படித் தட்டிச் சென்றவனை நிச்சயம் நான் கண்டுபிடிப்பேன் என்று உறுதி கூறிவிட்டு, அவனைக் கண்டுபிடித்தபின் அவனுக்கு என்ன தண்டனை வழங்கலாம் எனக் கேட்டான்.

"அவனது கையைத் துண்டிக்கவேண்டும்" என்று ஒரே குரலில் கூறினர் ஊர்மக்கள். 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு, அடுத்த கணமே தம் உடையில் தொங்கவிட்டிருந்த வாளை உருவித் தன் கையை வெட்டி வீழ்த்தினான் மன்னன். கண்டு நின்றவர்கள் வியந்தனர்; செய்வதறியாது திகைத்தனர்; ஆச்சரியத்தோடு மன்னனைப் பார்த்தனர். தற்செயலாக நடந்தவற்றை மிக விளக்கமாக எடுத்துரைத்தான் மன்னன். அங்கே கண்ணீர் வெள்ளம் பெருகியது. மன்னனின் நீதிதவறாமையையும் குடிமையுணர்வையும் புகழ்ந்து பாராட்டிச் சிரம் மேல் கரம் குவித்தனர் ஊர்மக்கள். பின்னர் தாங்களே பொன்னால் ஒரு கை செய்து மன்னனுக்கு அளித்தனர். அதை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு வெட்டுப்பட்ட இடத்தில் பொருத்தினான். அன்றிலிருந்து அவன் 'பொற்கைப் பாண்டியன் என்னும் நற்பெயரால் நாடெங்கும் அறியப்பட்டான்.

– சிலப்பதிகாரக் கதையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது.

## செயல்பாடுகள்

- பொற்கைப் பாண்டியன் என்ற பாண்டிய மன்னனின் நற்பண்புகள் குறித்து குறிப்பு எழுதுங்கள்.
- 'அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி' என்னும் தலைப்பில் இணையதளத்தில் வெளியிடுவதற்காகக் கட்டுரை தயார் செய்யுங்கள்.
- 'ஒற்றுமையும் ஒருமைப்பாடும்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு உரை தயாரியுங்கள்.

# அலகு 3

# மாற்றங்கள்



சமூக முன்னேற்றத்தையே தங்கள் குறிக்கோள்களாகக் கொண்டு வாழ்ந்த சீர்திருத்தவாதிகள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், மனிதநேயம் போன்றவற்றை வலியுறுத்தி சமுதாயத்தில் மாற்றம் காண விழைந்தனர். தங்கள் சிந்தனைகளாலும் செயல்களாலும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். அதோடு அவர்கள் தன்னலம் பாராமல் பொதுநலனுக்காக மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக இயக்கங்களும் தொண்டு நிறுவனங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

# வீரர்கள்



## மணிமேகலை

இடம் : மணிபல்லவத் தீவு.

காலம் : பகல்.

உரியோர் : மணிமேகலை, தீவதிலகை.

மணிமேகலை : ஓ ! என்ன அழகிய காட்சி. வெண் மணற்குன்றம், விரிபூஞ்சோலை, தண்மலர்ப் பொய்கை. இவை மூன்றும் ஓரிடத்திருப்பக் காண்பதினும் சிறந்த காட்சி யாதுளது! ஓ! அதோ வருவார் யாவரோ? அம்மையே வணக்கம் ! வருக ! வருக !

தீவதிலகை : அம்மா ! இத் தீவகத்தே, மரக்கலம் கவிழ்ந்திட, அதனின்றும் தப்பி உய்ந்து வந்த மகளிரைப்போல் இங்கே நிற்கின்றாய். நங்கையே ! நீ யாரோ ?

மணிமேகலை : அம்மா ! எனக்கு இப்பிறப்பின் நிகழ்ச்சியே அன்றிச் சென்ற பிறப்பின் நிகழ்ச்சியும் தெரியும். ஆகலின் இரண்டும் கூறுவேன். சென்ற பிறவியில் யான் இராகுலன் என்னும் மன்னன் தேவி. இலக்குமி என்பது என் பெயர். இப்பிறப்பில் நாடகக் கணிகையாய மாதவி பெற்ற மணிமேகலை யாவேன். மணிமேகலாதெய்வம் என்னை இங்கே சேர்த் தருளியது. தெய்வப்பெருமை வாய்ந்த இப்பெரும் பீடிகையால், எனது முற்பிறப்பினை முழுதும் அறிந்தேன்! நான் இங்கு வந்த வரலாறும் இங்கு எய்திய பயனும் இவையேயாகும். தேவி! நீவிர் யாவரோ?

தீவதிலகை : அம்மா ! மணிமேகலை! இத்தீவின் அயலிடத்தே, இரத்தின தீவம் என்பது ஒன்று உண்டு. அதன்கண் சமந்தம் எனும் உயர்ந்த மலையொன்றுளது. அதன் உச்சியில் புத்தபெருமானின் இணையடிக்காட்சி எழில் பெற்றுளது.

அது, பிறவிப் பெருங்கடற்கு அறவியாகிய மரக்கலமாகும். அதனை வலங்கொண்டு பணிந்து இங்கே வந்தேன். சிறந்த காட்சியினையுடைய இத்தெய்வப் பீடிகையைக் கண்டு வணங்கி மகிழ்ந்தேன். அப்போது இந்திரன் தோன்றி, இதனை என்றும் காவல் பூண்டிருக்கும் பெரும்பேற்றினை எனக்கு அளித்தனன். என் பெயர் தீவதிலகை என்பதாகும். அம்மா மணிமேகலை ! நமது பெருமான் புத்ததேவன் கூறிய நல்லறத்தினைப் பற்றியொழுகும் நோன்பினரே இப்பீடிகையைக் கண்டு வணங்குதற்கு உரியராவர். அங்ஙனம் கண்டு வணங்குவார்க்கு, அவர் முற்பிறப்பின் உணர்ச்சி இனிதின் எய்தும். அங்ஙனம் கண்டு வணங்கி முற்பிறப்புணர்ந்தோர், உலகத்திற் சிறந்தோர் ஆவர். அன்னவர்களே பின்னர் அறமொழி கேட்டற்குரியராவர். அத்தகுச் சிறப்பினையுடைய மாதே! யான் கூறுவதனைக் கேட்பாயாக.

இதோ எதிரே குவளை, நெய்தல் மலர்களை அணிந்து விளங்கும் இப்பொய்கை, கோமுகியென்பதாகும். இதன்கண், ஒவ்வோராண்டிலும் வைகாசித் திங்கள் முழுமதி நாளில், அமுதசுரபி என்னும் பெருமை உடையதோர் பாத்திரம் தோன்றும். அஃது ஆபுத்திரன் என்பானது. இன்று அது தோன்றும் நாள் ஆகும். இந்நேரமே அது தோன்றும் காலமுமாகும். அது தோன்றும் போது தக்கார் எவரேனும் இங்கு உளராயின், அஃது அவர் கையில் வந்துறும். இன்றேல் மீண்டும் இப்பொய்கையில் மறைந்திடும். மணிமேகலை! நீ உரிய சிறப்புகளெல்லாம் எய்தியிருத்தலின், நின் கையில் அப்பாத்திரம் வந்துறுமென எண்ணுகின்றேன். நாம் அங்குச் செல்வோம்.

**மணிமேகலை** : தேவி! நன்று ! இதோ பீடிகையை வணங்கி வருவேன். (வணங்கல். இருவரும் சென்று கோமுகியை வலம் வந்து நிற்றல்)

**தீவதிலகை** : மணிமேகலை ! நின் சிறப்பினை என்னென்பது ! இதோ தோன்றிய அமுத சுரபி, நின்னை நோக்கி வருகின்றது ! இதோ நின் கையில் அமர்ந்துளது !

**மணிமேகலை** : புத்ததேவனே!

மாரனை வெல்லும் வீர நின்னடி! தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி! பிறர்க்கறம் முயலும் பெரியோய் நின்னடி! துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி! எண்பிறக் கொழிய இருந்தோய் நின்னடி! கண்பிறர்க் களிக்கும் கண்ணோய் நின்னடி! தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி! வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி! நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி! உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி! வணங்குவன் வாழ்த்துவன் மலரடி வாழியர்!

**தீவதிலகை** : மணிமேகலை ! பசியின் கொடுமையினை என்னென்பது! குடிப்பிறப்பு அழிக்கும்; விழுப்பம் கொல்லும்; பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்; நாணணிகளையும் மாணெழில் சிதைக்கும்; பூண்அணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்; பசிப்பிணி யென்னும் பாவி!

அப்பசியைத் தீர்த்தோரது புகழோ அளந்துரைத்தற்கரியது. மணிமேகலை! செல்வமுடையார்க்கு அளிப்போர் அறவிலை கூறுவோராவர். செல்வமற்ற அறிஞர்களின் பசிப்பிணியை நீக்குவோரே உண்மை அறநெறியிற் செல்வோராவர். அம்மா! உயிர்கட்கு உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே யாவர். ஆகலின், நீ அத்தகைய சிறந்த அறத்தினை மேற்கொள்ளும் அறிவினையுடையையாகி அந்நல்லறம் கண்டு சிறப்புறு வாயாக!

மணிமேகலை : அம்மா தீவதிலகை! சென்ற பிறப்பில் என் கணவன் திட்டிவிடம் எனும் பாம்பு தீண்டியதால் உயிர் நீங்கினவிடத்து, உடன் தீக்குளித்த யான், அப் பிறப்பில் சாதுசக்கரன் என்னும் பெரியாரை உச்சிப் பொழுதில் உண்பித்த செயலாகிய கனாக் காண்பேனாயினேன். அதன் பயன்போலும் இப்பாத்திரம் என் கையிற் புகுந்தது. இவ்வுலகத்தே நல்லறம் செய்து செல்வத்தை உற்றோர் வாழும் இடங்கள் பல. அத்தகைய நல்லறம் செய்யாது வறிஞராய்ப் பிறந்து, உடுக்கத்தக்க உடையுமின்றி பெரும்பசி அலைத்தலால் மிகவருந்தி, வெயில் மழையெனப் பாராது அச்செல்வர் மனைகளின் முன் அலைந்து திரிந்து அயர்வோர் பலர். அத்தகைய வறியர்முன் தோன்றிக் குழவி முகம் கண்டு இரங்கும் தாய் போன்று, இப்பாத்திரத்தின் வழியாக அவர்தம் ஆருயிர் மருந்தாகிய உணவினை யளிக்கும் தொண்டினை அடைய மிக்க விருப்பம் உடையேன்.

தீவதிலகை : அம்மா ! மணிமேகலை ! அப்பாத்திரத்தின் மற்றொரு சிறப்பினைக் கூற யான் மறந்தேன். நீ எடுத்துக் கூறினை. அறமே சான்றாக, நிறைந்த அருளால் உலகத்துயிர்களை உண்பிக்க விரும்பும் சிறந்தோர்க்கல்லது, அப்பாத்திரம் பிறர்க்கு நன்கு சுரவாது, நீ அறத்தொடும் அருளொடும் நின்று உயிர்கட்குப் பசிப்பிணி போக்கும் பேரவா உடையை யாகலின், அது நன்கு சுரந்து உதவும் . மணிமேகலை ! நின் பதிக்கு எழுவாயாக.

ர. வேங்கடாசலம் எழுதிய மணிமேகலை ஒரு நாடகம் என்னும் நூலிலுள்ள 'பாத்திரம் பெற்ற காதை' என்ற பகுதி பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## செயல்பாடுகள்

- 'பாத்திரம் பெற்ற காதை' உணர்த்தும் செய்தியினை விளக்கக் குறிப்பாக எழுதுங்கள்.
- சேவைப் பண்புகள் குறித்துக் கலந்துரையாடிக் கட்டுரை எழுதுங்கள்.

## ஸ்ரீ நாராயண குரு

1856 இல் திருவனந்தபுரத்திற்கு அருகிலுள்ள செம்பழந்தி என்ற கிராமத்தில் நாராயணகுரு பிறந்தார். குட்டி, மாடன் ஆசான் என்போர் இவரது பெற்றோர். நாராயண குரு பிறந்த ஈழவர்குலம் அன்றைய கேரளத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பாக இருந்தது. ஈழவ சாதிப்பெண்கள் அக்காலத்தில் மேலாடை அணிய உரிமை இல்லை. சமூகத்தில் தீண்டாமைக் கொடுமை மிகவும் உச்சத்தில் இருந்தது. உயர் சாதியினரைக் கண்டு தாழ்த்தப்பட்ட சாதியினர் எவ்வளவு தூரம் விலகி நிற்கவேண்டுமென ஒவ்வொரு சாதிக்கும் அடிவரையறை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. விவேகானந்தரின் வார்த்தைகளில் சொல்வதானால் நாராயணகுரு பிறந்த காலத்தையக் கேரளம் 'பைத்தியக்காரர்களின் கூடாரமாக' இருந்தது. இத்தகைய சமூகச் சூழலில் பிறந்த இவர் சிறுவயதிலேயே இறைவன் மேல் தீராத பக்தி கொண்டிருந்தார். சமஸ்கிருதம், இலக்கியம், இலக்கணம், தருக்கம், வேதாந்தம் ஆகியவற்றில் மரபுரீதியான கல்வியைப் பெற்றார். பெற்றோர் இவருக்கு 26 வயதில் காளியம்மா என்ற உறவுப்பெண்ணை மணமுடித்து வைத்தனர். ஆனால் நாராயணகுரு சிறிது நாட்களிலேயே இல்லறத்தைத் துறந்து துறவியானார். சட்டம்பி சுவாமிகள் என்பவரைக் குருவாகப் பெற்று யோகத்தில் ஈடுபட்டார். சில ஆண்டுகளுக்குப் பின் ஆன்மீகத்திலிருந்து நடைமுறைக் கருத்துவடிவங்களுக்கு வந்தார். 1903 இல் ஸ்ரீ நாராயணகுரு தர்மபரிபாலன யோகத்தை நிறுவினார். மலையாள மகாகவி குமாரன் ஆசான் இவ்வமைப்பின் முதல் செயலாளராக இருந்தார். இந்த அமைப்பு தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்காகவும், ஆன்மீக உரிமைகளுக்காகவும் போராடியது. தாழ்த்தப்பட்டோரின் இறை வழிபாட்டிற்காக நாராயணகுரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து புதிய கோவில்களை அமைத்தார். இறைவழிபாட்டில் சமயநெறிகளில் பழைய வழக்கங்களைத் தவிர்த்தார். சிவகிரியில் மடம் அமைத்தார். 1924இல் வைக்கம் சத்தியாகிரகத்திற்கு ஆதரவு கொடுத்தார். தாகூர், காந்தியடிகள் போன்றோர் இவரைச் சந்தித்தனர். 1928 இல் தனது 72ஆவது வயதில் மரணமடைந்தார். நாராயணகுரு 57 சிறிய செய்யுள் மற்றும் உரைநடைப் படைப்புகளை எழுதியுள்ளார். இவை நூல் வடிவம் பெற்றுள்ளன.

### நாராயணகுருவும் வள்ளலாரும்

ஸ்ரீநாராயணகுரு தமிழோடு நெருங்கிய தொடர்புடையவர். நாராயணகுருவின் குருவான சட்டம்பி சுவாமிகளோடு நெருங்கிய தொடர்புடையவரும் முருக பக்தருமான தைக்காடு அய்யாவு என்பவரும் தமிழர். நாராயணகுரு இவரைச் சட்டம்பிசுவாமிகள் மூலம் சந்தித்த பிறகு மருத்துவாமலையில் தமிழ் கற்றார். இவ்வாறு தமிழோடு தமிழிலக்கியத்தோடு நெருங்கிய தொடர்புடைய நாராயணகுரு வள்ளலாரையும் அறிந்திருக்கிறார். வள்ளலார் எழுதிய திருவருட்பா பாடல்களை நாராயணகுரு படித்தார் என்பதற்கான அகச்சான்றுகள் இதுவரை அறிஞர் எவராலும் குறிப்பிடப்

படவில்லை. ஆனால் வள்ளலாரைப் போன்றே கண்ணாடி, விளக்கு வழிபாடு, தலையை மூடி ஆடை அணிதல் முதலிய செயல்களை நாராயண குருவும் பின்பற்றி உள்ளார். இவ்வொற்றுமையினால் டாக்டர் மா.இளையபெருமாள் இவரைக் 'கேரளத்து வள்ளலார்' என அழைத்துள்ளார். மேலும் திரு நாராயணகுருவும் தமிழகமும் என்ற நூலின் (1985) பதிப்பாசிரியரான டாக்டர் கி. நாச்சிமுத்து நாராயண குருவின் பாடல்களில் வள்ளலாரின் ஆன்மநேய ஒருமைப்பாட்டுக் கருத்துகள் காணப்படுகின்றன என்றும், வருங்கால ஆய்வில் வள்ளலார் இராமலிங்க அடிகளாரோடு நாராயணகுருவை ஒப்பிடவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

வள்ளலார் ஆன்மநேயத்திற்கு அடிப்படையான அன்பை, தயவை பாடல்களிலும் உரைநடைப்பகுதிகளிலும் பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார்.

"அன்புடையவரே எல்லாம் உடையவர்"

"தயவுடையவர்களே புண்ணிய தேகிகள்"

என்பன வள்ளலாரின் கூற்றுகள். ஸ்ரீநாராயணகுருவும் ஆன்ம நேயத்திற்கு அடிப்படையான இதே சிந்தனையைக் கொண்டுள்ளார்.

'அருள், அன்பு, இரக்கம் என்ற மூன்றினுடைய பொருளும் ஒன்றுதான். இதுதான் உயிரின் ஆதாரம். 'அருள் உள்ளவன் தான் ஜீவி' என்கிறார் நாராயண குரு.

"அருள் அன்பு அனுகம்ப மூந்நினும் பொருள் ஒந்நாணு இது ஜீவதாரக அருள் உள்ளவனாணு ஜீவியெந்நு உருவிட்டிடுக யீ நவாக்ஷரி"

நாராயணகுருவின் மேற்காட்டிய பாடலின் கருத்து பின்வரும் வள்ளலாரின் உரைநடைப் பகுதியோடு ஒப்புமையுடையதாக அமைந்திருக்கிறது.

"தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆகவே பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவேயாம்."

மனிதனின் உயர்பண்பான அன்பினை இன்னும் ஆழமாக மற்றொரு பாடலில் நாராயணகுரு வலியுறுத்தியுள்ளார்.

"அருள் இல்லையென்றால் அஸ்தி, தோல், நரம்பு நாறுகின்ற உடம்புதான் அவன்"

இப்பாடல், "அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு" என்ற குறளின் எதிரொலியாய் அமைந்திருத்தல் காண்க.

இந்த அன்பை – தயையைக் –கொண்டு எல்லா உயிர் மீதும் நேயம் கொள்ளவேண்டும். எல்லா உயிரையும் தம் உயிராய்க் கண்டு இரங்கவேண்டும் என்பது வள்ளலாரின் கருத்து.

"கருணை ஒன்றே வடிவாகி எவ்வுயிரும் தம் உயிர்போல் கண்டு ஞானத் தருள் நெறியில் சுத்தசிவ சன்மார்க்கப் பெருநீதி"

எனக் கூறும் வள்ளலார் வாடிய பயிரைக் கண்டும், மனிதரைக் கண்டும் வருந்தி ஆன்மநேய ஒருமை கொள்கின்றார். எல்லா உயிரையும் தம் உயிராய்ப் பாவிக்கின்ற வள்ளலார் பசுக்கள், கன்றுகள், கோழி முதலான உயிர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமை கண்டு – உயிர்க்கொலை கண்டு –இளைத்துப் பேசுகின்றார். இதே மனப்பாங்கை நாராயணகுருவிடமும் காணமுடிகின்றது.

இராமலிங்க அடிகளாரின் படைப்புகளில் மேலோங்கிக் காணப்படும் மற்றொரு கருத்தமைப்பு சமரச சன்மார்க்கம் ஆகும். மனிதர் எல்லோரையும் எல்லா நிலைகளிலும், எல்லா இடங்களிலும், எல்லாச் சூழல்களிலும் சமமாகப் பாவிப்பதுதான் சமரச சன்மார்க்க நெறியின் அடிப்படைத் தத்துவம். இடைக்கால இந்தியச் சமூகம், மனிதனைச் சமூகம், பொருளாதாரம், பண்பாடு ஆகிய அனைத்துத் தளங்களிலும் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் வேறுபடுத்திப் பிணைத்து வைத்திருந்தது. பேதம் கொண்ட இந்த அடிமை விலங்குகளை உடைத்து, பொதுவான மானுடப் பரப்பைக் காணுவதற்கு விழைந்த தத்துவம் மற்றும் நடைமுறை வடிவம்தான் சமரச சன்மார்க்கம். இதில் சாதி, மத பேதமில்லை. வள்ளலார் மனிதனிடம் "தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு, சாதியேற்பாடு, முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள்". எனவே சாதி, சமயம், சாத்திரம் முதலான கட்டுப்பாடுகளை உடைத்தெறிய வேண்டுமென விரும்பினார். இதனால் சாதி சமயங்களைச் 'சழக்கு' என்றும் குப்பை என்றும் பேய் என்றும் சாடுகின்றார். சன்மார்க்கத்தை நீதி வாய்ந்தது எனக் குறிப்பிடுகின்றார்.

வள்ளலாரைப் போன்றே நாராயணகுருவும் சாதி, சமய வேறுபாடுள்ள உலகிற்கு மாற்றான– எதிரான – ஒரு தத்துவத்தை முன்வைத்தார்.

"ஒரு ஜாதி, ஒரு மதம், ஒரு தெய்வம் மனிதனுக்கு" – இது சாதி, மத பேதங்களுக்கு எதிரான நாராயண குருவின் முழக்கம்.குருவின் இம்முழக்கத்தை மனிதன் மீது மூடியிருந்த எண்ணிலடங்காச் சாதி, சமய, சாத்திரக்குப்பைகள் மீது இருபதாம் நூற்றாண்டில் வைக்கப்பட்ட முதல் டைம்பாம்ப்" எனப் பேராசிரியர் முண்டசேரி வருணிப்பார். சாதி வேறுபாட்டைச் 'சிறுபிள்ளை விளையாட்டு' என வள்ளலார் போகிற போக்கில் எள்ளி நகையாடிவிட்டுச் செல்ல நாராயணகுரு சாதி வேறுபாட்டை, அதனை வலியுறுத்துகின்றவர்களைக் கடுமையாக விமர்சனம் செய்கின்றார்.

சோதிமயமாய் விளங்கித் தனிப்பொதுவில் நடிக்கும்

தூய நடத்தரசே"

என்ற வள்ளலாரின் கருத்தை நாராயண குருவிடமும் காணமுடிகின்றது. இதனைப் பின்வரும் 'தைவ சிந்தனம்' என்ற அவரது உரைநடைப்பகுதியின் மூலம் அறியலாம்.

"ஓ! நம்முடைய தெய்வம் ஜோதிமயமாய் இருக்கின்ற

ஒரு திவ்யக் கடலாகிறது

மேலும் குரு தனது ஆன்மீக வாழ்வின் இறுதி நாட்களில் 1922 இல் முருக்கம்புழைக் கோவிலில் விளக்கு வழிபாட்டை வள்ளலாரைப் போல அறிமுகப்படுத்தியிருக்கிறார். மேலும், அக்கோவிலில்,

"சத்யம்–தர்ம –தய – ஸ்நேஹம்–ஜோதி"

என்ற வாசகத்தைப் பொறித்து வைத்துள்ளார். இவ்வாசகம் வள்ளலாரது சமரச சன்மார்க்க நெறியின் தாரக மந்திரமான.

"அருட் பெருஞ் சோதி தனிப்பெருங்கருணை"

என்பதோடு ஒப்புமையுடையதாக அமைந்திருக்கிறது. வள்ளலார் வாசகத்திலிருக்கும் அருள், ஜோதி, கருணை என்பதற்கு இணை யாக நாராயணகுருவின் வாசகத்தில் ஸ்நேகம், ஜோதி, தயை என்பன இடம் பெற்றுள்ளன.எனவே வள்ளலாரின் அருட்பெருஞ் சோதி தனிப்பெருங்கருணை என்ற வாசகத்தின் தாக்கத்தால் குருவும் அதைப்போல ஒரு தாரக மந்திரமான வாசகத்தினை சத்யம் – தர்ம தய – ஸ்நேஹம் – ஜோதி என்பதனை உருவாக்க முயன்றிருக்கிறார் எனக் கொள்ளலாம்.

– முனைவர் பா. ஆனந்தகுமார்

முனைவர் பா. ஆனந்தகுமார் எழுதிய இந்திய ஒப்பிலக்கியம் என்னும் நூலிலுள்ள வள்ளலாரும் ஸ்ரீநாராயணகுருவும் என்னும் கட்டுரை இங்குப் பாடப்பகுதியாக அமைந்துள்ளது. இவர் மதுரை மாவட்டத்தில் பிறந்தார். திண்டுக்கல் காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். 'இயந்திரம்' எனும் மலையாள நாவலைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காக சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- ஸ்ரீ நாராயணகுரு, வள்ளலார் ஆகியோருக்கிடையே உள்ள கருத்து ஒற்றுமை குறித்து எழுதுங்கள்.
- "சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதிவழுவா நெறிமுறையின் மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி" (ஔவையார்)

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" (திருமூலர்)

என்ற பாடல் அடிகளை ஒப்பீடு செய்யுங்கள்.

## சட்டம்பி சுவாமிகள்

"தன்னலமற்ற தொண்டே ஆன்மீக வாழ்வின் அடிப்படை" என்று முழங்கி, அப்படியே வாழ்ந்து காட்டினார் இமயஜோதி சிவானந்தர். அவரைப் போலவே "ஆன்மிக வாழ்க்கை சமூகத்தினின்றும் விலகி நிற்கும் வாழ்க்கையல்ல, உலகாயத ஆசைகளைத் துறந்து, மக்கள் அனைவரிடமும் இறைவனைக் கண்டு, உலகுக்குத் தொண்டாற்றுவதே ஆன்மிக வாழ்க்கையாகும்" என்று பறைசாற்றிய நாராயண குருவின் சமகாலத்திலே வாழ்ந்தவர் சட்டம்பி சுவாமிகள்.

திருவனந்தபுரத்தையடுத்த கொல்லூர் கிராமத்தில் கி.பி. 1853 ஆம் ஆண்டு சட்டம்பி சுவாமிகள் பிறந்தார். இயற்பெயர் குஞ்சன் பிள்ளை. தாய் தந்தையர் நாகம்மாவும், வாசுதேவசர்மாவும் ஆவர்.

அவரது குடும்பம் மிகுந்த வறுமையில் இருந்ததால், பத்து வயதுக்குப் பிறகே அவர் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். ஆனால் சில அந்தணச் சிறுவர்களுக்கு ஒரு பண்டிதர் வகுப்பு நடத்தும்போது, சற்று தூரத்தில் அமர்ந்து கவனமாகக் கேட்பதைக் கண்ட ஆசிரியர் குஞ்சனைத் தன் வகுப்பில் சேர்த்துக் கொண்டார்.

பின்னர் குஞ்சன் மற்றொரு தனியார் பள்ளியில் சேர்ந்து படித்தார். அங்கே அவரது நல்லொழுக்கமும் திறமையும் அவரை வகுப்பின் சட்டாம்பிள்ளையாக ஆக்கியது. பின்னாளிலும் அந்தச் சட்டாம்பிள்ளைப் பட்டம் அவரோடு ஒட்டிக் கொண்டு குஞ்சன் சட்டம்பி ஆனார்.

இளமையிலேயே சிறந்த மதிநுட்பமும் திண்மையும் அன்பும் கருணையும் அவரிடம் குடிக்கொண்டிருந்தன.

முழுமையான சத்துவ உணவு உண்டு யோகப் பயிற்சியிலும், ஆன்மிக நியம நிஷ்டைகளிலும் குஞ்சன் ஈடுபட்டார். பள்ளிப் படிப்பு அதிக நாள் நீடிக்கவில்லை.

வயிற்றுப் பிழைப்புக்காகப் பல பணிகள் செய்தார். கட்டிடத் தொழிலாளி, ரிஜிஸ்திரார், அலுவலகத்தில் எழுத்தாளர், பிறகு அரசுத் தலைமைச் செயலகத்தில் கணக்கர் என்று பல வேலைகள் பார்த்தார். ஆனால் அவரது ஆன்மிகத் தேடலால் உள்ளத்தில் அமைதியில்லை. எனவே வேலையை உதறித் தள்ளிவிட்டு, "ஞான பிரஜாகோரம்" என்ற இயக்கத்தைத் தொடங்கினார் குஞ்சன்.

அந்த இயக்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்த தைக்காடு அய்யாசாமி என்ற சர்க்கார் அதிகாரி தேர்ந்த ஒரு யோகி. அவரிடமிருந்து யோகம் பயிலத் தொடங்கிய சாதாரணக் குஞ்சன் ஹடயோகி குஞ்சன் பிள்ளையாக மலர்ந்தார்.

பிறகு மகாராஜா கல்லூரியில் பேராசிரியராக இருந்த சுவாமிநாத தேசிகர் என்ற தமிழ் அறிஞரிடம் தத்துவ நூல்களைக் கற்றார். அதன் பிறகு கல்லிடைக்குறிச்சியில் இருந்த பெரும் சாஸ்திர விற்பன்னரான சுப்ப கனபாடிகளிடம் மேல்நிலை வேதாந்த நூல்களைக் கற்றார்.

தர்ம சாஸ்திரங்களைக் கற்றும், யோக வேதாந்தப் பயிற்சிகள் பெற்றும் முன்னேறிய குஞ்சன்பிள்ளை தென்னிந்தியாவெங்கும் சுற்றுப் பயணம் செய்து, இந்து மதம் மட்டுமின்றி, பிற மதங்களைப் பற்றியும், மத அனுஷ்டானங்களைப் பற்றியும் நன்கு தெரிந்துகொண்டார்.

அக்காலத்தில் அவருக்குப் பல பெரியோர்களோடு பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களில் பின்னாளில் நாராயண குருவாக மலர்ந்த நாணுவும் ஒருவர். 1882 இல் திருமணமாகிக் கொஞ்ச காலத்திலேயே வீட்டைத் துறந்த நாணுவுக்குக் குஞ்சன் பிள்ளையின் நட்புக் கிடைத்தது. அவர் நாணுவைத் தைக்காடு அய்யாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார். இதனால் அய்யாவு யோகியிடமிருந்து ஹட யோகம் மற்றும் பிற யோகங்களையும் நாணு கற்றுக்கொண்டார்.

நாராயண குருவைவிட சட்டம்பி சுவாமிகள் மூன்று வயது மூத்தவர். அவர்களுடைய நட்பு இறுதி வரை நீடித்தது.

நாகர்கோயிலுக்கு அருகிலுள்ள வடிவீஸ்வரத்தில் அவர் சந்தித்த யோகி ஒருவர் மூலமாக அவருக்கு ஆத்மானுபூதி கிட்டியது. அதன் பிறகு அவர் தன் வீடு திரும்பினார். சட்டம்பி சுவாமிகளுக்கு அப்போது வயது 27. தம்பானூரில் ஓர் உறவினரது வீட்டில் சில காலம் தங்கியிருந்தார். பிறகு தன் தாயாருக்கும் கடைசிக் காலத்தில் பணிவிடை செய்தார். தன் தாய் உயிர்துறக்கும்போது, அவர் அருகில் இருந்தார்.

குஞ்சன் பிள்ளை துறவற வாழ்க்கை வாழ்ந்தார். பிறகு ஷண்முகானந்தா என்ற பெயரோடு சந்நியாசி ஆனார். ஆனாலும் மக்கள் அவரைச் சட்டம்பி சுவாமிகள் என்றே அழைத்தனர். அவரது பன்முகத் திறமையால் அவர் வித்யாதிராஜர், ஸ்ரீ பட்டாரகர், ஸ்ரீ பால பட்டாரகர், ஸ்ரீ பரம பட்டாரகர் என்றெல்லாம் அழைக்கப்பட்டார். அவருக்குப் பல சீடர்கள் இருந்தார்கள். அவர்களுள் முக்கியமான சிலர் ஸ்ரீ நீலகண்ட தீர்த்தர், ஸ்ரீ தீர்த்தபாத பரமஹம்சர் ஆகியோர்.

சட்டம்பி சுவாமிகள் கேரளமெங்கும் சுற்றுப் பயணம் செய்து, சமூக சேவையில் தன் சீடர்களையும் ஊக்குவித்தார்.

கீழ்ச்சாதி எனச் சொல்லப்பட்ட தாழ்த்தப்பட்டோர் இல்லங்களுக்குச் சென்று உணவு உண்டார்.

மருத்துவர்களால் தீர்க்க முடியாத நோய்வாய்ப்பட்டவர்களைக் குணப்படுத்தினார். அவர் இசையில் வல்லவர். வீணை, மிருதங்கம், கஞ்சிரா, வயலின் முதலிய இசைக் கருவிகளில் கைதேர்ந்தவர்.

சட்டம்பி சுவாமிகள் சிறந்த கவிஞர், பாடலாசிரியர், நூலாசிரியரும்கூட. அவர் எழுதிய பல நூல்களும் சமூக விழிப்பு, சமூகப் பணி, ஆன்மிகம் பற்றியவை. அவர் எழுதிய 'ப்ராசீன கேரளம்' (பழைய கேரளம்) மிகப் பாராட்டுப் பெற்ற நூல்.

"கேரள நாட்டு வரலாற்றின் சிறப்புடைய சில பகுதிகளைப் பற்றி இயற்றப்பட்டுள்ள தரமான நூல்களில் ஒன்றாகும் சட்டம்பி சுவாமிகள்

எழுதிய 'ப்ராசீன கேரளம்'. இந்நூலில் நம்பூதிரிமார் கேரள நாட்டுக்கு வருமுன் அங்கிருந்த பழங்குடி மக்களான நாகர்களைப் பற்றி வேறெங்கும் கிடைத்தற்கு அரிதான தகவல்கள் பல காணப்படுகின்றன என்று சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள மலையாள இலக்கிய வரலாறு என்ற நூலில் பி. கே. பரமேஸ்வரன் நாயர் எழுதுகிறார்.

அவர் எளிய நவீன மலையாள மொழியில் ப்ராசீன மலையாளம், ஆதி பாஷா, அத்வைத சிந்தா பத்ததி, அத்வைத பஞ்சாரம், பிரம்ம தத்வ நிர்தேசம் போன்ற பத்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். சட்டம்பி சுவாமிகள் பாடியுள்ள பாடல்களை இன்றைக்கும் கேரள மக்கள் பாடி வருகிறார்கள்.

சட்டம்பி சுவாமிகளின் சீடரான கும்பளத்துச் சங்குப் பிள்ளை என்பவர் திருவாங்கூர் சமஸ்தானத்தில் இந்திய தேசியக் காங்கிரசின் தலைவராக இருந்தவர். அவரது பன்மனா என்ற வீட்டில் சுவாமிகள் தங்கியிருந்தார். அந்த வீட்டுத் தோட்டத்திலேயே தம் சமாதிக்கென ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்த சட்டம்பி சுவாமிகள் 1924 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் நாள் பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் இறைவனோடு இரண்டறக் கலந்தார். அங்கே ஓர் ஆசிரமம் எழுந்துள்ளது.

பன்மனா ஆசிரமம் கொல்லத்திலிருந்து 18 கிலோ மீட்டர் வடக்கில் அமைந்துள்ளது. பச்சை வயல்களும் தென்னஞ் சோலைகளும் நிறைந்த இயற்கைச் சூழலில் அமைந்த இந்த ஆசிரமத்திற்கு வருகை தந்து இரண்டு நாட்கள் பிரார்த்தனையிலும் தியானத்திலும் ஆழ்ந்திருந்தார் மகாத்மா காந்தியடிகள். ஆசிரமத்தில் வேதங்கள், உபநிடதங்கள், இதிகாச புராணங்கள், பகவத் கீதை முதலியன கற்பிக்கப்படுகின்றன. பிரம்மச்சாரிகள், துறவிகள் விடுதிகள் உள்ளன. ஆயுர்வேத மருத்துவசாலை, பிராணி மருத்துவம், ஆயுர்வேத மருந்தகம், அனாதாசிரமம், சமூகப் பணி மையம் முதலியன உள்ளன.

சட்டம்பி சுவாமிகளின் நேரடியான சிஷ்யர் சுவாமி அபேதானந்தர் 1946 இல் திருவனந்தபுரத்தில் நெய்யாற்றங்கரையில் அரையூர் என்ற இடத்திலும் 1955 இல் பத்மநாப சுவாமி கோயிலின் கிழக்கு வாசல் அருகிலும் சுவாமிகளின் பெயரில் இரண்டு ஆசிரமங்களை நிறுவினார்.

– மு. ஸ்ரீநிவாஸன்

மு. ஸ்ரீநிவாசன் என்பவர் 1929 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் ஆயக்குடியில் பிறந்தார். கலை வரலாற்றுப் பயணங்கள், பாரதியின் பார்வையில் போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவரின் கலை வரலாற்றுப் பயணங்கள் எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2007 ஆம் ஆண்டிற்கான சிறந்த பயண இலக்கியத்திற்கான பரிசைப் பெற்றது. பாடப்பகுதியிலுள்ள பகுதிகள் இவரது கடவுளைக் காட்டிய கவிகள் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.

## செயல்பாடுகள்

- கேரளத்தில் சட்டம்பி சுவாமிகளின் சமூகச் செயல்பாடுகள் குறித்துத் தொலைக்காட்சியில் உரை நிகழ்த்துவதற்கு ஏற்ப தொலைக்காட்சி உரை தயாரியுங்கள்.
- சட்டம்பி சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றைத் தன்விவரப் பட்டியலாக மாற்றி எழுதுங்கள்.

# படைகள்



## படை திரட்டப் பாடுகிறேன்

பொன்னுக்கோ, இல்லை
புகழுக்கோ பாடவில்லை;
என் மனிதச் சாதி
எழுச்சிக்கே பாடுகிறேன்.

கீழ்மேல் என்றின்னும்
கிறுக்கில் உளறுகின்ற
பாழ்வாய் கிழிக்குமொரு
படை திரட்டப் பாடுகிறேன்.

ஊழ்வினையாம் சேற்றில்
உள்ளத்தை அடியோடே
மூழ்கவிடும் பேதையரை
முன்னேற்றப் பாடுகிறேன்!

பொன்னுக்கோ, இல்லை
புகழுக்கோ பாடவில்லை
மன்பதையின் ஞான
மலர்ச்சிக்கே பாடுகிறேன்!

நாடும் இனமும் வெவ்
வேறெனினும் நம்முடலில்
ஓடுங் குருதிநிறம்
ஒன்றென்று பாடுகிறேன்;

எங்கோ ஒருவன்
இலட்சியத்தை மாலையிட்டால்
இங்கே அவனுக்(கு)
இலக்கியம்நான் பாடுகிறேன்!

பொன்னுக்கோ, இல்லை
புகழுக்கோ பாடவில்லை;
புன்மை களையும்
புரட்சிக்கே பாடுகிறேன்.

மூளைப் பசியறியா
முட்டாளைக் கொண்டாடா
நாளைத் திருநாளை
நாவாரப் பாடுகிறேன்!

பாவ நிழலைப்
படியவிடா மல்தடுக்கும்
தேவன் வந்தேன் என்று
தெம்பூட்டப் பாடுகிறேன்!

– மீரா

மீரா 1938 ஆம் ஆண்டு சிவகங்கையில் பிறந்தார். இவரது இயற்பெயர் மீ. ராஜேந்திரன். சிவகங்கை மன்னர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர் மீ. இராசேந்திரன் கவிதைகள், மூன்றும் ஆறும், மன்னர் நினைவில், ஊசிகள், கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் போன்ற பல கவிதை நூல்களையும் கட்டுரை, திறனாய்வு நூல்களையும் எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- மீராவின் பாடல் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்கக் குறிப்புத் தயாரியுங்கள்.
- "நாடும் இனமும்வெவ்
  வேறெனினும் நம்முடலில்
  ஓடுங்குருதி நிறம்
  ஒன்றென்று பாடுகிறேன்."

  இப்பாடல் வரிகளை விமர்சனம் செய்து குறிப்பு எழுதுங்கள்.

## வானம்பாடி

பட்டுத் துகில் எனலாமோ –அதிற்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயல் காற்று
மதியாது அவ்வுறுதி கொள் மாணிக்கப்படலம்
மட்டு மிகுந் தடித்தாலும் – அதை

என்று தாயின் மணிக்கொடியைப் பற்றிப் பாரதியார் பாடிய வரிகளை நினைப்பூட்டுகிறது 'வானம்பாடி' யின் தோற்றம். இருபதுகளையும்

முப்பதுகளையும் கடந்து கொண்டிருந்த ஓர் இளைஞர் கூட்டம், மனித நேயத்தை விழியோரம் தேக்கிக்கொண்டவர்கள், கட்சி மார்ச்சியத்துக்குக் கால் தலைகள் உண்டென்று கண்டு கொண்டவர்கள், சமகால அரசியல், சமூக, இயக்கங்களால் சலித்துப் போனவர்கள், புதிய அலைத் தெறிப்புகளை இலக்கியத்தில் விளைவித்த சக்திகளின் அடையாளம் குறித்து அறிந்து கொண்டவர்கள், சோதனைக்கு அஞ்சாத தீரத்தை மட்டுமே முதலீடாய்க் கொண்டிருந்த – தமிழ் மரபறிந்த தமிழாசிரியர்கள் – இப்படித் தமிழகத்தின் வடமேற்கு மூலையில் கவிந்து பொழிந்த "கொங்கு மழை" தான் "வானம்பாடி".

சூழலில் அதிருப்தியுற்று, ஒரு தேடலில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட இளம் படைப்பாளிகளின் ஒரு பருவ காலப்பயணம் "வானம் பாடி". பிறருடைய முகங்களை முகமூடிகளாகத் தரித்துக் கொள்வதை மறுத்துத் தங்கள் சொந்த முகத்தைக் காட்ட ஆசை கொண்டவர்களின் இலக்கிய முகம் "வானம்பாடி". இவர்களில் பலர் ஏற்கெனவே கவிஞர்களாகவும், நூலாசிரியர்களாகவும் (சிற்பி, புவியரசு) இருந்தமையால் ஒரு கவிதை இதழாக "வானம்பாடி" வெளிவரும் தூண்டுதல் ஏற்பட்டதாகக் கொள்ளமுடியும்.

"பொழுதுபோக்கு, பெரும்பான்மை மக்களின் இயல்பாக அமைய, தனித் திறன் சிறுபான்மை மக்களிடமே சிறந்திருப்பது போன்று சின்னஞ்சிறு புள்ளிகளாக அமைந்த சிற்றிதழ்களே வியப்பூட்டும் கோலங்களை வரைந்து தருவதில் முதலிடம் வகித்தன. புதிய இலக்கியச் சோதனைகளுக்குத் தமிழ் பேரிதழ்கள் வாய்ப்பளிக்கவில்லை. எனவே இங்குச் சிற்றிதழ்கள் பல்கிப் பெருக வேண்டிய கட்டாயம் வரலாற்று நிலையில் உருவாகிவிட்டது.

கால் நூற்றாண்டுக்காலத் தொலைவிலிருந்து பார்க்கிறபோது இந்த வரலாற்று நிர்ப்பந்தமும் ஒரு கனவுத் தேருக்கு வடம் பிடிக்கிற பரபரப்பும் 'வானம்பாடி' யின் பிறப்புக்குக் கட்டியம் கூறியதாகக் காணமுடிகிறது.

### வானம்பாடியின் பின்புலமும் பின்பலமும்

கோவை நகரம் தொழிலாளர் எழுச்சிக்கு விதை தூவிய தலை நகரம். சமூகச் சீர்திருத்த இயக்கமான பிரம்மசமாஜத்தின் தமிழ் நாட்டுத் தூண்களில் ஒருவரும், இந்திய தேசியக் காங்கிரசின் முதல் மாநாட்டுப் பிரதிநிதியும், "கலாநிதி" இதழை நடத்தியவருமான எஸ்.பி. நரசிம்மலு நாயுடு சமுதாய விழிப்பை இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஏற்படுத்திய நகரம். இலக்கியப் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்க பெ.தூரன், சண்முகசுந்தரம் ஆகிய முன்னோடிகளை உருவாக்கிய நகரம். இந்த ஆலை நகரில் அறுபதுகளின் இறுதியிலும் எழுபதுகளின் தொடக்கத்திலும் பல கலை இலக்கிய அமைப்புகள் செயல்பட்டு வந்தன.

"வானம்பாடி இயக்கமும் சில முன் நிகழ்வுகளின் தொடர்ச்சியே. வானம்பாடியின் தோற்றத்திற்குக் கோவையில் இயங்கிய சில இயக்கங்களும் ஏதோ ஒரு விதத்தில் காரணமாக இருந்திருக்கின்றன".

என்னும் ஆய்வாளர் ஜே. மஞ்சுளா தேவியின் கூற்று மிகவும் சரியானது.

1967–68 களில் தேன்கூடு இலக்கிய அமைப்பின் வெளியீடாக வந்த 'தேனீ' கவிதை ஏடு புவியரசு, இளமுருகு இருவரின் ஆசிரியப் பொறுப்பில் வெளிவந்தது. பதினொரு இதழ்கள் வரை வெளிவந்த இவ்விதழில் பிற்கால வானம்பாடிகள் இருவர் ஆசிரியர்களாக இருந்தனர். வானம்பாடிக் கவிஞர்களாக அறியப்பட்ட சிற்பி, தேனரசன், சக்திக்கனல் ஆகியோர் படைப்புகள் இவ்வேட்டில் சிறப்பிடம் பெற்றன. நா. காமராசன், சாலை இளந்திரையன் ஆகியோரும் எழுதியுள்ள இவ்வேடு மரபுக்கவிதையில் புதுமை அமைக்க முனைந்தது.

இக்கால எல்லையில் பெரிதும் புலவர்களை மையமிட்ட கோவைக் கவிஞர் மன்றமும் இயங்கி வந்தது. இலக்கிய ஆர்வலர்களை ஈர்த்த 'தீபம்' இதழின் வாசகர் வட்டமான கோவை இலக்கியப் பேரவையினை வேலாயுதம் நண்பர்களோடு இயக்கி வந்தார். மார்க்சிய இலக்கியப் பார்வையில் சிக்கல்களை ஆராயும் தோழமைக் கழகம் எழுத்தாளர் கம்பராயனை மையமாகக் கொண்டு நடந்து வந்தது. பகுத்தறிவு இயக்கச் சார்பாளரான கு.வெ. கி. ஆசானும், ஞானி, ஜன. சுந்தரம் ஆகியோரும் இணைந்து சிந்தனைப் பேரவை என்ற அமைப்பைத் தீவிரமான மார்க்சிய, நவீனத்துவ நோக்கில் செயல்படுத்தி வந்தனர். நவீனத் தமிழ் இலக்கிய ஆய்வுக்கென முல்லை ஆதவனும் நண்பர்களும் பூம்பொழில் இலக்கிய வட்டம் என்னும் அரங்கத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தனர். 1967 முதல் 1969 வரை, முற்போக்கு இலக்கியத் தத்துவத் திங்கள் இதழ் என்று அறிவித்துக் கொண்ட புதிய தலைமுறை இதழை ஞானி, ஆதி. ப. வேலுசாமி மற்றும் சில மார்க்சிய நண்பர்கள் இணைந்து வெளிப்படுத்தினர். சிறுகதை, திறனாய்வு, மனித விடுதலை ஆகிய நோக்கங்களை முக்கியத்துவப்படுத்திய வானம்பாடியின் பணி குறிப்பிடத்தக்கது.

"வானம்பாடி"யின் மூலவர்களாக இருந்த நண்பர்கள் இந்த அமைப்புகளில் சிதறிக் கிடந்தார்கள். இவ்வமைப்புகளுக்குள் செயல்பாடுகளின் நெகிழ்வும், மாறுதலும் ஏற்பட்டபோது "வானம்பாடி" என்ற மையப்புள்ளியை நோக்கி இவர்கள் நகர்ந்தார்கள். இது குறித்து ஞானியின் கருத்து முக்கியமானது.

"இங்கு (கோவையில்) மார்க்சியம் ரொம்ப காலமாகவே பேசப்பட்டிருக்கிறது. இது முக்கியமானது. இரண்டாவது வானம்பாடிக்குள் வந்தவர்களில் பெரும் பகுதி தமிழாசிரியர்கள். சிற்பி, புவியரசு, இளமுருகு முதலியவர்கள் தமிழாசிரியர்கள். இவர்கள் ஏற்கெனவே கவிஞர்களாக இருக்கிறார்கள். இவர்கள் பாரதி, பாரதிதாசன் சம்பந்தப்பட்ட பரம்பரையில் வந்தவர்கள். இவர்களுக்கு நல்ல சமூக உள்ளடக்கம் நெடுங்காலமாக உண்டு. தமிழ் நாட்டில் செல்லப்பா போன்றவர்கள் வளர்த்தெடுத்த புதுக்கவிதைப் போக்கு இவர்களுக்கு எப்போதுமே பிரச்சினையாயிருந்தது. புவியரசு போன்றவர்கள் அதை மிக அக்கறையோடு கவனித்துக் கொண்டிருந்தார்கள். இந்த மாதிரி ஒரு சூழலில் நாங்கள் ஏற்கெனவே "புதிய தலைமுறை" என்ற பத்திரிகையோடும் அவர்களின் 'தேனி' என்ற பத்திரிகையோடும் தொடர்பு கொண்டிருந்தோம். கவிதை முதலிய துறைகளில் அவர்கள் நிறையத் தேர்ச்சி உடையவர்கள். தமிழ்ப் பாரம்பரியத்தில் செறிவான அக்கறை உடையவர்கள். இவைகள்

எல்லாம் சேர்ந்து ஒரு புதுக்கவிதை இயக்கமாகத் தோன்றியதுதான் வானம்பாடி.

### வானம்பாடி பெயர் சூட்டலும் தொடக்கமும்

மேற்குறித்த அமைப்புகளின் ஒன்றான பூம்பொழில் இலக்கியவட்டம் சார்ந்து முல்லை ஆதவன் தாம் நடத்திய நிகழ்ச்சி ஒன்றில் கவிதைக்கான ஓர் அமைப்பை உருவாக்கலாம் என்ற கருத்தை மிதக்கவிட்டார். விரிவாக இதை விவாதிக்கும் கு.வெ.கி. ஆசானின் என்.டி.சி கல்வி அகத்தில் கூட்டங்கள் நடைபெற்றன. புதுக்கவிதையின் நிலை குறித்துப் பன்முறை கடுமையான விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. 1971 ஆம் ஆண்டு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இவ்விவாதங்கள் தொடர்ந்தன.

ஒரு கவிதை இயக்கமாகவும், முற்போக்குச் சிந்தைனைகளுக்குக் களமாகவும் செயல்பட முடிவு செய்யப்பட்டபோது இவ்வியக்கத்தின் இதழ் ஒன்று கொண்டுவருவதென ஏற்கப்பட்டது. பல பெயர்கள் பரிசீலிக்கப்பட்ட போது இளமுருகு தந்த பெயர் வானம்பாடி. இப்பெயர் புனைவியல் வாசனையோடு இருப்பதால் சிற்பி ஒரு திருத்தம் கொணர்ந்தார். 'மானுடம் பாடும்' என்ற முன்னொட்டு அனைவராலும் வரவேற்கப்பட்டு இவ்விதழ் 'மானுடம் பாடும் வானம்பாடிகளின் விலையிலாக் கவிமடல்' என அழைக்கப்பெற்றது. பழைய இதழான 'தேனீ' யிலிருந்து 'விலையிலாக் கவி மடல்' என்ற தொடர் இரவலாகப் பெறப்பட்டது.

"வானம்பாடி" யின் மையப் படைப்பாளிகள்

வானம்பாடியின் உருவாக்கத்துக்குக் காரணமாக இருந்த படைப்பாளிகள் எனச் சிலரைப் பட்டியலிடுவது மற்றவர்களின் பங்கைக் குறைத்து மதிப்பிடுவதாகாது. ஞானி, ஜன. சுந்தரம், புவியரசு, சிற்பி, அக்கினிப் புத்திரன், முல்லை ஆதவன், இளமுருகு, தேனரசன், சி.ஆர். ரவீந்திரன், ஜீவ ஒளி, மு. மேத்தா, கங்கை கொண்டான், சக்திக்கனல், நித்திலன் ஆகியோர் தொடக்கத்தில் வானம்பாடிக்கு வேர்பாய்ச்ச பணியாற்றியவர்கள். மற்றவர்கள் வெவ்வேறு காலங்களில் நெருங்கினார்கள் அல்லது வானம்பாடியின் விருந்தினர்களாக இருந்தார்கள் என்று கூறுவதே சரியாக இருக்கும்.

இளைஞர்கள் என்பதால் முதல் இதழைத் தயாரிக்கும் பொறுப்பினை அக்கினி புத்திரனும் முல்லை ஆதவனும் ஏற்றனர். எனினும் ஒவ்வொரு கவிதையும் விவாதிக்கப்பட்ட பின்னரே வெளியிடப்பெற்றது. எனவே வானம்பாடி பிளவுபடும் காலம் வரையிலும் கூட்டுப்பொறுப்பே முக்கியத்துவம் பெற்றது.

வானம்பாடியில் விருந்தினர்களாக எழுதியவர்களில் முக்கியமானவர்களாக அபி, அப்துல் ரகுமான், இன்குலாப், கல்யாண்ஜி, கலாப்ரியா, தமிழவன், பாலா, பிரபஞ்சன், பிரமிள், மீரா, வண்ணநிலவன், விக்ரமாதித்தன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

வானம்பாடியில் மொத்தம் 22 இதழ்கள் வெளியாகியுள்ளன. 1971 அக்டோபர் 9 இல் முதல் இதழ் வெளிவந்தது. கடைசி இதழ் 1983 செப்டம்பரில் வந்தது. இந்த நீண்டகால இடைவெளியில் ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று இதழ்களே வெளிவந்தன எனக் கூற முடியும். தொடக்க இடைவெளிக்குப் பொருளாதாரமும் நீண்ட விவாதங்களும் காத்திருப்புக்குக் காரணமாகும். இருநூற்றி இருபத்தொரு கவிஞர்களின் நானூற்றி தொண்ணூற்றொரு கவிதைகள் இவ்விதழ்களில் இடம்பெற்றன.

– டாக்டர் சிற்பி பாலசுப்பிரமணியம்

சிற்பி பாலசுப்பிரமணியம் 1936–இல் தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் பிறந்தார். கவிஞர், பேராசிரியர், எழுத்தாளர், இதழாளர் மற்றும் சாகித்திய அகாதெமி ஒருங்கிணைப்பாளராக இருந்து வருகிறார். 'ஒரு கிராமத்து நதி' என்ற கவிதை நூலுக்கு 2002 இல் சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றார். மகாகவி உள்ளூர் விருது, தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது போன்ற பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார். நிலவுப்பூ, சிரித்த முத்துகள், ஒளிப்பறவை போன்ற கவிதை நூல்களையும் ஆதிரை என்னும் கவிதை நாடகத்தையும் இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, இல்லறமே நல்லறம் போன்ற உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார். மட்டுமன்றி மொழிபெயர்ப்பு நூல்கள், இலக்கியவரலாறு போன்றவற்றையும் எழுதியுள்ளார்.

### செயல்பாடுகள்

- வானம்பாடியின் கவிதைக் கொடை குறித்து விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.
- "இரவிலே வாங்கினோம்
  இன்னும் விடியவே இல்லை"

  இவ்வரிகளுக்கு விமர்சனக்குறிப்பு எழுதவும்.

## 'எழுத்து'ம் புதுக்கவிதையும்

புதுக்கவிதை புதிய மறுமலர்ச்சியும் இயக்க வேகமும் வலிமையும் பெறுவதற்கு 'எழுத்து' தோன்ற வேண்டியிருந்தது.

சி.சு. செல்லப்பா 1959 ஜனவரியில் 'எழுத்து' இதழை ஆரம்பித்தார். அப்போது அவர் புதுக்கவிதை சம்பந்தமாகத் தீவிரமான கொள்கைகளோ, ஆசை நிறைந்த எதிர்பார்ப்போ, ஆர்வம் மிகுந்த திட்டமோ கொண்டிருந்தார் என்று சொல்வதற்கில்லை.

அப்படி ஏதேனும் இருந்திருந்தால், அதன் அவசியம் முதல் இதழின் ஆசிரியப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும். 'எழுத்து' முதல் ஏட்டில் மட்டுமல்ல, முதல் வருடத்தின் எந்த ஏட்டிலுமே புதுக்கவிதை சம்பந்தமான அபிப்பிராயம் எதுவும்–ஆசிரியர் பக்கத்திலோ கட்டுரையாகவோ, படைப்பாளிகளின் அபிப்பிராயமாகவோ – பிரசுரிக்கப்படவில்லை.

5–வது இதழ் 'கு.ப.ரா. நினைவு ஏடு. அதில் கு.ப.ரா பற்றி பலர் எழுதிய கட்டுரைகளோடு, கு.ப.ரா. படைப்புகளில் ஒரு சிறுகதை, ஒரு கட்டுரை, ஒரு விமர்சனம் ஆகியவற்றோடு ஐந்து கவிதைகளும் சேர்க்கப்பட்டன. கட்டுரை, 'வசனக்கவிதை' என்ற தலைப்பில் கு.ப.ரா. 'கலாமோகினி'யில் எழுதியிருந்தது அது.

முழுக்க முழுக்க கருத்து ஆழமும் கனமும் உள்ள ஒரு இலக்கியப் பத்திரிகையை ஒரு சோதனை முயற்சியாக நடத்த வேண்டும் என்ற எண்ணமே செல்லப்பாவிடம் மேலோங்கியிருந்தது என்று சொல்லலாம். அப்படிப்பட்ட சோதனை முயற்சியில், 'இலக்கிய அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்வதுதான்' முக்கிய பணியாக இருக்க வேண்டும் என்ற நோக்கமும் அவருக்கு இருந்தது என்றும் கொள்ளலாம்.

'எழுத்து இதழ் இலக்கியக் கோட்பாடுகள், தத்துவக் கோட்பாடுகள் சம்பந்தமான அனைத்திற்கும் திறந்த கதவாகத்தான் இருக்கும். கருத்துப் பரிமாறுதல்களின் விளைவாகத்தான் இலக்கியப் படைப்பும் ரசனையும் ஏற்பட முடியும் என்ற நம்பிக்கையை எழுத்து தன்முன் வைத்துக்கொண்டுள்ளது' என்று முதல் ஏட்டில் அறிவித்துள்ளது.

உடனடியாகவே இலக்கியப்படைப்பு பற்றிய தனது அக்கறையையும் பிரஸ்தாபித்திருக்கிறது.

'கருத்துகளைச் சொல்வதைப் பற்றி அதிகம் பிரஸ்தாபித்து இருப்பதால், இலக்கியப் படைப்பு சம்பந்தமாக எழுத்து தனக்கு எல்லைக் கோடிட்டுக் கொண்டுவிடும் என்பதல்ல. சொல்லப் போனால் படைப்புதான் 'எழுத்து'க்கு அக்கறையாக இருக்கும் ' என்றும் "இலக்கிய அபிப்பிராயம் சம்பந்தமாக மாறுபட்ட கருத்துகளுக்கும் களமாக எழுத்து அமைவது போலவே இலக்கியத்தரமான எத்தகைய புதுச் சோதனைகளுக்கும் எழுத்து இடம் தரும்' என்றும் தெளிவுபடுத்திக் கொண்டது.

சுவடு தெரிகிற தடத்திலே செல்ல மறுத்துப் புதுத்தடம் போட்டுக்கொண்டு இலக்கியத்தின் எல்லைகளைச் சற்று விரிவடையச் செய்ய முயல்கிறவர்களின் படைப்புகளை வரவேற்பது, என்பதை எழுத்து தனது லட்சியமாக வரித்துக்கொண்டது.

அதனால், கவிதைத் துறையில் புதுக்கவிதைக்கு அது இடம் அளிக்க முன் வந்தது.

முதல் இதழில், ந.பிச்சமூர்த்தியின் 'பெட்டிக் கடை நாரணன்', என்ற கவிதை வெளிவந்தது. அது 'எழுத்து'க்காக விசேஷமாக எழுதப்பட்டது அல்ல. பங்கீட்டு முறை அமலில் இருந்த காலத்தில் எழுதப்பட்ட கவிதை.

எப்படியும் பிழைப்பது என்று துணிந்துவிட்ட நாரணன் பெட்டிக் கடை வைத்து, ஏற்றம் பெற்று, மளிகைக் கடை முதலாளி ஆகி, மண்ணெண்ணெய் பங்கீடு, அரிசிப் பங்கீடு ஆகியவற்றின் துணையோடு பெரும் பணக்காரன்

ஆனதை அழகாக வர்ணிக்கும் கவிதை. வாழத் தெரிந்தோர் கையாளும் யுக தர்மங்களையும் அவர்களுடைய வாழ்க்கை நோக்கையும் சுவையாகவும், கிண்டல் தொனியோடும் இக்கவிதை எடுத்துச் சொல்கிறது.

'எழுத்து' முதல் ஐந்து ஏடுகளில் க.நா.சுப்ரமணியம் கட்டுரைகளும் கருத்துகளும் மிக அதிகமாக இடம்பெற்றிருந்ததைப் போலவே, முதல் வருடத்தில் (ஏழு ஏடுகளில்) அவரது கவிதைகளும் அதிகமாகப் பிரசுரமாகியிருந்தன.

க.நா.சு. சோதனை முயற்சிகள் என்றே கவிதைகள் எழுதினார் என்பதற்கு அவருடைய வரிகளையே எடுத்தெழுதுவதுதான் நல்லது.

கவிதையில் நான் செய்ய முயற்சித்ததெல்லாம். 'விஷயத்தையும் வார்த்தைகளையும் உள்ளத்து உண்மையிலே குழைத்து, காதும் நாக்கும் சொல்லுகிற கட்டுப்பாடுகளுக்கும் கண்தருகிற கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு எழுதுவது என்கிற காரியம்தான்; இன்றைய உண்மையை நிரந்தரமாக்குகிற காரியம்தான், இன்றைய என் அனுபவத்தை வார்த்தைகளால், பேசும் சந்தத்தில் இலக்கியமாக்க, கவிதையாக்க முயலுகிறேன். பயன், கழுதையா குதிரையா, வசனமா, கவிதையா, இலக்கியமா, பிதற்றலா என்று கேலி செய்பவர் இருக்கலாம். சோதனை என்று சொல்லும்போது இதற்கெல்லாம் பயப்படக்கூடாது. இலக்கியச் சோதனைகள் பலவும் ஆரம்பத்தில் கேலிக்கிடமாகவேதான் காட்சியளித்துள்ளன...

என் புதுக்கவிதை முயற்சிகள் கவிதையாகவும் இலக்கியமாகவும் உருவெடுக்க, வாசகர்கள், ரசிகர்கள் உள்ளத்தில் எதிரொலித்துப் பயன்தரப் பல காலமாகலாம் என்பதையும் அறிந்தே நான் இந்தக் கவிதைச் சோதனையைச் செய்து பார்க்கிறேன். நம்முடைய இன்றைய தினசரி வாழ்விலே இடம்பெறுகிற விஷயங்கள் எல்லாமே உவமைகள், உருவகங்கள், ஏக்கங்கள், ஆசைகள், வார்த்தைகள், மௌனம் எல்லாமே என் கவிதைக்கு விஷயம். வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாக இருப்பது போலவே என் கவிதையும் சிக்கலும் சிடுக்கும் நிரம்பியதாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசை. தெளிவு தொனிக்க வேண்டும்; ஆனால் சிக்கல் விடுவிக்கக் கூடாததாகவும் இருக்க வேண்டும். கவிதை நயம் எது என்று எடுத்துச் சொல்லக் கூடாததாக இருக்க வேண்டும். அதே சமயம் பூராவும் புரியாமலும் இருந்துவிடக் கூடாது. திரும்பத் திரும்பப் படித்துப் பார்க்க, ஒருதரம் படிப்பவருக்கும் ஒரு எதிரொலிக்கும் தன்மை, விடாப்பிடியாக உள்ளத்தைப் பிடித்துக் கொள்ளும் ஒரு குணம் இருக்க வேண்டும் இந்தப் புதுக்கவிதையிலே என்றுதான் எண்ணுகிறேன்.

('சரஸ்வதி' மலர் – புதுக்கவிதைக் கட்டுரை)

க.நா.சு.வின் கவிதை ' எனும் கவிதையைப் படித்துப் பாருங்களேன்!

எனக்கும் கவிதை பிடிக்காது. மனிதன் எத்தனையோ எட்டுகள் எடுத்து வைத்துவிட்டான்; இவற்றில் எத்தனை எட்டுகள் கவிதையால் சாத்திய

மாயின என்று யார் தீர்மானித்துச் சொல்ல இயலும்? பின் எதற்காகத்தான் கவிதை தோன்றுகிறது? மொழியின் மழலை அழகுதான். ஆனால் அது போதவே போதாது.

போதுமானால் கவிதையைத் தவிர வேறு இலக்கியம் தோன்றியிராதே, போதாது என்றுதான், ஒன்றன் பின் ஒன்றாக இத்தனை இலக்கியத் துறைகள் தோன்றின, நாடகமும், நாவலும், நீள் கதையும், கட்டுரையும் இல்லாவிட்டால் தோன்றியிராது; ஆனால் அவையும் தான் திருப்தி தருவதில்லையே!

அதனால்தான் நானும் கவிதை எழுதுகிறேன். மனிதனுக்குக் கலை எதுவும் திருப்தி தராது. மேலே, மேலே என்கிற ஏக்கத்தைத்தான் தரும். கலையின் இந்த அடிப்படையில் ஏற்படுவது இது. கடவுளே இன்னமும் உயிர்வைத்துக் கொண்டிருப்பது இந்த அடிப்படையில்தான் சாத்தியம் என்று சொல்லலாம்.

பிறப்பு 'எழுத்து' முதல் ஏட்டில் தந்த கவிதைகளைப் பார்த்துவிட்டு தி.சோ. வேணுகோபாலன், டி.கே. துரை ஸ்வாமி, 'பசுவய்யா என்ற பெயரில் சுந்தர ராமசாமி ஆகியோரும் கவிதைகள் எழுத முற்பட்டார்கள்.

'கவி வேதனை' என்ற வேணுகோபாலன் கவிதை 2 – ஆவது ஏட்டில் இடம்பெற்றுள்ளது. பிறகு 9, 11 ஏடுகளில் "நான் கவியாவேன்" 'வெள்ளம்' எனும் கவிதைகள் வந்துள்ளன.

துரை ஸ்வாமியின் கவிதைகள் (காத்தபானை, கடன்பட்டார் சிலை) 3, 4, 5 ஏடுகளில் பிரசுரமாயின.

புதிதாக கவிதை எழுதியவர்களில் 'பசுவய்யா' கவிதைகள் புதுமையும் தனித்தன்மையும் பெற்று விளங்கின. மூன்றாவது இதழில் வெளியான 'உன் கை நகம்' குறிப்பிடத்தகுந்தது.

இவ்வாறு புதிய நோக்கும் போக்கும் பெற்ற பசுவய்யா தொடர்ந்து கவிதை எழுதினார். கதவைத் திற, வாழ்க்கை, மேஸ்திரிகள், என் எழுத்து என்பன 'எழுத்து' முதல் வருட ஏடுகளில் வெளிவந்துள்ளன.

கருத்தாழம் கொண்ட 'மேஸ்திரிகள்' என்ற கவிதை மிகுதியும் ரசிக்கத் தகுந்தது.

–எழுத்து – சி.சு. செல்லப்பா

பல்கலைக்கழகத்தில் முன்னொரு தோட்டம் தீட்டினார் மேஸ்திரி. அற்புதத் திட்டம் விளைந்தது. தோட்டம் மறைந்தது. காட்சி தந்தது மிருகக் காட்சிசாலை.

தோட்டத்திலே மேஸ்திரி ஒருவரே. எண்ணத் தொலையுமோ உள்ளே?

'எழுத்து' புதுக்கவிதை முயற்சிகளுக்குத் தந்த ஆதரவைக் கண்டு உற்சாகம் பெற்று, மா. இளையபெருமாள், கி.கஸ்தூரிரங்கன், சி.பழனிசாமி,

சக்ரதாரி, சுப.கோ. நாராயணசாமி ஆகியோரும் இவ்வருடத்தில் கவிதைப் படைப்பில் ஈடுபட்டார்கள். எல்லாம் ரசிக்க வேண்டிய பாராட்டுதலுக்கு உரிய படைப்புகளே ஆகும்.

'எழுத்து' 14 – ஆவது ஏட்டிலேதான் ஆசிரியர் 'புதுக்கவிதை' பற்றி பிரஸ்தாபிக்கத் துணிந்துள்ளார்.

பழங்கவிதை, புதுக்கவிதை என்று அதிகம் இப்போது பாகுபடுத்திப் பேசிக் கொள்கிறோம். புதுக்கவிதை முயற்சிகள் என்று ஒருவகை கவிதைகளுக்குப் பெயர்சூட்டி அதற்கு இடம் தருகிறோம். தமிழ்க் கவிதையைத் தனியான ஒரு பாதையில், திருப்பிவிட்ட பாரதியின் தனித்தன்மையை ஏற்றுக்கொண்ட பின், அதற்குப் பிறகு அவ்வப்போது தோன்றும் ஆற்றல்கொண்டவர்களது சோதனைப் படைப்புகளுக்கும் ஓர் அந்தஸ்து, ஓர் இடம் இருக்கிறது. ஆனால் இந்தப் புதுக்கவிதை முயற்சி எந்த அடிப்படையில், எந்த அளவுக்குப் பழங்கவிதையிலிருந்து மாறுபட்டு நிற்கிறது என்பதை எல்லாம் ஆராய்வதற்கான அளவுக்குப் புதுக்கவிதை வளம் பெருகவில்லை என்ற ஒரு நினைப்பும் இருந்துவருகிறது.

**– வல்லிக்கண்ணன்**

வல்லிக்கண்ணனின் இயற்பெயர் ரா.சு.கிருஷ்ணசாமி. இவர் 1920 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் தேதி பிறந்தார். கோரநாதன் என்னும் புனைபெயரிலும் நூல்கள் எழுதியுள்ளார். நம் பாடப்பகுதி எழுத்து சி.சு.செல்லப்பா என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும். சுதந்திரப் பறவைகள், மனிதர்கள், வாழ விரும்பியவன், சிவப்புக் கல் மூக்குத்தி ஆகியவை வல்லிக் கண்ணனின் சிறுகதைப் படைப்புகளாகும். இவர் அமர வேதனை என்னும் கவிதை நூலினையும் எழுதியுள்ளார். இவருக்கு 1978 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி விருது 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் நூலுக்குக் கிடைத்தது.

## செயல்பாடுகள்

- 'எழுத்து இதழ்' புதுக்கவிதையின் வளர்ச்சிக்குத் துணை நின்றதை எடுத்துக்கூறும் வகையில் குறிப்பு எழுதுங்கள்.
- எழுத்து இதழ் குறித்து உன் நண்பனுக்குத் தெரிவிக்கும் வகையில் கடிதம் எழுதுங்கள்.

# சேவைகள்



## தமிழ்த்தொண்டு

**செக்கிழுத்த செம்மல்**

**காட்சி: 1**

**பாத்திரங்கள்: வ.உ.சி., வடுகராமன், ஜெயிலர்**

வடுகராமன் : ஐயா கப்பலோட்டிய தமிழரே... உம்மை வணங்குகிறேன்.

வ.உ.சி. : நீங்கள் கன்விக்டர் வார்டன் இல்லையா? எங்களைப் போன்ற கைதிகளை அடக்கியாளும் பணி உங்களுக்கு. நீங்கள் என்னை வணங்குவதைப் பார்த்தால் பரங்கியர் கூட்டம் உங்களை வாட்டி வதைத்து விடுமே .

வடுகராமன் : உங்களைப் போன்ற தியாகிகளை வணங்குவதால் நான் சித்திரவதைப்பட்டால் அதைப் பெருமிதத்துடன் ஏற்பேன்.

வ.உ.சி : உங்களை யாரென்றே எனக்குத் தெரியாது. என்றாலும் என் மீது இத்தனை அன்பு, மரியாதை... அப்படியென்ன பெரிதாகச் சாதித்து விட்டேன்? சரி உங்கள் பெயர்?

வடுகராமன் : என் பெயர் வடுகராமன். நான் உங்களைப்போல தேச விடுதலைக்குப் போராடும் தியாகி அல்ல. நான் இந்த அரசாங்கச் சட்டப்படிக் குற்றவாளி.

வ.உ.சி : இந்த அரசாங்கத்தில் சட்டங்கள் எதுவும் அத்தனை நியாயமானவை அல்ல. ஆகவே அதுகுறித்துக் கலங்க வேண்டாம். இந்த அரசாங்கத்தின் பார்வையில் நான்கூடக் குற்றவாளிதான்.

வடுகராமன் : ஐயா... நீங்கள் சாப்பாட்டுக்காக இனி தட்டேந்தி வரிசையில் நிற்கவேண்டாம். நானே எடுத்து வருகிறேன்.

வ.உ.சி : என் மீது சாட்டப்பட்ட குற்றம், நியாயமில்லாமல் போகலாம். ஆனால், இங்கு நானும் ஒரு குற்றவாளி. உங்களைப்போன்றே நானும் ஒரு கைதி. ஆகவே எனக்கென்று எந்தச் சலுகையும் வேண்டாம்.

வடுகராமன் : அதற்காகச் சொல்லவில்லை. நான் தனியே வந்து உங்களிடம் ஒருசில விஷயங்களைச் சொல்ல வேண்டும். இந்த ஜெயில் பற்றி, ஜெயிலர் பற்றி, இங்குள்ள மருத்துவர் பற்றி... நான் சொல்லியே ஆக வேண்டும்.

வ.உ.சி : ஓஹோ... சரி அப்படியானால், என்னைச் சந்திப்பதில் உங்களுக்கு எதுவும் ஊறு நிகழ்ந்துவிடாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஜெயிலர் : வடுகராமன்... என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உன்னை ஜெயில் சூப்பிரண்டெண்ட் அறைக்குக் கூப்பிடுகிறார் உடனே அங்குப் போ.

வடுகராமன் : சரி, இப்போதே நான் அங்குச் செல்கிறேன்.

ஜெயிலர் : என்ன பிள்ளைவாள்... இங்கும் ஆள் பிடிக்கிறீர்களா?

வ.உ.சி : ஆள் பிடிப்பது, வால் பிடிப்பது, நாடு பிடிப்பது இதெல்லாம் எங்கள் வேலையல்ல.

ஜெயிலர் : ம்ம்ம். திமிர், வாய்க்கொழுப்பு இந்த இரண்டும் உங்களுக்கு அதிகம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். (கைத்தட்டி) ஏய். இங்கே வா, இவரைச் செக்கிழுக்கும் பகுதிக்கு இட்டுச் செல். அங்கு மாடுகளுக்குப் பதிலாக இவரைப் பூட்டி இழுக்கச் சொல்.

வ.உ.சி : அதற்கெல்லாம் அஞ்சோம். நாங்கள் எள் என்றால் எண்ணெயாக இருப்பவர்கள். எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கவும் எங்களுக்குத் தெரியும்.

ஜெயிலர் : அப்படியா? அதை நாள் முழுக்க தாராளமாகச் செய்யுங்கள். கையோடு கொண்டுபோங்கள், இவரை.

## காட்சி: 2

பாத்திரங்கள் : வ.உ.சி, வடுகராமன்

வடுகராமன் : தமிழர்களின் வீரம் தழைக்க இந்தியர்களின் மானம் காக்க அன்று கப்பல் இழுத்த உங்களை இங்குச் செக்கிழுக்க வைத்து விட்டார்களே கயவர்கள்...!

வ.உ.சி : பரவாயில்லை வடுகராமா... பாரதத் தாயின் அடிமை விலங்கை உடைக்கக் கப்பலையும் இழுப்போம்; செக்கையும் இழுப்போம்.

வடுகராமன் : என்னால்தானே உங்களுக்கு இத்தனை இக்கட்டு...உங்கள் கைகளெல்லாம் தோலுரிந்து வெடித்துக் கிடக்கின்றனவே. தினவெடுக்கும் உங்கள் தோள்களில்தான் எத்தனை ஆழமான ரணம்.

வ.உ.சி : போகட்டும். உன்னைச் சும்மாவா விட்டார்கள்?

வடுகராமன் : மிகக் கேவலமாக நடத்தினார்கள். இழிவாகப் பேசினார்கள். ஆனால் என்னிடம் இலேசான பயமுண்டு அவர்களுக்கு. என் மூர்க்கத்தனம் முன் அவ்வளவு சீக்கிரம் வாலாட்ட மாட்டார்கள்.

வ.உ.சி : நீ என்னை அதிகம் சந்திக்க வேண்டாம். இப்பொழுதுகூட நான் உன்னை அழைத்ததற்குக் காரணம் ஆறுமுகம் பிள்ளை உன்னைப் பற்றி ஒரு தகவல் சொன்னார். அது உண்மையா என்று அறியத்தான் அழைத்தேன்.

வடுகராமன் : ஓ... புரிகிறது. உங்களிடம் அதுபற்றி விவாதிக்க வேண்டாமென்று சொல்லியிருந்தேனே. ம்ம்... உங்களின் விசுவாசி. நான் சொல்லியா கேட்கப் போகிறார்?

வ.உ.சி : ஆனால் நீ நான் சொல்வதைக் கேட்க வேண்டும்.

வடுகராமன் : ஐயா, இந்த ஜெயிலரும், சூப்பிரண்டெண்டும் உங்களை இழிவுபடுத்தியச் சிறைத்துறை மருத்துவரும் ஒருக்காலும் திருந்தமாட்டார்கள். அவர்கள் மூவரையும் ஒரே நேரத்தில் தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டுகின்றோம்.

வ.உ.சி : தயவு செய்து அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிடு. வெள்ளையர்களின் ஆட்சியை ஒழித்து அவர்களை இங்கிருந்து விரட்ட வேண்டுமே தவிர, அவர்களையே அழிக்க நினைக்கக் கூடாது.

வடுகராமன் : ஐயா, இதில் உங்களை ஒருபோதும் சம்பந்தப்படுத்த மாட்டோம். எங்கள் வழியில் எங்களை விட்டுவிடுங்கள்.

வ.உ.சி : உயிர்க்கொலை என்பது எதற்கும் தீர்வாகாது. அது கொடிய பாவமும்கூட. எந்த ஜென்மத்தில் நாம் என்ன பாவம் செய்தோமோ... இந்தச் சிறைச்சாலையில் வந்து சித்திரவதைப் பட்டுக்கொண்டிருக்கிறோம். இன்னும் ஏன் பாவச் செயலைத் தொடர வேண்டும்?

வடுகராமன் : ஆனால், அவர்கள் தொடர்ந்து இதே சிறையிலிருந்தால், ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் நான் கோபத்தில் அவர்களை அடித்தே கொன்று விடுவேன். திட்டமிடாமல் ஒருவனைக் கொல்லுவதைவிட திட்டமிட்டு மூன்று பேரைத் தீர்த்துக் கட்டிவிடலாம்.

வ.உ.சி : உன்னுடைய பிரச்சினை அவர்கள் இங்கு இருப்பது தானே... உன் புத்திக் கூர்மையைப் பயன்படுத்தி, அவர்களை இந்த ஜெயிலை விட்டு விரட்ட முயற்சி செய்.

வடுகராமன் : ம்ம்ம்... சரி. உங்கள் பேச்சை என்னால் மீற முடியவில்லை. முயற்சி செய்கிறேன். உங்கள் மீதான தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்திருந்தீர்களே... அது என்னாயிற்று?

வ.உ.சி : முதல் குற்றத்துக்கு ஆறாண்டுகளும், இரண்டாம் குற்றத்துக்கு மூன்றாண்டுகளுமாகத் தண்டனை குறைக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் அத்துடன் விடப்போவதில்லை. பிரிவியூ கவுன்சிலில் மனுச்செய்து மீண்டும் போராடப் போகிறேன். தண்டனை குறைவென்பது எனக்கு வழங்கப்படும் நீதியல்ல. நீதிமன்றத்தில் தண்டனை என்று தரப்படுவதே நான் குற்றவாளி என்பதையும் ஊர்ஜிதம் செய்வது போல்தான் இருக்கிறது.

வடுகராமன் : கவலைப்படாதீர்கள். சரித்திரம் உங்களைப் புரிந்து கொள்ளும்.

– நெய்வேலி பாரதிக்குமார்

நெய்வேலி பாரதிக்குமார் என்பவரின் இயற்பெயர் ச. செந்தில் குமார். இவர் என்.எல்.சி நிறுவனத்தில் துணை முதன்மை மேலாளராகப் பணிபுரிகிறார். இவர் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகளைப் படைத்துள்ளார். நட்சத்திரங்களைத் துணைக்கு அழைப்பவர், குற்றியலுகரம், ஒரு துண்டு ரயில், சொட்டாங்கி ஆகியவை இவரது முக்கியமான நூல்களாகும்.

### செயல்பாடுகள்

- செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.யின் தேசப்பற்று குறித்து வகுப்பில் விவாதித்து விளக்கக் குறிப்பு தயாரியுங்கள்.
- விடுதலைப் போராட்ட வீரர் ஒருவரின் வாழ்க்கைக் குறிப்பு தயாரித்து வகுப்பில் வெளியிடுங்கள்.

## வீரமாமுனிவரின் பணிகள்

### நோக்கும் போக்கும்

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டிலிருந்து தமிழகம் வந்ததன் தலையாய நோக்கம் சமயம் பரப்புதலே ஆயினும் அப்பணியில் மட்டும் அவர் அமைதி காணவில்லை; சமுதாயப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். தம் சமயத்தினருக்கு மட்டுமன்றி அனைத்து மக்களுக்கும் பயன்படும் வகையில் பாடுபட முன்வந்தார். அப்பணிகள் அவர்தம் தொண்டு உள்ளத்தையும் தூய உணர்வினையும் காட்டும்; பரந்த புலமையையும் விரிந்த ஆற்றலையும் வெளிப்படுத்தும். அவர் ஆற்றியுள்ள பணிகளைச் சமயப் பணி, சமுதாயப் பணி, தமிழ்ப்பணி, கலைப்பணி, பண்பாட்டுப்பணி என வகைப்படுத்தலாம்.

### தமிழ்ப்பணிகள்

தமிழ், வீரமாமுனிவருக்குத் தாய் மொழியன்று. ஆயினும் தாய் மொழியாகக் கொண்ட ஒரு புலவர் செய்துள்ள பணிகளைக் காட்டிலும் இவர்தம் தமிழ்ப்பணி வியக்கத்தக்க வகையில் உள்ளது. முப்பது வயதுக்கு மேல் தமிழகம் வந்தார். அதற்குப்பின் தமிழ்மொழியைக் கற்றுப் புலமை பெற்றார். தமிழின் பழைய மரபினையொட்டிக் காப்பியம் பாடினார். கவிதைகள் புனைந்தார். பிரபந்தங்கள் படைத்தார். இலக்கணங்கள் இயற்றினார். உரைகள் வரைந்தார். புதிய துறைகள் பலவற்றைத் தமிழில் கண்டார். அவற்றில் நூல்கள் படைத்தார். முதல் தமிழ் அகராதி அவரால் ஆக்கப்பெற்றது. இருமொழி அகராதி, பன்மொழி அகராதிகள் உருவாக்கப்பெற்றன. எள்ளல் இலக்கியம் படைக்கப்பெற்றது. மொழிபெயர்ப்பு முறை தொடங்கப்பெற்றது. இவ்வகையான பணிகளைத் தொகுத்துக் கவிதைப்பணி, இலக்கணப்பணி, அகராதிப் பணி, உரைநடைப் பணி, மொழிபெயர்ப்புப்பணி, ஆய்வு நெறிப்பணி என வகைப்படுத்திக் காணலாம்.

**கவிதைப்பணி**

உலகில் தாய் மொழியில்லாத பிற மொழி ஒன்றில் புலமை பெற்றுப் புனையப் பெற்ற காப்பியம் தமிழில்தான் அமைந்துள்ளது. அதுவே வீரமாமுனிவரால் இயற்றப்பெற்ற தேம்பாவணி. காப்பியம் பாடியுள்ள தமிழ்ப் புலவர்களுள் பல்வகைப் பிரபந்தங்களையும் பாடியுள்ள பெருமை வீரமாமுனிவரையே சேரும். அவர் அந்தாதி பாடினார்; அம்மானை இயற்றினார்; கலம்பகம் புனைந்தார்; கலிப்பா அருளினார்; மாலை தொடுத்தார்; பதிகம் கூறினார்; வண்ணம் இசைத்தார். இவ்வாறு பல்வகைக் காவியங்களைத் தந்த முனிவரைத் 'தாமே தமிழானார்; தமிழே தாமானார்' எனப் பாடிப் பரவுவர்.

**இலக்கணப்பணி**

பிற நாட்டுத் தமிழறிஞர் சிலர் வீரமாமுனிவருக்கு முன் தமிழ் இலக்கணம் செய்துள்ளனர். எனினும் விரிந்த அளவில் இலக்கணம் இயற்றிய முதல்வர் இவரே. இவர் தமிழ் மொழியின் அமைப்பு பற்றி எழுதிய இலக்கணங்கள் நான்கு. அவற்றுள் மூன்று இலத்தீன் மொழியில் எழுதப்பெற்றவை. ஒன்று மட்டும் மரபினுக்கேற்பத் 'தொன்னூல் விளக்கம்' என்னும் பெயரால் தமிழில் எழுதப்பெற்றது. மேனாட்டார் தமிழ் இலக்கணத்தைப் புரிந்துகொள்ளத் துணையாக அந்நாட்டினர் அறிந்திருந்த இலத்தீன் மொழியில் எழுதினார். தமிழ் மொழியைச் செந்தமிழ், கொடுந்தமிழ் என இருவகைப்படுத்தி அவற்றிற்கேற்ப இலக்கணங்கள் எழுதினார்.

**உரைப்பணி**

பிற்காலத்தில் தாம் எழுதிய இலக்கணங்களுக்குத் தாமே உரை எழுதும் முறை உருவாயிற்று. அம்முறையில் வீரமாமுனிவரும் தம் தொன்னூல் விளக்கத்திற்குத் தாமே உரை எழுதியுள்ளார். தமிழகத்தில் பாமரமக்களுக்குத் திருக்குறளைப் பரப்ப எண்ணினார் போலும். 200 திருக்குறட்பாக்களைத் தேர்ந்து அவற்றுக்குப் பேச்சு மொழியில் உரை எழுதியுள்ளார்.

**உரைநடைப் பணி**

பழங்கால இலக்கண இலக்கியங்கட்கு உரைகள் எழுதப்பட்டுள்ளன. எனினும் அவ்வுரைகள் தற்காலப்போக்கிற்கு எளியன அல்ல. தற்கால மக்கள் எளிதில் உணருமாறு அமைந்துள்ள உரைநடை உருவானது அண்மைக் காலத்தில்தான். மேனாட்டார் வரவு, அச்சுக்கலை, இதழியல் ஆகியவற்றின் வளர்ச்சி அதற்குக் காரணங்கள் ஆயின. இந்நிலைக்கு முன்னோடிகளாக மேனாட்டுக் கிறித்தவத் துறவியரைக் கொள்ளலாம். இவருள் குறிப்பிடத்தக்கவர் வீரமாமுனிவர். இவர் உரைநடையில் ஆறு நூல்களை எழுதினார். தொன்னூல் விளக்க உரைநடைக்கும், இந்நூல்களின் உரைநடைக்கும் வேறுபாடு உண்டு. நூலைப் படிப்போர், அவற்றின் பயன் ஆகியவற்றிற்கு ஏற்ப நடையை அமைத்து எளியவகை உரைநடை உருவாகப் பெரிதும் உதவியவர் வீரமாமுனிவர் எனலாம்.

உரைநடை வளர்ச்சியுற்ற நிலையில் அவ்வுரைநடை இலக்கிய வடிவங்கள் சிறப்பிடம் பெற்றன. அவற்றுள் சிறுகதை குறிப்பிடத்தகுந்தது. தமிழில் சிறுகதை தோற்றத்திற்கு முதல் வித்தாக வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குரு கதையைக் கொள்ளலாம் என்பர். அந்நூல் எள்ளல் இலக்கிய வகையைச் சார்ந்தது. தமிழில் அவ்வகையில் வெளிவந்த முதல் நூல் அதுவே. தமிழில் வரலாற்று நூல்களுக்குத் தோற்றுவாயாக அவர் படைத்த வாமன் சரித்திரத்தைக் கொள்ளலாம்.

**அகராதிப் பணி**

தமிழ் அகராதித் துறைக்கு மூலவர் வீரமாமுனிவர். ஏனெனில் தமிழ் முதல் அகராதி அவரால் ஆக்கப்பெற்ற சதுரகராதியே. பின்னர் தமிழில் வந்த அகராதிகள் எல்லாம் அதனை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பெற்றனவேயாம். அகராதிகள் பல்வகைப்படும். அவற்றில் ஒரு மொழி அகராதியாகச் சதுரகராதி; இரு மொழி அகராதியாகத் தமிழ் – இலத்தீன் பேச்சுமொழி அகராதி வீரமாமுனிவரால் ஆக்கப்பெற்றது. பன்மொழி அகராதியாக அவரால் உருவாக்கப்பெற்றது போர்த்துகீஸ் – இலத்தீன் – தமிழ் அகராதி ஆகும். இவ்வாறு அகராதி என்னும் புதிய துறை தமிழில் வீரமாமுனிவரால் வளம் பெற்றது.

**மொழிபெயர்ப்புப்பணி**

தமிழ் இலக்கியத்தை முதன் முதல் மொழிபெயர்த்தவர் வீரமாமுனிவர். அவரால் திருக்குறள் ஐரோப்பிய நாடுகளுக்கு அறிமுகமானது. திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் பகுதிகளை இலத்தீனில் மொழிபெயர்த்தார். பரமார்த்தகுரு கதையைத் தமிழில் எழுதி அதனை இலத்தீனிலும் மொழி பெயர்ப்புச் செய்தார். தம் இலக்கண நூல்களில் ஆங்காங்கே எடுத்துக் காட்டுகளாகக் கையாண்ட இலக்கியச் செய்யுட்களின் கருத்துகளையும் மொழிபெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்புகளால் ஐரோப்பிய நாட்டினர் திருக்குறளின் பெருமையையும் பிற தமிழ் இலக்கியங்களின் சிறப்புகளையும் அறிந்து போற்றும் வாய்ப்பு ஏற்பட்டது.

**– சூ. இன்னாசி**

சூ. இன்னாசி எழுதிய இந்திய இலக்கியச் சிற்பிகள், என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட வீரமாமுனிவர் என்னும் கட்டுரை இங்குப் பாடமாக உள்ளது. சூசையா பிள்ளை இன்னாசி என்பது இவரது இயற்பெயர். இவர் 1934 ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் பிறந்தார். தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். அத்துடன் எழுத்தாளர், ஆய்வாளர், சொற்பொழிவாளர், பதிப்பாளர், தமிழ் அறிஞர் எனப் பல்துறைகளில் சிறப்புற்று விளங்கினார்.

## செயல்பாடுகள்

- வீரமாமுனிவரின் தமிழ்ப்பணிகளைத் தொகுத்துச் சொற்பொழிவுரை தயாரியுங்கள்.
- தமிழ்த்தொண்டு செய்த ஒருவரின் வாழ்க்கையினை எடுத்துக்கூறும் வகையில் பத்திரிகையில் வெளியிடுவதற்கான கட்டுரை தயாரியுங்கள்.

### குற்றியலுகரம்

ஒரு சொல்லின் இறுதியில் வரும் வல்லின மெய்களின் (க், ச், ட், த், ப், ற்) மேல் 'உ'கரம் ஏறி வரும்போது (கு, சு, டு, து, பு, று) அவ்வுகரமானது தன்னுடைய மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்காமல் அளவு குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறுகி ஒலிப்பதைக் குற்றியலுகரம் என்பர். குற்றியலுகர எழுத்தின் முன்னால் வரும் எழுத்துகளின் அடிப்படையில் குற்றியலுகரத்தை ஆறு வகையாகப் பகுப்பர். அவை,

1. **நெடில்தொடர்க் குற்றியலுகரம்**

   தனி நெடிலெழுத்தைத் தொடர்ந்து வருவது
   எ.டு.: ஆறு, காசு, ஓடு, மாது

2. **உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்**

   உயிரெழுத்துகளைத் தொடர்ந்து வருவது.
   எ.டு.: படகு, வயிறு

3. **வன்தொடர்க் குற்றியலுகரம்**

   வல்லின எழுத்துகளைத் தொடர்ந்து வருவது.
   எ.டு.: பட்டு, முத்து

4. **மென்தொடர்க் குற்றியலுகரம்**

   மெல்லின எழுத்துகளைத் தொடர்ந்து வருவது.
   எ.டு.: சங்கு, பந்து

5. **இடைத்தொடர்க் குற்றியலுகரம்**

   இடையின எழுத்துகளைத் தொடர்ந்து வருவது.

   எ.டு.: மார்பு, சால்பு

6. **ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்**

   ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வருவது.
   எ.டு.: கஃசு, எஃகு

### தொகை

வேற்றுமை உருபுகள், உவமை உருபுகள் முதலான உருபுகள் ஒரு சொல்லில் வெளிப்படையாக வராமல் மறைமுகமாக (தொக்கி நிற்பது) அமையுமானால் அது தொகை எனப்படும். தொகைகள் ஆறுவகைப்படும். அவை வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை.

## தமிழ்த் தவஞானி சுத்தானந்த பாரதியார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு புதுச்சேரியில் வீரமாமுனிவர் விழா கொண்டாடப்பெற்றது. அவ்விழாவை நடத்திய அன்பர்கள் சுவாமி சுத்தானந்த பாரதியாருக்கு அழைப்பு அனுப்பி அவரது ஆசிச் செய்தி வேண்டி எழுதினார்கள். அவர் வீரமாமுனிவர் பெருமை என்ற தலைப்பில் ஒரு கட்டுரையே எழுதி அனுப்பியிருந்தார். அக்கட்டுரை சபையில் படிக்கப் பெற்றது. சுத்தானந்தர் வீரமாமுனிவரை அறிந்து பாராட்டிய முறை யாவர்க்கும் பெருமை தருவதாயிற்று. அப்போது அங்குண்டான உற்சாகத்திற்கு அளவேயில்லை. கலைத்துறையில் சுத்தானந்த பாரதியாரின் பரந்த பொதுநோக்கு மிகமிக வரவேற்கத்தக்கது. அது அவரது இலக்கியப் பணியில் குறிப்பிடத்தகுந்த பண்புங்கூட.

தமிழ் இலக்கியம் ஓர் இனத்தவரின் ஏகபோக உரிமை, தமிழ் வளர்ச்சி ஒரு குறித்த கோஷ்டியினரின் பரம்பரைப் பாத்யதை என்ற குறுகிய எண்ணத்தை வெளியிற் சொல்லாமல் வினை அளவில் வேண்டுவன செய்கின்றவர்கள் சுவாமிகள் கூறுவதைக் கவனிப்பார்களா? அவர் கூறுகின்றார்: "கலைக் கோயில் பொதுக்கோயில். சாதி மத வேறுபாடே அதில் இல்லை. உலக ஒற்றுமைக்குக் கலைப் பண்பு பெரிய சாதனமாகும். தமிழ்க் கலைக்கோயிலில் மேற்கும் கிழக்கும் இணைந்து விளங்குகின்றது. சைவர், வைணவர், சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் அனைவரும் அக்கோயிலில் அன்புத்

**வேற்றுமைத் தொகை**

வேற்றுமை உருபுகள் மறைந்து வருவது வேற்றுமைத்தொகை ஆகும்.

**இரண்டாம் வேற்றுமைத் தொகை**
சட்டை தைத்தான் (ஐ)

**மூன்றாம் வேற்றுமைத் தொகை**
கத்தி குத்தினான் (ஆல்)

**நான்காம் வேற்றுமைத் தொகை**
கூலிப்படை (கு)

**ஐந்தாம் வேற்றுமைத் தொகை**
மலையருவி (இன்)

**ஆறாம் வேற்றுமைத் தொகை**
குருவிக்கூடு (அது)

**ஏழாம் வேற்றுமைத் தொகை**
குடிப்பிறந்தார் (கண்)

**வினைத்தொகை**

காலம் காட்டும் இடைநிலைகளும் பெயரெச்ச விகுதிகளும் மறைந்து வரும் தொடர் வினைத்தொகையாகும். வினைத்தொகையில் வினையும் பெயரும் இணைந்து வரும்.

எ.டு. : ஓடுகால், ஊறுகாய், தேய்பிறை, வளர்பிறை, மூடுபனி, வெடிகுண்டு, குடிநீர், சுடுசோறு. நடுகல், ஏவுகணை

**ஓடுகால் :**

ஓடிய கால் – இறந்தகாலம்
ஓடுகின்ற கால் – நிகழ்காலம்
ஓடும் கால் – எதிர்காலம்

என மூன்று காலத்தையும் குறிக்கும்.

தொண்டு செய்திருக்கிறார்கள். அறிவு விளக்கேற்றி வைத்திருக்கிறார்கள். ஆர்வ மாலை சூட்டி அணி செய்திருக்கிறார்கள்." சுவாமிகளின் உள்ளம்போல விரிந்த இவ்வரிய பொதுநோக்கு நமது பண்ணைகளுக்கும் கழகங்களுக்கும் வெளியீட்டகங்களுக்கும் என்றுதான் ஏற்படுமோ அறியோம் பராபரமே!

இராமச்சந்திரபுரம் அன்பு நிலைய வெளியீடுகளின் பட்டியலை ஒருமுறை படித்தாலே போதும். சுத்தானந்தரின் சலியா உழைப்பின் பெருமை புலனாகும். முத்தமிழ் வித்தகக் குன்று சுத்தானந்தர். சுத்தானந்தச் சுனையிலிருந்து கவிதை, வசனம், இசை, நாடகம், சிறுகதை, வரலாறு முதலியன பெருக்கெடுத்துக் கொண்டேயிருக்கின்றன. அன்பிற்கு அயர்ச்சியில்லை. வற்றுதலும் இல்லை. சுவாமிகள் வற்றாத தமிழ் ஊற்றாக விளங்கித் தமிழ்ப் பயிர் வளர்க்கின்றார்.

ஆங்கிலம், பிரெஞ்சு, ஆரியம், ஹிந்தி முதலிய பிற மொழிகளிலும் பாண்டித்தியமுடைய சுத்தானந்தர் நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியை வளர்க்கக் கங்கணம் கட்டி உழைக்கின்றார். உறங்கும் தமிழ் இனத்தைத் தட்டி எழுப்பிச் சேவைக்கு அழைக்கின்றார் "முன்னை மொழிக்கெல்லாம் முன்மொழியை முத்தமிழைப் பொன்னைப்போல் போற்றி புதுநயங்கள் ஏற்றிடுவோம். அன்னிய மாயத்தழுந்திக் கிடக்காதே. சொந்த சுரங்கம் சுரந்திருக்க உன்மனையில் இன்னொருவர் வீட்டில் இரந்துண்ணப் போவாயோ? என்னே உன் ஏழ்மைதான் எம்மொழிக்கும் தாரகமாய் அன்னைமொழி ஓங்க அருட்பணிசெய் எம்பாவாய்" என்று உணர்ச்சிப் பெருக்கோடு தமிழ்த் திருப்பாவைப் பாடுகின்றார்.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துக் கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்" என்று உரைத்த மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமது தீந்தமிழ்ப் பாட்டால் இலக்கிய உலகில் ஒரு புதிய பாதை வகுத்தார். அவரைப் பின்பற்றித் தமிழுக்குப் புதிய உயிர் ஊட்டுபவர் சுத்தானந்தர். அவரது கவிதையில் மகாகவி குறித்த சிறப்பியல்புகளைக் காணலாம். பன்னிப்பன்னி ஆதாரங் காட்டி அளக்காமல், இதயந் திறந்து வாய்விட்டு அளவளாவுதல் அவர் செய்யுள் திறன். கேட்போம் அவரை.

"தலை நிமிர் தமிழா – பெற்ற தாயின் மனங்குளிர, மலை குலைந்தாலும் – தமிழா மனங் குலையாதே தமிழ்க்கனல் வளர்ப்போம் – எங்கும் தமிழிசை ஒலிப்போம் தமிழகத்தினிலே – உலகின் தாயகம் சமைப்போம் ஞானச் சிங்காசனத்தில் அன்னை நன்று விளங்குகவே வானச் சுடரணிகள்–மணிமகுடஞ் சூட்டுகவே"

கவிதையைக் காட்டிலும் உரைநடைத் துறையில் அவரது சேவை மிகுதியாகப் போற்றத்தக்கது. திருவாரூர்த் தேரைப்போல நிதானமாக ஊர்ந்து வரும் தமிழ் வசனம் சுத்தானந்தர் கைவரிசையால் மின்னல் வேகம் பெற்றது. சுப்பிரமணிய பாரதியார் தோற்றுவித்த எளியநடை இயக்கத்தின் முன்னணித் தொண்டர் சுத்தானந்தர். பொது ஜனங்களுக்குப் பளிச்சென்று புரியும் பேச்சுத் தமிழில் அவர் எழுதுகின்றார். அவரது நடையில் எளிமையும் இனிமையும் இழைந்து வருகின்றன. செறிவும் மிடுக்கும் சேர்ந்து வருகின்றன. இதய ஆழத்திலிருந்து சொற்கள் இலாவகமாக எழுந்து நடனமிடுகின்றன. பிறமொழிப் புலமை உரம் ஊட்டுகின்றது. சிறுசிறு வசனங்கள், அவற்றை இன்னமும் குறுகத்தறிக்க அரைப்புள்ளி, கால் புள்ளி பிரயோகம், இவை தமிழ் வசன வளர்ச்சிக்குச் சுத்தானந்தர் வழங்கும் பிரசாதங்கள். இன்று சயன்ஸ் ஆனாலும் பொருளாதாரமானாலும் எதுவானாலும் தமிழில் எழுதலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இதற்குரிய துறையில் ஆக்க வேலைக்கு அடி கோலியவர் சுத்தானந்த அடிகளார்.

– எம். ரம்போலா மாஸ்கரனேஸ்.

நம் பாடப்பகுதியிலுள்ள சுத்தானந்த பாரதியார் என்னும் கட்டுரை எம்.ரம்போலா மாஸ்கரனேஸ் எழுதிய தமிழ்த்தொண்டர்கள் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இவர் ஒரு தமிழ் அறிஞர். வீரமாமுனிவர் மற்றும் தமிழ்த்தொண்டர்கள், செல்வன், செந்தமிழ் வாசகம் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- சுத்தானந்த பாரதியாரின் தமிழ்த் தொண்டு குறித்து கலந்துரையாடிக் குறிப்பு தயாரியுங்கள்.
- தமிழுக்குத் தொண்டாற்றியவர்களின் பட்டியல் தயார் செய்யுங்கள்.
- "சமூகச் சீர்திருத்தமும் சீர்திருத்தவாதிகளும்" என்னும் தலைப்பில் கருத்தரங்கம் நடத்துவதற்கான கட்டுரை தயாரியுங்கள்.

## அலகு 4

# தடங்கள்



"ஆணென்றும் பெண்ணென்றும் பேதம் வேண்டாம்
அறிவிலும் ஆற்றலிலும் வேற்றுமை வேண்டாம்."

சமூகத்தின் உறுப்பினர்களாகிய ஆண், பெண், மாற்றுப் பாலினத்தவர் அனைவருக்கும் சமஉரிமை, சமவாய்ப்பு, சமமதிப்பு போன்றவை வழங்கப்பட வேண்டுமென்பதே மனிதநேயக் கொள்கை. ஆகவே மானிடராய் பிறந்த மக்களிடத்தில் கல்வியில், தொழிலில், வேலைவாய்ப்பில், ஊதியத்தில் காணப்படும் முரண்பாடுகளைக் களைந்து, ஒருவரை ஒருவர் மதித்து, பாலின சமத்துவத்தோடு நாம் அனைவரும் வாழவேண்டும்.

## சிந்தனையாளர்கள்



### பெண்கல்வி

தூய்மைக்குப் பெண்ணினம்தான் எடுத்துக் காட்டு
துயர்விளையும் கல்வியின்றேல் குடும்ப வாழ்வில்!
தாய்மைக்குத் தலைவணங்கிப் பெண்கள் எல்லாம்
தரமான கல்வி கற்க வழிகள் செய்வோம்!
பேய்மைக்கு நாளுந்தான் இடங்கொடாதீர்
பெண்வாழ்வை அடிமையாக்க நினைந்திடாதீர்!
சேய்மைக்கு நிகரான மனத்தைக் கொண்ட
சேல்விழியார் கல்விகற்க விரைவீர் இன்றே!

விஞ்ஞான உலகத்தில் வாழுகின்றோம்
வியப்புமிகு வளர்ச்சியினை அடைவதற்கும்
அஞ்ஞான இருள்நீக்கி உயர்ந்து வாழ்வில்
அரும்பணிகள் பற்பலவும் ஆற்று தற்கும்
எஞ்ஞான்றும் எல்லார்க்கும் கல்வி வேண்டும்!
எவருக்கும் உரிமையில்லை தடைகள் போட
பஞ்சானப் பாழானப் பழமை தன்னைப்
பெயர்த்தெறிந்து கல்விகற்க மகளிர் வாரீர்!

பூப்போலும் பெண்களுக்குக் கல்வி வேண்டும்
புவியினிலே இல்வாழ்க்கை ஓங்கு தற்கே!
தீப்போலும் விழிவிழித்துத் தீய்க்கா தீர்கள்
திருவிடத்துப் பெண்கள்தம் வாழ்வை! சங்கப்
பாப்போலும் இனிமையுந்தான் கூட வேண்டும்.
பனிமொழியார் வாழ்வினிலே; தென்றல் வீசும்
காப்போலும் அருள்கூட்டி என்றும் அந்தக்
கண்போன்றோர் உயர்வதற்குத் துணையி ருப்போம்!

– புலவர் தி. குலோத்துங்கன்

### செயல்பாடுகள்

- பெண்கல்வி குடும்ப வளர்ச்சிக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது என்பதை இப்பாடலின் துணைகொண்டு விளக்கி எழுதுங்கள்.
- 'பெண்கள் நாட்டின் கண்கள்' என்னும் தலைப்பில் மகளிர் தின விழிப்புணர்வுக் கூட்டத்தில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு தயாரியுங்கள்.
- மரபுக் கவிதையும் புதுக்கவிதையும் என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடத்திக் குறிப்பு எழுதுங்கள்.

## மரியா மான்டிசோரி

இன்று உலகம் முழுவதும் உள்ள 10 நாடுகளில் 22 ஆயிரத்துக்கும் அதிக மான்டிசோரி பள்ளிகள் இயங்குகின்றன. கல்வி கற்பிக்கும் முறையில் புதுமையும் புரட்சியும் கொண்டு வந்த இந்தக் கல்வி முறைக்கு இப்போது வயது 107!

மரியா மான்டிசோரி இத்தாலியில் 1870 ஆகஸ்ட் 31 அன்று பிறந்தார். அப்பா நிதி மேலாளர். அம்மாவுக்குப் படிப்பதில் ஆர்வம் அதிகம். அதனால் மரியாவுக்கும் இயல்பாகக் கல்வி மீது அதீத ஈர்ப்பு. குடும்பம் ரோம் நகருக்குக் குடி பெயர்ந்தது. அங்கே பெரிய நூலகங்கள், அருங்காட்சியகங்கள், சிறந்த பள்ளிக்கூடங்கள் இருந்தன. மரியாவின் ஆர்வத்துக்குப் பெருந்தீனி போட்டன!

தன்னம்பிக்கையும் தைரியமும் இலட்சியமும் கொண்ட பெண்ணாக வளர்ந்தார் மரியா. பெண்களை மட்டுப்படுத்தும் வகையில் அந்தக் காலத்தில் இருந்த சட்டதிட்டங்களை எதிர்த்தார். 13 வயதில் மேல்நிலைப் பள்ளிப் படிப்புக்காகப் பொறியியல் பிரிவில் சேர்ந்தார். ஆண்கள் மட்டுமே இருந்த அந்தப் பிரிவில் ஒரே பெண்ணாக மரியா படிக்க ஆரம்பித்தார். நல்ல மதிப்பெண்களுடன் 16 வயதில் பள்ளியிலிருந்து வெளியே வந்தார். அவருக்குக் கணிதத்தில் ஆர்வம் அதிகம். 20 வயதில் பொறியியல் படிப்பில் பட்டம் பெற்றார். அப்போது அவருக்கு மருத்துவம் படிக்கும் எண்ணம் வந்தது. அந்தக் காலகட்டத்தில் பெண்கள் மருத்துவம் படிக்கும் சூழல் இல்லை. மரியாவின் அப்பாவும் அவரது விருப்பத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார். மரியாவோ மருத்துவம் படிப்பதில் உறுதியாக நின்றார்.

ரோம் மருத்துவப் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பித்தார். அங்குள்ள பேராசிரியர்கள் மரியாவுக்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். வேறு வழியின்றி இயற்கை விஞ்ஞானம் படித்தார் மரியா. அந்தப் பட்டத்தைத் தகுதியாக்கி, மருத்துவப் படிப்பு நுழைவுத் தேர்வை எழுதினார். பெண் என்ற ஒரே காரணத்துக்காக மருத்துவ மாணவர்கள், பேராசிரியர்களால் மோசமான எதிர்ப்புக்கும் தொல்லைக்கும் ஆளானார் மரியா. ஆனாலும், அவர் பின்வாங்க நினைக்கக்கூட இல்லை.

**பண்புத்தொகை**

நிறம், வடிவம், சுவை, அளவு முதலானவற்றை உணர்த்தும் பண்புப் பெயருக்கும் அதைச் சேர்ந்து நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் 'மை' என்னும் பண்பு விகுதியும் ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

எ.டு.: செந்தாமரை = செம்மை + தாமரை (நிறம்)
வட்டக்கோடு = வட்டம் + கோடு (வடிவம்)
இன்மொழி = இனிமை + மொழி (சுவை)
நெடுந்தேர் = நெடுமே + தேர் (அளவு)

பண்புத்தொகையின் இன்னொரு வகை இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆகும்.

ஒரு சிறப்புப் பெயரும் ஒரு பொதுப் பெயரும் சேர்ந்து இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு மறைந்து வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகும்.

எ.டு.: மார்கழித் திங்கள்
மல்லிகைப்பூ
சாரைப்பாம்பு

**உவமைத்தொகை**

உவமைக்கும் உவமேயத்திற்கும் (பொருள்) இடையில் போல, போன்ற, அன்ன போன்ற உவம உருபுகள் மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும்.

எ.டு.: குவளைக்கண் (குவளை போன்ற கண்)
தாமரைக்கை (தாமரை போன்ற கை)

'போன்ற' என்ற உவமை உருபு மறைந்து வந்துள்ளது.

வகுப்பில் இறந்த உடலை அறுக்கும்போது மாணவர்கள் மரியாவைச் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள். வகுப்பு முடிந்த பிறகு தனியாகச் சென்று அந்த வேலையைச் செய்வார் மரியா. இப்படிப் பல தொல்லைகளையும் துன்பங்களையும் சந்தித்து அந்த ஆண்டுத் தேர்வை எழுதினார். தேர்வு முடிவு வந்தபோது, அந்த ஆண்டின் மிகச்சிறந்த மாணவிக்கான பரிசை வென்றிருந்தார் மரியா. படிப்புடன் மருத்துவமனையில் உதவியாளராகப் பணியாற்றும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. கடைசி இரண்டு ஆண்டுகள் குழந்தை மருத்துவம், மனநலம் ஆகியவற்றைப் படித்தார். 1896 இல் ரோம் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டம் பெற்றார் மரியா. இதன் மூலம் 'இத்தாலியின் முதல் பெண் மருத்துவர்' என்ற சாதனையை அடைந்தார்!

தனியாக மருத்துவம் பார்க்க ஆரம்பித்த மரியா, அப்படியே மூளை வளர்ச்சி குறைபாடுள்ள குழந்தைகள் பற்றி ஆராய்ச்சி செய்தார். அப்போது சக மருத்துவர் ஒருவருடன் காதல் வாழ்வு தொடங்கியது. 1898 இல் மரியோ என்ற மகனைப் பெற்றெடுத்தார். குடும்ப வாழ்க்கை லட்சியத்துக்குத் தடையாக இருக்கும் என்று நினைத்த மரியா குழந்தையுடன் தனியாக வந்துவிட்டார். மகனைச் சிறந்த பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தார்.

மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள் கற்றுக்கொள்வதில் அதிக சிரமங்களைச் சந்திக்க வேண்டியதை ஆராய்ச்சி வாயிலாக அறிந்தார். புதியமுறைப் பாடத்திட்டங்களை உருவாக்கினார். 1900 இல் சிறப்புக் குழந்தைகளுக்கான

**உம்மைத்தொகை**

இரு சொற்களுக்கிடையில் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத்தொகை எனப்படும்.

எ.டு.: வெற்றிலைபாக்கு

(வெற்றிலையும் பாக்கும்)

சேர சோழ பாண்டியர் (சேரரும் சோழரும் பாண்டியரும்)

- கபிலர் பரணர் (கபிலரும் பரணரும்)
- கை கால் (கையும் காலும்)
- சோப்பு சீப்பு (சோப்பும் சீப்பும்)

'உம்' என்ற உருபு மறைந்து வந்துள்ளது.

**அன்மொழித்தொகை**

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை ஆகிய ஐந்து தொகைநிலைத் தொடர்களில் உருபுகள் மறைந்து வருவதோடு அதோடு தொடர்புடைய வேறொரு சொல்லும் (அல்மொழி) மறைந்து நின்று பொருளை உணர்த்துவது அன்மொழித்தொகையாகும்.

எ.டு.: பொற்றொடி வந்தாள்

பொன்னாலாகிய தொடி அணிந்த பெண் வந்தாள் என்பது பொருளாகும். இங்கு 'அணிந்த பெண்' என்ற வேறொரு சொல் மறைந்து வந்து பொருள் தருகிறது.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் இணை இயக்குநராகப் பொறுப்பேற்றார். அறிவியல் பூர்வமாகப் பல பரிசோதனைகளை மேற்கொண்டு, கற்பிக்கும் முறைகளை உருவாக்கினார் மரியா. இந்தப் புதிய வழிமுறையில் எதிர்பார்த்ததற்கும் மேலாக ஆரோக்கியமான முடிவுகள் தெரியவந்தன.

1907 இல் முதல் மான்டிசோரி கல்விக்கூடத்தை நிறுவினார் மரியா. இந்தப் பள்ளியில் படித்த சிறப்புக் குழந்தைகள், சாதாரண குழந்தைகள் போலவே எளிதாகக் கற்றுக்கொண்டார்கள். புத்திசாலிகளாகவும் திகழ்ந்தார்கள். கற்பிக்கும் முறையைக் கற்பிக்கும் கல்வி நிறுவனங்களை ஆசிரியர்களுக்காக ஆரம்பித்தார் மரியா மான்டிசோரி. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் மான்டிசோரி பள்ளிக்கூடங்களும் பெரும் வரவேற்பைப் பெற்றன. அதைத் தொடர்ந்து மூன்று முதல் ஆறு வயதுள்ள சாதாரணக் குழந்தைகளுக்கும் மான்டிசோரி முறைப்படி கல்வி அளித்தார். அங்குப் படித்த குழந்தைகள் பிற்காலத்தில் பணியிலும் அதிக ஆர்வம் காட்டினார்கள். மூளைக்கு வேலை அதிகம் கொடுத்தாலும் களைப்படையாமல் இருந்தார்கள். சுயமாகச் செயல்பட்டார்கள். வழக்கமான மாணவர் ஆசிரியர் உறவு அங்குக் கிடையாது. ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக மட்டுமே செயல்பட்டார்கள். குழந்தைகளின் முயற்சிகளை ஊக்குவிப்பதும் அவர்கள் தவறான பழக்கங்களைக் கற்றுக்கொள்ளாமல் இருப்பதுமே ஆசிரியர்களின் முக்கியப் பணியாக இருந்தது. காலப்போக்கில் மான்டிசோரி கல்விக்கான பிரத்யேகப் பாடங்கள், விளையாட்டுப் பொருள்கள், உபகரணங்கள் அனைத்தும் உருவாக்கப்பட்டன.

1910 இல் இத்தாலி முழுவதும் மான்டிசோரி கல்விக் கூடங்கள் தொடங்கப்பட்டன. விரைவில் ஐரோப்பா முழுவதும் மிக வேகமாகப் பரவியது. பல நாடுகளுக்குப் பயிற்சியளிப்பதற்கும் மான்டிசோரி கல்விமுறையை விளக்குவதற்கும் பயணம் செய்தார் மரியா. அவருடைய கவனம் பெண்கள் முன்னேற்றத்திலும் திரும்பியது. பெண் உரிமைக்காகக் குரல் கொடுத்தார். தன்னுடைய வேலைகளில் மகனையும் ஈடுபடுத்தினார். இருவரும் தொடர்ந்து ஆராய்ச்சி செய்தனர். அமெரிக்கா, இங்கிலாந்து, நெதர்லாந்து, ஸ்பெயின் என்று அசுரத்தனமாகப் பயணம் செய்து வேலை செய்தார்.

1939 இல் இந்தியாவுக்கு வந்தார் மரியா. நிறைய பயணம் செய்தார்... உரையாற்றினார். பயிற்சியளித்தார். இரண்டாம் உலகப்போர் முழுமையாக முடியும்வரை சென்னை, கொடைக்கானல் போன்ற இடங்களில் தங்கியிருந்தார். அப்போது 6 முதல் 12 வயது குழந்தைகளுக்கான பாடத்திட்டங்களை வகுத்தார். இலங்கையிலும் பயிற்சியளித்தார். 1945 இல் இந்தியாவின் முதல் மான்டிசோரி மாநாடு ஜெய்ப்பூரில் நடைபெற்றது. அதில் மரியா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

உலகப்போர் முடிவுக்கு வந்த பிறகு, 1946 இல் மரியாவும் மகனும் ஐரோப்பா திரும்பினர். இத்தாலியில் மீண்டும் மான்டிசோரி கல்வியை ஆரம்பித்தார். அடுத்த ஆறு ஆண்டுகள் ஐரோப்பா முழுவதும் பயணித்தார். கல்விக்காகத் தீவிரமாக உழைத்தார். உலகம் முழுவதும் பல்வேறு அமைப்புகள், பல்கலைக்கழகங்களைத் தோற்றுவித்தார். அரசாங்கங்களிடமிருந்து ஏராளமான விருதுகளைப் பெற்றார். 81 வயது வரை உழைத்த மரியாவின் உயிர் 1952, மே 6 அன்று அமைதியாகப் பிரிந்தது.

வாழ்க்கை முழுவதையும் குழந்தைகளின் கல்வி, உலக அமைதி, பெண்ணுரிமைப் போராட்டங்களுக்கு அர்ப்பணித்த மரியா மான்டிசோரிக்கு உலகம் என்றென்றும் நன்றி சொல்லிக் கொண்டிருக்கும்!

– சஹானா

சஹானா என்பவர் பெண்கள் பிரச்சினைகள் குறித்துப் படிப்பதிலும் எழுதுவதிலும் ஆர்வம் மிகுந்தவர். இவர் கடந்த 15 ஆண்டுகளாக எழுதி வருகிறார். குங்குமம் – தோழியில் உலகை மாற்றிய தோழிகள், தடம் பதித்த தாரகைகள் ஆகிய தலைப்புகளில் தொடர் கட்டுரைகளை எழுதியுள்ளார். வாசகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்ற இந்தத் தொடர்கள் நூல்களாக வெளிவந்துள்ளன.

## செயல்பாடுகள்

- மரியா மான்டிசோரி கல்வியில் ஏற்படுத்திய புரட்சி குறித்து விளக்கக்குறிப்பு எழுதுங்கள்.
- 'அமைதிக்கான கல்வி' என்னும் பொருளில் கட்டுரை வெளியிடுங்கள்.
- மரியா மான்டிசோரியின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு தயாரியுங்கள்.

## மூன்றாம் பாலின எழுத்து

நாமக்கல் மாவட்டத்தில் ஒரு சிறிய கிராமத்தில் 1968 ஆம் ஆண்டு என் பெற்றோர்களுக்கு நான்காவது மகனாக ஜெனித்தேன். அம்மா அப்பா எனக்கு வைத்த பெயர் துரைசாமி. எனக்கு மூன்று அண்ணாக்களும் ஓர் அக்காவும் உடன்பிறந்தவர்கள். நான்தான் கடைக்குட்டி என்பதால் வீட்டுக்குச் செல்லப்பிள்ளை.

எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது. அப்போது எனக்குப் பத்து வயது இருக்கும். நான், அக்கா மற்றும் அக்கம் பக்கம் உள்ள குழந்தைகளுடன் கிராமத்தில் உள்ள பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். பள்ளியில் பெண் குழந்தைகளுடன் விளையாடுவதும் வீட்டுக்கு வந்தால் அக்காவின் பாவாடை, சட்டையை அணிந்து தலையில் துண்டைக் கட்டிக் கொள்வதும் வாசல் கூட்டி கோலம் போடுவதும் அம்மாவுக்கு உதவியாகப் பாத்திரம் கழுவிக் கொடுப்பதும் எனக்கு வாடிக்கையாகவே இருக்கும்.

இச்செயலைக் கண்டு, கூடப் படிப்பவர்களும் அக்கம் பக்கத்தினரும் உடன் பிறந்தவர்களும் என்னை ஒன்பது, அலி, பொட்டை என்று கிண்டல் செய்வதும் வாடிக்கையாகவே இருக்கும். அவர்கள் என்னை அப்படி அழைப்பதில் மனதில் ஓர் அற்ப சந்தோஷம். என்னைப் பெண் குழந்தையாக ஒப்பிடுகிறார்கள் என்று.

பத்தாம் வகுப்புப் படிக்கும்போது பள்ளி ஆண்டு விழாவிலும் கிராமத்தில் மாரியம்மன் பண்டிகையிலும் பெண் வேடம் அணிந்து நாடகம், நடனம் என என் பெண் உணர்வை வெளிப்படுத்திக் கொண்டேன். பார்ப்பவர்களுக்கு அது வேஷமாக இருந்தாலும் எனக்கு நான் பெண் என்பதைக் காட்டிக் கொள்ளவும் என் உணர்வுகளுக்கு நான் ஆளாகி இருக்கிறேன் என்ற அளவில் மகிழ்ச்சி கொள்ளவும் உதவியது. ஆனால் அந்த மகிழ்ச்சி நிலைப்பதில்லை; அதை நிலைத்துத் தக்கவைத்துக் கொள்ளவும் முடியவில்லை. காரணம் நான் பிறப்பால் ஆண்.

நம் சமூகத்தில் ஆண், பெண் எப்படி இருக்க வேண்டும் என்ற வரையறை செய்யப்பட்ட கட்டமைப்புகளை மீற முடியவில்லை. என் இந்த உணர்வுகள் பற்றிப் புரிந்துகொள்ளவோ, புரிய வைக்கவோ வழியில்லா உலகத்தில் இருந்தேன். நம் சமூகத்தில் இனம், சாதி, மதம், மொழி, நிறம் என்று ஏற்றத் தாழ்வுகள் தளும்பிக் கொண்டிருக்கின்றன. கறைப்படுத்துதல், ஒதுக்குதல், வன்முறை செய்தல் என மனித உணர்வுகளைக் காயப்படுத்தும் இவ்வுலகில் என் உணர்வுகளுக்கும் பாலியல் ஈர்ப்புக்கும் விடை எங்குக் கிடைக்கப் போகிறது? என்னைப் பற்றிப் புரிந்து கொள்பவர்கள் என்னைப் போன்றவர்கள் மட்டுமே. இதனால் என் இனத்தாரைத் தேடி ஓடினேன்; பெண்ணாக வாழ ஆரம்பித்தேன்.

இலைமறை காயாகத் தனி உலகத்தில் கேலி கிண்டலுக்குப் பயந்தே வாழ வேண்டியதாக இருந்தது.

ரோட்டில் நடந்து செல்லப் பயம், யாராவது கேலி செய்து விடுவார்களோ என்று.

பேருந்தில் செல்லப் பயம், யாருடன் அமர்வது என்று.

கடைத் தெருக்களுக்குச் செல்லப் பயம், அழுகிய தக்காளி என் மீது விழுமோ என்று.

கழிப்பறைக்குச் செல்ல பயம், கண்டு கொண்டால் என்ன நடக்குமோ என்று.

போலீசைக் கண்டால் பயம், எங்குப் பிடித்துச் சென்று விடுவார்களோ என்று.

இப்படி எடுத்ததற்கெல்லாம் பயம், பயம், எனக்கு மட்டும் ஏன் இந்தப் பயம்?

எல்லோரையும் போலத்தானே என் தாயும் என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்றாள்?

எனக்கு மட்டும் ஏன் இந்த அவல நிலை! ஆணாகப் பிறந்த நான் ஆணாக இருந்தால்தான் உரிமைகள் கிடைக்கும் என்று சொல்வதில் என்ன நியாயம்?

நான் காசு கொடுத்தோ, கடன் வாங்கியோ என் உணர்வுகளை வரவழைக்கவில்லை; இயற்கையாக வந்த உணர்வுகளுக்கு மதிப்பளிக்க கேட்கிறேன். இது என்னுடைய தவறு இல்லை. இந்தச் சமூகத்தின் தவறு என்பதை உணர்ந்துகொள்ளும் பக்குவம் எனக்கு வந்தது.

என்னுடைய வலிகளை வரிகளாக எழுதத் தொடங்கினேன். அது சமூக மாற்றத்துக்கான ஆயுதமாக எனக்குத் தெரிந்த இலக்கணத்தில் எழுதினேன். எனக்கு இத்தாக்கத்தை ஏற்படுத்தியது நான் படித்த முதல் நாவல் 'அம்மாவின் சுருக்கு'.

அந்த நாவல் எனக்கு எப்படி எழுதுவது எனச் சொல்லிக் கொடுத்தது. அந்தத் தைரியம் எனக்குப் பலமாக அமைந்தது. என் சமூக மக்களுக்காக நான் தொடர்ந்து எழுத்து, நாடகம் எனக் கலை மூலமாகத் தொண்டாற்றப் புறப்பட்டது என் பயணம்.

நான் கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் பாலின சிறுபான்மையினருக்காக, அவர்களின் உரிமைகளுக்காகத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் மற்ற அமைப்புகளுடனும் இணைந்து குரல்கொடுத்து வருகிறேன். என்னுடைய எழுத்துகளும் உரிமை கேட்கும் ஓர் ஆயுதமே.

2005 இல் பல திருநங்கையர்கள் பற்றி ஆய்வு மேற்கொண்டு 'உணர்வும் உருவமும்' என்ற தலைப்பில் அடையாளம் பதிப்பகத்தின் மூலமாகப் புத்தகமாகக் கொண்டு வந்தேன்.

கனடா தமிழ்ச் சங்கம் இந்த நூலுக்கு விருதும் கொடுத்து என்னைக் கௌரவித்தது. எனக்கு எழுத்தாளருக்கான அடையாளத்தைத் தந்தது. அதன் பிறகே சில திருநங்கையர்கள் எழுத ஆரம்பித்தனர். 2009 ஆம் ஆண்டு என்னுடைய தன் வாழ்க்கை வரலாறு ஆங்கிலத்தில் பெங்குயின் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது. இன்று இந்த நூல் பல பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் பாலினம் பற்றி மாணவர்கள் படிக்குமாறு பாடத்

திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. இந்தியா மட்டுமல்லாமல் உலக அளவில் இந்த நூல் விமர்சனங்களும் விவாதங்களும் பெற்று, சமூக மாற்றத்திற்கான நல்ல நூலாக இடம்பெற்றது.

என் வரலாறு கர்நாடகாவில் இரண்டு வருடம் மேடை நாடகமாகவும் நடத்திக் காண்பிக்கப்பட்டது. என் கதாபாத்திரத்தில் நானே நடித்திருந்தது முக்கியமான ஒன்றாகும். இதனால் பல லட்சம் மக்களுக்கு என் இனமக்கள் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்துகொள்ள முடிந்தது. இதனால் பல மாற்றங்களைக் காண முடிந்தது. பெண்ணாக உணர்ந்த கணம் முதல் வலியும் வேதனையும் கொண்டு ஒளியில்லா வாழ்க்கையாகவே வாழ வேண்டியிருக்கிறது. பெண்ணாகப் பிறந்தவர்களுக்கே சம உரிமைகொடுக்க மறுக்கும் ஆணாதிக்கச் சமூகம் என் இனமக்களை மட்டும் விட்டு வைக்குமா? என்றைக்குப் பெண்களுக்குச் சம உரிமைகளும் இட ஒதுக்கீடும் தரப்படுகிறதோ, அன்றுதான் என்னைப் போன்ற திருநங்கைகளுக்கும் அது கிடைக்கும்.

திருநங்கையர் பற்றிய ஆரோக்கியம், உரிமைகள் என இந்தியாவில் பேசப்பட்டன. மாற்றங்களும் உருவாகத் தொடங்கியது. ஆனால், பெண்ணாகப் பிறந்து ஆணாக வாழ்பவர்கள் பற்றிய புரிதல் இல்லை. பால் மாறியவர்கள் என்றால் திருநங்கையர் மட்டும் இல்லை. திருநம்பிகளும் அடங்குவர். திரு நங்கையர்களுக்காகப் போராடும் ஒரு பிளாட்பாரம், திருநம்பியர்களுக்கு இந்தியாவில் மிக மிகக் குறைவாக இருக்கின்றது. நான் பல திருநம்பிகளுக்கு அம்மாவாக இருக்கிறேன். அவர்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கிறேன். அந்த வகையில் என் மூன்றாவது நூல் திருநம்பியர் பற்றி எழுதினேன். என்னுடைய எழுத்தை, சமூக மக்களுக்கு மாற்றத்தைக் கொடுக்கவே நான் எழுதத் தொடங்கினேன். அதற்கான மாற்றத்தையும் காண்கிறேன். ஓர் எழுத்தாளராக எனக்கு உங்களோடு இணைந்து பயணிக்க இடமும் உருவாகியுள்ளது. நாம் சேர்ந்து நடப்போம். புதிய சமூகத்தை உருவாக்குவோம்.

– அ. ரேவதி

அ. ரேவதி நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர். எழுத்தாளராகவும் திரைப்பட நடிகையாகவும் அரங்கக் கலைஞராகவும் பாலியல் சிறுபான்மையினர் உரிமைகளுக்காகப் பணியாற்றும் ஆர்வலராகவும் செயல்பட்டு வருகிறார். உணர்வும் உருவமும், வெள்ளை மொழி போன்ற நூல்களை எழுதியுள்ளார். கேரள அரசின் சிறந்த சமூக ஆர்வலர் விருது, பொற்கிழி விருது, 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் சிறந்த திருநங்கை விருது போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- 'மூன்றாம் பாலினருக்கு அளிக்கப்படவேண்டிய கல்வியும் வேலைவாய்ப்புகளும்' என்னும் தலைப்பில் இணையக் கட்டுரை எழுதி வெளியிடுங்கள்.
- மூன்றாம் பாலினருக்குச் சமூகத்தில் சம வாய்ப்புகள் உள்ளதா? விவாதிக்க குறிப்பு எழுதுங்கள்.

## எழுத்தோவியங்கள்



### எப்படிச் சிரிப்பைத் தொலைக்காதிருந்தாள்

ஏழரை மணிக்கு இயல்பாய் எழுந்து
எட்டரைக் குள்ளே குளித்து முடித்து
டைனிங் டேபிளில் காத்திருக் கின்ற
டிபனை ஒன்பது மணிக்கு முடித்து
உடல் நோகாமல் ஒன்ப தரைக்குள்
கல்லூரி சென்ற காலம் உண்டு

ஸ்பூனைக் கழுவித் தா எனச் சொன்ன
அம்மாவுக்கு அடுக்கடுக் காகப்
படிக்கும் பாடம் படிக்கா பாடம்
அத்தனை லிஸ்ட்டும் அடுக்குவதற்குள்
அம்மா ஸ்பூனைக் கழுவி முடிப்பாள்
சும்மா நானும் படித்துக் களைப்பேன்

வீட்டைப் பெருக்கச் சொன்னால் போதும்
இடுப்பு வலியும் இதய வலியும்
சேர்ந்தே என்னுள் பரவிப் பெருகும்
கர்ச்சீப் மடிக்கச் சொன்னால் கூடப்
புதுமைப் பெண் இதைச் செய்வாளா? என
எதிர்த்துச் சொன்ன காலமும் உண்டு

எனக்கும் ஒருநாள் திருமணம் நடந்து
கணவன் குழந்தை குட்டி எனவே
குடும்பம் பெருகி லௌகீகம் ஆனது.

ஐந்து மணிக்கே எழுந்து குளித்து
மடியாய்க் காப்பி மாமியாருக்குப்

பணிவாய்க் கொடுத்தும் 'தூ... இது காப்பியா?'
ஏழரை மணிக்குள் கல்லூரி. நாத்தனார்
கனவுக் கண்ணுடன் 'டிபன்தா' என்பாள்

என்வாண் டுகளோ பல்தேய்க் காமல்
சிறுநீர் உடம்புடன் நகர்வலம் நடத்தும்
எட்டரை மணிக்கு என்னவர் சாப்பிட
'நல்லாவே யில்ல! நாக்கு மரத்தாச்சு'
நறுக்கென்று தினமும் நரக வேதனை

ஒன்பது மணிக்குள் ஒரு செம்பு நீரில்
குளித்து முடித்து புடவையைச் சுற்றிப்
பசிக்கும் வயிற்றில் தண்ணீர் நிறைத்து
பிதுங்கும் பஸ்ஸில் பாய்ந்துதான் ஏறி
நசுங்கி கசங்கி கூழாய்க் கரைந்தால்
ஐந்தரை வரைக்கும் ஆபீஸ் நரகம்

மறுபடி பஸ்ஸில் மாஜிக் பயணம்
மறுபடி வீட்டில் காபி சமையல்
வீடு பெருக்குதல் துணியை மடித்தல்
பசங்களின் பாடம்... பலப்பல வேடம்...
இடைவெளி யில்லா சங்கிலிச் சுமையில்
புதைமண லாகப் புதைந்து வருகிறேன்

சுவாசிக்க மறந்து பலயுகம் ஆனது
வாசிக்க மறந்து பலயுகம் போனது
நேசிக்க மறந்து பலயுகம் ஆனது
யோசிக்க மறந்தும் பலயுகம் போனது

அர்ச்சனை கேட்டால் எதிர்த்தது பழங்கதை
இன்றைக்கு அதற்கும் நேரமில்லாமல்
எண்ணெய் போடாத எந்திர மானேன்
எதிர்த்துப் பேசத் தெம்பில்லாமல்
சோர்வால் சுருண்டு புழுவாய்ப் போனேன்

யோசிக் காமலே வியந்தது ஒன்று
இத்தனை ஓட்டம் அம்மா ஓடியும்
சிரிப்பை எப்படித் தொலைக்கா திருந்தாள்?
அத்தனை வயதிலும் அடுப்படி ஆபீஸ்
ஓட்டத்தில் எப்படி மலைக்காதிருந்தாள்?

– ஆண்டாள் பிரியதர்ஷினி

ஆண்டாள் பிரியதர்ஷினி திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்த கவிஞரும் எழுத்தாளருமாவார். இவர் பொதிகைத் தொலைக்காட்சி ஒளியலை வரிசையின் தலைமைச் செயலராகவும் சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் நிகழ்ச்சி நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். முத்தங்கள் தீர்ந்துவிட்டன, சூரியனை விடிய வைப்போம், தோகையெல்லாம் துப்பாக்கிகள் போன்ற கவிதைத் தொகுப்புகளையும் கட்டுரைகளையும் பல்வேறு நாவல்களையும் திறனாய்வு நூல்களையும் படைத்துள்ளார். கவிச் செம்மல், எழுத்துலகச் சிற்பி, வைரமுத்து விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- வீட்டு வேலைகள் பெண்களுக்கு என்றே ஒதுக்கப்படுகிறதா? காரணம் என்ன? குறிப்பு எழுதுங்கள்.
- கவிதையில் ஆசிரியர் கூறும் பெண்ணின் அவலநிலை குறித்து விவாதக் குறிப்பு எழுதுங்கள்.

## கல்மரம்

ஆர்.ஆர்.எம் வாங்கிக் கொடுத்த சின்ன மேசையில் கணக்குப் புத்தகங்களை அடுக்கி வைத்து விட்டு ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டாள் ராகினி. மீண்டும் அந்தக் கணக்குப் புத்தகங்களை எடுத்துப் பார்த்தாள். முந்தைய தினத்தில் அவள் எழுதியிருந்தவற்றைப் பார்த்துவிட்டு அவன் சொன்ன வார்த்தைகள் இப்போதும் அவள் காதில் கேட்டுக் கொண்டிருந்தன.

"ரொம்ப நல்லா எழுதியிருக்கியே குட் நீட்டா இருக்கு. நான் நெனச்சதவிட கெட்டிக்காரியா இருக்கியே".

சாரப்பலகைகளை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு போய், இரண்டாவது ஷெட்டில் அடுக்கிக் கொண்டிருந்த கன்னியம்மாள் வியர்வையைத் துடைத்துக்கொண்டாள். அவளுக்கு மூச்சு வாங்கியது. அங்கே அவள் வேலைக்குச் சேர்ந்து இரண்டு வாரங்கள் ஓடிவிட்டன. சித்தாள் வேலை. முன்போல இப்போது ஓடியாடி வேலை செய்ய முடியவில்லை. முழங்காலும் முழங்கையும் மூட்டுக்கழன்று விடுவதுபோல நொந்தன. வாரத்துக்கு ஒரு தடவை உயிரை எடுக்கிற ஒற்றைத் தலைவலிவேறு தவறாமல் வந்து கொண்டிருந்தது.

ஆதிலட்சுமியிடம் அவள் வேலைக்குப் போவதாகச் சொன்ன அந்தத் தினத்திலும் அவளுக்குத் தலை வலித்துக் கொண்டுதான் இருந்தது. மண்டையோட்டுக்குள் பாறாங்கல்லை வைத்ததுபோல பாரம். உளிகொண்டு பிளப்பது போல வலி. வலியின் கொடுமை தாங்காமல் கண்கலங்கி அதனால் மேலும் வலி அதிகமாகி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள் கன்னியம்மாள். வலிக்கிறது என்பதற்காகப் படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளக்கூடிய நிலையிலா அவள் இருந்தாள்? புருசன் அவளைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கும்போது வேறு என்னதான் செய்வது? தன் பிரசவத்துக்கும் பிறக்கப்போகிற பிள்ளைக்கும் ஆகக்கூடிய செலவுகளுக்கும் ராகினியின் கையையா எதிர்பார்ப்பது? 'ஒவ்வொருத்தரும் தன் கால்லேயே நிக்கணும்' என்று சுசீலா அடிக்கடிச் சொல்லும் வார்த்தைகள் தந்த தைரியமே அவளைத் துணிய வைத்தது.

கன்னியம்மாளுடன் முப்பத்தியைந்துபேர் வேலை பார்த்தார்கள். அதில் பாதிபேர் பெண்கள். அவர்களில் ஐந்து பேர் கல்யாணமானவர்கள். இரண்டு பெண்கள் பிள்ளைகளுடனே அங்கே வந்துவிடுவார்கள். லாரிதான் அங்கே எல்லோரையும் அள்ளிக்கொண்டு வந்து கொட்டும். எட்டு மணிக்குத் தொடங்குகிற வேலை முடிய சாயங்காலமாகி விடும். வாரச் சம்பளம்.

விடியற்காலையில் லாரியில் வந்து இறங்கிய கம்பிக் கட்டுகளை முதல் ஷெட்டில் அடுக்கி வைத்துவிட்டுத் தனது ஷெட்டுக்கு வந்து காசியின் ஸ்டூலில் உட்கார்ந்து எதையோ யோசித்துக் கொண்டிருந்த ராகினியை எரிச்சலோடு பார்த்துவிட்டுத் தொண்டையைச் செருமினான். "ஒரு மனுஷன் வந்து நிக்கறதைக் கூட கண்டுக்காம என்ன யோசனை. நான் வந்து நின்னது கூடவா தெரியலை?"

ராகினி சாதாரணமாக அவனைப் பார்த்தாள். "என்ன வேணும் சொல்லுங்க".

"ம். டீ வேணும்?"

"மொதல்ல கம்பி வாங்கியாந்த ரசீதக் குடுங்க. கணக்கிலே எழுதிடலாம்".

"நான் இப்ப என்ன கேட்டேன்? அதை மொதல்ல கவனி. என்னமோ நான் சொன்னது காதுலயே வுழாத மாதிரி கணக்குக் கிணக்குன்னுட்டுக்கிறே."

"என்னது? வாயில் வர்ரதயெல்லாம் பேசறீங்க. மொதல்ல ரசீத இப்படிக் குடுங்க. டீ குடிக்காட்டி ஒண்ணும் கொறஞ்சி போயிடாது. ஓணருவர்ர நேரம். கணக்கு எழுதியாகணும். முதல்ல ரசீதக் குடுங்க".

நறநறவென்று பற்களைக் கடித்தபடி மடியில் இருந்த ரசீதை எடுத்து ராகினியின் முன்னால் இருந்த மேசையில் போட்டான் காசி.

"சீ! சீ! எதுக்கு இப்படி இந்த ரசீதக் கசக்கி வச்சிருக்கீங்க. இப்படிப் போய் பண்ணுவாங்களா யாராவது. சரி. சரி. கொஞ்ச நேரம் உக்காருங்க. இத எழுதிட்டு வந்து டீ போட்டுத்தர்ரேன்" என்றாள்.

காசிக்கு எரிச்சல் தாங்க முடியவில்லை. காதில் செருகியிருந்த பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். "டீயும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம். நான் போறேன். நீயே போட்டு நீயே குடிச்சுக்க" என்று வெறுப்போடு சொல்லிவிட்டுச் சுவரைப் பார்த்தபடி நடந்தான்.

"இந்தாப்பா வாட்ச்மேன். ஒரு வாய் தண்ணி குடுக்கறியா?" என்று தளர்ந்த குரலில் பொன்னம்மா அவனைக் கேட்டாள். காசி திரும்பி பொன்னம்மாவைப் பார்த்தான். சுருங்கிய தோல் எலும்பை மூடியிருந்தது. இடுங்கிய கண்கள். பார்க்கவே பாவமாயிருந்தது.

"கொஞ்சம் இரு. ஆயா" என்று சொல்லி விட்டுக் கிணற்றடிப் பக்கமாகப் போனான் காசி. வாளியில் தண்ணீரை நிறைத்துக் கொண்டு சின்ன டின்னை எடுத்துக்கொண்டு அவளை நெருங்கினான். டின்னில் தண்ணீரை மொண்டு பொன்னம்மாவுக்குக் கொடுத்தான். பின்னர் தானும் குடித்தான். தண்ணீர் உடலுக்குத் தெம்பூட்டியது. கொத்தனார் குப்பு அவனை வேடிக்கையாய்ப் பார்த்தார். "என்ன தம்பி! டீ குடிச்சிட்டு வர்றன்னு போன, போன சுருக்கிலே வந்து டின்டின்னா தண்ணி குடிக்கறே. வீட்ல டீ சாப்பிடலியா" என்றார் சாதாரணமாக. அவர் சொன்ன வார்த்தைகள் அவனுக்குச் சுருக்கென்று உறைத்தன. "இல்லியே டீ குடிச்சுட்டுத்தான் வர்ரேன்" என்றான்.

"அது சரி" என்றார் குப்பு. புன்னகை மாறாமல் மறு கணமே அவர் குரல் மாறியது. கடுமை கூடியது. தலையில் கூடையைச் சுமந்துகொண்டு மெல்ல நடந்து வந்து கொண்டிருந்த ஈஸ்வரியைப் பார்த்து, "ஏம்மா சுறுசுறுப்பா வேலயப் பாரு. என்னமோ நடபழகிகிட்டிருக்கற" என்றார்.

ஈஸ்வரிக்குப் பிரசவமாகி ஒரு மாதம்தான் ஆகியிருந்தது. ஷெட்டின் அருகே இருந்த குட்டையான வேப்பமரத்தில் ஏணை கட்டி குழந்தையைப் படுக்க வைத்திருந்தாள். ஈஸ்வரியின் சின்னத் தங்கை துளசி குழந்தையின் அருகே இருந்தாள். குழந்தை அழும்போது மட்டும் ஈஸ்வரி போய் பால் கொடுத்துவிட்டு வருவாள்.

திடீரென்று மரகதம் வீலென்று கத்தினாள்.

"என்னது? என்ன அங்கச் சத்தம்" அதட்டினார் குப்பு.

மரகதம், செங்கற்களைத் தூக்கிக் கொண்டு நின்ற இடத்துக்குப் பங்கஜமும் உண்ணாமலையும் பதட்டத்தோடு ஓடி வந்தார்கள். "என்னம்மா என்ன ஆச்சு"

மரகதம் 'ஓ' வென்று கதறினாள்.

"தேள் கடிச்சிருச்சி"

"எங்கே தேளு?"

"அடிச்சுப் போட்டுட்டேன். செத்துடுச்சி"

"எங்க"

"அதோ" உடைந்து கிடந்த செங்கல்லைக் காட்டினாள் மரகதம். வலி தாளாமல் துடித்தாள்.

செங்கல்லைப் புரட்டிய பங்கஜம், "அய்யய்யோ. எம்மாம் பெருசு. கருந்தேளு" என்றாள்.

ஓட்டமும் நடையுமாக அங்கு வந்தான் காசி. "வூட்ல எதுனா மருந்து வச்சிங்கிறியா" என்று காசியைக் கேட்டாள் பங்கஜம்.

"இல்லியே"

மரகதம் தோளிலிருந்து நழுவிய அவளுடைய மாராப்புச் சேலையைச் சரி செய்து போட்ட கன்னியம்மா "அண்ணே உன்னோட சைக்கிள்லே மரகதத்த ஏத்திக்கிட்டு டாக்டர் கிட்டே போவலாம். பாவமாக்கீது" என்றாள்.

"ஆமா ராசா" என்றாள் முனியம்மாள்.

"டாக்டர் வூடு பக்கத்துச் சந்துலதான் கீது" என்றான் கிருஷ்ணன்.

கொத்தனார் சத்தம் போட்டார். கடுமையான வார்த்தைகளால் திட்டியபடி அங்கு வந்து சேர்ந்தார். "என்ன ஆயிடுச்சி, இப்படி எல்லாரும் கூட்டமா கூடிக்கினீங்க".

"கருந்தேளு போட்ருச்சிங்க. பாவம் புள்ள. போனமாசந்தான் சடங்காச்சி" கவலையோடு சொன்னாள் சரோஜா.

"யாருகிட்டயும் சுண்ணாம்பு இல்லியா? அதைப் பூசுங்க. அப்படியே அந்தக் கருந்தேளை ஒரு சின்னப் பாட்டில்ல போட்டு வையிங்க. கிருஷ்ணாயில் ஊத்தி வச்சா அப்பறமா தேள்கடிக்கு உதவும்". இவை எல்லாவற்றையும் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்த ராகினி, தொலைவில் கேட்ட ஹார்ன், சத்தத்தில் திடுக்கிட்டாள்.

"ஓணர் வர்ராரு" சத்தமாக அவள் குரல் கொடுத்ததும், "ம் போதும் போங்க போங்க எல்லாம் போய் அவங்கவங்க வேலயப் பாருங்க" என்றவாறு கேட் பக்கமாகப் பார்த்தார் கொத்தனார்.

காசி ஓடிப் போய் கேட்டைத் திறந்தான். ஓணர் காரை விட்டு இறங்கினான். கொத்து வேலைக்காரர்கள் எல்லோரும் மாயமாக மறைந்தார்கள். அப்படி மறையாவிட்டால் வேலை கெட்டுவிட்டதென்று ஆர்.ஆர்.எம் எப்படி

பயங்கரமாகக் கத்துவான் என்று அவர்களுக்குத் தெரியும். தேள் கடிக்கு அனுதாபம் கொள்கிற மனிதத்தன்மையை ஆர்.ஆர்.எம் புரிந்துகொள்ளமாட்டான் என்பதை அவர்கள் தங்கள் அனுபவத்தில் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தார்கள்.

'என்னய்யா நடக்குது இங்கே? ஒருத்தனும் வேலை பார்க்காம எல்லோரும் கூட்டமா நின்னு கதை பேசிக்கிட்டிருக்கறீங்க'.

"தேள் கொட்டிரிச்சிங்கய்யா. மரகதத்த"

"இப்ப என்னா அதுக்கு. கல்லுல மண்ல கை வச்சி வேல செய்யறதுன்னு வந்துட்டா பூச்சி பொட்டு தீண்டாமலா இருக்கும்?"

"கருத்தேளுங்க." என்றாள் பங்கஜம்

அவளை முறைத்துப் பார்த்தபடி, "போம்மா, போ போயி வேலையைப் பாரு" என்று உரத்தகுரலில் சொன்னான் ஆர்.ஆர்.எம்.

"இப்பத்தான் ஆளாச்சுங்க அந்தப் பொண்ணு" என்றாள் சரோஜா.

"ஓஹோ. அப்பிடியா எங்க அந்தப் பொண்ணு"

"அதோங்க" என்று செங்கல் ஓரமாக மயங்கிச் சரிந்து கிடந்த மரகதத்தைக் காட்டினாள் பங்கஜம்.

"இப்போ எப்படியிருக்குதும்மா ஒனக்கு" என்றபடி செங்கல் இருந்த இடத்துக்குச் சென்றார் ஓணர்.

மரகதத்தின் மாராப்புச் சேலையைச் சரி செய்து அவளை நிமிர்த்தினாள் கன்னியம்மா. கன்னியம்மாவை எரிச்சலோடு பார்த்தான் ஆர்.ஆர்.எம். "நீ யாரும்மா, நீ இந்தப் பொண்ணுக்கு அக்காவா. இந்தப் பதறு பதற்றியே"என்றான். பல்லைக்கடித்துக் கொண்டு.

"இல்லிங்க நான் காசியோட அக்கா" என்றாள் கன்னியம்மா. ஆர்.ஆர்.எம்மின் கேள்வியில் இருந்த நக்கல் விளங்காதவளாக.

காசிக்குக் குறுகுறுத்தது. "இப்போ, என்ன பண்றது இந்தப் பொண்ணுக்கு?"

"யாருன்னா டாக்டர் கிட்டே இட்டும் போனா நல்லதுங்க" என்றாள் பங்கஜம்.

"பக்கத்துச் சந்துலதான் டாக்டர் இருக்காரு"

"யார் கூட அனுப்பறது"

"நான் வேணா இட்டும் போறங்க" என்றான் காசி.

– திலகவதி

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திலகவதி தமிழகக் காவல்துறையின் முதல் தமிழ்ப்பெண் தலைமை இயக்குநராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கல்மரம், கைக்குள் வானம் உள்ளிட்ட பல நாவல்களையும் குறும் புதினங்களையும் கட்டுரைகளையும் சிறுகதைகளையும் படைத்துள்ளார். கல்மரம் நாவலிலிருந்து ஒரு பகுதி இங்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. இவருடைய கல்மரம் நாவலுக்கு 2005 ஆம் ஆண்டின் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. தமிழக அரசின் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதையும் இவர் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- கல்மரம் நாவல் பகுதியைச் சிறு நாடகமாக மாற்றி எழுதுங்கள்.
- ஆர்.ஆர்.எம்.மின் இரக்கமற்ற மனநிலை எவ்வாறு இக்கதையில் வெளிப்படுகிறது என்பதைக் குறித்து விளக்கி குறிப்பு தயாரியுங்கள்.

## பே.டி.எம்–இல் ரூபாய் 50 பெறப்பட்டது

இந்தக் குரலை நாம் அனைவரும் கேட்காமல் இருந்திருக்க மாட்டோம். அதற்கு முக்கிய காரணம் டிஜிட்டல் இந்தியாவின் வளர்ச்சி. இன்று யாருடைய கையிலும் பர்சுகள் இருப்பதில்லை. பத்து ரூபாய் டீ முதல் 5 ஸ்டார் ஓட்டல் கட்டணம் வரை அனைத்தும் டிஜிட்டல் பரிவர்த்தனையாக மாறிவிட்டது. இதில் பெரும்பாலானோர் அதிகளவில் பயன்படுத்துவது பே.டி.எம். முறைகள்தான். நாம் ஒவ்வொரு முறை கட்டணம் செலுத்தும் போதும் 'ரூபாய் பெறப்பட்டது' என்ற ஒரு குரல் ஒலிக்கும். அந்தக் குரல் பதிவு செய்யப்பட்டதுதான் என்றாலும், அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர்கள் உமா மற்றும் மகேஸ்வரி என்ற இரட்டை சகோதரிகள். பே.டி.எம். எப்படி நம்முடைய வாழ்வில் ஒவ்வொரு நிகழ்விலும் கலந்திருக்கிறதோ அதே போல் இவர்களின் குரலும் நம்முடைய அன்றாட வாழ்வில் இணைந்திருக்கிறது. இவர்களின் குரல் நம்முடன் இணைந்த பயணம் குறித்துப் பேசத் துவங்கினார் இரட்டையரில் ஒருவரான உமா.

"நான் பே.டி.எம்.மின் பேரண்ட் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தேன். அவர்களின் பல திட்டங்களில் நான் வேலை பார்த்தபோதுதான் எனக்கு இந்த வாய்ஸ் ஓவர் கொடுக்க வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் என்னுடைய அந்தக் குரல் மக்கள் மத்தியில் இவ்வளவு இணையும் என்று நான் அப்போது நினைத்துப் பார்க்கவில்லை" என்றவரை தொடர்ந்தார் அவரின் தங்கையான மகேஸ்வரி.

"முதலில் உமாவிற்குத்தான் வாய்ஸ் ஓவர் கொடுக்க வாய்ப்பு வந்தது. அப்போது நாங்க இருவரும் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தோம். எங்களின் நண்பர் ஒருவர் மூலமாகத்தான் இந்த வாய்ப்பு உமாவிற்குக் கிடைத்தது. அந்தச் சமயத்தில் எனக்கும் அதே துறையில் வங்கி, செல்போன் போன்ற நிறுவனங்களுக்கு வாய்ஸ் ஆர்டிஸ்டுக்கான வாய்ப்பு வந்தது. நாங்க இரட்டையர்கள் என்றாலும் வேறு வேறு கல்லூரியில்தான் படித்தோம். ஆனால் பாருங்க எங்க இருவருக்கும் ஒரே நேரத்தில் ஒரே மாதிரியான வேலை வாய்ப்புத்தேடி வந்தது. அனைத்து செல்போன் நெட்வொர்க், மால்களில் அறிவிப்பு, நகைக் கடைகளின் விளம்பரங்களுக்கும் நாங்க குரல் கொடுத்திருக்கிறோம். எங்க இருவரின் குரல் 5000 க்கும் மேற்பட்ட பிராஜக்டுகளை முடித்திருக்கிறது. ஒரு வாய்ப்புக் கிடைத்து அதை நாம் நன்றாகச் செய்தால், அந்த உழைப்புக்கான பலன் நம்மைத் தொடரும்னு சொல்வாங்க. எங்க வாழ்க்கையிலும் அப்படித்தான் நடந்தது. எங்களின் குரல் அனைவருக்கும் பிடித்துப்போக, ஒருவர் மூலமாக அடுத்தடுத்து வாய்ப்புகள் தொடர்ந்து வந்தன. ஆரம்பத்தில் இதற்கான ஒரு தனிப்பட்ட நிறுவனத்தில்தான் நாங்க வேலை பார்த்து

வந்தோம். அங்கு அனைத்து ரெக்கார்டிங் வசதிகளும் இருக்கும். லாக் டவுனுக்குப் பிறகு அதையே நாங்க எங்க வீட்டில் அமைத்தோம். இப்போது நாங்க இதனைத் தனிப்பட்ட முறையில் செய்து வருகிறோம். குரலை ரெக்கார்டிங் செய்து அதனை அமைக்க தனிப்பட்ட சாஃப்ட்வேர் உள்ளது. அதன் பயன்பாட்டையும் கற்றுக் கொண்டதால், வீட்டில் இருந்தபடியே தேவையான குரலை நாங்க ரெக்கார்ட் செய்து வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அனுப்பி வருகிறோம்" என்றவர் தமிழ் மற்றும் தெலுங்கிலும் குரல் கொடுக்கிறார்களாம்.

"எங்க இருவரில் உமாவின் குரல்தான் இனிமையா இருக்கும். அவளுடையது மெல்லிய குரல் என்னுடையது பேஸ் வாய்ஸ். அதனால் கன்டென்டுக்கு ஏற்ப இருவரும் குரல் கொடுப்போம். சில சமயம் நாம் எதிர்பார்த்த குரல் வராது. அந்தச் சமயத்தில் பிராக்டீஸ் செய்து அதன் பிறகு ரெக்கார்டிங் செய்வோம். என்னுடைய குரல் பேஸ் வாய்ஸ் என்பதால், என்னுடைய குரல் சரியா இல்லைன்னு நான் யோசிப்பேன். அந்தச் சமயத்தில் அக்காதான் என்னை உற்சாகம் செய்வார். மேலும் என்னுடைய குரல் வித்தியாசமாக இருப்பதால் அதற்கான வாய்ப்பும் என்னைத் தேடி வந்தது. நாங்க வாய்ஸ் ஓவர் கொடுத்து வந்ததால் டப்பிங் செய்வதற்கான வாய்ப்பு வந்தது. டப்பிங் யூனியன் கார்டு எடுக்காதக் காரணத்தால் எங்களால் அப்போது பேச முடியவில்லை. இப்ப அக்கா கார்டு எடுத்துள்ளார். வாய்ப்பு வரும்போது செய்து தருகிறோம். ஓ.டி.டி.யில் வெளியாகும் வெப் சீரிஸ் மற்றும் ஹார படங்களுக்கும் டப்பிங் கொடுக்கிறோம்.

ஆரம்ப காலத்தில் நாங்க இந்தத் துறையில் வளர்ந்து வந்தபோது, ஒரு பார்வையற்ற பெண்மணி எங்களைப் பார்க்கவேண்டும் என்று எங்க ஸ்டுடியோவிற்கு வந்தார். அவரால் எங்களைப் பார்க்க முடியாது, ஆனால் எங்களின் குரல்தான் அவருக்கு எங்களை அடையாளம் காட்டியது. எங்க குரலால் ஈர்க்கப்பட்டு நேரில் வந்து சந்தித்த தருணம் இன்றும் மறக்க முடியாது. இது போல் பலரின் வாழ்க்கையில் நாங்க இணைந்திருக்கிறோம் என்று நினைக்கும்போது மனசுக்கு நிறைவாகவும் சந்தோஷமாகவும் உள்ளது" என்றனர் கோரஸாக இரட்டைச் சகோதரிகள்.

– தோழி

தோழி என்ற இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- இரட்டைச் சகோதரிகளின் அனுபவத்தைக் குறித்துக் குறிப்பு தயாரியுங்கள்.
- புதுவிதமான வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற வழிமுறைகள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.
- 'வாய்ஸ் ஓவர்' குறித்து உங்கள் கருத்துகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

## சாதனைகள்



### ஸ்மிருதி எனும்.... கிரிகெட் குயின்!

தோனிக்காகவும் கோலிக்காகவும் கிரிக்கெட் பார்ப்பவர்களின் கவனத்தைப் பெண்கள் கிரிக்கெட் பக்கம் திருப்பிய சாதனைக்குச் சொந்தக்காரர் இந்திய கிரிக்கெட் வீராங்கனை ஸ்மிருதி மந்தனா. அதிகம் கவனிக்கப்படாமல் இருந்த இந்திய பெண்கள் கிரிக்கெட்டானது, இவரது அதிரடி ஆட்டத்தால் இப்போது கமர்ஷியல் பாதைக்குள் நுழைந்து களைகட்டத் தொடங்கியிருக்கிறது.

இளம் வயதிலேயே இரட்டைச் சதம், அனைத்து வடிவ கிரிக்கெட்டிலும் சதம் அடித்த முதல் இந்தியப் பெண், ஐ.சி.சி.யின் சிறந்த வீராங்கனை விருதுகள்... இப்படிப் பல மைல்கற்களைத் தொட்டு, இந்திய பெண்கள் கிரிக்கெட்டின் புதிய சகாப்தத்தை எழுதி இருக்கும் 29 வயது ஸ்மிருதி மந்தனாவைப் பெண்கள் கிரிக்கெட்டின் ஏஞ்சலாகக் கொண்டாடித் தீர்க்கின்றனர் ரசிகர்கள்.

ஸ்மிருதி மந்தனா மும்பையில் பிறந்தவர் என்றாலும் மகாராஷ்டிரா மாநிலத்தின் சங்லி மாவட்டத்தில் உள்ள மாதவ்நகர் எனும் சிறிய ஊரில்தான் இவரது இளமைப் பருவம் கழிந்தது. "என் அப்பாவும் அண்ணனும் கிரிக்கெட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். குறிப்பாக, அப்பா அவரது சிறுவயதில் மாவட்ட அளவில் கிரிக்கெட் விளையாடியவர். அதேபோல அண்ணனும் சிறு வயதில் தீவிரமாகக் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தான். அண்ணன் கிரவுண்டில் கிரிக்கெட் பயிற்சி செய்வதைப் பார்த்துப் பார்த்து எனக்கும் கிரிக்கெட் ஆர்வம் தொற்றிக் கொண்டது. என் அண்ணன் இடதுகை பேட்ஸ்மேன் என்பதால் அவனைப் போலவே இடதுகையில் பேட் செய்யப் பழகினேன்" என்கிறார் மந்தனா.

சிறிய ஊரில் வளர்ந்ததால், மந்தனாவும் அவரின் குடும்பத்தினரும் ஆரம்பத்தில் மகளிர் கிரிக்கெட்டுக்கு ஏற்ற பயிற்சி மற்றும் வாய்ப்புகளைக் கண்டறிய மிகவும் சிரமப்பட்டிருக்கின்றனர். இதன் காரணமாக இவர் சிறுவர்களுடன் விளையாட வேண்டியிருந்தது. தொடர் முயற்சி மற்றும் நெடிய போராட்டத்துக்குப் பிறகு முறைப்படி பயிற்சி எடுக்கத் தொடங்கியிருக்கிறார் மந்தனா. அதன் பின்னர் தனது அசாத்தியத் திறமை மூலம் ஒன்பதாவது வயதிலேயே இவர் மகாராஷ்டிராவின் 15 வயதுக்குட்பட்டோர் அணியில் இடம்பெற்றார். அடுத்த இரண்டே ஆண்டுகளில் 19 வயதுக்குட்பட்டோருக்கான அணியிலும் விளையாடத் தொடங்கினார். 'இப்படியே இவள் தொடர்ந்து விளையாடினால், எதிர்காலத்தில் இவளை யாரும் திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள்' என்று பலரும் கூற அதைக் கொஞ்சம்கூட சட்டை செய்யாமல் தன் மகளை அடுத்தடுத்த போட்டிகளுக்கு ஊக்கப்படுத்தியிருக்கிறார்கள் இவரின் பெற்றோர்.

2013 ஆம் ஆண்டில், 19 வயதுக்குட்பட்டோருக்கான ஒருநாள் போட்டியில் இரட்டைச் சதம் (224 ரன்கள்) அடித்த முதல் இந்தியப் பெண் என்ற பெருமையைப் பெற்று, வரலாற்றில் தனது பெயரைப் பதித்தது இந்த ரன் மெஷின். இந்தச் சாதனையே, தேசிய மற்றும் சர்வதேச அரங்கில் இவர் அதிரடி ஆட்டக்காரராக உருவெடுக்கவும் அடித்தளமிட்டது.

இப்படித் தொடர்ந்து சிறப்பாக விளையாடி அனைவரையும் கவர்ந்ததன் விளைவாக, ஸ்மிருதி தனது 16 ஆவது வயதிலேயே இந்திய அணியிலும் இடம் பிடித்தார். பின்னர், T20 உட்பட அனைத்து வடிவ கிரிக்கெட்டிலும் தனது இருப்பை அழுத்தமாகப் பதிக்கத் தொடங்கினார். குறிப்பாக, இவரது நேர்த்தியான இடது கை பேட்டிங், பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. விரைவாக ரன் குவிக்கும் இவரது திறனானது, ஒருநாள் போட்டிகளில் 1,000 ரன்களை அதிவேகமாக எட்டிய இந்தியப் பெண் என்ற பெருமையையும் இவருக்குப் பெற்றுத் தந்தது.

ஐ.பி.எல். கிரிக்கெட்டைப் போலவே 2023–ம் ஆண்டு WPL எனப்படும் பெண்களுக்கான 'வுமன் பிரீமியர் லீக் போட்டிகள்' தொடங்கின. அதற்கான ஏலத்தில் அதிக விலை கொடுத்து எடுக்கப்பட்ட வீராங்கனை (ரூபாய் 3.4 கோடி) என்ற பெருமையுடன் ஸ்மிருதி மந்தனா, 'ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு' (RCB) பெண்கள் அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டார். ஆர்.சி.பி. ஆண்கள் அணியானது 'ஈ சாலா கப் நம்தே' என்ற கோஷத்துடன் பலப்பல ஆண்டுகளாகக் கப் அடிக்கப் போராடியபோது, WPL தொடங்கப்பட்ட இரண்டாவது ஆண்டிலேயே அதாவது 2024 'வுமன் பிரீமியர் லீக்' போட்டிகளில் இறுதி ஆட்டத்தில் வென்று கப்பைக் கையில் ஏந்தி 'ஈ சாலா கப் நம்தே' என்று சொல்லி, ஸ்மிருதி மந்தனா ஸ்டேடியத்தில் கெத்துக் காட்டியபோது பெங்களூரு நகரமே மகிழ்ச்சியில் குலுங்கியது.

இப்படி, ஒருபக்கம் கிரிக்கெட்டில் பவர்ஃபுல் வுமனாக மந்தனா வலம் வந்தாலும் மறுபக்கம் அது சார்ந்து நிறைய சவால்களையும் சோதனைகளையும் அவ்வப்போது எதிர்கொள்ளத்தான் செய்கிறார்.

ஆண்களுக்கான கிரிக்கெட்டுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் மகளிர் கிரிக்கெட்டின் தொடக்க ஆண்டுகளில், குறைந்த அங்கீகாரம் மற்றும் ஆதரவு மட்டுமே பெண் வீரர்களுக்குக் கிடைத்தன. நிதிப் பற்றாக்குறையானது இவர்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுக்கான வாய்ப்புகளைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியது. இந்தச் சவால்களைத் தாண்டித்தான் ஸ்மிருதி மந்தனா இந்தியக் கிரிக்கெட்டில் அழுந்தக் காலூன்றியுள்ளார்.

நடந்து முடிந்திருக்கும் மகளிர் உலகக் கோப்பைப் போட்டியிலும் ஸ்மிருதி மந்தனா தனது சிறப்பான பேட்டிங்கால் பட்டையைக் கிளப்பியிருந்தார். நல்ல ஃபார்மில் இருந்தபோதும் ஸ்டார் அந்தஸ்துடன் ஜொலிக்கும்போதும் தன்னுடைய தவறுகளை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் பக்குவமும் அவரிடம் வெளிப்படுகிறது. இங்கிலாந்துக்கு எதிரான முக்கியமான ஓர் ஆட்டத்தில் இந்திய அணி தோற்றதற்குத் தானே காரணம் என்று இவர் வெளிப்படையாகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அதிக அழுத்தத்துடன் இலக்கைத் துரத்தியபோது தனது 'ஷாட் தேர்வு' (Shot selection) இன்னும் புத்திசாலித்தனமாக இருந்திருக்க வேண்டும் என்று இவர் சோகமாகப் பேசியிருந்தார்.

அதேபோல, ஜனவரி 2017 இல், இவர் மகளிர் பிக் பாஷ் லீக் (WBBL) போட்டிகளில் விளையாடிக் கொண்டிருந்தபோது, இவரது முழங்காலில் முன் தசைநார் கிழிந்து பெரிய அளவில் காயம் உண்டானது. இதற்காக இவருக்கு அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. அதன் பின்னர் இவரால் சுமார் ஆறு மாதங்கள் கிரிக்கெட் விளையாட முடியவில்லை. அதே ஆண்டில், மகளிர் உலகக் கோப்பை வந்தபோது அணியில் மீண்டும் இடம்பிடிக்கத் தேவையான உடல் தகுதியைப் பெற இவர் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. ஆனால், மந்தனா பின்வாங்கவில்லை. தொடர் பயிற்சி மற்றும் உழைப்பின் மூலம் உடல்தகுதியை மேம்படுத்தி அணியில் இடம்பிடித்தார். 2017 – ஐ.சி.சி. மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பையில் இவர் முக்கிய ஆட்டக்காரராகப் பங்களித்தார். இந்திய அணி இறுதிப் போட்டிக்குச் செல்லவும் காரணமாக இருந்தார்.

உங்களுக்கு ஒன்று தெரியுமா? கிங் கோலியின் ஜெர்சி நம்பர் 18. ஸ்மிருதி மந்தனாவின் ஜெர்சி நம்பரும் அதே 18 தான். இருவருமே இந்திய அணியின் முதுகெலும்பாக இருக்கக்கூடியவர்கள். இந்திய அணி எப்போதெல்லாம் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறதோ... அப்போதெல்லாம் பொறுப்பான ஆட்டக்காரர்களாக நின்று அணியை வெற்றியை நோக்கி நகர்த்திச் செல் வார்கள். ஆண்கள் கிரிக்கெட்டின் கடந்த ஒரு தசாப்தத்தைக் கோலியின் தசாப்தம் எனக் கூறுவதைப் போல பெண்கள் கிரிக்கெட்டின் கடந்த ஒரு

தசாப்தத்தை ஸ்மிருதி மந்தனாவின் தசாப்தம் என்றால் மிகையாகாது. கிங் கோலியைப் போலவே குயின் ஸ்மிருதி மந்தனாவும் இன்னும் பல இமாலய வெற்றிகளைக் குவிக்கட்டும்!

அவள் விகடன் என்ற இதழிலிருந்து எடுக்கப்பட்டது

## செயல்பாடுகள்

- ஸ்மிருதி மந்தனாவின் கிரிக்கெட் ஆர்வம் குறித்து குறிப்பு தயாரியுங்கள்.

## முயற்சி செய்யுங்கள், வெற்றி அடையுங்கள்

நாம் எதைக் குறித்து அடிக்கடி நினைக்கின்றோமோ அது கண்டிப்பாக நடக்கும்.

இது உண்மையா?

உண்மைதான்!

சாக்ரடீஸிடம் ஒருவன், "ஐயா! எனக்கு அறிவு வேண்டும்" எனக் கேட்க

'சரி என்னுடன் வா' என்று அவனை அழைத்துக்கொண்டு ஒரு

குளத்திற்குச் சென்றார். அவன் கையைப் பிடித்தவாறு குளத்திற்குள் சென்று, பிறகு தலையைப் பிடித்துக் குளத்திற்குள் மூழ்கடித்தார்.

சில நிமிடங்கள் கழித்து தன் பிடியைவிடவே குளத்திற்குள் மூழ்கி இருந்தவன் எழுந்தான்.

"நான் உன் தலையைக் குளத்திற்குள் மூழ்கடித்ததும் என்ன நினைத்தாய்?"

"காற்று... காற்று" என்றான்.

"வேறு எதைப் பற்றியாவது நினைத்தாயா?"

"இல்லை காற்று மட்டுமே தேவை என நினைத்தேன்" என்றான்.

"பார்த்தாயா! நீ காற்று... காற்று என்று நினைத்தவுடனேயே உனக்குக் காற்று கிடைத்துவிட்டது. இதைப்போலவே உனக்கு எது வேண்டும் என்றாலும் அதைப் பற்றியே நம்பிக்கையுடன் நினைத்தால் அது உடனே கிடைத்துவிடும்" என்றார் சாக்ரடீஸ்.

கேள்வி கேட்டவனும் அறிவைப் பெறப் புறப்பட்டான்.

நாமும் இந்த மனிதனைப் போல தேவையான எதையும் இந்த உலகத்தில் பெற முடியும். நம்பிக்கையுடன் கற்பனை செய்யப் பழகிக்கொண்டால் அது ஆழ்மனதில் பதிந்து நாம் விரும்பியதை அடைய வழிகாட்டிவிடும்.

நமது இலக்கை நோக்கி நாம் கடந்து போகும் பாதை பூக்களாலும் பஞ்சு மெத்தைகளாலும் இருக்க வேண்டும் என எண்ணாதீர்கள். இலக்கை

நோக்கிச் செல்லும்போது கஷ்டங்களும் வலிகளும் தோல்விகளும் அந்தப் பாதையைக் கடினமாக்கும். அந்தப் பாதையில் செல்லும்போது தம் பாதங்களுக்கு வலிமைகிட்டும். பாதங்கள் வலிமை பெற்றால் பரந்து விரிந்த இலக்கை நோக்கிய பயணத்திற்கு ஆயத்தமாவோம். அத்தகைய இலக்கை நோக்கிய பயணமே நம்மை உறுதியான வெற்றிக்கு இட்டுச்செல்லும். அப்படி இலக்கை நோக்கிய பயணத்தில் கடினமான பாதையைக் கடந்து உறுதியான வெற்றியைப் பெற்றவர்தான் ஸ்வப்னா.

மேற்குவங்க மாநிலம் ஜல்பாய்குரி மாவட்டத்தில் உள்ள ஒரு குக்கிராமத்தில் ரிக்சா ஓட்டும் ஏழைத் தொழிலாளியின் மகளாகப் பிறந்தவர்தான் ஸ்வப்னா. ஸ்வப்னாவின் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடியது. தந்தைக்குப் பக்கவாதம். மருத்துவமனையில் நீண்டகாலம் சிகிச்சையில் இருந்தார். ஸ்வப்னாவின் தாயாருக்கு டீ எஸ்டேட் ஒன்றில் தேயிலை பறிக்கும் வேலை. இதில் கிடைத்த சொற்ப வருமானத்தில் குடும்பம் ஓடிக் கொண்டிருந்தது.

ஸ்வப்னாவின் தாயாருக்குக் காலில் ஆறு விரல்கள். ஆறுவிரல்கள் கொண்ட தாய்க்குப் பிறந்ததால் என்னவோ ஸ்வப்னாவுக்கு இரு கால்களிலும் ஆறு விரல்கள். காலிலோ அல்லது கையிலோ ஆறு விரல்கள் இருந்ததால் கிராமத்தில் அதிர்ஷ்டசாலி என்பார்கள். கிராம மக்கள் பார்வையில் ஸ்வப்னா 'லக்கி கேர்ள்.'

இளவயதிலிருந்தே ஸ்வப்னாவிற்குப் படிப்பைவிட விளையாட்டில் ஆர்வம் மிகுதியாக இருந்தது. உள்ளூரில் நடைபெற்ற அத்தனைப் போட்டிகளிலும் வெற்றி பெற்றார். இருந்தபோதும் தடகள விளையாட்டில் சர்வதேச அளவில் சாதனை நிகழ்த்த வேண்டும். அதன் மூலம் தனது குடும்பத்தின் வறுமையைத் துரத்த வேண்டும் என்ற இலக்கைத் தீர்மானித்தார்.

ஆனால் ஸ்வப்னாவிற்குக் காலில் உள்ள ஆறுவிரல்கள் தாங்க முடியாத வலியைத்தான் தந்து கொண்டிருந்தன. காலில் ஆறு விரல்கள் என்பதால் எந்தக் காலணியும் அவருக்குப் பொருந்தாது. ஒரு விளையாட்டு வீரருக்குக் காலணி மிகவும் முக்கியமானது. அப்படியிருக்கையில் காலில் ஆறு விரல்கள் இருப்பதால் தன் அனைத்து விரல்களையும் சேர்த்து, பேன்டேஜ் கட்டி ஒட்டிய பிறகே, ஸ்வப்னாவால் காலணி அணிய முடியும்.

இதனால் ஓடும்போதும் சரி, தாண்டும்போதும் சரி அவருக்குக் கால்களில் தாங்க முடியாத வலி ஏற்படும். இருந்தபோதும் குடும்பத்தின் வறுமையின் வலியைவிட இந்த வலி ஸ்வப்னாவிற்குப் பெரிதாகத் தெரியவில்லை.

எத்தனையோ காலணிகள் தயாரிக்கும் நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளன. அதில் ஒன்று கூட ஏழை ஸ்வப்னாவுக்குப் பிரத்தியேக காலணி தயாரித்து வழங்க முன் வரவில்லை.

இந்த நிலையில் தான் ஸ்வப்னா ஜகார்த்தாவில் நடைபெற்ற ஆசிய போட்டியில் பங்கேற்க முடிவு செய்தார். இதற்காகக் கடுமையான பயிற்சியை வலியுடன் எடுத்துக் கொண்டார். ஒருமுறை ஸ்வப்னாவுக்கு முதுகில் அடிப்பட்டது. தண்டுவடத்தில் ஒரு டிஸ்க் நகர்ந்துவிட்டது. இதனால் கடும் முதுகுவலி

ஏற்பட்டது. முதுகுவலிக்கும் சிகிச்சை எடுத்துக்கொண்டே பயிற்சியிலும் அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில் தடகளத்திலிருந்து ஒதுங்கிவிடலாம் என்கிற எண்ணம் கூட அவருக்குத் தோன்றியது. இருந்தபோதும் தடகளப் போட்டியில் சர்வதேச அளவில் தங்கம் வென்று சாதனை புரிந்தால்தான் குடும்பத்தின் வறுமையைப் போக்க முடியும் என்ற நம்பிக்கையில் வலியுடன் பயிற்சியைத் தொடர்ந்தார்.

ஸ்வப்னாவின் நிலையை அறிந்த இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் ராகுல் டிராவிட் நிதியுதவி செய்தார். திறமைமிகுந்த வீராங்கனை என்பதை அறிந்த இன்னும் சிலரும் உதவி புரிந்தனர். இதைக் கொண்டு முதுகுவலிக்கு மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ள முடிவு செய்தார்.

மருத்துவரோ முதுகுவலி தீர அறுவைசிகிச்சைதான் வழி என்று பரிந்துரைத்தார். அறுவைசிகிச்சை செய்தால் ஆசியப் போட்டிக்காக மேற்கொள்ளும் பயிற்சி பாதிக்கும் என்பதால் ஸ்வப்னா அதைத் தள்ளி வைத்துவிட்டார். எனினும் மருத்துவர் கொடுத்த சில அறிவுரைகள் ஸ்வப்னாவுக்குப் பயனுள்ளதாக இருந்தன.

இந்த நிலையில் போட்டி தொடங்கிய சில தினங்களில் திடீரென்று ஏற்பட்ட பல்வலி ஸ்வப்னாவை அவதிக்குள்ளாக்கியது. ஏற்கனவே முதுகுவலி, வலது மூட்டுவலி, கால்விரல்களில் வலி என வலியால் அவதிப்படாத நாளே இல்லை. இத்துடன் பல்வலியும் சேர்ந்து கொண்டது. விதிமுறைகள் காரணமாக மருந்துகள் எடுத்துக் கொள்வதிலும் கவனமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்க வேண்டியதாகிவிடும். இதனால் வலி நிவாரண மாத்திரைகளும் எடுத்துக்கொள்ளவில்லை. இதனால் பல்வலியைக் குறைக்க கன்னத்தில் பிளாஸ்டர் ஒட்டிக்கொண்டே போட்டியில் கலந்துகொண்டார்.

"தயவு செய்து வலியை மறந்துவிட்டுப் போட்டியில் மட்டும் கவனம் செலுத்து" என ஸ்வப்னாவின் மனம் சொல்லிக் கொண்டேயிருந்தது.

ஜகார்த்தா ஹெப்டதலான் என்னும் தடகள போட்டியில் ஸ்வப்னாவுக்குப் பலம் பொருந்திய சீன வீராங்கனை வாங்ஜிங்லிங் கடும் போட்டியாக இருந்தார். ஆனால் போராட்டமே வாழ்க்கையாகிப் போன ஸ்வப்னாவின் போராட்டத்திற்கு முன் வாங்ஜிங்லின் முயற்சி தோற்றுப் போனது. ஸ்வப்னா 6026 புள்ளிகள் எடுத்து தங்கம் வெல்ல, வாங்ஜிங்லிங் வெள்ளிப்பதக்கத்துடன் திருப்திப்பட வேண்டியதாகிவிட்டது.

தங்கம் வென்ற ஸ்வப்னா மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனார். "வாழ்க்கை முழுவதும் வலியை மட்டுமே அனுபவித்து வந்துள்ளேன். வலியை மறந்தேன். தங்கம் வென்றேன்" என்று பெருமையுடன் கூறுகிறார்.

வறுமை மற்றும் உடல் வலிகளைத் தாண்டி சாதித்த ஸ்வப்னாவுக்குக் கிடைத்த பரிசுதான் ஆசியத் தங்கம். ஆசிய போட்டிகளில் ஹெப்டதலானில்

இதற்கு முன் எந்த இந்தியர்களும் தங்கம் வென்றதில்லை என்ற நிலையைத் தகர்த்துச் சாதனை புரிந்துள்ளார் குடிசையில் பிறந்த தங்கப்பெண்.

"ஹெப்டதலான்" என்பது 100, 200, 800 மீட்டர் ஓட்டம், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், ஈட்டி எறிதல் உள்ளிட்ட விளையாட்டுகள் அடங்கிய கடினமான பிரிவு. இத்தகைய கடினமான போட்டியில் பலவேறு உடல் உபாதைகளைத் தாண்டி இத்தகைய வரலாற்றுச் சாதனையை எட்டியிருக்கிறார் ஸ்வப்னா.

இதைப் பாராட்டும் விதமாக விளையாட்டுத் துறையின் உயரிய விருதான அர்ஜுனா விருதை இந்த ஆண்டு ஸ்வப்னாவிற்கு வழங்குவதாகச் சமீபத்தில் இந்திய அரசு அறிவித்துள்ளது.

வறுமையில் பிறந்து வலிகளுடன் வாழ்ந்து கடும் அவஸ்தை மற்றும் வேதனைகளைக் கடந்து தன்னுடைய இலக்கில் உறுதியான வெற்றி பெற்றவர் தான் ஸ்வப்னா. வலிகளைக் கடந்துதான் வெற்றிக்கான வழியை அடையமுடியும். அந்த வெற்றியும் மனஉறுதி உள்ளவர்களுக்கு மட்டுமே சாத்தியம் என்பதே ஸ்வப்னாவின் வாழ்க்கை நமக்கு உணர்த்தும் பாடமாகும்.

– முகமது அப்துல்காதர்

முகமது அப்துல்காதர் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர். செண்டு பொறியியல் கல்லூரியில் முதல்வர் மற்றும் டீனாகப் பணிபுரிந்து வருகிறார். நாளிதழ் மற்றும் வார இதழ்களில் மாணவர்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு, தன்னம்பிக்கை குறித்து கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வருகிறார். வாழ்வு மலரட்டும், வெற்றியின் முகவரி, உலகை வெல்வோம் போன்ற பல தன்னம்பிக்கை நூல்களைப் படைத்துள்ளார். வீட்டுக்கொரு நூலகம் அமைப்போம் என்ற போட்டியை நடத்தி நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களின் வீடுகளில் நூலகத்தை ஏற்படுத்தியுள்ளார். சிறந்த கல்வியாளர், சிறந்த முதல்வர் உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- 'தடகள வீரர் ஸ்வப்னா' என்ற தலைப்பில் வாழ்க்கை வரலாறு எழுதுங்கள்.
- விளையாட்டுப் போட்டியில் வெற்றியடைந்த பெண் வீரர்களின் குறிப்புகளையும் படங்களையும் தொகுத்துத் தொகுப்பு வெளியிடுங்கள்.

## மகளிர் மசோதா

பெண்ணே!
நாடு –நதி
மண் – மலை
ஏன்?
உலகே உன் பெயரால்தான்
குறிக்கப்பெறுகிறது.

மென்தென்றல் வன்புயல்
மல்லிகை மலைத்தேன்
பால்நிலவு பனிப்பொழிவு
மொழியின்
மொத்த வார்த்தைகளில்
எத்தனை விழுக்காடு
உனக்கு உவமையாய்...
உருவகமாய்...

பெண்ணே!
பெருமைப்படு
உலகமா உன்னைப்
பெற்றெடுத்தது?
இல்லையில்லை
நீதானே உலகத்தைப்
பெற்றெடுத்தாய்?

அடுப்படிதாண்டிய
ஐம்பதாவது ஆண்டு விழாவைக்
கொண்டாடி முடித்துவிட்டார்கள்
நம் இந்தியச் சகோதரிகள்
ஆனாலும் இவர்களுக்கு
இன்னமும் இருக்கிறார்கள்
அரசியல் எதிரிகள்

புரிந்துகொள்ளுங்கள் எதிரிகளே!
இன்று பெண்கள் புகாத
துறையேயில்லை!
ஆண்களுக்குச் சரிநிகராய்
ஆற்றுகிறார்கள் பணியைக்
குறையேயில்லை!
பாராளுமன்றத்தை
நல்வழியில் நடத்துகிறாள்
பால்வழிப்பாதையில்
கோள்களைக் கடத்துகிறாள்

உலக விளையாட்டரங்கில்
முதல் பரிசு பெறுகிறாள்
உயிர் பயம் துளியுமற்று
இராணுவத்திற்கு வருகிறாள்.....
ஓவியம் தீட்டுகிறாள்....
தொடர்வண்டி ஓட்டுகிறாள்...
பேனா பிடிக்கிறாள்...
பிணத்தை எரிக்கிறாள்...

வெற்றிபெற்ற ஆண்களின் பின்னால்
பெண்கள் இருந்த காலம்
மலையேறிற்று.
தற்போது –
பெண்களே வெற்றிமலையேறும்
காலம் தொடங்கியாயிற்று

பெண்ணடிமைவாதிகளைப்பற்றித்
தற்போதைக்குக் கேள்வியில்லையாம்
மசோதாவே தோற்றாலும்
எம் மகளிர்க்குத் தோல்வியில்லையாம்

– புதுவை பிரபா

புதுவை பிரபா என்ற புனைப்பெயர் கொண்ட பிரபாகரன் புதுச்சேரியில் பிறந்தவர். கவிஞரும் எழுத்தாளருமான இவர் வேளாண் அலுவலராகப் பணிபுரிகிறார். 'விதைகள்', 'பின்னுக்கு முன் முரணாக' போன்ற கவிதைத் தொகுப்புகளையும், விடியலை விரும்பி, சின்னஞ்சிறு கதையே என்கின்ற சிறுகதைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். பாவேந்தர் பற்றாளர் விருது, நிலவுப் பாவலர் பட்டம் போன்ற பல பட்டங்களைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- மகளிர் மசோதா என்ற இக்கவிதையின் கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதி வகுப்பில் வாசியுங்கள்.
- 'பெண்களின் முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றம்' என்னும் தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை எழுதுங்கள். உலக மகளிர் தினத்தன்று நடைபெறும் கருத்தரங்கத்தில் வாசியுங்கள்.
- திருநங்கைகளும் திருநம்பிகளும் இன்று சமூகத்தில் ஒதுக்கப்படுகிறார்களா? ஆதரிக்கப்படுகிறார்களா? பட்டிமன்றம் நடத்துங்கள்.

# அலகு 5

## நற்பண்புகள்



மனிதர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்கும் ஒழுக்கங்களும் நெறிமுறைகளும் மதிப்புகளாக மாறுகின்றன. இம்மதிப்புகளே ஒருவரின் ஆளுமையை வெளிப்படுத்தும் காரணிகளாகவும் திகழ்கின்றன. ஒருவரிடமிருந்து மற்றவர்களை வேறுபடுத்திக் காட்டும் ஆளுமை பண்புகளான நேர்மை, தன்னம்பிக்கை, விடாமுயற்சி போன்ற குணங்களை வளர்க்க வேண்டும்.

# பாதைகள்



## அரிச்சந்திர புராணம்

மன்னன் அரிச்சந்திரன் அயோத்தியில் அரியணையில் அமர்ந்திருந்தான். அமைச்சர்கள், ஆன்றோர்கள் அனைவரும் கூடியிருந்தனர். அப்போது காவலன் ஒருவன் வந்து விசுவாமித்திர முனிவர் வந்திருக்கும் செய்தியைத் தெரிவித்தான். உடனே ஆசனத்திலிருந்து எழுந்து வாயிலுக்கே விரைந்து சென்று விசுவாமித்திரரை வணங்கி வரவேற்று உபசரித்து அழைத்து வந்து அமரச் செய்தான் அரிச்சந்திரன். மகாமுனிவர் பெருமானே! தாங்களும் என்னை ஒரு பொருட்டாக நினைத்து என் அவைக்கு வருகை தந்தது நான் செய்த புண்ணியமே!' என்று பயபக்தியுடன் அரிச்சந்திரன் கூறினான்.

உடனே விசுவாமித்திரர் மன்னா நீ வாழ்க! உனது சிறப்பான உயர்ந்த பண்புகளைப் பற்றிப் பலரும் பாராட்டிக் கூறியதைக் கேட்டு மகிழ்ந்தேன். ஒரு முக்கிய காரியமாகத்தான் உன்னைச் சந்திக்க வந்தேன் என்றார். தவசீலரே! தங்களைப் போன்றவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது எனது உயிரினும் மேலான கடமையாகக் கருதுகிறேன். சொல்லுங்கள் சுவாமி என்றான் அரிச்சந்திரன்.

மன்னா! மண்ணவரும் விண்ணவரும் நலம் பெறுவதற்காக மிகப்பெரிய யாகம் ஒன்றைச் செய்யப் போகிறேன். அரக்கர் கொடுமை அடியோடு ஒழிய

இந்த மாபெரும் யாகம் செய்ய முடிவு செய்துள்ளேன். இதற்கு அதிகமான பொருள் தேவை. இவை முழுவதையும் நீ ஒருவனே தருவாய் என்று மிகவும் நம்பி இங்கு வந்துள்ளேன் என்றார் விசுவாமித்திரர்.

தாங்கள் உலக மாந்தரின் நலத்திற்காகவும் தேவர்களுக்காகவும் செய்ய இருக்கும் யாகத்திற்கு நான் பொருள் வழங்கும் புண்ணியத்தை அருளிய தங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே எனக்குப் புரியவில்லை. தாங்கள் விரும்புவன யாவற்றையும் தரக் காத்திருக்கிறேன். என்ன வேண்டும் சுவாமி? என்று பணிந்து மன்னன் கேட்டான்.

விசுவாமித்திரர் அரிச்சந்திரா! உன் ஈகை பற்றி நான் நன்கு அறிவேன். யாகத்திற்கு இருபதினாயிரம் பொன் தேவைப்படுகிறது. அதனை வேண்டும்போது தந்தால்போதும் என்றார். உடனே அரிச்சந்திரன், விசுவாமித்திரர் கேட்கும்போது பொன்னைத் தருமாறு அமைச்சருக்கு ஆணையிட்டான்.

நல்லது. அரிச்சந்திரா! யாகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வந்து வாங்கிச் செல்கிறேன் என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

### சூழ்ச்சி ஆரம்பம்

அரிச்சந்திரனிடம் விடைபெற்றுக்கொண்டு விசுவாமித்திர முனிவர் தன் ஆசிரமத்திற்கு வந்தார். எந்தச் சூழ்நிலையிலாவது அரிச்சந்திரனைப் பொய்யனாக்க வேண்டும் என்று உறுதி கொண்ட முனிவர் ஆழ்ந்து சிந்தித்தார்.

வனவிலங்குகளை ஏவி அவனது விளைநிலங்களையும் மாடு, கன்றுகளையும் அழித்து நாட்டை வறுமைக்கு உள்ளாக்குகிறார். இதனால் அரிச்சந்திரன் இரு ஆண்டுகள் மக்களுக்கு வரிவிலக்கு அளிக்கிறான். பின்னர் அரிச்சந்திரன் காட்டில் வேட்டை ஆடும்போது விசுவாமித்திரன் ஏவிய காட்டுப் பன்றியைக் காயப்படுத்துகிறான். காயமடைந்த பன்றி விசுவாமித்திரரிடம் சென்று முறையிடவே அவர் கோபம் கொள்கிறார். தொடர்ந்து அவர் அரிச்சந்திரனைத் தேடி வருகிறார். தனக்குத் தருவதாகக் கூறிய பொன்னைத் தருமாறு கேட்கிறார். பொன்னுக்குப் பதிலாக வேறு எதைக் கேட்டாலும் தருவதாக வாக்களிக்கிறான் அரிச்சந்திரன். முனிவர் அவனது அரசைக் கேட்கிறார். அவனும் எவ்வித மறுப்பும் இன்றி தனது நாட்டைத் தாரைவார்த்துக் கொடுக்கிறான். அதன் பின் விசுவாமித்திரர் இனி உன் மனைவியையும் மகனையும் அழைத்துக்கொண்டு வெளியேறலாம் என்று அரிச்சந்திரனிடம் கூறினார்.

### மாறாத மனஉறுதி

விசுவாமித்திர முனிவரிடம் விடைபெற்றுக் கொண்ட அரிச்சந்திரன் நேரே அந்தப்புரம் சென்றான். நடந்தவை அனைத்தையும் மனைவி சந்திரமதியிடமும், மகன் லோகிதாசனிடமும் தெரிவித்தான். அவர்கள் இதனைக் கேட்டு எந்த வருத்தமோ, ஆச்சரியமோ அடையவில்லை.

மனைவியும் மகனும் அரண்மனையை விட்டு, கட்டிய துணியுடன் அரிச்சந்திரனுடன் வெளியேறினர். நேரே அரசவைக்கு வந்து விசுவாமித்திர முனிவரிடமும் மற்ற அவையோர் அனைவரையும் வணங்கி விடைபெற்றான். முனிவரின் சீடன் நட்சத்திரேயனுடன் அரண்மனையை விட்டு வெளியேறினான்.

நான்கு பேரும் காசி நகரை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். இதுவரை நடந்தே அறியாத லோகிதாசன் கரடு முரடான பாதையில் நான்கு கல் தூரம் நடப்பதற்குள் துவண்டு போனான். அவன் மிகவும் களைத்துப் போனதால் சந்திரமதி அவனைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு நடந்தாள்.

அரண்மனை அந்தப்புரத்தில் பளிங்குத் தரையில் நடந்த சந்திரமதி கல்லும் முள்ளும் நிறைந்த பாதையில் நடப்பது மிகவும் சிரமமாக இருந்தாலும், தன் கணவன் வாய்மைக்காக ஏற்படும் துன்பத்தைத் தாங்கிக்கொண்டு நடந்தாள். நாடு நகரம் இழந்ததற்காகச் சிறிதும் கவலையே இல்லாமல், அரிச்சந்திரன் துன்பத்தைத் துச்சமாக எண்ணி நடந்து கொண்டிருந்தான்.

தொடர்ந்து அரிச்சந்திரன் பல்வேறு கொடும் இன்னல்களுக்கும் சோதனைகளுக்கும் ஆளாகிறான். கட்டிய மனைவியையும் பெற்ற மகனையும் இழக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. ஆனால் அரிச்சந்திரனோ எந்தச் சூழ்நிலையிலும் கடமையைத் தவறினானில்லை; வாய்மையிலிருந்து விலகினானில்லை. இறுதியில் அவன்தன் நேர்மையிலும் வாய்மையிலும் உறுதியாக நிற்பதைக் கண்டு தேவர்கள் முதலானோர் அவனை வாழ்த்துகின்றனர்.

– வீரகவிராயர்

அரிச்சந்திர புராணம் என்னும் நூலை இயற்றியவர் நல்லூர் வீரகவிராயர். இவர் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நெல்லூரில் பிறந்து வாழ்ந்தவர். வீரன் என்பது இவரது இயற்பெயர். கவிராயர் என்ற பட்டம் கவி பாடி புகழ்பெற்றதால் இவருக்குக் கிடைக்கப்பெற்றது. வாய்மை தவறாத அரிச்சந்திரக் கதைகள் என்னும் நூலிலுள்ள கதைப் பகுதி இங்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- உண்மையை நிலை நாட்டுவதற்கு அரிச்சந்திரன் போராடியதையும் அவரது மன உறுதியையும் குறித்து குறிப்பு தயாரியுங்கள்.
- அரிச்சந்திரன் கதையின் சுருக்கம் எழுதி வகுப்பில் படியுங்கள்.
- 'உண்மையே வெல்லும்' என்னும் தலைப்பில் குறிப்பு தயாரியுங்கள்.

## உண்மை விளம்பு

அன்புள்ள பாண்டியனுக்கு,

நலம். உன் கடிதம் பெற்றேன். மகிழ்ச்சி. நீ நண்பர்களிடம் அன்பாகப் பழகுவதாகவும், அவர்கள் உன்னிடம் அன்பாகப் பழகுவதாகவும் எழுதியிருக்கிறாய். நல்ல நண்பர்களென்றும் குறித்திருந்தாய். அவ்வன்பு உண்மையானதாக இருக்கவேண்டும். போலியன்பாக இருத்தல் கூடாது. பொதுவாக எதிலுமே போலி கூடாது. உண்மையின் ஒளியே வேண்டும். உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலும் செயலிலும் ஒளியுண்டாகும்.

உண்மை, மனிதனை மேலும் மேலும் உயர்த்துகிறது; பொய்ம்மை, அவனைப் படுகுழியில் வீழ்த்தி விடுகிறது. இதனைப் பல வரலாறுகளும் கதைகளும் நன்கு எடுத்துக்காட்டுகின்றன. இலக்கியச் சான்றுகள் ஒரு புறமிருக்க, நம் நாட்டுத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளை நோக்கினால் இது நன்கு புலனாகும். நமக்கு விடுதலை தேடித் தந்த காந்தியடிகள் நம் நாட்டு மக்களாற் போற்றப்படுவதோடன்றி, உலகத்து மக்கள் அனைவராலும் பாராட்டப்படுகின்றார். நாடு, மொழி, சமயம், கட்சி என்ற வேற்றுமைகளையும் கடந்து பாராட்டப்படுகின்றார். அவர்தம் நெஞ்சங்களில் நிலைத்த இடத்தையும் பெற்று விளங்குகின்றார். காரணம் என்ன? அவர், உண்மையைக் கடைபிடித்து ஒழுகியதால் அந்நிலையினை எய்தினார்.

காந்தியடிகளின் சொல்லில் உண்மை சுடர்விட்டது; செயலில் உண்மை செறிந்து விளங்கியது; இவற்றினும் மேலாக உள்ளத்திலும் உண்மை ஒளிவிட்டுக் கொண்டிருந்தது. உள்ளத்தாற் பொய்யாது ஒழுகிய காரணத்தால் அவர், உலகத்தார் உள்ளத்திலெல்லாம் உறையும் தகுதி பெற்றார். 'உண்மையே கடவுள்' என்ற கோட்பாட்டிற் சிறிதேனும் பிறழாது வாழ்ந்து வந்தார். உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கினிலும் ஒளியுண்டாகும் அல்லவா ? ஒளியும் அதனால் வலிவும் பெற்ற வாக்கினால் உலகத்தையே தன்வயமாக்கும் பேராற்றலைப் பெற்று விளங்கினார். உண்மையைத் துணையாகக் கொண்டமையால், பேரரசை எதிர்த்துப்

பேசும் திண்மையையும் போராடி விடுதலை பெறத்தக்க ஆண்மையையும் உடையவராகித் திகழ முடிந்தது. உண்மை என்னும் கருவிக்குமுன், அஞ்சத்தக்க படைக்கலங்கள் தூள்தூளாகின. உண்மைக்கு அத்தகைய ஆற்றலுண்டு.

அஞ்சா நெஞ்சமும் ஆண்மையுந் தரத்தக்க உண்மையை வீரமும் வெற்றியும் தரவல்ல உண்மையை நீயுங் கொண்டிலங்க வேண்டும். உண்மைக்கு வாய்மை, மெய்ம்மை என வேறு பெயர்களும் உண்டு. இம்மூன்று சொற்களும் பொதுவாக ஒரே பொருளைத் தருவனவேனும், அவற்றிற்குச் சிறப்புப் பொருளும் உண்டு. உள்ளத்தாற் பொய்யா தொழுகுவது உண்மை; வாயாற் பொய்யாதொழுகுவது வாய்மை; மெய்யால் (செயலால்) பொய்யாதொழுகுவது மெய்ம்மை. மனம், சொல், செயல் மூன்றாலும் பொய்யாதொழுக வேண்டுமென்பது கருத்து. இச்சொற்கள் உணர்த்தும் தமிழ்ப் பண்பாட்டை நினையுந்தோறும் நெஞ்சம் மகிழ்கிறது. இம்மூவகையாலும் நீ தூயவனாக வாழவேண்டுமென்ற ஆர்வத்தால் இப்பொருளை விளக்கி எழுதினேன்.

வாய்மை, அல்லது உண்மை என்றால் என்ன? என்பதை முதலிற் புரிந்துகொள்ள வேண்டும். கண்டதைக் கண்டவாறே சொல்லுதல், நிகழ்ந்ததை நிகழ்ந்தபடியே சொல்லுதல் வாய்மை என்று கருதிக்கொண்டிருப்பாய். அஃது ஓரளவுக்கு உண்மையாயினும், நம் தமிழ் மறையாகிய வள்ளுவம் வாய்மைக்குத் தனியிலக்கணம் வகுத்துப் புது விளக்கந்தருகிறது. 'மற்ற உயிர்க்குச் சிறிதும் தீங்கு பயவாத சொற்களைச் சொல்லுதலே வாய்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படும்' என்பது வள்ளுவர் வகுத்த வழி. அது கண்டதற்கு மாறாக இருந்தாலும் நிகழ்ந்ததற்கு வேறாக இருந்தாலும், சிறிது கூடத் தீமை பயவாத சொல்லாக இருக்குமானால் அஃதொன்றே வாய்மை எனப்படும். கண்டதாக இருந்தும், நிகழ்ந்ததாக இருந்தும், ஒரு சிறு தீமையேனும் தருமானால் அது பொய்ம்மைதான் என்பது பெறப்படுகிறது.

கண்டதற்கும் நிகழ்ந்ததற்கும் மாறாக உரைப்பது பொய்ம்மையன்றோ? என வினவலாம். அது பொய்ம்மை அன்று; வாய்ம்மையின் பாற்பட்டதாகவே கொள்ளத்தக்கதாகும். ஆனால், அச்சொல் நன்மை பயப்பதாகப் புரைதீர்ந்த நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அது வாய்மையின்பாற்படும்; நன்மை பயவாதாயின் பொய்ம்மைதான். நமக்கு நன்மை பயப்பதற்காகப் பொய்ம்மை கூறின், அது வாய்மையின் பாலதன்று. பிறர்க்கு நன்மை பயப்பதாகவே இருக்க வேண்டும். ஒருவன் பெருங்கேட்டிலோ சாக்காட்டிலோ சிக்கிக்கொள்ளும் சூழ்நிலையில் இருக்கிறான் என்று வைத்துக்கொள். அதனினின்று நீக்கி, இன்புறும்

நிலையைத் தருமானால், அப்பொய்ம்மையும் வாய்மையிடத்ததுதான். இவனைக் காப்பதற்காக உரைப்பது, மற்றையோர்க்குத் தீங்கு பயப்பதாக இருந்துவிடக்கூடாது. அதனாற்றான் புரைதீர்ந்த நன்மை எனப்பட்டது. சுருங்கக் கூறின், நிகழ்ந்தது கூறுங்கால் தீங்கு பயக்குமாயின் பொய்ம்மை; தீங்கு பயவாவிடின் மெய்ம்மை. நிகழாதது கூறுங்கால் நன்மை பயக்குமாயின் மெய்ம்மை; நன்மை பயவாவிடின் பொய்ம்மை என்க.

பிறர் அறிந்திலர் என்று, நெஞ்சறிந்த ஒன்றை எப்பொழுதுமே பொய்த்தல் கூடாது. பொய்த்தால் அஃது, என்றும் உள்ளிருந்து சுட்டுக்கொண்டேயிருக்கும்; உறுத்தி உறுத்தித் துன்பத்தை உண்டாக்கிக் கொண்டேயிருக்கும். மனச்சான்றை மறைத்துவிட முடியாது. நெஞ்சையொளித்தொரு வஞ்சகம் இல்லையல்லவா? தானஞ் செய்வாரும் தவஞ் செய்வாரும் மிகச் சிறந்தவர் என்பர். அவரினும் தலையாய சிறப்புக்குரியவர் வாய்மையாளர். அவர் மொழியும் வாய்மை, மனத்தொடு பொருந்திவர வேண்டும். அப்பொழுதுதான் அதற்குச் சிறப்பு; பொருந்தாவிடின் அவ்வாய்மையால் எவ்வகைப் பயனும் இல்லையாகிவிடும்.

ஏனைய அறங்களைச் செய்யாவிடினுங் குற்றமில்லை; பொய்யாமை என்னும் அறத்தைச் செவ்வனே கடைப்பிடித் தொழுகினாலேபோதும். பொய்யாமையில் வழுவாது நின்றொழுகினால் ஏனைய அறங்கள் தாமே வந்தெய்தும். இப்பிறவியில் உயர்ந்த புகழெய்த விரும்பும் ஒருவன் பொய்யாமை என்னும் ஓரறத்தைத் துணையாகக்கொள்ள வேண்டும். புகழெய்த இதனினுஞ் சிறந்த துணை வேறொன்றில்லை.

உடலின் புறத்தே படிந்துள்ள மாசு நீங்கவும், உடல் தூய்மைபெறவும் நாடோறும் நீராடுகின்றோம். புறத்தைத் தூய்மை செய்ய நீர் காரணமாகிறது. அதுபோல, அகத்தைத் தூய்மை செய்ய, அகத்திற்படிந்துள்ள மாசுகள் நீங்க வாய்மையே காரணமாகிறது. வாய்மை, மனமாசுகளைத் துடைத்துவிடுவதால் மெய்யுணர்வு துலங்குகிறது. மெய்யுணர்வைப் புலப்படச் செய்வதாற்றான், அவ்வாய்மையைப் பொய்யா விளக்கென்று வள்ளுவர் கூறுகின்றார். ஏனைய விளக்குகளெல்லாம் புறத்திருளைப் போக்குவன. வாய்மை என்னும் விளக்கு, மனத்திருளை நீக்குவது.

மனத்திருளை நீக்கி, மெய்யுணர்வைப் புலப்படுத்தவல்ல பொய்யா விளக்காகிய வாய்மையைச் சிறப்பித்துக் கூறவந்த திருவள்ளுவர், "மெய்ந் நூல்களாக யாம்கண்ட நூல்களுள், வாய்மையைவிடச் சிறந்தனவாகக் கூறப்பட்ட பிற அறங்கள் இல்லை" எனத் துணிந்து, அறுதியிட்டுக் கூறுகின்றார். இத்தலை சிறந்த அறத்தைக் கைக்கொண்ட நம் சான்றோர் 'பழியெனில் உலகுடன் பெறினுங்' கொள்ளாதவராகி வாழ்ந்தனர். அவர் வழிவந்த நாமும், இவ்வையகம் முழுவதும் பெறுவதாயினும் பொய்ம்மொழி

கூறாது வாழ வேண்டும். உண்மை கூறுவதால் எத்தகைய துன்பம் வரினும் மனத்துணிவுடன் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்; அப்பொழுது நிலைத்த வெற்றியை நாம் அடைய முடியும். பொய்யன் என்றிருந்தால், உலகம் ஒருபொழுதும் நம்பாது. சமுதாயத்தில் நன் மதிப்புங்கிட்டாது. பழியும் இழிவும் பற்றிக்கொள்ளும். மீளாத் துயரில் வீழ்ந்து, பாழாம் நிலையை அடைய நேரிடும். ஆதலின், கனவினும் பொய்ம்மையைக் கருதாதே. உண்மை விரும்பு; அதையே விளம்பு.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு".

இங்ஙனம்.

அறிவுடை நம்பி

– கவிஞர் முடியரசன்

'உண்மை விளம்பு.' என்ற பகுதி முடியரசனின் கடித இலக்கியம் என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. கவிஞர் முடியரசனின் இயற்பெயர் துரைராஜ் ஆகும். தேனி மாவட்டத்தில் பெரிய குளத்தில் பிறந்தார். பாடுங்குயில், புதியதொரு விதி செய்வோம், ஊன்றுகோல், பூங்கொடி போன்ற கவிதை நூல்களை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாண்டியனுக்கு அறிவுடை நம்பி கூறும் வாய்மை பற்றிய கருத்துகளைக் கலந்துரையாடல் செய்து குறிப்பு எழுதுங்கள்.
- நேர்மையாக இருந்தால் வாழ்க்கையில் முன்னேற முடியும் என்னும் கருத்தை வலியுறுத்தும் வகையில் உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.

## நாலடியார்

அறிவது அறிந்தடங்கி, அஞ்சுவது அஞ்சி,
உறுவது உலகுவப்பச் செய்து – பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது. (பாடல்: 74)

தான்கெடினும் தக்கார்கேடு எண்ணற்க! தன்னுடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத்து உண்ணற்க!– வான்கவிந்த
வையகம் எல்லாம் பெறினும் உரையற்க,
பொய்யோடு இடைமிடைந்த சொல்! (பாடல் : 80)

– சமண முனிவர்கள்

அறிய வேண்டிய நன்மை தீமைகளனைத்தும் அறிந்து தன்னடக்கமுடையவராக, அஞ்ச வேண்டிய பழி பாவங்களுக்கு அச்சம் கொண்டு, தாம் செய்யும் காரியங்களை உலகம் உவக்குமாறு செய்து, நேர்மையான வழியில் சம்பாதிக்கும் பொருள் கொண்டு இன்பமாக வாழும் இயல்புடையவர்கள் எக்காலத்தும் துன்புற்று வாழ வேண்டியிருக்காது.

ஒருவன் தனக்குக் கேடு வந்தாலும் அந்தத் தீமையைத் தீர்க்கும் பொருட்டுச் சான்றோர்க்குத் தீங்கு நினைக்கக் கூடாது. பசியால் தன் உடம்பில் உள்ள தசைகள் வற்றிப் போனாலும், தமக்கு உண்ண உணவில்லாதவர் தரும் உணவை உண்ணக் கூடாது. வானம் சூழ்ந்த இந்த உலகம் முழுவதையும் பெற்றாலும் பொய் கலந்து பேசக் கூடாது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று நாலடியார் ஆகும். இதனைச் சமண முனிவர்கள் இயற்றியதாகக் கருதப்படுகிறது. நாலடியாருக்கு நாலடி நானூறு, வேளாண் வேதம் என்ற வேறு பெயர்களும் உண்டு. இது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு 40 அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இந்நூலில் மொத்தம் 400 பாடல்கள் உள்ளன.

### செயல்பாடுகள்

- நாலடியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- "அஞ்சுவது அஞ்சாமை பேதைமை, அஞ்சுவது
  அஞ்சல் அறிவார் தொழில்"
  – இக்குறளை நாலடியார் பாடலுடன் ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.

## சவால்கள்



### வெற்றி என்பது உங்களை நீங்கள் விரும்புவது

சமூகத்தில் மதிக்கத்தக்க பெண்மணி அவர். அவரது வீட்டார், அவரது படிப்பைப் பாதியிலேயே நிறுத்தி, நல்ல வரன் வந்ததும் இளவயதிலேயே திருமணம் செய்து வைத்துவிட்டார்கள். அவருக்கோ படிப்பில் பெரியளவு சாதிக்க வேண்டும் என்பது விருப்பமாக இருந்தது. இப்போது அவருக்கு ஐம்பது வயது. பேரன், பேத்தி எல்லாம் எடுத்துவிட்டார்தான். படிப்பில் சாதிக்க முடியாதது இன்றும் பெருங்குறையாக அவருக்கு உள்ளது. அதற்குக் காரணமான பெற்றோர் மீதும் சொந்தக்காரர்கள் மீதும் இப்போதுவரை பெருங்கோபம் கொண்டிருக்கிறார்.

இன்னொரு பெண்மணி, திருமணமாகி இளம்வயதிலேயே கணவர் இறந்து போக, தன்னந்தனியாகத் தன் பிள்ளைகளைப் பாடுபட்டு வளர்த்தார். பையன்கள் இருவரும் பெரிய பதவிகளில் இருக்கிறார்கள். பேரன், பேத்தியும் எடுத்துவிட்டார். வயது அறுபதிற்கும் மேல், அவருக்குக் கோபம் சமூகத்தின் மீதோ, பிள்ளைகள் மீதோ, வாழ்க்கை மீதோ, இல்லை தன் மீதோ எனப் புரியாமல் எப்போதும் எல்லாருடனும் சிடுசிடுத்துக் கொண்டிருப்பார்.

நண்பர் ஒருவர் 'நான் ஐ.ஏ.எஸ். படிக்க ஆசைப்பட்டேன். எனது அப்பாவோ என்னை ஒர்க்ஷாப்பில் சேர்த்துவிட்டார். இது எனக்குத் தீராத வருத்தமாக என் வாழ்வையே இப்போதுவரைச் சலிப்புறச் செய்கிறது' என்கிறார்.

இன்னொருவர், சமூகத்தின் பெரிய செல்வந்தரின் மனைவி. வீட்டில் வேண்டுமளவு எல்லா வசதிகளும் உண்டு. வயது எழுபதைத் தாண்டி விட்டது. அந்த நாள் முதற்கொண்டு இப்போதுவரை கணவரோடு எதற்கென்று புரியாமல் எப்போதும் பிணக்கு.

மிகப் பெரிய பதவியில் இருக்கும் ஒருவர். அவர் சாதாரணமாக 'இம்'மென்று சொன்னாலே, வெறும் தலையசைப்பிலேயேகூட எதுவும் நடக்கும்; ஆனால், 'அவரோ எல்லாரையும் அதட்டியும் மிரட்டியும் பயமுறுத்தியுமே வேலை வாங்குவார். அதனாலோ என்னவோ, எவரும் தன்னைப் பின்னாலிருந்து குத்தி விடுவார்களோ என்று எப்போதும் பயந்துகொண்டே இருப்பார்.

ஏன் இப்படி? எதனால் இதெல்லாம்? எல்லோருக்குமே ஏன் வாழ்வு சொல்லொணாத போராட்டமாக இருக்கிறது? நினைப்பது ஒன்றும் நடப்பது ஒன்றுமாக இருக்கிறது.

ஒவ்வொருவருக்குமே 'எனக்கு மட்டும் ஏன் இப்படி எல்லாம் நடக்கிறது? எனக்கு ஏன் இத்தனைக் கஷ்டம்?" என்கிற கேள்விகள் இருக்கும்.

நான் பெண்ணாகப் பிறந்ததால்தான் இப்படியான பிரச்சினைகள் வந்தன; எனக்கு உயரம் குறைவு என்பதால்தான் எனக்கு இப்படி எல்லாம் நடக்கிறது; எனக்கு அம்மா இல்லாத காரணத்தால்தான், என்னை எல்லாரும் இப்படி நடத்துகிறார்கள். என் அப்பா இருந்திருந்தால், என்னை இப்படிக் கஷ்டப்பட விட்டிருப்பாரா? என்னைப் படிக்க விட்டிருந்தால் இப்படிப் பிரச்சினைகள் இல்லை. பிடித்தவருக்கே மணம் முடித்திருந்தால் தொல்லைகள் இல்லை. கணவர் இறக்காதிருந்தால் சமூகம் என்னை ஒதுக்கி வைத்திருக்காது என்று அவரவர் சூழலுக்குத் தக்க, வாழ்நிலைக்கு ஏற்ப ஏதாவது ஒன்றைக் காரணமாக நினைத்துக்கொள்கிறோம்.

உண்மையில் கவலை, கஷ்டம், துன்பம் பிரச்சினைகள் இல்லாத மனிதர்கள் யார்?

நான் மட்டும் இன்னும் கொஞ்சம் சிவப்பாகப் பிறந்திருந்தால், எனக்குத் தெற்றுப்பல் இல்லாமலிருந்தால், வழுக்கை இல்லாமல் இருந்தால், இன்னும் கொஞ்சம் குண்டாக இருந்தால், கொஞ்சம் ஒல்லியாக இருந்தால், இந்தத் தொப்பை மட்டும் இல்லாமலிருந்தால், கழுத்து கொஞ்சம் நீண்டு இருந்தால், உயரம் கூடுதலாக இருந்திருந்தால், அம்மா மட்டும் உயிரோடு இருந்திருந்தால், என்னிடம் பணம் இருந்தால், இவை எல்லாம் இருந்திருந்தால், இவை எல்லாம் இல்லாமல் இருந்தால் நமக்கு எந்தப் பிரச்சினையுமே வந்திருக்காது என்று நினைப்போம்.

எனில், பணக்காரர்களுக்குப் பிரச்சினையே இல்லையா? அம்மா உள்ளவர்களுக்குக் கஷ்டங்கள் இல்லையா? அப்பா உள்ளவர்களுக்குக் கவலையே கிடையாதா? காதலித்து மணம் முடித்தவர்கள் சண்டையே இல்லாமல் வாழ்கிறார்களா?

அழகாகப் பிறந்திருப்பவர்களுக்குப் பிரச்சினையே இல்லையா? என்றால், உலக அழகி ஐஸ்வர்யாராய்க்கு எந்தப் பிரச்சினைகளும் இருக்கக் கூடாதுதானே?

உண்மையில் ஒரு ரூபாய் சம்பளக்காரர்களுக்கு ஒரு ரூபாய்க்கான பிரச்சினை என்றால், லட்ச ரூபாய் பணமுள்ளவர்களுக்கு அதற்கான பிரச்சினை; கோடீஸ்வரர்களுக்கோ அதற்கேற்ற பிரச்சினைகள். எனவே, பிரச்சினைகள், கஷ்டங்கள், வருத்தங்கள், கவலைகள், தோல்விகள், பயங்கள், குழப்பங்கள் அனைவருக்கும் உள்ளதுதான்.

நமக்கு மட்டும்தாம் பிரச்சினைகள், கவலைகள் உள்ளதாக நாமாக நினைத்துக்கொள்கிறோம். அதுவும் இப்படியான காரணங்களால்தான் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் தாமாகக் கற்பித்துக்கொள்கிறோம்.

எனவே, துன்பங்கள் எனப்படுபவை வெளியே உள்ள காரணங்களால் இல்லை; நம்முள், நாம் சிந்திக்கும் முறையில் உள்ளது. இதை உணர்ந்தால், நாம் சிந்திக்கும் முறைகளில் மாற்றம் ஏற்பட ஏற்பட நமது துன்பங்களும் குறையும்.

உதாரணமாக, நாம் எல்லாருமே எப்போதும் வெற்றியடையவே நினைப்போம், தோல்வியை எதிர்கொள்ளத் தயங்குவோம். தோல்வியை எதிர்கொள்ளத் தயங்குவதால், வெற்றியடைந்தே தீர வேண்டும் என்பதில் தீவிரமாக இருப்போம். எனவே, அப்படி நிகழாவிட்டால் உடைந்து போய்விடுவோம். தோல்வி அடைந்ததால் வரும் பிரச்சினைகளைவிட, அதை இயல்பாக எதிர்கொள்ள விரும்பாததால் ஏற்படும் பிரச்சினைகளே அதிகம்.

சிறுவயதிலிருந்தே வெற்றி, தோல்வி பற்றிய கண்ணோட்டங்கள் சரியாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். வெற்றி என்பது மஞ்சள் நிறச்சட்டை என்றால், தோல்வி என்பது நீல நிறச்சட்டை அவ்வளவுதான். வெற்றியடைந்தவரும் தோல்வி அடைந்தவரும் உழைத்த உழைப்பில் அவரவருக்கான பங்கு இருக்கிறது.

உண்மையில், 100 பேர் விளையாடும் போட்டியில் ஒருவர் வெற்றி பெற, மற்ற 99 பேரும் மறைமுகக் காரணமாக இருக்கிறார்கள். வெற்றி பெற்ற ஒருவர் தனது வெற்றியை மற்ற 99 பேருடனும் பகிரும் வகையில் நமது சிந்தனை வளர வேண்டும்; வளர்க்கப்பட வேண்டும்.

'வெற்றி என்பது உங்களை நீங்கள் விரும்புவது, நீங்கள் செய்வதை விரும்புவது மற்றும் நீங்கள் அதை எப்படிச் செய்கிறீர்கள் என்பதை விரும்புவது' என்கிறார் மாயா ஏஞ்சலோ.

உங்களிடம் உங்களுக்குப் பிடித்த விஷயங்களை எல்லாம் வரிசைப்படுத்துங்கள். அவற்றை மேலும் அதிகப்படுத்துங்கள். பிடித்தவற்றை அதிகமாகச் செய்யச் செய்ய, பிடிக்காதவை, வெறுப்பானவை எல்லாம் தாமாக விட்டுப் போகத் தொடங்கும்.

– பிருந்தா சேது

பிருந்தாசேது (பிறப்பு – நவம்பர் 2, 1976) என்பவர் இந்தியக் கவிஞரும் எழுத்தாளரும் திரைக்கதை ஆசிரியரும் ஆவார். இவரின் கவிதைத் தொகுப்புகள் சே. பிருந்தா என்ற பெயரில் வெளிவந்துள்ளன. கடல் என்ற குறுநாவலையும் வாழ்க்கை வாழ்வதற்கே (தன்னேசிப்பும் தன்னறிதலும்) கட்டுரைத் தொகுதியையும் மேலும் பல நூல்களையும் படைத்துள்ளார். இவர் தேவமகள் இலக்கிய விருது, எஸ்.ஆர்.வி.யின் படைப்பூக்க விருது மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை விருது ஆகியவற்றையும் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- 'வெற்றி' குறித்து உங்கள் கருத்துகளை வரிசைப்படுத்துங்கள்.
- 'வெற்றி' குறித்து ஆசிரியர் கூறுவனவற்றை வகுப்பில் விவாதித்து விளக்கக் கட்டுரை தயாரியுங்கள்.

## இனியோனின் வஞ்சினம்!

'நகுதக் கனரே, நாடுமீக் கூறுநர்;
இளையவன் இவன் என உளையக் கூறிப்,
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும், தேரும், மாவும்,
படைஅமை மறவரும், உடையம் யாம்' என்று

உறுதுப்பு அஞ்சாது, உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப் படேஎன் ஆயின் பொருந்திய
என்நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது

கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்,
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக,
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்

புலவர் பாடாது வரைக, என் நிலவரை:
புரப்போர் புன்கண் கூர.
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே.

– பாண்டியன் நெடுஞ்செழியன்

இவன் ஆளும் நாட்டை உயர்வாக புகழும் புலவர்கள் நகைப்பிற்கு இடமானவர்கள் எனவும் இவன் மிகவும் இளையவன் எனவும் என் மனம் நோகுமாறு கூறி, ஒலிக்கும் மணிகள் இருபுறமும் ஒன்றோடு ஒன்று மாறி இசைக்கும் பரந்த அடி இணையும் பெரிய கால்களையும் உடையதுமான உயர்ந்த நல்ல யானைகளையும் தேர், குதிரை போன்றவற்றையும் ஆயுதங்களுடன் கூடிய வீரர்களையும் கொண்டவர்கள் நாங்கள் என்று எனது மிக்க வலிமைக்கு அஞ்சாது பகைத்து சினம் செருக்கி இழிவான வார்த்தைகளைக் கூறிய சின்னம் பொருந்திய அரசர்களை அரிய போரிலே சிதைவுறும்படி தாக்கி அவர்களது முரசத்தோடு அவர்களையும் ஒன்றாகக் கைப்பற்றுவேன்.

அவ்வாறு செய்யாவிடின் பொருந்திய என் குடை நிழலில் வாழும் குடிமக்கள் சென்று தங்குதற்குரிய நிழல் காணாது எம் அரசன் கொடியவன் என்று கருதி கண்ணீர் விட்டுக் குடிமக்கள் பழிசாற்றும் கொடுங்கோலை உடையவன் ஆவேன். சிறந்த புகழையும் உயர்ந்த அறிவையும் உடைய மாங்குடி மருதனைத் தலைவனாகக் கொண்ட உலகத்தோடு நிலைபெற்ற பூக்களால் அழகாய் புகழப்படுகின்ற சிறப்பினை உடைய புலவர் பலரும் என் நில எல்லையைப் பாடாது நீங்குக; என்னால் பாதுகாக்கப்படும் சுற்றத்தார் துயரம் மிக இரந்து கேட்கும்போது அவர்களுக்குக் கொடுக்க இயலாத வறுமை நிலையை யான் அடைவேனாக!

சங்க இலக்கியமான எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான, புறநானூறு புறப்பொருள் சம்பந்தமாக 400 பாடல்களைக் கொண்ட தொகுப்பு நூலாகும். இதன் 72 ஆவது பாடலைத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பாடியுள்ளார். சிறு சொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை வென்று அகப்படுத்துவேன்: அது செய்யேனாயின் இன்னவாகுக என வஞ்சினம் உரைத்தலால் இது வஞ்சினக் காஞ்சி என்னும் துறையில் அமைந்த பாடலாகும்.

### செயல்பாடுகள்

- "புலவர் பாடாது வரைக, என் நிலவரை" எனப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறியதற்கான காரணத்தைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.

## பேசிய முதல் வார்த்தை

மற்றவர்களைப் போல் தானும் தெளிவாகப் பேச வேண்டும் என்ற அவா ஹெலனுக்குள் இருந்து வந்தது. ஒரு கையைத் தன் தொண்டையில் வைத்துக்கொண்டு, மற்றொரு கையை உதடுகளின் அசைவில் வைத்துக்கொண்டு ஒலிகளை எழுப்பி மகிழ்வார்.

நாயின் 'லொள்' 'லொள்' சப்தமாகட்டும், பூனையின் 'மியாவ்' 'மியாவ்' என்ற சப்தமாகட்டும் எப்போதுமே ஒலிகள் அவரை உற்சாகப்படுத்தத் தவறியதே இல்லை.

ஹெலனுக்கு இப்போது வயது பத்து. எப்படியாவது தானும் பேச வேண்டும் என்று அவர் அதற்கான முயற்சியில் ஈடுபட்டார்.

"இனி எங்கே நீ பேசுவது" என்று எங்காவது ஒரு குரல் இவரைத் தடுக்க முயன்றாலும் அதனை அவர் பொருட்படுத்தமாட்டார்.

ஒருபோதும் தன் கதை அவ்வளவுதான்; முடிந்துவிட்டது என்று அவர் கருதியதே இல்லை. "நம்பிக்கையே வாழ்க்கை" என்பதை அவர் உணர்ந்தவராயிற்றே!

எல்லாக் குழந்தைகளையும் போல் உரக்கச் சிரித்துப் பார்த்தார். ஏதேதோ ஒலிகளை எழுப்பிப் பார்த்தார். பேசுவதற்கு இவ்விதப் பயிற்சிகள் அவசியம் என்றே அவர் கருதினார்.

இவரது தீவிர முயற்சி வெற்றி பெறாவிடில் ஹெலனது உள்ளம் உடைந்து போகுமே என்று மற்றவர்கள் கவலைப்பட்டு "கண்மணி வேண்டாமடா! இந்த முயற்சி! இது கைகூடாவிடில், நீ கவலைப்படுவாயே" என்று ஆறுதல் கூறி அவரைப் பேச வேண்டாம் என்று மன்றாடினர். ஆனால் ஹெலன் பிடிவாதமாக இருந்தார்.

ஒரே ஒரு வார்த்தை மட்டும் அவருக்குக் கொஞ்சம் பேச வந்தது. வாட்டர் என்பதை வா... வா... என்று சொல்ல முடிந்தது.

கைகளில் எழுதி எழுதிப் பேசுவது ஹெலனுக்குப் போதுமானதாக இல்லை. தன்னுடைய எதிர்காலம் சிறக்க வேண்டுமாயின் தான் பேச வேண்டும் என்ற வெறி அவருக்கு ஏற்பட்டது. தடைகள் ஏதுவரினும் அதைத் தகர்த்து எறிய அவர் போராடத் துணிந்தார்.

அந்தச் சமயத்தில்தான் "ராகன் ஹில்டு கட்டா" (Ragnhild katta) என்பவரைப் பற்றிய செய்தியை ஹெலன் கேள்விப்பட்டார்.

1890 ஆம் வருடம் நார்வேயில் இருந்த ராகன் ஹில்டு என்னும் காது கேட்காத, பார்வை இழந்த சிறுமிக்குப் பேசக் கற்றுக் கொடுத்த பள்ளி பற்றியும், அந்த ஆசிரியரைப் பற்றியும் தெரிந்துகொண்டார். "ஹாரஸ்மான்" (Harace mann school) என்னும் பள்ளியின் தலைமை ஆசிரியை மிஸ் ஸாரா புல்லர் (Sarah fullar) என்பவர்தான் இவ்வரியச் செயலைச் செய்தவர்.

அவ்வளவுதான், உடனே தன்னையும் அவரிடம் அழைத்துப் போகுமாறு தன் ஆசிரியையிடம் நச்சரிக்கத் தொடங்கினார்.

ஹெலனை அவரது ஆசிரியை ஒருவித நம்பிக்கையோடு அவரிடம் அழைத்துச் சென்றார். ஹெலன் ஒரு விதப் படபடப்புடன் நின்றிருந்தார். அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற தவிப்பு அவரை ஆட்கொண்டது. தனக்கு நம்பிக்கையூட்டும் விதமாக அவர் பேச வேண்டுமே என்று அவர் இறைவனோடு பேசிக் கொண்டிருந்தார்.

அன்பு ததும்பும் முகம்; கருணை பொழியும் கண்கள், இனிமையாகப் பழகும் தன்மை இவர்தான் மிஸ் ஸாரா. அவர் ஹெலனைப் பார்த்தார். பேசக் கற்றுக் கொடுக்கிறேன் என்றார்.

அப்போதுதான் ஹெலனுக்கு மூச்சே வந்தது. மறுநாளே பயிற்சி ஆரம்பமானது. தான் பேசும் போது தனது முகத்தையும் தொண்டையையும்,உதடுகளையும் தடவிப் பார்க்குமாறு ஹெலனிடம் கூறினார். ஒரு வார்த்தையை உச்சரிக்கும் போது அவரது நாக்கும் உதடுகளும் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை ஹெலன் உணரும்படிச் செய்தார்.

அப்படியே ஹெலனும் ஆர்வத்தோடு செய்ய முயன்றார். ஒரு மணி நேரப் பயிற்சிக்குப் பிறகு ஹெலன் ஆறு விதமான ஒலிகளை எழுப்பிக் காட்டினார்.

இப்போது வெதுவெதுப்பாய் இருக்கிறது. (It is warm now) என்பதுதான் அவரது முதல் வாக்கியம்.

அத்தனை வார்த்தைகளையும் கூட்டிக்கூட்டி உச்சரித்து அவர் பேசியது அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அவர் அடைந்த ஆனந்தம்! ஆச்சர்யம்! இவற்றை நாம் எப்படிச் சொல்வது?

### வினைமுற்று

ஒரு வினை அல்லது செயல் முடிந்து (முற்றுப்பெற்று) வருமானால் அது வினைமுற்று எனப்படும்.

எ.டு.: நான் படித்தேன்
நீங்கள் வந்தீர்கள்
அவள் ஆடினாள்

இங்குப் படித்தேன், வந்தீர்கள், ஆடினாள் என்னும் வினைகள் முற்றுப்பெற்று வருவதால் இவை வினைமுற்றுகள் ஆயின.

வினைமுற்றுகள் குறிப்பு வினைமுற்று, தெரிநிலை வினைமுற்று என இருவகைப்படும்.

#### குறிப்பு வினைமுற்று

ஒரு வினைச்சொல் காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல், செய்பவரை மட்டும் உணர்த்தி வருமானால் அது குறிப்பு வினைமுற்று எனப்படும்.

எ.டு.: அவன் பொன்னன் (பொன்னன் – பொன்னை உடையவன்)

அவள் நல்லள் (நல்லள் – நற்குணம் படைத்தவள்)

அவர் எழுத்தர் (எழுத்தர் – எழுத்துத் தொழிலைச் செய்பவர்)

#### தெரிநிலை வினைமுற்று

ஒரு செயலைச் (வினை) செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறையும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்றுகள் தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

எ.டு.: படித்தான்
தொடுத்தாள்

### எச்சவினை

ஒரு வினை முற்றுப் பெறாமல் இருக்குமானால் அது எச்சவினை எனப்படும். அதாவது அந்த வினையின் பின்னால் ஒரு பெயர்ச்சொல்லோ

ஒவ்வொரு மணிகளாக எடுத்து மாலையாகக் கோர்ப்பது போல் அவர் வார்த்தைகளை எடுத்துத் தொடுத்து வாக்கிய மாலையாக்கினார்.

திக்கித்திக்கி, விட்டுவிட்டு அவர் பேசியபோது அன்றுதான் புதிதாகப் பிறந்தாற் போன்ற ஓர் உணர்வினை ஹெலன் அடைந்தார்.

ஆனால் தான் பேசிய முதல் வார்த்தையை அவரால் கேட்க முடியாதது எத்தனை பெரிய சோகம்! ஆனால் சோதனைகளை எல்லாம் அவர்தான் சாதனைகளாக மாற்ற உறுதி கொண்டிருந்தாரே!

முயற்சி! முயற்சி! முயற்சி! இதுதான் அவரது தாரக மந்திரம். பேசவேண்டும் என்ற முயற்சி இவரைப் பற்றிக் கொண்டது. பயிற்சி! பயிற்சி! என்று பயிற்சியில் ஈடுபட்டார்.

இத்தனை நாளும் தன்னைப் பிணைத்திருந்த மௌனச் சிறையிலிருந்து இனி தனக்கு விடுதலை என்ற உணர்வு அவரைப் பரவசப்படுத்தியது.

– ஜெயந்தி நாகராஜன்

வினைச்சொல்லோ எஞ்சி நிற்கிறது என்று பொருள். எச்சவினைகள் வினையெச்சம், பெயரெச்சம் என இருவகைப்படும்.

**வினையெச்சம்**

ஒரு வினை முற்றுப்பெறாமல், அதன்பின் இன்னொரு வினை எஞ்சி நிற்குமானால் அது வினையெச்சம் எனப்படும்.

எ.டு.: நடந்து வந்தாள்
எழுந்து நடந்தான்
சிரித்துப் பேசுகின்றனர்
ஓடி வந்தார்கள்

இங்கு நடந்து, எழுந்து, சிரித்து, ஓடி என்னும் வினைகள் முற்றுப் பெறவில்லை. அவற்றின் பின் முறையே வந்தாள், நடந்தான், பேசுகின்றனர், வந்தார்கள் என்னும் சொற்கள் வினையை முற்றுப் பெறச் செய்கின்றன. எனவே நடந்து, எழுந்து, சிரித்து, ஓடி ஆகியவை வினையெச்சங்கள் எனப்படுகின்றன.

**பெயரெச்சம்**

ஒரு வினைச் சொல் முற்றுப் பெறாமல், அதன்பின் ஒரு பெயர்ச்சொல் எஞ்சி நிற்குமானால் அது பெயரெச்சம் எனப்படும்.

எ.டு.: படித்த மாணவன்
கூறிய கதை

இங்குப் படித்த, கூறிய என்னும் வினைச் சொற்கள் முற்றுப்பெறவில்லை. அவற்றின் பின் மாணவன், கதை என்னும் பெயர்ச்சொற்கள் இணைந்த பின்பே முற்றுப்பெற்றன. எனவே படித்த, கூறிய என்பன பெயரெச்சங்கள் ஆயிற்று.

**ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

எதிர்மறை வினைச் சொல்லின் ஈற்றெழுத்துக் கெட்டு (மறைந்து) பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும்.

தீண்டா வைமுள்
செல்லாக் காசு.

இங்குத் தீண்டாத என்பது தீண்டா எனவும், செல்லாத என்பது செல்லா எனவும் ஈற்றெழுத்துக் கெட்டு வந்தன. மேலும் இவை எதிர்மறைப் பொருளையும் தருகின்றன. எனவே தீண்டா, செல்லா என்பன ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள் ஆயின.

ஜெயந்தி நாகராஜன் (பிறப்பு மார்ச் 25, 1954) தமிழக எழுத்தாளர், பேச்சாளர், கவிஞர், நாடக நடிகர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். பள்ளி ஒன்றை நிர்வகித்ததோடு பகுதி நேர விரிவுரையாளராகவும் பணியாற்றினார். குழந்தை இலக்கியத்திற்குப் பல பங்களிப்புகளைத் தந்துள்ளார். வள்ளியப்பா இலக்கிய விருது, எழுத்துச் சுடர் போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- கட்டுரையை வாசித்தும் அத்துடன் இணையத்திலிருந்து தகவல்களைப் பெற்றும் ஹெலன் கெல்லரின் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை தயார்செய்யுங்கள்.
- மாற்றுத் திறனாளி மாணவர்களை ஊக்குவிப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது குறித்து 'மாற்றுத்திறனாளிளும் மேம்பாடும்' என்னும் பொருளில் டிசம்பர் 3 ஆம் தேதி நடைபெறயிருக்கும் மாற்றுத்திறனாளிகள் தினக்கூட்டத்தில் பேசுவதற்காகச் சொற்பொழிவு உரை தயார்செய்யவும்.

## உணர்வுகள்



### வெளிச்ச வீதியில்...

வெளிச்ச வீதியில் ஒருபயணம் –வான்
வெளியினில் நம்பிக்கைப் பொன்கிரணம்
பளிச்சிடும் தாரகைப் பூதங்கள் – எதிர்
வருகின்ற வேளையில் காத்திருங்கள்!

துடிக்கும் மின்னலைத் துடுப்பாக்கி – முகில்
திரட்டிப் புதுப்பித்துப் படகாக்கி
கடமை அலைகளில் எதிர்நீச்சல்! காற்றைக்
கிழித்தே ஒரு பாய்ச்சல்!

இதயத்தில் சுழல்கின்ற சக்கரங்கள் – தணல்
எரிகின்ற ஆலையை இயக்கிடுங்கள்!
புதுவித நெறியினில் நவ யுகங்கள் – நல
வாழ்வினை நோக்கிப் புறப்படுங்கள்!

தன்னல வேட்கையர் அழிகின்றார் – தம்
தவற்றினை நினைத்தே நலிகின்றார்
பொன்மன நல்லவர் எழுகின்றார் – இந்தப்
பூமியும் வானுமாய் நிலைக்கின்றார்!

– ஜெ. கமலநாதன்

கமலநாதன் என்பவர் கோவை, கொடைக்கானல், திருவனந்தபுரம், சென்னை வானொலி நிலையங்களில் நிலைய இயக்குநராக செயலாற்றியவர். சொற்பொழிவாளர், கவிஞர், கட்டுரையாளர் என்னும் பன்முகத் திறமையாளர். வெற்றிமாலை என்ற தலைப்பில் 12 ஆண்டுகள் வானொலியில் மாதம் தோறும் ஊக்கமிகு தன்னம்பிக்கை நிகழ்ச்சிகளை வழங்கியவர்.

### செயல்பாடுகள்

- 'தன்னலமின்றி வாழ என்னென்ன செய்யலாம்' – உங்கள் கருத்துகளை வரிசைப் படுத்துங்கள்.
- 'நம்பிக்கையும் தன்னலமின்மையும் வாழ்க்கையில் முன்னேற வழி வகுக்கும்' என்னும் கருத்தினை வலியுறுத்தி உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.

## ஹாரி பாட்டரைப் படைத்த மந்திரக்கோல்

"உங்களால் உங்களது வாழ்க்கையைக் கட்டுப்படுத்த முடியும். உங்கள் மனஉறுதி மிகவும் சக்தி வாய்ந்தது" என்று உறுதி வாய்ந்த தன் ஆற்றலைக் கண்டறிந்து தன் விதியை மதியாலும் கற்பனைத் திறத்தாலும் வென்றெடுத்த வெற்றி நாயகி ஜே.கே. ரௌலிங். மந்திரத்தைப் பற்றிய நம் கண்ணோட்டத்தை மாற்றிக்காட்டிய பெருமைக்குரியவர். பெண்கள் எவ்வளவு மன உறுதியோடு போராடவேண்டும் என்பதற்கு மிகச் சரியான உதாரணப் பெண்மணி. இன்றைய குழந்தைகள் மத்தியில் மிகவும் விரும்பப்படும் "ஹாரி பாட்டர்" புத்தகங்களின் ஆசிரியர். எந்த ஒரு அடிப்படை பின்புலமும் இல்லாமல், ஒரு பெண்ணாகப் புத்தக உலகையே தன்னை நோக்கி திரும்பிப்பார்க்க வைத்த பெருமைக்குரியவர் ஜே.கே. ரௌலிங்.

இவர் 'பீட்டர் ஜேம்ஸ் ரௌலிங்' மற்றும் 'அன்னே ரௌலிங்' தம்பதிகளுக்கு மகளாக 1965 ஆம் ஆண்டு ஜூலை 31 அன்று இங்கிலாந்தில் உள்ள யேட் (Yate) என்ற நகரத்தில் பிறந்தார். ஜே.கே. ரௌலிங் அவர்களின் இயற்பெயர் "ஜோன் ரௌலிங்" (Joenne Rowling ). இவர் தனது குழந்தைப் பருவத்தைத் தன்னைவிட இரண்டு வயது சிறிய தங்கை 'டயான்' (Dianne) உடன் இனிதே கழித்து வந்தார். தங்கையுடன் விளையாடும் நேரங்களைத் தவிர மீதி நேரங்களைப் புத்தகங்கள் வாசிப்பதிலேயே கழித்துவந்தார். ஒருமுறை தனது ஆறாவது வயதில் முயலைப் பற்றிக் கதை எழுதி தன் சகோதரி மற்றும் தாயிடம் காட்டுகிறார். அதைப்பார்த்து அன்னே ரௌலிங் பாராட்டுகிறார். தாயின் பாராட்டு ஜோன் ரௌலிங்கின் எழுத்திற்கு ஊக்க

மருந்தாக ஆகிவிட்டது. அதில் இருந்து எழுதும் எண்ணம் துளிர்விட ஆரம்பமாகிறது.

அப்போது ஒரு சுவாரஸ்யமான சம்பவம் ரௌலிங்கின் 11–ஆவது வயதில் நிகழ்கிறது. ஏழு சபிக்கப்பட்ட வைரங்கள் மற்றும் அவற்றுக்குச் சொந்தமானவர்களைப் (Seven cursed diamonds and the people who owned them) பற்றி ஒரு நாவலை எழுதித் தன் தாயிடம் காட்டுகிறார். 'அன்னே ரௌலிங்' நன்றாக எழுதியிருக்கிறாய் என்று தாய்மைக்கே உரிய பாணியில் பாராட்டுகிறார். உடனே ரௌலிங் 'அப்படியானால் புத்தகமாக வெளியிடலாமா? எனக் கேட்கிறாள். அதற்குத் தாய் 'நீயோ சிறுமி இப்போது சாத்தியம் இல்லை என்று கூறிவிடுகிறாள். அப்போதிலிருந்து அவருக்குள் கதைகள் எழுதவேண்டும் அதைப் புத்தகமாக வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் உருவெடுக்கிறது.

ரௌலிங்கிற்குத் தன் கற்பனையில் ஒரு புதிய சிந்தனை உதித்த தருணம் ஒன்று வந்தது. ஜே.கே. ரௌலிங் எத்தனையோ முறை இரயில் பயணங்களை மேற்கொண்டிருந்தாலும், 1990 ஆம் ஆண்டு மான்செஸ்டரிலிருந்து இலண்டனுக்குப் பயணித்த அனுபவம்தான் அவரது வாழ்நாளில் மறக்கமுடியாத ஒன்றாக மாறியது. அந்தப் பயணம் அவருடைய வாழ்க்கையையே புரட்டிப் போடும் என்று அப்போது அவர் சிறிதுகூட எதிர்பார்த்திருக்கமாட்டார். ஆம் அந்தப் பயணத்தின் போதுதான் ஹாரி பாட்டர் கதைக்கான வித்து அவரது மனதில் விழுந்தது.

முதலில் தனது சிந்தனையில் தோன்றியதை எழுதுகிறார். பின் சிறிது சிறிதாக அதை மேம்படுத்தி ஒரு வடிவத்திற்குக் கொண்டு வந்தார். தாயின் இறப்புக்குப் பிறகு ஹாரி பாட்டர் கதையின் குறிப்புகளோடு போர்ச்சுக்கலுக்கு (Portugal) ஆங்கில ஆசிரியராக வேலைக்குச் செல்கிறார். அங்கு 'ஜார்ஜ் அரான்டெஸ்' (Jorge Arantes) என்பவரை 1992 இல் திருமணம் செய்து கொள்கிறார். இவர்களுக்கு 'ஜெசிகா' என்ற பெண்குழந்தை 1993 இல் பிறக்கிறது. குழந்தை பிறந்த ஒரு சில மாதத்திலேயே கருத்து வேறுபாடு காரணமாக விவாகரத்தில் முடிகிறது அவரது குடும்ப வாழ்க்கை. ரௌலிங் தன் மூன்று மாதப் பெண்குழந்தையுடனும் பெட்டியில் "ஹாரி பாட்டர் மற்றும் தத்துவஞானியின் கல் "(Harry Potter and the Philosopher's Stone)– என்ற நூலின் முதல் மூன்று பகுதிகளுடனும் மீண்டும் லண்டனில் உள்ள எடின்பர்க் நகருக்கு வந்துசேர்கிறார்.

எடின்பர்க்கில் வீடு, தொழில் எதுவுமின்றிக் குழந்தையுடன் என்ன செய்வதென்று தெரியாமல், தங்கை 'டயான்'னின் உதவியுடன் ஒரு

அரசுப் பள்ளியில் ஆசிரியர் பணிக்குச் செல்கிறார். ஓய்வு நேரத்தில் காபி சாப்பிடும் கடையில் ஜெசிகா தூங்கும் நேரத்தில், தனது எழுத்துப் பணியைத் தொடர்ந்தார். முதல் நாவலைக் கையெழுத்துப் பிரதியாகப் பன்னிரெண்டு பதிப்பாளர்களுக்கு அனுப்பினார். அனைவரும் பிரசுரிக்க மறுத்து விடுகின்றனர். சிலர் மாய மந்திரத்தை மக்கள் விரும்பமாட்டார்கள் என்றும் சொல்லி விடுகின்றனர். அனைத்துக் கதவுகளும் மூடிவிட்டதாக நினைத்து மனம் முழுவதும் வேதனையுடன் தளர்ந்துவிடுகிறார்.

"தோல்வி மிகவும் முக்கியமானது. வெற்றியைப் பற்றி நாம் எப்போதும் பேசுகிறோம். தோல்வியை எதிர்ப்பதற்கான திறமை அல்லது தோல்வியைப் பயன்படுத்துவது பெரும்பாலும் மாபெரும் வெற்றிக்கு வழிவகுக்கிறது."

இப்படி ஜே.கே.ரௌலிங் தோல்வியை எதிர்ப்பதற்கான திறனோடு காத்திருந்திருக்கிறார். அதன் பயனாக இறுதியில் ஒரு பதிப்பகம் அவரது நாவலை வெளியிட முன்வந்தது. அந்தப் பதிப்பகம்தான் லண்டனில் உள்ள புளூம்ஸ்பரி (Bloomsbury) பதிப்பகம். அது ரௌலிங்கின் புத்தகம் குழந்தைகள் படிக்கும் நாவலாக இருப்பதாகவும் அதற்குத் தகுந்தாற்போல் பெயர் மாற்றம் செய்யப் பதிப்பகத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதன் பேரில் ரௌலிங்கின் பெயரில் சிறிய மாற்றத்தைச் செய்து 1997 ஆம் ஆண்டு முதல் நாவல் ஜே. கே. ரௌலிங் என்று வெளிவந்தது. ஜே யும் ரௌலிங்கும் அவரது இயற்பெயரிலேயே இருக்கிறது. ஆதலால் அதனுடன் 'கே' என்பதைச் சேர்த்துக் கொண்டார். கே என்பது 'காத்லீன்' என்ற தன் தகப்பனாரின் வழி தாயின் பெயரில் இருந்து எடுக்கப்பட்டது.

கடைசியாகத் தனது ஆறு வருடக் கடும் போராட்டத்திற்குப் பிறகு முதல் நாவல் புளூம்ஸ்பரி பதிப்பகம் மூலம் "தத்துவஞானியின் கல்" (Philosopher's Stone) என்ற பெயரில் வெளியானது. புத்தகம் வெளியான ஒரு வருடத்திற்குள் நெஸ்லே ஸ்மாட்டீஸ் புக் பரிசும் பிரிட்டீஸ் புத்தக விருதும் கிடைக்கிறது. இந்த விருதுகளின் பலனாக 1998 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இதே நாவல் சிறிய பெயர் மாற்றத்துடன் வெளியானது. அதுவும் பதிப்பகத்தில் தலைப்பை மாற்றச் சொல்லிக் கேட்டதன் பேரில் கதையின் நாயகனின் பெயர் தலைப்பில் சேர்க்கப்பட்டு 'ஹாரி பாட்டர் மற்றும் தத்துவஞானியின்கல்" (Harry Potter and the Philosopher's Stone) வெளியானது. அதைத் தொடர்ந்து வரிசையாக ஆறு வெவ்வேறு தலைப்புகளில் நாவல்கள் வெளியாகி விற்பனையில் புதிய சாதனை புரிந்தன. 'அதுவரை யாருமே கண்டிராத அபாரச் சாதனையைப் படைத்தது அவரது புத்தகங்கள்' என்று அனைவராலும் பாராட்டப்பட்டார்.

புத்தக உலகில் வரலாற்றுச் சாதனைகள் படைத்த ரௌலிங் அவர்களது வாழ்க்கை போராட்டங்கள் நிறைந்தது. இது நமக்கும் நம் வாழ்க்கைக்கும்கூட ஒரு பாடமாக இருக்கிறது. இறுக்கமான சூழ்நிலையில்தான் வெற்றியின் இரகசியம் புதைந்து கிடக்கிறது என்பதை ரௌலிங்கின் வாழ்க்கை நமக்குத் தெள்ளத்தெளிவாக விளக்குகிறது.

'நீங்கள் எப்படிப் பிறந்தீர்கள் என்பது முக்கியம் அல்ல. ஆனால் நீங்கள் எப்படி வளர்ந்து நிற்கப் போகிறீர்கள் என்பதே முக்கியம்' என்று சோர்ந்து போயிருக்கும் இளைய சமுதாயத்தைத் தட்டி எழுப்பி, சோர்ந்து விடாதே பிறையே! உன்னுள்தான் பூரணச் சந்திரன் புதைந்து கிடக்கிறான் என்று உற்சாக மூட்டுகிறது ஜே.கே. ரௌலிங்கின் வாழ்க்கை வரலாறு.

உங்கள் நம்பிக்கையில் உறுதியாய் இருங்கள்.

இன்றில்லா விட்டாலும் என்றாவது ஒருநாள் நீங்கள் சாதிப்பது நிச்சயம்......!

– வினிதா மோகன்

வினிதா மோகன் என்பவர் பீனிக்ஸ் பெண்கள், கர்ஜனை போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவர் சமூக ஆர்வலர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் ஆவார்.

## செயல்பாடுகள்

- ஜே.கே. ரௌலிங் அவர்களின் வாழ்க்கை தொடர்பான செய்திகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்பு தயாரியுங்கள்.
- ஜே.கே. ரௌலிங் போன்று வாழ்க்கையில் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் தொடர்பான குறிப்புகள் தயாரித்து வகுப்பில் வாசியுங்கள்.
- 'ஹாரிபாட்டர்' வெளியீட்டிற்காக ஆசிரியர் எடுத்த முயற்சியையும் அதன் வெற்றியையும் குறித்து இதழில் வெளியிடுவதற்கான கட்டுரை தயாரிக்கவும்.

## வெற்றிக்கான சிந்தனை

நம்மை நாமே ஆள்வதுதான் ஆளுமை ஆகும். ஆளுமையானது நாம் கட்டளையிடும் ஒவ்வொரு செயலையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்க வல்லதாகும்.

நம்முடைய முன்னோர்களில் சிலர் வெற்றியடைந்திருப்பர்; பலர் தோல்வி அடைந்திருப்பர். காரணம் வெற்றி பெறுகிறவர்கள் தன்னை ஆள்கின்றனர். வெற்றி பெறாதவர்கள் பிறரை ஆள்கிறார்கள். வெற்றி பெறாமைக்குக் காரணம் அவர்தான் எனப் பிறரைக் கைகாட்டி தப்பித்துக் கொள்கிறார்கள்.

தோல்வியுறுகின்ற யாருமே தனது சொந்தக் குற்றங்களையும் பலவீனங்களையும் ஒப்புக்கொள்ள விரும்புவதில்லை. இதற்கு மனிதனின் குணச்சிறப்பே காரணமாகும். அதை மாற்றியமைத்துக் கொள்வதுதான் ஆளுமை.

பல எழுத்தாளர்கள் எழுதிய நூல்களைப் படிக்கும் பொழுது, அவர்களது கருத்தின் சிறப்புக்குக் காரணம் ஆளுமையே. எதன்மீது நாம் ஆழமான ஆதிக்கம் செலுத்துகிறோமோ அதுவே சிறந்த ஆளுமை ஆகும். அவை நல்ல எண்ணக் கருத்துகளாக இருக்க வேண்டும்.

ஒருவன் பெரிய சுமையைத் தூக்குகிறான், அவனுடைய தசைகள் பருக்கின்றன. உடல் முழுவதும் கடும் முயற்சிக்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன. அவனது தசைகள் வலுவானவை என்று நாம் எண்ணுகிறோம். ஆனால், மெல்லிய நூலிழை போன்ற நரம்புகளே தசைகளுக்கு வலுவூட்டுகின்றன. இந்த மெல்லிய நரம்புகள் தம்மைவிட நுண்ணிய ஒன்றிலிருந்து அதாவது எண்ணத்திலிருந்து ஆற்றலைக் கொண்டு வருகின்றன. ஆற்றலின் உறைவிடம் நுண்பொருளே.

தன் மனதை அடக்க முடிந்தவனால் மட்டுமே மற்ற மனங்களைத் தன்னுடைய கருத்துகளுக்கு உட்படுத்த முடியும். மற்ற மனங்களிலும் எளிதாய் நுழைய முடியும். தூய்மையும் ஒழுக்கமும் பெற்றவன் தன்னை அடக்கி ஆள்கிறான்.

எதையும் சிந்தித்து, சீர்த்தூக்கிப் பார்க்கிறவனின் பகுத்தறிவு நல்லெண்ணங்களை அதிகரிக்கச் செய்யும். மனத்தின் சிந்தனைகள் மாறிமாறி தாவிக்கொண்டே இருக்கும். எல்லாவித சிந்தனைகளையும் ஒருமுகச் சிந்தனையாக்கி அதை மனதில் நிலைப்படுத்த வேண்டும்.

சான்றாக,

ஒரு பெரிய கல்லைத் தூக்கவேண்டும் என்ற போட்டி நடந்து கொண்டிருந்தது. பலசாலிகள் பலர் நான் நீ எனப் போட்டிபோட்டுத் தூக்க முற்பட்டபோது அதில் தோல்வியைத் தழுவினர். பலராலும் தூக்க முடியாத அக்கல்லை ஒல்லியான தேகமும் பலமும் குறைந்த ஒருவர் சாதாரணமாகத் தூக்கிப் போடுகிறார். இதற்குக் காரணம் என்னவெனில், தினமும் அக்கல்லை அவர் தூக்கிப் பழகி இருந்ததால் அது அவருக்குச் சுலபமாக இருந்தது. இச்செயலும் ஒரு வகையான ஆளுமையே.

**தொழிற்பெயர்**

ஒரு வினைச்சொல் அந்த வினையின் பெயராக அமைவது தொழிற்பெயர் எனப்படும். பெரும்பாலும் 'தல்' எனும் விகுதி ஒரு வினைச் சொல்லுடன் இணையும்போது அது தொழிற் பெயராகிவிடும்.

எ.டு.: ஆடுதல், பாடுதல், படித்தல், ஓடுதல், கூறுதல்

**வினையாலணையும் பெயர்**

ஒரு வினைமுற்று வினையை உணர்த்தாமல், அதைச் செய்பவனின்/ செய்தவனின் பெயரைக் குறிப்பிடுவதாக வந்தால் அதனை வினையாலணையும் பெயர் என்பர்.

எ.டு.: நேற்று வந்தவன் நல்லவன்

அன்று ஆடியவள் நண்பனின் தங்கை

பணம் திருடியவன் பிடிபட்டான்

இங்கு வந்தவன், ஆடியவள், திருடியவன் என்பன வினையைக் குறிப்பிடாமல், அதைச் செய்தவர்களைக் குறித்து வந்தமையால் வினையாலணையும் பெயர் ஆயிற்று.

## இலக்கு வேண்டும்

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை வீண் என்பார்கள் நம் முன்னோர்கள்.

ஓர் எதிர்பார்ப்புதான் இலக்கு. ஒரு கனவுதான் இலக்கு–ஒரு கற்பனைதான் இலக்கு. எதிர்கால வெற்றிதான் இலக்கு. இந்த இலக்கானது கல்வி, தொழில், புகழ், வாழ்க்கை.. போன்ற எது வேண்டுமானாலும் இருக்கலாம்.

இலக்கு நிறைவேற எண்ணம், செயல், தொடர் முயற்சி போன்றவை அவசியம்.

கண்ணுக்குத் தெரியும் இடங்களிலெல்லாம் இலக்கை நினைவூட்டும் வாசகங்கள் எழுதி வையுங்கள். அது நம் பயணம் தொடர ஏதுவாக இருக்கும். 'இலக்கில்லாத பயணம் தெரியாத ஊருக்குப் பயணம் செய்வது போன்றதாகும்'.

எழுச்சி மிகுந்த இளைஞர்கள் மனதின் நல்ல எண்ணங்களுக்கு வலுவூட்டிச் செயல்பட வேண்டும்.

## எண்ணம்

'எண்ணம் வலிமையானது. அவ்வெண்ணமே நம் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது'. நம்மைத் தூண்டிச் செயல்படச் செய்வது எண்ணமே.

மனதை நல்ல எண்ணங்களால் நிரப்ப வேண்டும். சதா சிந்தித்துச் செயலாக மாற்றும் தன்மை எண்ணத்திற்கு உண்டு.

### இலட்சிய பிரகடனம்

"நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவை இலட்சியப் பிரகடனங்களாகும்" என்று விளக்குகிறார் டாக்டர் ராதாகிருஷ்ணன். எடுத்த இலட்சியத்தை அடைந்தே தீர வேண்டும் என்ற உறுதியோடு செயல்பட்டால், தடைகளும் துன்பங்களும் தவிடுபொடியாகிவிடும்.

– த. உமாராணி

இவர் தமிழ் ஆசிரியர். பெண்ணியச் சிந்தனையாளர். சிறந்த படைப்பாளராகவும் விளங்குகிறார்.

## செயல்பாடுகள்

- இலட்சியத்தை அடைவதற்கான வழிமுறைகளைத் தொகுத்து விளக்கக் குறிப்பு தயாரிக்கவும்.
- சிறந்த ஆளுமையைப் பெற்றுத் திகழ்வதற்கு நாம் என்னென்ன வழிகளைக் கடைபிடிக்க வேண்டும் எனக் கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்? உங்கள் கருத்துகளையும் இணைத்து 'நற்சிந்தனை நல்ல இலக்கு' என்னும் தலைப்பில் சிறுகட்டுரை எழுதுங்கள்.
- நம்பிக்கை, தன்னலமின்மை ஆகியனவற்றை மையப் பொருளாகக் கொண்டு கவியரங்கம் நடத்துங்கள்.

## அகராதி

| | | |
|---|---|---|
| அடகு | – | அடமானம்/ இலை/ கீரை |
| அமிழ்தம் | – | அமுது/ அமிர்தம் |
| அவலம் | – | துன்பம் |
| அழுங்கல் | – | ஒலித்தல் |
| அளை | – | வளை |
| ஆதவம் | – | சூரிய ஒளி/ கொன்றைப் பூ |
| ஆதி | – | முதல், தொடக்கம் |
| ஆரவம் | – | ஒலி/ ஆரவாரம்/ சத்தம் |
| ஆறு | – | வழி |
| ஆன்மநேயம் | – | சகமனிதனிடம் அன்பு காட்டுதல் |
| ஆன்றோர் | – | அறிவில் சிறந்தவர்கள்/ பெரியோர்கள்/ அறிஞர்கள் |
| இடும்பை | – | துன்பம் |
| இயம்புதல் | – | சொல்லுதல்/ ஒலித்தல்/ பேசுதல் |
| இரவலர் | – | கேட்பவர்/ யாசிப்பவர் |
| இரவி | – | சூரியன் |
| இருக்கை | – | அமருமிடம் |
| இன்னல் | – | துன்பம் |
| உடற்றுதல் | – | வருத்துதல்/ துன்புறுத்தல் |
| உலைக்கல் | – | கொல்லனுடைய உலைக்களத்திலுள்ள பட்டடைக்கல் |
| உழலுதல் | – | அசைதல்/ அலைதல்/ சுழலுதல்/ நிலை கெடுதல் |
| ஊர்ஜிதம் | – | உறுதி செய்தல் |
| ஊழை | – | பித்தம்/ குழப்பம் |
| ஊறு | – | தீங்கு, தீமை |
| எயினர் | – | பாலை நில மக்கள் |
| எருது | – | காளை, ஆண்மாடு |
| எழில் | – | அழகு |
| எழிலி | – | மழைமேகம்/ அழகு |
| எறும்பி | – | எறும்பு |
| ஒப்புரவு | – | உலகப்போக்கிற்கு ஏற்றவாறு நடத்தல் |
| ஒழுகு | – | நட |
| ஒன்றுறா | – | ஒன்றும் கிடைக்காத |
| ககனம் | – | வானம்/ ஆகாயம்/ விசும்பு |
| கதைத்தல் | – | கூறுதல் |
| கரிசல் | – | கருப்பு நிற மண் |
| கலப்பை | – | ஏர் |
| கவ்வை | – | ஒலி, துன்பம் |

| | | |
|---|---|---|
| கவர்ந்து | – | திருடுதல் |
| கவலை | – | பிரியும் வழிகள் |
| கழறுதல் | – | சொல்லுதல் |
| கானகம் | – | காடு |
| குண்டலினி | – | மூலாதாரத்தில் சுருண்டு கிடக்கும் ஒரு சக்தி |
| குத்தகை | – | ஒப்பந்தம் |
| குறுமை | – | சிறுமை |
| கூந்தல் | – | சிகை, முடி |
| கொடு | – | வளைவு |
| சதம் | – | நூறு |
| சழக்கு | – | குற்றம் |
| சிரமம் | – | கஷ்டம்/ தொல்லை/ கடினம்/ துன்பம்/ களைப்பு |
| சுதி | – | இசையின் அடிப்படை சுரநிலை/ யாழின் நரம்பு/ வளர்பிறை |
| சுனை | – | நீரூற்று, குளம் |
| சேல் | – | மீன் |
| சொளவு | – | முறம் |
| தணல் | – | நெருப்பு |
| தருக்கம் | – | வாதம் செய்தல் |
| தாழை | – | தாழம்பூ/ தென்னை மரம்/ தென்னம்பாளை |
| திண்மை | – | வலிமை |
| திரள் | – | கூட்டம் |
| திவ்யம் | – | புனிதம் |
| திளைத்தல் | – | நெருங்குதல் |
| தீரன் | – | தைரியசாலி/ மனவுறுதி கொண்டவன் |
| துகில் | – | ஆடை |
| துப்பார்க்கு | – | உண்பவருக்கு/ நுகர்வோருக்கு |
| நல்வி | – | மான் |
| நுதல் | – | நெற்றி/ புருவம் |
| நொதுமல் | – | அன்பில்லாதவர் கூறும் சொற்கள் |
| பகழி | – | அம்பு |
| பண்ணை | – | மகளிர் விளையாட்டு |
| பரண் | – | உயரமான காவல் மேடை/ கடவுள்/ உயர்ந்தவன்/ அன்னியன் |
| பரிதி | – | சூரியன், ஞாயிறு |
| பார் | – | உலகம் |
| பீடிகை | – | இருக்கை |
| புண்ணிய தேகி | – | தெய்வீகத்தன்மை கொண்ட உடல் உடையவர் |
| புரவி | – | குதிரை |
| புழுதி | – | தூசி, காய்ந்த மண் |

| | | |
|---|---|---|
| பூங்கை | – | பூங்கா |
| பூசனை | – | பூசை |
| பூவையர் | – | பெண்கள் |
| பெழைப்பு (பிழைப்பு) | – | உயிர் வாழ்தல் |
| பேதம் | – | வேறுபாடு |
| பொய்கை | – | குளம் |
| பொய்த்தல் | – | தவறுதல் |
| மரக்கலம் | – | கப்பல், நாவாய் |
| மருள் | – | மயக்கம்/ குழப்பம்/ பித்து/ பயம் |
| மன்று | – | சபை |
| மாக்கள் | – | பகுத்தறிவில்லாதார் |
| மாசு | – | குற்றம் |
| மாய்தல் | – | அழிதல் |
| மாரி | – | மழை |
| மானாவாரி | – | மழையை ஆதாரமாகக் கொண்டு செய்யப்படும் விவசாயம் |
| முகமன் | – | முன்னுரை |
| முகில் | – | மேகம் |
| முற்றல் | – | முற்றிய/ நிறைதல் |
| முன்றில் | – | வீட்டில் முன்பகுதி / முற்றம் |
| மெய் | – | உடம்பு, உண்மை |
| யாகம் | – | வேள்வி |
| வலு | – | வலிமை |
| வறக்குமேல் | – | பெய்யாமல் போனால் |
| வாகை | – | வெற்றி, வாகைமரம் |
| விசும்பு | – | ஆகாயம் |
| வியன் | – | பரந்த |
| வியனுலகு | – | அகன்ற உலகம்/ பரந்த உலகம் |
| விருத்தி | – | வளர்ச்சி |
| விழைதல் | – | விரும்புதல் |
| வெப்பம் | – | சூடு/ சூடான |
| வெள்ளம் | – | நீர் |
| வேட்கை | – | விருப்பம் |
| வேதாந்தம் | – | வேதங்களின் முடிவு |
| வேய்ந்தவை | – | வேயப்பட்டவை |
| வையை | – | உலகம் |
| ஜீவகாருண்யம் | – | அனைத்து உயிர்களிடமும் இரக்கம் காட்டுதல் |